# ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தி

ஜூன் — 42 - 1936

JC
Q22 m, N355a
N36.1
218932

ஸ்ரீ:

# ஸ்ரீ ராமாநுஜ

# ஸித்தாந்த  வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

| ஸம்புடம் 1 | தாதுஸ்ரீ திருவாடிப்பூரம் | சஞ்சிகை 9 |
| --- | --- | --- |

பத்ராதிபர் :

வடகரை இராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1936 ஜூலை] [தனிப்ரதி விலை 0-3-0

# விஷய ஸூசிகை


விஷயங்கள். பக்கம்.

1. திருவாடிப்பூரம் ... 17[illegible]
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

2. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் ... 200
—பத்திராதிபர்

3. கந்தாடை ராமாநுஜார்ய ஸூக்தி விமர்ச : ... 201
—பி. ஆர். ஆராவமுதய்யங்கார்

4. வர்த்தமானங்கள் ... 204

5. அத்யமே ஶ்லோகார்த்த தத்வ விமர்ஶ: ... 205
—காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி தமயனார் குமாரர் ஸ்ரீ. உ. வே. வெங்கடாசாரியார்


ஆரியர்காள் :—

நமது வைஜயந்தீ பத்திரிகை ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் அபிநிவேசமுடைய பெரியோர்கள் அநுக்ரஹிக்கும் விஷயதாநங்களைச் சிரமேலேற்று நிஷ்பக்ஷபாதமாய் வெளியிடுவதற்கென்றே வெளிவந்திருக்கின்றது. ஆயினும் அவ்வாறு விஷயதானங்களை அநுக்ரஹிக்குமவர்கள் பிறர்மனம் வருந்தும்படி வசைமொழிகளை அறவே ஒழித்தும் விஷயத்திற்குப் பொருத்தமுடையனவாயும் அனுவஶ்யகமான விஷய விசாரங்களை வளர்த்தாமலும் அநுக்ரஹிக்கவேண்டும். இவற்றிற்கு விருத்தமாயிருக்கும் விஷயதானங்களை நமது பத்ரிகை அங்கீகரிக்காதென்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

பத்ராதிபர்.

# L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது




L. G.

பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,

8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.



# அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமனத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.




அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கர மடாதிபதி

## ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதநந்தாசார்ய ஸ்வாமி

இந்த ஸ்வாமி 'எம்பெருமானார் நியமித்தருளின எழுபத்திரண்டு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவரான முடும்பை நம்பியின் திருவம்ஶத்தி லவதரித்தவரும் ஸ்ரீ மணவாள மாமுநிகளால் நியமிக்கப்பட்ட அஷ்ட திக்கஜங்களில் ஒருவருமான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவின் வம்ஶத்திலே திருவவதரித்தார்.

இந்த ஸ்வாமி ஸம்ஸ்க்ருதம் தமிழ் ஹிந்தீ முதலான பாஷைகளில் அநாயாஸமாய் உபந்யஸிக்கும் பெருமை வாய்ந்தவர்.

பம்பாய் கல்கத்தா முதலான ராஜதாநிகளில் ஆங்காங்கு ஸ்ரீவைஷ்ணவர்களைக்கூட்டி நமது விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலை நாட்டி "கலியுங்கெடும் கண்டு கொள்மின்" என்றபடி உத்தர தேசத்தில், "கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல் மலியப் புகுந்திசை பாடி ஆடியுழிதரக் கண்டோம்" என்றபடியே எங்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களாகும்படி திருத்தி யருளினார்.

மேலும் தற்காலத்தில் ஸநாதந தர்மத்திற்கு விருத்தமான ப்ரசாரங்களைக் கண்டித்து ஸநாதந தர்மத்தை ப்ராசாரம்செய்து கொண்டெழுந்தருளி யிருந்தார்.

இந்த ஸ்வாமியின் பெருமையைப்பற்றிப் பேசவோ எழுதவோ சிற்றறிவுடைய வடியேன் அர்ஹனல்லன்.

இம்பஹூநா ! பன்னியுரைக்குங்கால் பாரதமாம்.

இந்த ஸ்வாமி காஶீ ஸமீபத்தில் கங்கா ஸரயூ ஸங்கம ப்ரதேசத்திலிரா நின்ற சப்பிரா என்ற நகரத்தில், நாளது ஆடி மாதத்தில் சுக்ல பக்ஷ த்ருதீயா திதியோடு கூடின செவ்வாய்க்கிழமையில் அந்த மில் பேரின்பத் தடியரான முடியுடை வானவர் முறைமுறை யெதிர்கொள்ள வடிவுடை மாதவன் வைகுந்தம் சென்றார். ஷை ஸ்வாமியின் திருக்குமாரரான ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியார், ஸ்வாமியின் பெருமைக்கு அநுகுணமாக ஷையாரின் சரம கைங்கர்யங்களை அதிவிமர்சையாய் நடத்தி 10-நாள் நூற்றுக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்களை எழுந்தருளச்செய்து திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களை சேவிக்கச்செய்து திருவத்யயனம் மிகச்சிறப்பாய் நடத்தினார்.

இங்ஙனம் :

பத்ராதிபர்.

28932

ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை.

| தொகுதி 1. | பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார் | பகுதி 9. |
|---|---|---|

ஸ்ரீரஸ்து

ஶ்ரிய꞉காந்தாய நம꞉

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉

தஸ்மை ராமாநுஜார்யாய நம꞉ பரமயோகிநே |
ய꞉ ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாம்ஶ ஸூத்ரார்த்தக்ஷோத்யப்ரவர்திநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

## திருவாடிப்பூரம்.

[பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

இன்று பெரியாழ்வார் பெண்பிள்ளையாய் ஆண்டாள் பிறந்த திருவாடிப்பூரம். இத்திருநன்னாளின் சிறப்பு சொலப்புகில் வாயமுதம் பரக்கும்.

"பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே" என்று நாடோறும் ஸ்ரீ வைஷ்ணவ வுலகம் ஸேவிக்கிற வாழித் திருநாமத்தின்படி இவ் வாண்டாள் பெரியாழ்வார் திருமகள் என்று ப்ரஸித்தி பெற்றிருந்தாலும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இவள் ஒரு திருமகள் என்பது பூருவாசாரியர்களின் ஒருமிடறான திருவுள்ளம். மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் "அஞ்சு குடிக்கொரு சந்ததி" என்றருளிச் செய்கிறாராண்டாளை. அஞ்சுகுடி யென்பதற்கு இரண்டுவகையான பொருள் ஏற்கும். பொய்கையாழ்வார் தொடங்கிப் பெரியாழ்வாரளவுமுள்ள ஆழ்வார்

களைக் கணக்கிட்டால் ஆழ்வார்கள் குடி ஐந்து என விளங்கும். எங்ஙனே யென்னில்; பொய்கை பூதம் பேயாழ்வார் மூவருஞ் சேர்ந்து முதலாழ்வார்களென்று ஒரு ஸமுதாயமாக வழங்கப் பெறுதலால் அம்மூவருஞ் சேர்ந்து ஒரு குடி. திருமழிசைப் பிரான், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் ஆகிய நால்வரும் நான்கு குடி: ஆகவே அஞ்சுகுடி யென்றது ஆண்டாளுக்கு முன்னே திருவவதரித்திருந்த ஆழ்வார்களனைவரையும் சொல்லிற்றாகி, அவர்கட்கெல்லாம் ஒரு சந்ததியாகத் தோன்றியவள் ஆண்டாள் என்றதாக ஒரு நிர்வாஹம்.

இனி மற்றொரு நிர்வாஹமாவது, அஞ்சுகுடி யென்பதை 'அஞ்சுகின்ற குடி' என [வினைத்தொகையாக]க் கொண்டு ஆழ்வார்கள் பதின்மரையும் விவக்ஷிக்கிறபடி. எம்பெருமானுக்கு என் வருகிறதோ வென்று அஞ்சுகின்ற தன்மை பெரியாழ்வாருக்கு மிகவும் விசேஷித்து இருப்பினும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் அந்த அச்சம் ஸாதாரணமாகவுண்டு. இது "மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவு தானன்றி" என்ற உபதேச ரத்தினமாலைப் பாசுரத்தினாலேயே நன்கு காட்டப்பட்டது. பெரியாழ்வார்க்குப் போலே பொங்கும் பரிவு மற்றையோர்க்கு இல்லையெனினும் மங்களாசாசனத்தில் ஆர்வம் அனைவர்க்கு முண்டு என்று மாமுனிகள் தாமே அருளிச் செய்தாராதலால் அஞ்சுகுடி யென்பதனால் ஆழ்வார்களனைவரையும் கொள்வது பொருத்தமுடைத்தேயாகும். ஆகவே, பதின்மர்க்கும் ஆண்டாள் ஒரு சந்ததி யென்றதாயிற்று.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகனும் கோதா ஸ்துதியில்—"𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌂 𑌭𑌵𑌤𑍀𑌵 𑌗𑍋𑌦𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌜𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌃 𑌉𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌹𑌸𑌙𑍍𑌗𑌮𑌜𑍈𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍈𑌃 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌗𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌃 = போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே! பக்திம் நிஜாம் ப்ரணய பாவநயா க்ருணந்த:, உச்சாவசைர் விரஹஸங்கமஜை ருதந்தை: ஶ்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ் த்வதீயா:" என்ற ச்லோகத்தில் 'த்வதீயா: குரவ:" என்ற ஸ்ரீ ஸூக்தியினால் ஆழ்வார்களனைவர்க்கும் ஆண்டாள் திருமகள் என்னுமிடத்தை ஸூசிப்பித்தருளினர். மேற்குறித்த ச்லோகத்தின் தாற்பரிய விசேஷம் மிக்க சுவையுடைத்தாதலால் அதனை இங்கே சிறிது விவரிப்போம்,



கோதாய்! புருஷோத்தமனை எம்பெருமானை யநுபவிக்குந் திறத்தில் ஆண்மையுடையார் அநுபவிப்பதிற் காட்டிலும் பெண்மையுடையார் அநுபவிப்பது சிறக்கும். நீ இயற்கையிற் பெண்ணாகப் பிறந்தாயாதலால், "கண்ணீர்கள் முலைக் குவட்டில் துளி சோரச் சோர்வேனைப், பெண்ணீர்மை யீடழிக்குமிது தமக்கோர் பெருமையே" என்றும் "கொங்கைமேல் குங்குமத்தின் குழம் பழியப் புகுந்தொருநாள், தங்குமேல் என்னாவி தங்கு மென்றுரையீரே" என்றும், "பெண்ணின் வருத்த மறியாத பெருமான்" என்றும் "கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றும் "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல்" என்றும் செயற்கையாகவன்றிக்கே இயற்கையாகவே பேசியநுபவித்தாய்; உனது திருத்தகப்பன்மார்களான ஆழ்வார்கள் இங்ஙனே பேசுவதற்குப் பாக்கிய மற்றவர்களாய் ஆண்மக்களாக அவதரித்தவர்களாயிருந்துவைத்தும் நீ பேசியிருக்குங் கட்டளையிலே தாங்களும் பேசப் பாரிப்புக்கொண்டு தங்களுடைய பக்தியை ப்ரணயமாக மாற்றிப் பெண்மையை மாநஸிகமாக ஆவாஹனம் செய்துகொண்டு பாசுரங்களைப் பாடி உவந்தனர் என்றபடி. இதனால், எம்பெருமானை அநுபவிக்கும் வகையில் மற்றை யாழ்வார்களிற் காட்டிலும் ஆண்டாளே மிக்க வீறுபாடுடையாள் என்பது தெற்றென விளங்கிற்று.

இவ்வாண்டாள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்களிரண்டனுள் திருப்பாவையின் சிறப்பு உலகமுணர்ந்ததேயாகும். "கோதை தமிழ் ஐயைந்துமைந்தும் அறியாத மானிடரை வையஞ் சுமப்பதும் வம்பு" என்ற ஆன்றோர் திருவாக்கு ஒன்றே போதும் அதன் பெருமையைப் பாரோர் நன்கு அறிதற்கு. அதற்கு வியாக்கியான மிட்டருளின ஒரு மஹான் "கோதை தமிழ் ஐயைந்துமைந்தும் வாசோவிதேயமாக வேணுமென்கிறதன்று; ஆண்டாள் ஸ்ரீ ஸூக்தியாக ஒரு முப்பது பாசுர முண்டு என்றறியுமத்தனையே போதுமாய்த்து; அவ்வறிவு மில்லாதார் பூபாரமேகிடர்." என்றுரைத்த சுவை அற்புதமானது.

திருப்பாவையில் ஆறுவது பாசுரந் தொடங்கிப் பதினைந்தாவது பாசுரத்தளவும் பத்துப் பாசுரங்களினால் ஆண்டாள் தன்னுடைய. திருத்தகப்பன்மார்களான ஆழ்வார்கள் பதின்மரையும்

திருப்பள்ளி யுணர்த்துகிறாளென்பது பெரியார் நிர்வஹித்துப் போரும் ஒரு பரம ரஸ்ய ரஹஸ்ய விசேஷார்த்தம். ஆழ்வார்களை எந்த அடைவில் ஆண்டாள் பேசியிருக்கின்றாளென்னில், தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த பெரியாழ்வார் தொடங்கி அவரோஹணக் கிரமமாகப் பொய்கை யாழ்வாரளவுஞ் சென்று, அவ் வேழு திருநாமங்களையும் ஏழு பாசுரங்களினாலுணர்த்தி, பிறகு தன் காலத்திற்குப்பின்பு திருவவதரிக்கப் போகின்ற அன்பர் தாள் தூளி, நற்பாணன், நன்கலியன் என்ற மூன்று ஆழ்வார்களையும் அகக்கண்ணினாலுணர்ந்து அவர்களை மூன்று பாசுரங்களில் அடைவே உணர்த்தித் தலைக்கட்டுகிறாள்.

ஆகவே ஆழ்வார்கள் திருப்பள்ளி யெழுச்சியான இப்பத்துப் பாசுரங்களில் ஒவ்வொரு பாசுரத்தில் ஒவ்வொரு ஆழ்வார்க்குண்டான சொற் பொருத்தம், பொருட் பொருத்தம் முதலியன ஈண்டுச் சுருக்கமாக நிரூபிக்கப்படுகின்றன.

1. புள்ளுஞ் சிலம்பினகாண்.—இது பெரியாழ்வாரைத் திருப்பள்ளியுணர்த்தும் பாசுரம். பிள்ளாய்! என்பது இதில் விளி. அறிவில்லாதவனைப் பிள்ளை யென்பது. எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலிய திருக்குணங்களை மறந்தே இவ்வாழ்வார் மங்களா சாஸனத்தில் ஒருப்பட்டாராதலால் பிள்ளை யென்னத் தகுதியுடையாராயினர். “ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்” என்ற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியும் மங்களா சாஸநத்திற்கு அஜ்ஞானத்தையே மூலமாகக் காட்டிற்று. இவ்வாழ்வார் பெரும்பாலும் நந்தவனத்திலேயே போது போக்குவாராதலால் அவ்விடத்து அடையாளமாகிய ‘புட்களின் சிலம்புதல்’ முன்னே கூறப்பட்டது. புள்ளரையன் என்று பெரிய திருவடியின் ப்ரஸ்தாவம் செய்திருப்பதில் இப்பெரியாழ்வார் பெரிய திருவடியின் அம்ஸமாகத் திருவவதரித்தவர் என்று குருபரம்பராப்ரபாவாதிகளிற் கூறியுள்ள விஷயம் முத்ராலங்காரரீதியில் ஸூசிதமாகிறது.

‘வெள்ளைவிளிசங்கு’ என்கிற சொல்தொடர் முதன் முதலாகப் பெரியாழ்வாருடைய திருவாக்கில் தோன்றியது. (பெரியாழ்வார் திருமொழி 4-1-7 காண்க.) அதனை இங்கு அநுவதித்துக் காட்டுவது ஒருவகையான லிங்கம். [பேய்முலை நஞ்சுண்டு.] பெரியாழ்வார் திருமொழியில் (சீதக் கடலில்) கண்ணபிரானுடைய சரித்



திரங்களில் பேய்முலை நஞ்சுண்ட கதை முதன் முதலாக அநுஸந்திக்கப்பட்டது. “பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு” என்றது காண்க. மறுபடியும் அந்தச் சரித்திரத்தை அநுஸந்திக்கையில் சகடாஸுரபங்கத்தையும் கூட்டி யநுஸந்தித்தார். “நாள்களோர் நாலைந்து” என்ற பாசுரங்காண்க. அதற்குப் பொருந்த இங்கு “பேய்முலை நஞ்சுண்டுகள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி” என்றது. “வெள்ளத்தரவில்” என்று தொடங்கிப் பெரியாழ்வார்க்குள்ள ‘விஷ்ணுசித்தர்’ என்னுந் திருநாமமும் அதற்கு விவரணமான “அரவத்தமளியினோடும்” “பணிக்கடலில் பள்ளிகோளை” என்ற பாசுரங்களின் தாற்பரியமும் நன்கு ஸூசிதம்.

2. கீசுகீசென்றெங்கும்.—இது, பெரியாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான குலசேகராழ்வாரையுணர்த்தும் பாசுரம். ‘பேய்ப்பெண்ணே!, நாயகப் பெண்பிள்ளாய்!, தேசமுடையாய்!, என்ற மூன்று விளிகளும் குலசேகராழ்வாரை வற்புறுத்துவன. பெருமாள் திருமொழியில் *மெய்யில் வாழ்க்கையை *என்றவொரு பதிகத்தினால் தம்மைப் பெரும்பேயராகச் சொல்லிக்கொண்டவர் இவ்வாழ்வார். *ஏர்மலர்ப் பூங்குழல், ஆலைநீள் கரும்பு, மன்னுபுகழ்க் கௌசலை தன் * என்ற பதிகங்களில் பல பெண்களின் தன்மையை யடைந்து பேசினார்இவர். “கொல்லி காவலன் கூடல் நாயகன்” என்று அரசரான தன்மை தோற்றப் பேசினராதலால் நாயகப் பெண்பிள்ளாய் என்றது. அன்றியும், ஒரு ஹாரத்தில் நட்ட நடுவிலுள்ள மணியை ‘நாயகக்கல்’ என்பதுண்டு. குரு பரம்பரையில் எம்பெருமானாரை நடுநாயகமென்று யதிராஜஸப்ததியில் தேசிகன் கூறினர்; “யதிராஜேந நிபத்த நாயக ஸ்ரீः மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி:” என்றார். அது போலவே ஆழ்வார்களுள் குலசேகரர் நடுநாயகமாகவுள்ளவர். பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசையர் மாறன் என முன்னே ஐவர்; பட்டநாதன் கோதை தொண்டரடிப் பொடிகள் பாண்பெருமாள் கலியன் எனப் பின்னே ஐவர்; நடுவே குலசேகரர். ஆகவே இதுபற்றியும் நாயகப் பெண்பிள்ளாய் என்ற விளி நன்கு பொருந்தும். [தேசமுடையாய்!] பகவத்கீதையில் [18—43.] “ஶௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் — க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்.” [ஶௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம்—க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்.] என்று தேஜஸ்ஸு க்ஷத்ரியதர்மமாகச் சொல்லப்பட்டிருப்பதற்கிணங்க இந்த விளி

இவ்வாழ்வாருடைய க்ஷத்ரியத்வத்தைத் தெரிவிக்கும். அன்றியும், "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே ப்ரஹ்ம ஜன்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டை நாளில் பிறவி உண்ணூட்டுத் தேசிறே." என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படியும், அதற்கும் மூலமான "மண்ணூட்டிலாராகி யெவ்விழிவிற்றாலும், ஆழியங்கைப் பேராயற்கு ஆளாம் பிறப்பு—உண்ணூட்டுத் தேசன்றே" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தின்படியும் பகவத்சேஷத்வத்திற்கு அநுகூலமான பிறப்பே தேஜஸ்ஸென்று நிர்ணயிக்கப்படுகிறது; அப்படிப்பட்ட பிறப்பை *ஊனேறு செல்வத்து *என்ற பதிகத்தில் பாசுரந்தோறும் ஓரோவிதமாக விரும்பினவர் இவ்வாழ்வாரேயாதலால் தேச முடையார் இவரேயாகத் தகும். இப்பாட்டில் "ஆனைச் சாத்தன்" என்ற பதப்பிரயோகம் கவனிக்கத்தக்கது. இச் சொல் மலையாள பாஷையிலிருந்து திசைச் சொல்லாகத் தமிழில் வழங்குவதென்பர். (ஆனசாதம் என்று மலைநாடர் வலியனென்னும் பறவையை வழங்குவராம். இவ்வாழ்வார் மலை நாட்டில் திருவவதரித்தவராதலால் அத்திசைச்சொல் இங்குப் பரவசமாகவே அமைந்ததுபோலும்.) காசும் பிறப்பும் என்று ஆபரண விசேஷங்களைப் பற்றின ப்ரஸ்தாவமிருப்பது இவ்வாழ்வாருடைய சரிதையில் ஆபரண ப்ரஸ்தாவமுள்ளவாற்றை ஒருவாறு நினைப்பூட்டும். "ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்" என்ற தனியனும் ஸ்மரிப்பது. "வாசநறுங்குழலாய்ச்சியர் மத்தினாலோசைபடுத்த தயிரரவம்" என்றது, பெருமாள் திருமொழியில் "கெண்டை யொண்கண் மடவாளொருத்தி கீழையகத்துத் தயிர் கடையக் கண்டு...வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ.......தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்" என்ற பாசுரத்துச் சொற்சுவைகளை நன்கு நினைப்பூட்டும். [நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்] கிருஷ்ணாவதாரத்தில் குதிரைவடிவாக வந்த கேசியென்னு மஸுரனை வதஞ் செய்ததனால் கேசவனென்றது. இவ்வாழ்வார் தமது திருமொழியில் முதன் முதலாக இந்த வரலாற்றையே பேசி யநுபவித்தார்—*மாவினை வாய்பிளந்துகந்தமாலை * என்று. ஸ்வப்ரபந்தத்தை "நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே" என்று நாராயணனைப் பாடித் தலைக் கட்டினார். [கேட்டே கிடத்தியோ] இவ்வாழ்வார் நாடோறும் அந்தணர்களைக் கொண்டு ஸ்ரீராமாயண பாராயணஞ் செய்வித்துத் தாம் கேட்டவர். கேட்டு, இருந்த விடத்திலிராமல் படையெடுத்துஞ் சென்றவர்.



3. கீழ்வானம் வெள்ளென்று.—குலசேகரர்க்கு அடுத்த முந்தினவரான நம்மாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. கோதுகலமுடைய பாவாய்! என்றவிளி நம்மாழ்வாரை வற்புறுத்தும். ['கோது குல முடைய' என்று வழங்கிவரும் பாடம் பரமக்ருபையுடன் மறக்கத்தக்கது. அப்பாடம் நெடுநாளாகவே நாடெங்கும் பரவியதனாலாய அநர்த்தம் பெரிதுமுண்டு. ஸ்ரீபரகாலஸ்வாமி வியாக்கியானம் செய்தருளுமிடத்து "குலம் குலமாக வுனக்குப் பரிசர்யை பண்ணும்படி......" என்றுரைத்திட்டார். அது, 'கோதுகுலமுடைய' என்கிற (தவறுதலான) பாடத்தில் அபிநிவேசத்தினால்போலும். வஸ்துதஸ்து, வட மொழியில் கௌதூஹலம் என்றசொல் தமிழில் கோதுகலமெனத் திரிந்தது. இதில் குகாரம் நுழைய ப்ரஸக்தியில்லை. "கோதுகலமுடைக் குட்டனேயோ" என்றார் பெரியாழ்வாரும்.) கோதுகலமாவது ஆசை; ஆசையையுடைய என்றது - எம்பெருமானிடத்தில் ஆசையையுடைய, அல்லது எம்பெருமானுடைய ஆசையைத் தன்னிடத்திலே கொண்டுள்ள-என்று இருவகையாகவும் பொருள்படும். பட்டர் நம்மாழ்வாரைப் பற்றிப் பேசும்போது "ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமி வோதிதம்" என்று க்ருஷ்ண குதூஹலமே நம்மாழ்வாராக வடிவெடுத்தது என்றார். க்ருஷ்ண த்ருஷ்ணா என்றதும்-க்ருஷ்ணனிடத்தில் த்ருஷ்ணை, க்ருஷ்ணனுடைய த்ருஷ்ணை என இருவகையாகவும் விரியும். இதனால் தேறின பொருளை "கைம்மா துன்பொழித்தாயென்று கைதலை பூசலிட்டே, மெய்ம்மாலா யொழிந்தேன் எம்பிரானு மென்மேலானே" என்ற பாசுரத்தினால் நம்மாழ்வார்தாமே வெளியிட்டருளினர். "ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:—ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம், ஸச மம ப்ரிய:" என்றபடி, நானும் எம்பெருமானிடத்துக் குதூகலங் கொண்டேன், அவனும் என்னிடத்துக் குதூஹலங் கொண்டான் என்றருளிச் செய்தவர் நம்மாழ்வார். பாவாய்! என்ற விளியும் இவர்க்குப் பொருந்தும்; திருவாய்மொழியில் "சூழ்வினை யாட்டியேன் பாவையே" என்றும் "என்பாவை போயினித் தண்பழனத் திருக்கோளூர்க்கே" என்றும் பலவிடங்களில் தம்மைப் பாவையாகச் சொல்லிக்கொண்ட

வர் இவ்வாழ்வார். 'எழுந்திராய்' என்ற சொல்லாற்றல் நன்கு நோக்கத்தக்கது; உட்கார்ந்திருப்பவரையன்றோ எழுந்திராயென்பது. மற்றையாழ்வார்களெல்லாரும் அர்ச்சையில் நின்ற திருக்கோலமாகவேயுள்ளார்; நம்மாழ்வாரொருவரே வீற்றிருந்த திருக்கோலம். "பத்மாஸநோபவிஷ்டம்" என்கிற பூர்வாசார்யச்லோகரத்னமும் இங்கு அநுஸந்தேயம். [கீழ்வானம் வெள்ளென்று.] உதயகாலத்தில் கிழக்கு வெளுக்கும். இங்கும் வகுளபூஷணபாஸ்கரோதயமாதலாலும், அதுதானும் கலியுகத்தின் உதயகாலத்திலாதலாலும் கிழக்கு வெளுத்ததாகச் சொல்லிற்று. கீழ்வானமென்றபோதே மேல்வானம் நினைவுக்குவரும். நித்தியவிபூதி மேல் வானமாகும். லீலாவிபூதியானது நம்மாழ்வாருடைய திருவாய்மொழி யவதாரத்தாலே "ஓராயிரத்துளிப்பத்து உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" இத்யாதிப்படியே தானே பரமபதமாயிற்று. ஆகவே கீழ்வானமான இவ்விபூதிவெள்ளென்றது. [எருமை சிறுவீடு மேய்வான்] வீடு என்று மோக்ஷம்; சிறு வீடு என்று கைவல்ய மோக்ஷம். இந்த ஸங்கேதமிட்டருளினவர் நம்மாழ்வார்; திருவாய் மொழியில் (4-1-10) "குறுக மிகவுணர்வத்தொடு நோக்கி" என்ற பாசுரத்தின் பொருள் கொண்டு இஃது அறியத்தக்கது. எருமை யென்பது தாமஸப்ரக்ருதிகளை. நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருள்வதற்கு முன்னே பலரும் தாமஸப்க்ருதிகளாய் நல்வீடு செல்லாது சிறுவீடு முதலியவற்றிற் சென்று பாழாயினர் என்பது இங்கு ஸூசிதம். [மிக்குள்ள பிள்ளைகளுமித்யாதி.] மற்றைப் பிள்ளைகளையும் போகவொட்டாமல் தடுத்து இப்பிள்ளைவாசலில் வந்து துவள்வதனால் இவளுக்குண்டான விலக்ஷணமான ஏற்றம் தோற்றுவதுபோல, மற்றையாழ்வார்களிற் காட்டில் நம்மாழ்வார்க்குண்டான ப்ரபந்நஜந கூடஸ்தத்வமாகிற ஏற்றம் தோற்றுவிக்கப்பட்டது. "போவான் போகின்றாரை" என்ற பிரயோகம் வெகு ஆச்சரியமானது. 'போவதற்காகப் போகிறவர்கள்' என்று சொல்லுவதுண்டோ? இல்லை; அப்படியிருக்க ஏன் சொல்லிற்று? போவதுதானே ஸ்வயம் ப்ரயோஜனமென்று காட்டுவதற்காகவே சொல்லிற்று. இத்தகைய பிரயோகம் முதன் முதலாக நம்மாழ்வார் திருவாக்கில்தான் வந்தது; திருவிருத்தத்தில் "போவான் வழிக்கொண்ட மேகங்களே!"



என்றார். [உன்னைக் கூவுவான் வந்துநின்றோம்.] "கூவிக்கொள்ளுங் காலமின்னங்குறுகாதோ" "என்னைக் கூவியருளாய் கண்ணனே" "கூவிக்கொள்ளாய் வந்தந்தோ" என்று பலகாலும் விரும்பினபடியே கூவுவான் வந்து நின்றோமென்கிறாள். [மாவாய் பிளந்த தேவாதிதேவனை] இப்போது ஆண்டாள் நோற்பது போல நம்மாழ்வாரும் ஒரு திருவாய்மொழியில் நோன்பு நோற்றார்; வீற்றிருந்தேழுலகும் என்ற திருவாய் மொழியில் "ஏற்ற நோற்றேற்கு" என்று முதலிலும் "வண்டமிழ் நூற்க நோற்றேன்" என்று முடிவிலும் வருவதுகாண்க. அங்ஙனம் நோற்ற திருவாய் மொழியில் தேவாதிதேவனை அநுபவிக்கின்ற ஆழ்வார் மாவாய் பிளந்தானென்ற விசேஷணத்தையே முதற்பாட்டில் இட்டருளினர்; "வெம்மாபிளந்தான் தன்னை" என்றதுகாண்க. ப்ரதமப்ரபந்தத்தில் "இமையோர் தலைவா!" என்றும், சரமப்ரபந்தத்தில் "அயர்வறுமமரர்களதிபதி" என்றும் தேவாதி தேவனையே முந்துற முன்னம் சேவித்தாராழ்வார். [சென்று நாம் சேவித்தால்] "வானநாயகனே! அடியேன் தொழவந்தருளே" என்று தேவாதி தேவனை நீர் உம்மிடம் வருமாறு அழைத்தீர்; அங்ஙனமல்லாமல் அவனிடம் நாம் சென்று சேவிக்கலாம் வாரும் என்றழைக்கிறாள் போலும். [ஆவாவென்று] "ஆவாவென விரங்கார் அந்தோவலிதே கொல், மாவாய் பிளந்தார் மனம்" என்றும், "அடியேற்கு ஆவாவென்றாயே" என்றும் நீர் விரும்பினபடியே மாவாய்பிளந்த பெருமான் உமக்கு ஆவாவென்பன் என்று காட்டுகிறபடி. [ஆராய்ந்து] "ஆரென்னையாராய்வார்" என்ற உம்முடைய குறையும் தீரும் என்று காட்டியபடி.

4. தூமணிமாடத்து. நம்மாழ்வார்க்கு 'அடுத்த முந்தினவரான திருமழிசைப்பிரானை புணர்த்தும் பாசுரமிது. இதில் மாமான் மகளே! என்ற விளி ஒருவகையான தேஹஸம்பந்தத்தில் நோக்குடையது. ஆண்டாளுக்கும் திருமழிசை யாழ்வார்க்கும் ஒரு வகையான தேஹஸம்பந்தமுண்டு: அதாவது — ஸ்ரீதேசிகன் கோதாஸ்துதியில் "கமலாமிவாந்யாம் கோதாம்" என்றும் "ஸந்தஃ பயோதி துஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ்த்வாம்" என்றும் அருளிச் செய்த படியே ஆண்டாள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியாவள்' "ஊாமுவீ ஔாகஜநநீ க்ஷீரஸாமரஸம்ஹவா — பார்க்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா" என்ற அமரகோசத்தின்படியும்

இதிஹாஸபுராண வரலாற்றின் படியும் லக்ஷ்மி (ஆண்டாள்) ப்ருகு குலத்தில் தோன்றியவள். திருமழிசைப்பிரானும் ப்ருகுகுலத்தில் தோன்றியவரென்பது சரித்ரஸித்தம். இத்தகைய ஸமாந குலஸம்பந்தம் இங்கு நோக்கத்தக்கது. ரிஷிகுலத்திலே பிறந்து பிரம்பன் குடியிலேயானர் அவர்; ப்ராஹ்மண குலத்திலே பிறந்து கோபாலர் குலத்திலேயானள் இவள். இதுவும் ஒரு ஒற்றுமைநயம். [தூமணி மாடத்து] சிறந்த மாணிக்கக் குப்பியினுள்ளேயுள்ளது வெளியில் நிழலிட்டுத் தோன்றும். திருமழிசைப்பிரான் "உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று வேண்டிக் கொண்டபடியே உள்ளிருந்த திருமால் அப்படியே வெளியிற் பொசிந்து காட்சிதந்தமையால் இவர் தூமணிமாட மென்னத் தகுதியுடையார். [சுற்றும் விளக் கெரிய] விளக்காவது ஞானவொளி. "சாக்கியங் கற்றோஞ் சமண்கற்றோம் சங்கரனராக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்" என்றபடி இவ்வாழ்வார் ஸகலமதங்களிலும் புக்கு ஸர்வதோமுகமான ஞானவிளக்கம் பெற்றவராதலால் சுற்றும் விளக்கெரிதல் இவர்க்கு அஸாதாரணம். "யானறிந்த வாறு-ஆரறிவார்" என்றும் "என்மதிக்கு விண்ணெல்லா முண்டோ விலை" என்றும் இவரது பாசுரங்களினாலும் இது ஸித்தம். [தூபம் கமழ] சிறந்த ஞானமிருத்தல்மாத்திரம் பயன்படாது; அது நன்கு பரிமளிக்க வேண்டும். எம்பெருமானையன்றி வேறொரு தெய்வத்தைத் தொழாதிருத்தலே ஞானத்திற்குப் பரிமளம். "மறந்தும் புறந் தொழாமாந்தர்" என்பது இவ்வாழ்வாருடைய திருவாக்காகும். [துயிலணை மேல் கண்வளரும்] இவ்வாழ்வாருடைய திருக்கண் செல்வது சயனத்திருக்கோலமான எம்பெருமான் களின்மீதுதான். கச்சி வெஃகாவிலும் திருக்குடந்தையிலுமே பெரும்பாலும் இவர் காலம் கழித்தது. சயனத்திருப்பதிகளையே ஒரு கோர்வையாக வெடுத்துப் பாசுரம் பாடினவரும் இவ்வாழ்வார்; "நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள், நாகத்தணையரங்கம் பேர் அன்பில்-நாகத்தணைப் பாற்கடல் கிடக்குமாதி நெடுமால், அணைப்பார் கருத்தனாவான்" என்றது காண்க. [துயிலணை மேல் கண்வளரும் மாமானுடைய மகளே!] மகள் என்றதனால் விதேயத்வம் சொன்னபடி. மகள் சொற்படி தந்தை கேட்பதும் தந்தை சொற்படி மகள் கேட்பதும் வழக்கம். மாமான் என்றது மஹா மஹான் என்றபடி. துயிலணைமேல் கண்வளரும்மாமான் யதோக்தகாரி



யெம்பெருமான்; அப்பெருமாள் இவ்வாழ்வார் சொற்படி கேட்டவர்; "கணிகண்ணன் போகின்றான்—நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்ற போது அப்படியே சுருட்டிக் கொண்டு புறப்பட்டார்; "உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக் கொள்" என்ற போதும் அப்படியே. இனி, துயிலணை மேற்கண்வளரும் மாமான்—ஆராவமுதன்; அப்பெருமானும் "எழுந்திருந்து பேசு வாழி கேசனே" என்ற இவ்வாழ்வாரது வேண்டுகோளின்படி எழுந்திருந்தவர் என்பது ப்ரஸித்தம். [உன் மகள்தான் ஊமையோ] வாய்திறவாமலே ஹஸ்தசேஷ்டை முதலியவற்றால் காரியம் செய்வது ஊமைகளின்பணி. இவ்வாழ்வாரும் யாத்திரையடைவில் பெரும்புலியூரென்னும் கிராமத்தில் ஒரு வேதியன் வீட்டுவாசல் திண்ணையில் சிறிது பொழுது எழுந்தருளியிருக்க அங்கு வேதமோதிக் கொண்டிருந்த அந்தணர்கள் நீறு பூத்த நெருப்புப் போலுள்ள ஆழ்வாருடைய மஹிமையைத் தெரிந்து கொள்ளாமல் அவரைக் கீழ்ச்சாதியராகவெண்ணி வேதாத்யயநம் அவருடைய காதிற் படலாகாது என்று கருதி ஓத்துத் தவிர்ந்திருக்க, அக்குறிப்பையறிந்த ஆழ்வார் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற் சென்று வேறோரகத்து மேடையில் வீற்றிருக்கையில் அந்த வேதியர்கள் மீண்டும் வேதமோதத் தொடங்கி, விட்ட வாக்கியம் தோன்றாது மயங்கி நிற்க, ஆழ்வார் அதுகண்டு கறுப்பு நெற்களைக் கையுகிராலே இடந்துபோட, அப்பொருளுள்ள வேதவாக்கியம் அவர்கட்குத் தோன்றிற்று: அதாவது—"க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்" என்பது. உடனே அவர்கள் ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளால் இவரை உபசரித்து க்ருதார்த்தராயினர் என்பது சரித்திரவரலாறு. இங்ஙனமாக, வாய்திறவாமலே இங்கிதத்தினால் காட்டினது பற்றி ஊமையோ என்றது. சொன்ன சொற்களைச் செவியேற்காதவர் செவிடர்: அந்தச் செவிடும் இவரது சரிதையில் ப்ரஸித்தம்: முன் சொன்ன பெரும்புலியூரில் அந்தணரடிகள் யாகஞ் செய்து கொண்டிருந்த விடத்தில் இவ்வாழ்வாரை எழுந்தருள்வித்துக் கொண்டு போய்ச் சில மஹான்கள் இவர்க்கு அக்ர பூஜை செய்விக்க, அப்போது அங்கிருந்த பல சிசுபாலஜ்ஞாதிகள் எண்ணிறந்த வசை மொழிகளை வர்ஷிக்க, அவற்றை இவ்வாழ்வார் செவியேற்காதிருந்தனர் என்ற வரலாறு காண்க. [அனந்தலோ] தூக்கமோ என்றபடி. பரமைகாந்திகட்குத் தூக்கமாவது பாஹ்ய

விஷயங்களிற் சிறிதும் நெஞ்சு செல்லா திருக்கப்பெறுதலே. "உன்னைத் தெரித் தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கிவழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றும் "தொழிலெனக்குத் தொல்லைமால் தன்னாமமேத்தப் பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்றுமருளிச் செய்யு மிவ்வாழ்வார்க்கு இந்த நிலைமையே அனந்தலாகும். [ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ] மற்றை யாழ்வார்களிற்காட்டிலும் இவ்வாழ்வாருடைய பரமைகாந்தித்வம் மிக விலக்ஷணம் என்பது இங்கு அறியத்தக்கது. "பிதிரு மனமிலேன் பிஞ்ஞகன்றன்னோ டெதிர்வன், அவனெனக்கு நேரான்" என்னும் படியான திருநாவீறு இவர்க்கே அஸாதாரணமன்றோ. இதுதான் பெருந்துயில்; எம்பெருமானை யொழிந்த மற்றையோரைக்கண்கொண்டு பாராமையிற் பெருமை.

[மாமாயன்] "மாயமென்ன மாயமே" என்றும், "மாயமாயமாக்கினாய் உன்மாயமுற்றுமாயமே" என்றும் பலகாலும் எம்பெருமானது மாமாயங்களைப் பேசுகிறவர் இவ்வாழ்வார். [மாதவன்] "மாதவனை ஏத்தாதார் ஈனவரே" என்றவரும் இவ்வாழ்வாரே. "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்றதுங்காணலாம். [வைகுந்தன்] "வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு" என்றவர் இவ்வாழ்வாரே. வைகுந்தனது சேவடிமேல் தாம் பாசுரம் பாடினவராகச் சொல்லிக் கொண்டார். ஆகவே, மாமாயன், மாதவன், வைகுந்த னென்ற திருநாமங்கள் இவ்வாழ்வார்க்குப் பரமபோக்யங்களென்பது ஸூசிதம்.

5. நோற்றுச் சுவர்க்கம்.—திருமழிசை யாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான பேயாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. ஓடித் திரியும் யோகிகளாய் ஒருவரோடு ஒருவர் சேராமல் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த பொய்கையார் பூதத்தார் பேயார் இம்மூவரையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கக் கருதிய எம்பெருமான் ஒரு பெருமழையை வியாஜமாக்கித் திருக்கோவலிடை கழியில் நெருக்கியநுபவித்தானென்பது வரலாற்றின் சுருக்கம். இப்பேயாழ்வாரைப் பற்றித் திருவரங்கத் தமுதனார் நூற்றந்தாதியில் அருளிச் செய்யுமிடத்து "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னொடுமாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்" என்றார். பொய்கையாரும் பூதத்தாரும் இருவிளக்கேற்றி யிருளையகற்ற, இவ்வாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்" என்று



தொடங்கிப் பலாநுபவம் செய்தருளினார் என்பர் ஆன்றோர். அவ்வர்த்தமே யிங்கு முதலடியிற் பொலியும். நோற்று—மற்றை யிரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றுகையாகிற உபாயாநுஷ்டானஞ் செய்யவே என்றபடி. சுவர்க்கமாவது ஆனந்தாநுபவம். "யஸ்த்வயாஸஹ ஸஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயாவிநா" என்று ஸ்ரீ ராமாயணத்தில் இளைய பெருமாள் அருளிச் செய்ததுங்காண்க. "வாசல் திறவாதார்" என்றது பேயாழ்வார்க்கு மிகவும் பொருத்தமான லிங்கம். திருக்கோவலிடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார்; பிறகு பூதத்தார் வந்து சேர அவர்க்கு அப்பொய்கையார் வாசல் திறந்தார். பிறகு வந்து சேர்ந்த பேயார்க்குப் பூதத்தார் வாசல் திறந்தார். இப் பேயார்க்குப் பிறகு ஒருவரும் வந்து புகாமையினால் வாசல் திறக்க வேண்டிற்றில்லை ஆகவே வாசல் திறவாதார் என்றது பேயாழ்வார்க்கு மிகப்பொருத்தமாக அமைந்த குறிப்பு. [நாற்றத்துழாய்முடி நாராயணன்] இவ்வாழ்வாருடைய பாசுரங்கள் திருத்துழாய்மயமாகவே யிருக்கும். *திருக்கண்டேனுக்கு அடுத்த பாசுரம் "பொன்தோய் வரை மார்பில் பூந்துழாய்" என்பது. அதற்கடுத்த பாசுரம் "மலராள் தனத்துள்ளான் தண்டுழாய்மார்வன்" என்பது. முடிவுபாசுரத்திலும் "தண்டுழாய்த்தார் வாழ்வரை மார்பன்" என்றார். இடையிலும் பலபாசுரங்கள் காண்க. ஒன்பதாவது பாசுரத்தில் [நாமம் பல சொல்லி யென்பதில்] நாராயணனையும் திருத்துழாயையும் கண்ணனையும் சேர்த்துப் பாடினார் பேயார். இதுவும் ஒரு சிறந்தபொருத்தம். "காண்காணென விரும்புங்கண்கள்" என்று ஒரு நொடிப் பொழுதும் கண்மூடி யிருக்க மாட்டாமையைச் சொல்லிக்கொண்டநீர் கும்பகர்ணனுக்கும் மேலாக இன்னமும் துயில் கொள்ளல் தகுதியோ என்கிறாள் பண்டொரு நாளென்று தொடங்கி. இப்பாட்டில் நட்ட நடுவில் இராமபிரானுடைய திவ்விய சரித்திரமொன்றை ஆண்டாள் அமைத்தது பேயாழ்வாருடைய திருவந்தாதியில் நட்ட நடுவில் "அவனே—இலங்காபுரமெரித்தானெய்து" என்றும் "எய்ததுவும் தென்னிலங்கைக் கோன்வீழ" என்றும் அருளிச் செய்தமைக்கு நன்கு ஒக்கும். திருமழிசையாழ்வாரை யுணர்த்தின கீழ்ப்பாட்டில் அனந்தலோ என்று வெறும் அனந்தலே சொல்லிற்று. இப்பாட்டில் ஆற்றவனந்தலுடையாய்! என்கிறது. மழிசையர் கோனுக்கும் இவ்வாழ்வார் ஆசாரியராதலால் விசேஷணமிட்டபடி.

அனந்தல் என்று ஹேயமான உறக்கமன்று சொல்லுகிறது. “உரோவிந்யஸ்தஹஸ்தாஸ்தே நித்ராயந்தே ஸுநிர்ப்பரா:—உரோ விந்யஸ்த ஹஸ்தாஸ்தே நித்ராயந்தே ஸுநிர்ப்பரா:—“ என்று பகவச் சாஸ்திரங்களில் கொண்டாடப்பட்ட ‘அனந்தல்’ பரமைகாந்தித்வ ஸீமா பூமியைக் காட்டுமது. [அருங்கலமே!] எம்பெருமானது திருவருளை மிக அருமையாகப் பெற்ற ஸத்பாத்ரமே! என்றபடி. பாசுரந் தொடங்கும்போதே “திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்” என்று ஆனந்தமாகத் தொடங்கப் பெற்ற பகவத் பரமக்ருபா பாத்ரபூதர் மற்றொரு ஆழ்வாரில்லையே. [தேற்றமாய் வந்து திற] உம்முடைய திருநாமமோ பேயார்; பேய்த்தனமாக வாராமல் தேறிவந்து திறவும் என்கிறாள்.

6. கற்றுக் கறவை. பேயார்க்கு அடுத்த முந்தினவரான பூதத்தாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில், “குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!” என்ற விளி பூதத்தார்க்கு நன்கு பொருந்தும். பல பொருள்களை யுடையதான கோ என்னும் சொல் மொழா என்ற விடத்திற்போல ஸ்ரீஸூக்தியைச் சொல்லுகிறதிங்கு. கோவலர்—ஸ்ரீஸூக்திகளை யருள வல்லவர்களான ஆழ்வார்கள். “குற்றமொன்றில்லாத” என்ற விசேடணம் முதலாழ்வார்கள் மூவர்க்கே பொருந்தும். யோநிஜத்வமாகிற வொரு குற்றம் மற்றை யாழ்வார்களுக்குண்டு. அக்குற்றமொன்றும் இல்லாத கோவலர்—முதலாழ்வார்கள்; அவர்களுள் பொற்கோடியே! =“கோல்தேடி யோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடி யோடும் மனம்” என்கிற பாசுரத்தினால் தம்மை ஒரு கொடியாகச் சொல்லிக்கொண்டவர் பூதத்தாழ்வாரே யாவர். எம்பெருமானாகிற உபக்நத்தைத் தேடிச் செல்லுகின்ற கொடிபோல்வேன் நான் என்றவர் இவரேயிறே. “கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து” என்றது முதலாழ்வார் மூவர்க்கும் பொதுவான வாசகம். கற்றுக் கறவை—கன்றாகிய கறவை, (கறவை யென்பதனால் ஸ்ரீஸூக்தி விவக்ஷிதம்.) மற்றை யாழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களை யளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்ஙனன்றிக்கே வெண்பாவாகிய மிகச் சிறிய பாசுரங்களை யளித்தார்கள். பொய்கை யாழ்வாரருளிய திருவந்தாதி கறவைக் கணம்; பூதத்தாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள்; பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசந பஹுவசநங்கள் இணங்கின



அழகு காண்க. [செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்] தேச மெங்கும் திரிந்து பகவத் விரோதிகளை நிரஸிக்க வேணுமென்கிற அர்த்தத்தை “எண்டிசையும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து” என்ற பாசுரத்தினால் வெளியிட்டவர் இவ்வாழ்வாரே. “புற்றரவல்குல்” என்பது இடை யழகை வருணிப்பதாகும். ஸ்வாபதேசத்தில் இடையழகாவது பக்தியின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில் பக்தியானது இடைப்பட்டதாதலால் இடையழ கென்பது பக்தியின் அழகேயாகும். இவ்வாழ்வார் தம்முடைய திருவந்தாதியை முடிக்குமிடத்து “என்றனளவன்றால் யானுடைய வன்பு” என்றே முடித்தார். இதனால் இவரது இடையழகு நன்கு வெளிப்பட்டதாயிற்று. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக் கட்டினார். புனமயிலே! என்ற விளியும் இவர்க்கு அழகாகப் பொருந்தும். பொழிலிடத்தே வாழும் மயில்; இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல்மல்லை; அதனைப் பாடின கலியன் “கடி பொழில் சூழ்கடன் மல்லை” என்றே பன்முறையும் பாடினார். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூஹல முடைத்தாதலால், மேகம் நீர்பருக வருமிடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும். இவ்வாழ்வார் நின்ற விடமும் கடற்கரையிலே யிறே. [சுற்றத்துத் தோழிமாரித் யாதி.] இவர்க்குப் பொய்கையாரும் பேயாரும் சுற்றத்தவர்கள்; மற்றையாழ்வார்கள் தோழிமார். [முகில் வண்ணன் பேர் பாட.] முந்துற முன்னம் முகில் வண்ணன் பேர் பாடினவர் இவ்வாழ்வாரே யாவர்; “உலகேழும் முற்றும் விழுங்கும் முகில் வண்ணன்....எத்துமென்னெஞ்சு” என்ற இவர் பாசுரம் காண்க. புனமயில் முகில் வண்ணனைத் தானே பாடும்.

7. கனைத் திளங்கற் றெருமை. பூதத்தாழ்வார்க்கு அடுத்து முந்தினவரான பொய்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. தங்காய்! என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும். உலகில், தங்கை யென்று ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் தமக்கையென்று மூதேவியையும் வழங்குவர்கள். ‘சேட்டை தம் மடியகத்து’ என்ற திருமாலைப் பாசுரத்தில், தமக்கைக்கு வாசகமான ஜ்யேஷ்டா என்ற சொல்லால் மூதேவியைக் குறித்தமை காண்க. ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாமரை மலரிற் பிறந்தவள். ‘வனச மலர்க்கருவதனில்வந்தமைந்தான் வாழியே’ என்கிறபடியே பொய்கை யாழ்வாரும் தாமரைப் பூவில்

தோன்றியவர். இந்த வொற்றுமைநயம் பற்றித் தங்காய்! என விளிக்கத் தகுதியுடையாரிவ் வாழ்வார். "நனைத்தில்லஞ் சேறாக்கும்' என்ற விசேடணமும் இவர்க்கு வெகு நேர்த்தியாகப் பொருந்தும். ராவணவதாநந்தரம் திருவயோத்திக்கு மீண்டு எழுந்தருளா நின்ற பெருமாளை நோக்கி பரத்வாஜ மஹர்ஷி "ஸங்கஹீஜுஷா ஜடிலொ ஹாதஷாம் வஹதீக்ஷதெ—பங்க திக்தஸ் து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்றார். இங்கு பரதாழ்வான் சேறு பூசப் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டதன் கருத்து யாது? இரவும் பகலும் நிச்சலும் அழுதழுது நனைத்தில்லம் சேறாக்கினன் என்றபடி. "வண் பொன்னிப் பேராறு போல் வருங் கண்ண நீர் கொண்டு அங்கண் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்" என்றார் குலசேகரப் பெருமாளும். அவ்வண்ணமாகவே பொய்கையாழ்வாரும் "பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சி யழுதேன்" என்று தாமே பேசினபடியே அழுதவராதலால் நனைத்தில்லஞ்சேறாக்கின ரென்க.

[கனைத்து] முதன் முதலாகப் பேசத் தொடங்கும்போது கனைப்பது இயல்பு. பொய்கையார்க்கு முன்னம் பேசினவர்கள் யாருமில்லை. இவரே முதன் முதலாகப் பேசத் தொடங்கினவரென்பது இவ்வினையெச்சத்தினால் தோற்றுவிக்கப்படும். [இளங் கற்றெருமை] எருமை யென்றால் மஹிஷீ; லக்ஷித லக்ஷணாக்ரமத்தால் தேவ தேவ திவ்யமஹிஷீ என்றவாறு. எம்பெருமானுக்கு திவ்ய மஹிஷியான பிராட்டியை யொப்பவர் இவ்வாழ்வார் என்பது ஸூசனை. "இளங் கன்றுகளையுடைய" என்று விசேஷண மிட்டதனால், மற்றை யாழ்வார்களனைவரும் இவர்க்கு வத்ஸ ஸ்தாநீயர்களாய் இவர் மாத்ரு ஸ்தாநீயர் என்று காட்டினபடி. ஆழ்வார்களுள் முதல்வரிறே யிவர். [கன்றுக் கிரங்கி] இவர் ஸ்ரீ ஸூக்தியருளிச் செய்யத் தொடங்கினது கன்றுகளான நம்போல்வார் பக்கலிலுள்ள பரம க்ருபையா லென்கை.

[நினைத்து முலைவழியே நின்றுபால் சோர.] பகவத் குணங்களை நினைத்தவாறே அந்த நினைவுதானே ஊற்றாகப் பால் போன்ற ஸ்ரீ ஸூக்திகள் பெருகப்புக்கன என்றபடி. [பனித் தலைவீழ நின் வாசல் கடைபற்றி] இவர் பொய்கையில் தோன்றினவராதலால் இவரது வாசற் கடையைப் பற்றுவார்க்குப் பனித்தலை வீழ ப்ராப்தமே யாகுமிறே. [சினத்தினு லித்யாதி.] இது ஸ்ரீராம குண



கீர்த்தனம். மஹர்ஷிகளின் ஞானக் கண்ணுக்கும் இலக்காகாதவொரு ஸ்ரீராம சரிதம் இவ்வாழ்வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானமை "பூமேய மாதவத்தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண் முடியைப், பாதமத்தா லெண்ணினான் பண்பு." என்ற இவரது பாசுரத்திற் பொலியும். அதில் "நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே!" என்றதற்குப் பொருந்த "மனத்துக்கினியானை" என்றாள். [இனித் தானெழுந்திராய்] "பழுதே பல பகலும்" என்கிற பாசுரம் பேசின பிறகுங்கூட உறங்கலாமோ? என்கை. முமுக்ஷுப்படியில் "பழுதே பல பகலும் போயினவென்று இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை" என்ற ஸ்ரீ ஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். [அனைத்தில்லத்தாரு மறிந்து] "அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்" என்ற இவ்வாழ்வாரது பாசுரத்தை அழகாக நினைப்பூட்டுகிறபடி காண்மின்.

இப்பாசுரத்தோடு ஆண்டாளுக்கு முந்தின ஆழ்வார்களை யெல்லாம் உணர்த்திற்றாயிற்று. "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்றுமுள்ள ஸம்ப்ரதாயப்படிக்கு ஸ்ரீ மதுரகவிகளும் ஆண்டாளும் ஆழ்வார் கோஷ்டியில் சேர்ந்தவர்களாதலால் இவ்விருவரையு முணர்த்துவதும் இப்பாட்டிலேயே அறியக் கிடக்கிறது. எங்ஙனே யென்னில்; நற்செல்வன் தங்காய்! என்றது நற்செல்வன் தங்கையே! என்று பொருள்படுதலால் நற்செல்வன் தன்னுடைய கையாக இருப்பவனே! என்றபடியாகும். இங்கு நற்செல்வ னென்பது நம்மாழ்வாரை. அவர் திருவாய்மொழி அருளிச் செய்கையில் மதுரகவிகள் அவருடைய கையின் ஸ்தாநீயராயிருந்து பட்டோலை கொண்டாராதலால் இந்த விளி மதுரகவிகட்குப் பொருந்தும்.

இனி நற்செல்வனென்று எம்பெருமானைச் சொல்லிற்றாகி அவருடைய தங்கையென்று ஆண்டாளையுஞ் சொல்லக் குறையில்லை. "கோதற்றஞானத் திருப்பாவை பாடிய பாவை தங்கை" என்றும், "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்றுமுள்ளவை காண்க. ஆண்டாள் தன்னைத்தானே உணர்த்திக் கொள்ளுகை பொருந்துமோவென்று விரஸமாக வினவுவார்க்கு நாம் விடை யளிக்க வல்லோமல்லோம். சொற்சுவை அமைந்திருக்கு மழகை அநுபவித்துப் போருகிறோ மத்தனை.

இனிமேல் மூன்று பாசுரங்கள் ஆண்டாளுக்குப் பிறகு தோன்றிய மூன்று ஆழ்வார்களை அடைவே உணர்த்துவன. பிந்திய

ஆழ்வார்களின் படிகள், முந்தியே ஆண்டாளுக்கு எங்ஙனே தெரியுமென்று சிலர் சங்கிப்பரேல், "வியயஸ்து வைதிகா: க்ஷீயமம் ஹிரஸோ நாநுஸாரிண:" என்ற ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியையும் "ருஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோ நுதாவதி" என்ற பவபூதிபாஷிதத்தையும் அன்னவர்கட்கு நினைப்பூட்டுவோம்.

8. புள்ளின்வாய் கீண்டானை.—இது ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரடிப் பொடியாழ்வாரை யுணர்த்தும் பாசுரம். [போது அரிக் கண்ணினாய்!] புஷ்பங்களை ஹரிப்பதிலேயே த்ருஷ்டியைச் செலுத்துபவரே! என்றபடி. புஷ்ப கைங்கரிய பரரன்றே இவ்வாழ்வார். "துளபத் தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப்பொடி" "தொடை யொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றவை காண்க. பாவாய்! என்ற விளியும் இவர்க்கு நன்கு பொருந்தும். பதிவ்ரதா சிரோமணியைப் பாவை யென்பர். இவ்வாழ்வார் அரங்கனொருவனுக்கே வாழ்க்கைப் பட்டு வேறொரு திருப்பதி யெம்பெருமானை நெஞ்சிலும் நினையாதவ ராதலால் இவ்வகையான கற்புச் சிறப்பு குறிக்கொள்ளத்தக்கது. திருவேங்கடமுடையானெதிரே ஒருவர் "பதின்மர் பாடும் பெருமாள்!" என்று ஏத்த, அதைக்கேட்ட பெரிய கேள்விஜீயர், 'சோழியன் கெடுத்தான் காணும்; அந்த ஏற்றம் நம் பெருமாளுக் கில்லையே; நம்பெருமாளொருவர்க்கே' என்றார் என்ற ஐதிஹ்யமும் இங்கு நினைக்கத் தக்கது.

[நன்னாளால்] 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்' என்ற திருவாக்கிலேயே இச் சொல்லும் வருகின்றது. தொண்டரடிப் பொடிகள் திருவவதரித்தது மார்கழித்திங்களே யாதலால் நன்னாளென்னத்தட்டுண்டோ? [கள்ளந் தவிர்ந்து] 'சூதனாய்க் கள்வனாகி' என்றும் 'கள்ளமே காதல் செய்து' என்றும் 'கள்ளத் தேனானுந் தொண்டாய்' என்றும் பலகாலும் தமது கள்ளத்தைப் பேசிக் கொண்டாரிவ்வாழ்வார். இவரது சரிதையிலும் பொன் வட்டில் விஷயமான கள்ளம் அடிபட்டுக் கிடக்கிறது. அது தவிர்ந்து பகவத் பாகவத கோஷ்டியில் கலந்த படியை ஈற்றடி தெரிவிக்கின்றது. பெரியாழ்வார் போலவே இவ்வாழ்வாரும் பெரும்பாலும் பூம்பொழில் வாஸ முடையவராதலால் அவ்விடத்து அடையாளமாகப் புள்ளும் சிலம்பினகாண் என்பது இப்பாட்டிலும் புகுந்தது. [குள்ளக் குளிரவித்யாதி.] நீராட்டம் முதலிய நித்ய



கர்மாநுஷ்டானங்களையும் தவிர்ந்து சிலகாலம் பள்ளிக்கிடந்தமை இவ்வாழ்வாரது சரிதையிற் காணத்தக்கது. புள்ளின்வாய் கீண்டானை யென்று தொடங்கிக் கண்ணபிரானுடையவும் இராமபிரானுடையவும் கீர்த்திமை பாடினபடி சொல்லுகிறது. இவ்வாழ்வார் திருமாலையின் முடிவில் 'வள வெழுந்தவளமாட மதுரைமாநகரந் தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்கமாலை' என்று கண்ணபிரானுடைய கீர்த்திமையையும், திருப்பள்ளி யெழுச்சியில் "மாமுனி வேள்வியைக் காத்து அவப்ருதமாட்டிய வடுதிறலயோத்தி யெம்மரசே யரங்கத்தம்மா!' என்று இராமபிரானுடைய கீர்த்தியையும் பாடினமை யுணர்க. 'பிள்ளைகளெல்லாரும்' என்றது ஆண்டாள் தனக்கு முந்தின ஆழ்வார்களெல்லாரையுஞ் சொன்னபடி.

9. உங்கள் புழைக்கடை.—தொண்டரடிப் பொடிகளுக்கு அடுத்த திருப்பாணாழ்வாரையுணர்த்தும் பாசுரமிது. இதில், நங்காய்! நாணாதாய்! நாவுடையாய்! என்ற மூன்று விளிகளும் பாண்பெருமாளுக்கு நன்கு பொருந்தும். நங்கை யென்பது குணபூர்த்தியைச் சொல்லுகிறது. லோக ஸாரங்க மஹாமுனிகள் வந்து என் தோளின் மீது ஏறிக் கொள்ளுமென்ன, அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூபத்தை நினைத்து அதற்கு உடன்பட்டமை குணபூர்த்தி, அங்ஙனம் அந்தணர் தலைவரது தோளின்மீது ஏறி யிருக்கச் செய்தேயும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் 'அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்' என்றே பேசினவராதலால் நாணாதவர். (நாண்—அஹங்காரம்.) 'பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்' என்று தேசிகன் பணித்தபடி ஸகல வேதார்த்தங்களையும் பத்துப் பாசுரத்திலே அடக்கிப் பேசின பரம சதுரராதலால் நாவுடையார். "கையினார் சுரிசங்கனலாழியர்' என்று சங்கொடு சக்கரமேந்தின வழகையநுபவித்தமை சுட்டியும், 'கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்' என்று கண்ணழகில் ஈடுபட்டுப் பேசினமை சுட்டியும் 'சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் பங்கயக் கண்ணானைப் பாட' என்றாள். இவ்வாழ்வார் தமது சாதி நிலைமைக்கு ஏற்ப வாழ்ந்த விடத்தைக் கருதி உங்கள் புழைக்கடை யித்யாதி அருளிச் செய்யப்பட்டது. இவரது சரிதையில் ஸம்பந்தப்பட்ட லோகஸாரங்க மஹாமுனிகளின் தன்மையைக் காட்டுவது

போலுள்ளது செங்கற் பொடிக் கூறையித்யாதி. 'எங்களை முன்ன மெழுப்புவான்வாய் பேசும் நங்காய்' என்பதில் ஒரு அழகிய பொருள் தொனிக்கும். (அதாவது—)எழுப்புவதாவது—தூக்கிக் கொள்வது. எங்களை என்றது பாகவதர்களை யென்றபடி. பாண் பெருமாளே! உம்முடைய முதற்பாசுரத்தில் 'அடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்' என்ற சொல் நயத்தை நோக்குங்கால் பாகவதர்களை நீர் தோளில் தூக்கிக் கொண்டாடுபவர் போலத் தெரிகின்றது. உமது கதையோ அப்படியில்லை.

மஹாபாகவதரான லோகஸாரங்க மஹா முனியின்தோளின் மீதேறி நீர் இருந்ததாகவுள்ளது. ஆகவே, முந்துறமுன்னம் பாகவத சேஷத்வத்தை நீர் சொல்லிக்கொண்டது வாய்பேசு மத்தனையே போலும் என்று விநோதமாகக் கூறுகிறபடி.

10. எல்லேயிளங்கிளியே.—பாண் பெருமாளுக்கு அடுத்த வரும் ஸர்வகநிஷ்டருமான திருமங்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இவ்வாழ்வார் இரண்டு ஆய்ச்சிகளுக்குப் பரஸ்பர ஸம்வாதமாக *மானமரு மென்னோக்கி என்றொருபதிகம் அருளிச்செய்தவராதலால் இவரையுணர்த்தும் பாசுரமும் பரஸ்பர ஸம்வாதரூப'மாகவே அமைக்கப்பட்டது. 'கிளிபோல் மிழற்றி நடந்து மென்கிளிபோல் மிக மிழற்று மென்பேதையே' என்று பல பாசுரங்களில் இவர் தம்மைக் கிளியாகச் சொல்லிக்கொண்டவராதலால் இளியே! என்ற விளி இவர்க்குப் பொருந்தும். அன்றியும், சொல்லிற்றையே சொல்லுவது கிளியின் இயல்பு அதுபோல இவர் 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற' என்றபடி நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை யநுஸரித்தே அருளிச் செய்பவராதலாலும் கிளியென்றது. இரண்டாமடி திருமங்கையாழ்வாருடைய விடையளிப்பு. [வல்லைபுண் கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்.] இது கலியனைநோக்கி ஆண்டாள் கூறுமது. 'வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தேபோம் நீரே' என்று நீர் மிகக் கடினமாகப் பேச வல்லீரென்பது எனக்கு, [பண்டே—நீர் அவதரித்துப் பாசுரம் பேசுவதற்கு முன்னமே] தெரியுங்காணும் என்றாள். அதுகேட்ட கலியன் வல்லீர்கள் நீங்களே = 'கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே' என்று அற வெட்டிதாகச் சொன்ன உன் பேச்சு கடினமா? என்



பேச்சு கடினமா? நீயே பார்க்கலாம்—என்றார். என்ற வுடனே *நண்ணாதவாளவுணர் *கண்சோர வெங்குருதி *முதலிய திருமொழிகளில் தாம் அநுஸந்தித்த பாகவத சேஷத்வ காஷ்டையை நினைத்து *நானே தானாயிடுக என்றார். "உனக்கென்ன வேறுடையை" என்றது திருமங்கை யாழ்வார்க்கு அஸாதாரணமான திருமடல்திவ்ய ப்ரபந்த வக்த்ருத்வத்தை யுளப்படுத்தியதாகும். [எல்லாரும் போந்தாரோ இத்யாதி.] கலியனுக்கு முன்னமே மற்றுள்ள ஆழ்வார்கள் அவதரித்து, பன்னிருவர் என்கிற ஸங்கியை இவரோடு நிரம்பிற்று என்று தெரிவிக்கப்பட்டது.

[வல் ஆனை கொன்றானை—மாயனைப் பாட.] ஆனையைக் கொன்ற விஷயத்தை ஒரு ஆச்சரியமாக எடுத்துப் பேசினவர் கலியன். "ஆவரிவை செய்தறிவார் அஞ்சனமாமலை போலே" என்ற பெரிய திருமொழி காண்க. அடிக்கடி கலியன் வாய்வெருவுவதும் வல்லானை கொன்ற வரலாற்றையே; "கவள யானைகொம் பொசித்த கண்ணனென்னும்" இத்யாதிகள் காண்க. [மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாட] எம்பெருமான் தன் திறத்தில் மாறு செய்பவர்களது செருக்கை வெகு ஆச்சரியமாக அடக்குபவன் என்பதைக் காட்டுகின்ற சரிதைகளுள் கோவர்த்த நோத்தரண கதை மிகச் சிறந்தது. மாறு செய்த இந்திரனுக்கு ஒரு தீங்கு மிழைக்காமலே கண்ணன் அவனது கொழுப்பை யடக்கினனிறே. இக்கதையிலே கலியன் மிக்க வூற்றமுடையவர்; பெரிய திருமொழியை முடிக்கும் போதும் "குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை" என்றார்; சரமப் பிரபந்தமாகிய திருநெடுந் தாண்டகத்தை முடிக்கும் போதும் "குன்றெடுத்த தோளினானை" என்றே தலைக் கட்டினார்.

ஆக விங்ஙனேயுள்ள பல்வகைப் பொருத்தங்களினால் ஆண்டாள் ஒவ்வொரு பாசுரத்தாலும் ஒவ்வொரு திருத் தகப்பனாரை யுணர்த்தினளென்று நிர்வஹிக்கும்படி. இப்பொருத்தங்களை இன்னமும் விவரிக்கப் புகுந்தால் "பன்னி யுரைக்குங்கால் பாரதமாம்" என்ற கணக்கிலே விரிவு பெரிதுடைத்தாகுமென்று ஸம்க்ஷிப்தமாயிற்று.

காம்ஸீவாதிஹயஜ்ஞவம்ஸ்யாண்ம் ஹராய ஸம்க்ஷிதா |
மோக்ஷாவஸ்க்திரஹஸ்யு ப்ரகாஸிகேஷா ஸதாம் ஃஷே
ஸ்தியாஸ ||

# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்.

[பத்ராதிபர்.]

165வது பக்கத்தின் தொடர்ச்சி

வ்யூகமாவது ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிப்பதற்காகவும் ஸம்ஸாரி சேதனர்களின் அநிஷ்டங்களை யகற்றி இஷ்டங்களை அளித்து ரக்ஷிப்பதற்காகவும், ஸம்ஸாரத்தின் கொடுமையை நினைத்து இந்த ஸம்ஸாரத்தை யொழித்து தன்னை யடையவேண்டுமென்று நினைத்துத் தன்னை யுபாஸிக்குமவர்களுக்கு ஸம்ஸாரத்தை யொழித்துத் தன்னையடையும்படி யான யநுக்ரஹத்தைப் பண்ணுவதற்காகவும் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த பேதத்தால் நான்கு வகைப்பட்டிருக்கும்......

1. இதில் வாஸுதேவர் நித்யோதிதரான பரவாஸுதேவனிடத்தில் நின்றும் உத்பன்னராய் ஶாந்தோதிதர் என்கிற பெயரை யுடையராய் ரூப குணங்களால் பரவாஸுதேவரை யொத்து ஸங்கர்ஷணாதி வ்யூஹத்திற்குக் காரண பூதராய் பகவத் விஷய ஜ்ஞாநத்தால் அடையப்பட்ட ஸ்வரூபத்தையை யுடைத்தான சேதநர்களால் உபாஸிக்கத் தகுந்தவராயிருப்பர்.

2. ஸங்கர்ஷணர். வாஸுதேவரிடத்தில் நின்றும் உண்டானவராகையால் ஜ்ஞாநாதிஷட் (ஆறு) குணங்களையு முடைத்தாயிருந்தாலும் தான் செய்யவேண்டிய கார்யங்களுக் கநுகூலமான ஜ்ஞாந பலங்களாகிற விரண்டு குணங்களோடுங் கூடி அசித்தோடு அவிசேஷமாய்க் கிடக்குமாத்ம தத்வத்தை யதிஷ்டித்து தன்னுடைய அதிஷ்டான விசேஷத்தால் ஆத்மாவை ப்ரக்ருதியில் நின்றும் விவேகித்து நாமரூபங்களை யுடையதாகச் செய்து வேதாதி ஶாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும் ஜகத் ஸம்ஹாரத்தையும் பண்ணக்கடவராய் சேதநர்களின் ஸுஷுப்தி தசையில் ஹ்ருத் கர்ணிகையை ஸ்தாநமாகக் கொண்டு பாஹ்ய விஷயங்களையும் ஸ்வாப்ந விஷயங்களையும் அநுபவிப்பியாமல் ஜீவாத்மாவின்" ஸ்வரூபமான ஆனந்தத்தை யறிவித்து அநுபவிப்பியா நிற்பர்.

3. ப்ரத்யும்நர். ஐஶ்வர்ய வீர்யங்களாகிற விரண்டு குணங்களை யுடையராய் ஜ்ஞாந ப்ரஸரணத்திற்கு யோக்யமான மநஸ்தத்வத்தை யதிஷ்டித்து ஶாஸ்த்ரோக்தமான தர்மாநுஷ்டான யோக்யமான



வுபதேசத்தையும் ஸுத்தஸத்வநிஷ்டர்களாய் முகபாஹூருபாதங் (முகம் தோள் தொடை கால்)களிலிருந்து முண்டான ப்ராஹ்மணாதி மநு சதுஷ்டய மிதுநங் (ஸ்திரீ புருஷர்)களை ஸ்ருஷ்டிக்கக் கடவராய் சேதநர்களின் ஸ்வப்ந தசையில் கண்டத்தை ஸ்தாநமாகக் கொண்டு ஜாக்ரத்தசையில் (விழித்துக்கொண்டிருக்கும்பொழுது) கண்களால் காணப்பட்ட பதார்த்தங்களின் பழக்கத்தாலுண்டான விஷயங்களையும் ஜாக்ரத்தசையில் காணப்படாத தாத்காலிகமாக ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களையும் தோற்றுவித்து அநுபவிப்பியா நிற்பர். . . . . . .

4. அநிருத்தர். ஶக்தி தேஜஸ் என்கிற இரண்டு குணங்களோடுங் கூடி ஜகத் ரக்ஷணத்தையும் ஜகதுஜ்ஜீவந ஹேதுவான ஜ்ஞாநப்ரதாநத்தையும், ராஜஸதாமஸகுணப்ரசுரர்களாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் ஸர்வ நியந்தாவாய் ஸர்வரக்ஷகனாயிருக்கும் ஸர்வேஶ்வரனையறியாதே அவன் விஷயமான ஜ்ஞாந பக்திகளின்றிக்கே பகவந்நிந்தையைப் பண்ணா நின்றுகொண்டு பூர்வஜன்மங்களில் பண்ணப்பட்ட கர்மத்தின் பலமாக ஸவர்க்காதிகளில் ரமித்து பலாவஸாநத்தில் அதஃபதிதர்களாய் "புநரபிஜநநம்புநரபி மரணம்" என்கிறபடியே மாறி மாறிப்பல பிறவிகளை யடைந்து ஸம்ஸார மார்க்கத்திலிச்சை யுடையர்களாய்த் திரியா நிற்கும் மிஶ்ரவர்க்க ஸ்ருஷ்டியைப் பண்ணக்கடவராய் சேதனர்களின் ஜாக்ரத்தசையில் வலதுகண்ணை வாஸஸ்தாநமாகக் கொண்டு பாஹ்யமான பதார்த்தங்களை யறிவித்து அநுபவிப்பியா நிற்பர்.

---

# கந்தாடை ராமாநுஜார்ய ஸூக்தி விமர்ச:

(பி. ஆர். ஆராவமுதய்யங்கார்.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

ஆனிதன்னிற் சோதி நன்னாளில் அவதரித்த வைஜயந்தீ பத்திரிகையில், ஸ்ரீமத். சேனங்குளம் கந்தாடை ராமாநுஜாசாரியார் ஸ்வாமியின் வியாஸமாக "அத்யமே ச்லோகார்த்த தத்வ ப்ரதிஷ்டா

கண்டனம்" என்பதைப் படித்தேன். ஷடி ஸ்வாமி தம்முடைய வியாஸத்திற்கு, 'கண்டன'மென்று திருநாமம் சாத்தி அவ்வளவிலேயே பரமானந்த மெய்தினர் போலும். பாமரர்களுங்கூட உகப்பதற்கு விஷயமாகாதபடி "தகாமி' ப்ரேமேண' ப்ருவாமி 'ச்லோகம்' ச்ரோத்ரப் புடத்தோஷகரம் ந்ருணாம்' என்றபடிக்கு யமனுக வுள்ள ஷடி ஸ்வாமியின் ஶப்தார்த்த விந்யாஸங்களைப் பொருள் படுத்தி விடையளிக்க வேண்டிய அவசியம் சிறிதும் தென்படாமையால் அது பற்றி அடியேன் யாதொன்றும் எழுதத்தேவையில்லை.

அத்யமே ச்லோகார்த்த விஷயமாக அண்ணஸ்வாமி யெழுதியிருக்கும் விஷயங்கள் ஒருபுறமிருக்கட்டும். பத்ராதிபரான ஸ்ரீமான் வடகரை ஸ்வாமி சுருக்கமாகவும் கல்நெஞ்சும் கரையும்படியாகவும் வெகு அழகாக எழுதி வெளியிட்டிருக்கின்ற விஷயங்கள் போதுமே விவேகிகளின் உள்ளம் குளிர்வதற்கு. நேற்று ஆனி மாதப் பத்ரிகையிலும் அவர் நாலே பக்கத்தில் ஸாரமாக வெளியிட்டிருக்கின்ற விஷயத்திற்கு மேல் யாருக்கும் வக்தவ்யமான விஷயலேஶமும் கிடையாதென்பது திண்ணம். ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிசய முள்ளவர்கள், அத்யமே ச்லோகத்திலுள்ள மரண பதத்தை மே என்பதிலிருந்து பிரித்து ஸாகரஸ்ய என்பதோடே கூட்டுவதற்கு நெஞ்சிலும் நினையார்கள். இதற்கு மேல் இங்கு நாம் எழுதுவது பிஷ்ட பேஷணமே யாகும்,

இல்லாததும் ஏலாததுமான அர்த்தத்தை நம்பிள்ளையினுடையதாகப் பழி சுமத்திப்பேசுமவர்கள், க்ரமமான அந்வயத்திலே கிடைக்கிற பொருளைவிட்டு அக்கிரமமான அந்வயத்தை என்ன அர்த்த ஸ்வாரஸ்யங் கொண்டு நம்பிள்ளை திருவுள்ளம் பற்றினரென்று சிறிது நிரூபிக்கவேண்டுமே. ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்தில் பெருமாள் பட்டினிவிட்டுக் கிடந்ததைக் கொண்டு ப்ராயோபவேசமென்கிறது பாட்டிகள் கதையென்று ஷடி கண்டன ஸ்வாமி யெழுதுகிறார். அந்த பாட்டிகள் தாம் மஹா வித்வான்களாய் ஆக்ஷேபகர்களாக எழுந்திருக்கிறார்களென்பதை இவர் அறிந்திலர்போலும். பட்டினி விட்டுக்கிடப்பது தானே ப்ராயோபவேஶமும். வேறு என்ன? "ஸ்ரீராமாயணம் [illegible] [illegible] என்கிற ஸமாதியில் அமைந்தது" என்று எழுதியுள்ள இவர் "இற்றை முடிதல் கடத்தல்" என்கிற பாடத்தையே நன்கு ஸ்தாபித்தவராகிறார். மே மரணமென்று [illegible]



[illegible] மோக்ஷயிஷ்யாமி என்று [illegible]. இங்ஙனல்லாமல் அத்யமே ச்லோகத்திலேயே ஸாகரமரணமும் ஸங்கல்பிதமென்பார்க்கு [illegible] [illegible] மென்னவேண்டுமத்தனை யாகையால் [illegible] மென்றது பொருந்தவே மாட்டாது. மணல்சோற்றில் கல் ஆராய்வது போன்ற ப்ரவ்ருத்தியில் அடியேன் தலையிடுதல் அழகல்லாமையால் இவ்விசாரத்தில் இவ்வளவோடு நிற்கின்றேன்.

ஷடி கண்டன ஸ்வாமி எழுதி வருகையில், 97 லக்கமிட்டு "தென்மொழியில்தான் ப்ரஸங்கமென்றிருந்தோம்; கண்டது வடமொழியிலும் கண்டதே பாண்டித்யம்" என்றொருதிகமான ப்ரஸங்கம் செய்திருக்கிறார். 'எப்படிப்பட்ட ஸ்ரீ கோசங்களிலும் பரிதாபகரமான பாடப் பிழைகள் புகுந்துவிட்டன' என்று அண்ணஸ்வாமி தத்வ ப்ரதிஷ்டையில் பஹுளமாக நிரூபித்து வருகையில் ஸ்ரீ பாஷ்யத்திலும் முதலிலும் முடிவிலும் இரண்டு பாடப் பிழைகள் ஸம்பதிதங்களாய்விட்டன என்று ப்ராமாணிக பண்டிதர்கள் கொண்டாடும்படியாக நிரூபித்திருக்கிறார். அதில் பரிஹாஸமாக இந்த ஸ்வாமி இங்ஙனம் எழுதுகிறார். சென்னையில் நாலாறு மாத காலமாய்ச் சில வித்வான்கள் கூடி ஸ்ரீ பாஷ்யத்தை அனேக வியாக்கியானங்களுடன் தேவநாகரலிபியில் மாஸ ஸஞ்சிகையாகப் பதிப்பித்து வருகிறார்கள். அதில், சித்திரைமாதத்தில் வெளிவந்த ஸஞ்சிகையில் "[illegible] [illegible]" என்று பிழையான பாடத்தையே பதிப்பித்திருந்தார்கள். அங்ஙனம் பதிப்பித்த வித்வான்கள் காஞ்சீபுரம் வைசாகோத்ஸவத்திற்கு எழுந்தருளி யிருந்தபோது, ஷடி பிழையான பாடத்தை நீங்களும் பதிப்பிக்கலாமோ? என்று அண்ணஸ்வாமி கேட்டார். அது எப்படிப் பிழை? என்று அவர்கள் கேட்டார்கள். ஶாஸ்த்ரஜ்ஞர்கள் முன்னிலையில் அண்ணஸ்வாமி நிரூபித்துக் காட்டினார். ஸ்ரீ பாஷ்ய தாள கோஶத்தையும் ஸம்பாதித்துக் காட்டினார். அவர்கள் பரம த்ருப்தி யடைந்து, அடுத்த ஸஞ்சிகையில் அண்ணஸ்வாமியின் திருவுள்ளப்படி [illegible] என்று திருத்தி வெளியிட்டுவிட்டார்கள். தேசிகன் தத்துவடீகையில் ஸத்பாவாத் என்கிற பாடத்தையே கொண்டிருக்கிறாரென்பதையும் வித்வான்கள் அறிவார்கள். சென்னை பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதரான ஸ்ரீ. உ. வே. வி. அனந்தாசாரியர் ஸ்வாமியே

அண்ணாஸ்வாமியுடன் இந்த ஆராய்ச்சியைச் செய்து தெளிவுபெற்றவர். அந்த ஸ்வாமியே இப்போது திருத்தம் வெளியிட்டிருப்பவர். இங்ஙனம் அண்ணாஸ்வாமியின் ப்ராமாணிக நிரூபணங்களை ஆதரிக்கச் சில பாக்யஶாலிகளே ஏற்படுவர்கள். "கற்றோர்கள் தாமுகப்பர்" என்கிற மணவாள மாமுனிகளின் பாசுரம் பழுதுபடாமே உபயவித அதிகாரிகளும் என்றைக்கு மிருப்பதில் வியப்பில்லை. (ஸ்ரீபாஷ்ய) சரமஸூத்ர பாஷ்யத்தில் ஸம்ஹவாஶங்கா என்கிற பாடம் ஸம்பாவநாஶங்கா என்று மாறிற்று என்பது அண்ணாஸ்வாமி யெழுதியிருப்பது. ஸம்பாவநா என்பதற்கே ஶங்கா என்று அர்த்தமாதலால் மீண்டும் ஶங்கா என்பது புநருக்தியாகிப் பொருந்தாதென்பது வித்வான்கள் எளிதாக வுணரக்கூடிய விஷயமிது. [ஸம்பாவநாதிகா ஶங்கா] என்று இந்த கண்டனஸ்வாமி பாஷ்யம் ஸாதிக்கிறார். வேங்கடாசலவைபவே தமிழில் வேங்கடாசலாதிக வைபவே தாத்வமிஷிஷித்ருயபே என்பதுமாகிய ஸ்ரீஸூக்திகளையும் கண்டோமுக்கு இதிலும் வியப்பில்லை.

அந்தோ! இத்தகைய மேதாவிகள் தங்களுக்குரிய விருதினைத் தைப் பூண்டு விளங்குதல் அழகியதாகுமே!.

இதற்கு மேல் இது விஷயமான கண்டனம் அங்கீகரிக்கப்பட மாட்டாதென்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்ராதிபர்.

---

## வர்த்தமானங்கள்

### ஸ்ரீரங்கம்

ஆவணி 12. (27-8-36) திருமுளை, ஆவணி 13. (28-8-36) திருப்பவித்ரோத்ஸவம், ஆவணி 21. (5-9-36) சாற்றுமுறை, ஆவணி 24, (8-9-36) ஸ்ரீஜயந்தி பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்திரம்.

### காஞ்சீபுரம்

ஆவணி 6. (21-8-36) உலகளந்த பெருமாள் சன்னிதியில் பவித்ரோத்ஸவம், (26-8-36) பூர்ணாஹுதி. யதோக்தகாரி. 1-9-36-ல் பூர்ணாஹுதி. தேவப்பெருமாள், 1-9-36-ல் ஆரம்பம், 7-9-36-ல் ஸமாப

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# அத்யமேச்லோகார்த்த தத்வவிமர்சம்.

[காரப்பங்காடு வித்வான் சிங்கப்பெருமாள் ஸ்வாமி தையனார் குமாரர் சேனங்குளம் வித்வான் வெங்கடாசாரியார்.]

ஸ்ரீராமாயணத்தில் கடலைநோக்கிப் பெருமாள் சரணம்புகுந்ததாகச் சொல்லுமிடத்திலுள்ள (ஸுக்ருதேஶரணம்வாஷிதரணம் ஸாஶாஸ்வா) என்கிற ச்லோக விஷயமாக ஸ்ரீ அண்ணாஸ்வாமி திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையில் முன்னம் வெளியிட்ட நிரூபணங்கள், அதன்மேல் விளைந்த ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானமாக அவதரித்த தத்ப்ரதிஷ்டை, தத்வபரிசிஷ்டம், பிறகு வைஜயந்தீ பத்ரிகையில் வெளிவந்தவைகள் ஆகிய இவையெல்லாம் அடியேன் ஸேவிக்கப்பெற்றேன். இவற்றால், ஏற்கனவே பலவருஷ காலமாக அடியேனுக்குண்டாயிருந்த ஸம்ஶயம் நீங்கி ஒருபடி தெளிவுபெற்ற முறையை இங்கு ஒருவாறு விண்ணப்பிக்க எண்ணமுண்டாகியது.

இதில் அடியேனுடைய அபிப்ராயத்தைக் கேட்டார் ஒருவருமில்லை. "உன்னுடைய அபிப்ராயம் எப்படி?" என்று சிலர் கேட்பதற்கும் அடியேன் ஒருவிதத்திலும் அர்ஹனுமல்லேன். வ்யக்தி ஒன்றிருப்பதாக நினைத்து ஸவஸ்நேஹம் நவுங்கூட நினைவுக்கு விஷயமாகக்கூடியவனல்லன் அடியேன். அப்படியிருக்கவும் அடியேன் இங்கு விண்ணப்பிக்கத் தொடங்கியது என்னெனில்; என் சொல்லுவேன்? "காக்கைவாயிலும் கட்டுரைகொள்வர்" "பல்லியின் சொல்லும் சொல்லாக்கொள்வதோ வுண்டுபண்டுபண்டே" இத்யாதிக்கணக்கிலே யாகுமத்தனை.

ஸ்ரீ. உ. வே. ஆஸூரி. ராமாநுஜாசாரியர் ஸ்வாமிக்கும் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிக்கும் இதுவிஷயமான அபிப்ராய பேதம் ஏற்பட்டிருப்பதாய்த் தெரிந்தது. இரண்டு மஹா கஜங்களுக்கு ஏற்பட்டிருக்கிற விஷயத்தில் ஶேஷஶேஷிபா₄வ ஶ்ராயணை அடியேன் ஸ்வாபிப்ராயத்தை ஒருவிதமாக எடுத்துக் காட்டுவதென்பது ஸஞ்சிதவாஶ ஸாயாஸஜ்ஞ ஹாஸ்யரஸாநுப₄வத்துக்கு ஏற்பட்டதொரு விதூஷகவ்யாபார விஶேஷமாகும். ஆகையால், "அடியேனுக்குப்பட்ட முறை இப்படி; பெரியாருடைய அபிப்ராயபேதமோ அப்படி; அடியேன் தெளிந்துகொள்ளும் முறை எப்படி?" என்று தெரிந்துகொள்வதற்காகவே அடியேன் சிறிது விண்ணப்பிப்பது என்று கொள்வது.

முதலில் ஒரு முக்கியவிண்ணப்பம். இக்காலம் பொதுவாகவே பண்டிதர்களும் விவேகிகளும் குறைந்த காலம். அதிலும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மிகக்குறைவு. அதிலும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் மிகக்குறைவு. அப்படிப்பட்ட இக்காலத்தில் ஸ்ரீ. ஆஸூரி. ராமாநுஜாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஆகிய இரண்டு திருநாமங்களும் நம் தர்ஶனத்திற்கு இரண்டு மஹாரத்னம். அடியேனுக்கு இவ்விரண்டு திருநாமங்களிடத்திலும் யத்ருச்சிகஸுக்ருதி என்கிற பொதுவான முறையன்றிக்கே பூருவாசாரியர்களிடம்போல் அவதார விஶேஷமென்கிற ப்ரதிபத்தியே கனத்திரா நின்றது. இது ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் உத்₃த்₄ருத்ய பு₄ஜமுச்யதே | விஶேஷஜ்ஞர்கள் குறைந்துவருமிக்காலத்தில் கிடைத்திருக்கிற அருமருந்தான இவ்விரண்டு திருநாமங்களையும் கருவிலே திருவிலாத அடியேன்போல்வாரான இக்காலத்திலுள்ளாரும் பிற்காலத்தவரும் நெடுங்காலம் அநுபவித்து வாழும்படி இவ்விரண்டு ஸ்வாமிகளின் காலம் பல்லாண்டு பல்லாண்டாய்ச் செல்லும்படி ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான தேவப்பெருமாளும் எம்பெருமானாரும் பரிபூர்ணகடாக்ஷம் செய்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் காலப்பழமை முதலிய பல ஹேதுக்களாலே பலவிதமான மாறுதலடைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதை இக்காலத்தில் ஆராய்ந்து நிர்ணயிப்பார் ஆரு



மில்லை. அச்சு ஏற்பட்டது ஒரு பெரியகுறை. தாள கோஶங்களும் பிழையற்றது கிடைப்பதரிது. இருக்கிற தாள கோஶங்களும் பலவிடங்களில் கறையானுக்கு இரையாயின. ஆகையால் ஸ்ரீஸூக்திகளில் பல பிழைகளிருப்பதை இருந்தபடியே அநுபவிக்கவேண்டி வருகிறது.

அடியேன் பல பல க்ரந்தங்கள் ஓலையில் ஏறியருளப்பண்ணியிருக்கிறேன். ஸ்ரீராமாயண மஹா பாரதாதிகளுக்கு மேல்பட்டிருக்கும் அடியேனேறியருளப்பண்ணின க்ரந்தங்கள். அடியேனுக்கு ஒருவர் ஏடுபார்த்துச் சொல்லவில்லை. அடியேனே பங்க்திகளைப் பார்த்துப் பார்த்து எழுதியது. அவற்றில் எத்தனையோ விடங்களில் (ற்ற) என்னவேண்டு மிடங்களில் (த்த) என்றும், (ன்ற) என்னவேண்டு மிடங்களில் (ன்ன) என்றும் இப்படி எத்தனையோ விபர்யாஸங்களுடன் எழுதியிருக்கிறேன். கொஞ்சநாள் அதற்காக ஏடுகளை அடித்தும் கிழித்துமிருக்கிறதாக நினைத்துக் கொண்டிருக்கிற அடியேனுக்கும் ஸுஶ்ராவகவாம்வாஸநையே ஏற்பட்டு எழுத்துக்கள் மாறுபட்டிருக்கிறது. மணிப்ரவாள ஸ்ரீகோஶங்களை எந்தத் திருமாளிகையிலிருந்து எடுத்து ஸேவித்தாலும் தமிழிலக்கண ரீதிக்குப் பொருந்தின அக்ஷர விந்யாஸங்களோடு கூடின தாளகோஶம் ஒன்றுகூட இல்லையென்று அடியேன் ஸத்யமாக விண்ணப்பிக்கமுடியும். இந்த விண்ணபத்தைப் பொய்யாக்குவதற்காகவாகிலும் ஒருவர் ஒரு நல்ல தாளகோஶத்தை ஸம்பாதிக்க முயற்சிகொண்டு பார்க்கலாம். பூருவாசாரியர்கள் தம்தம் திருக்கையால் ஏறியருளப்பண்ணின ஸ்ரீகோஶம் நமது பாக்யவஶத்தால் கிடைத்தாலொழிய, மற்றைப்படி பின்புள்ளார் திருவெழுத்துச்சாத்திய தாளகோஶங்களெல்லாம் ஒரோவகையான ஸம்ஶயங்களோடு கூடியவையே காணப்படும்.

ஆதலால் யானொட்டி யென்னுள் பாசுரத்தினீட்டில் அண்ணா ஸ்வாமி நிரூபித்திருப்பதுபோன்ற மாறுதல் ஸாதாரணமாக ஸம்பாவிதமே யென்கிற எண்ணம் அடியேனுடைய நெஞ்சைவிட்டு அகலவில்லை. அடியேன் சிலநாள் திருநாராயணபுரத்தில் இருந்ததுண்டு. அங்கு ஸ்ரீமண்டயம் ஆழ்வார் ஸ்வாமி திருக்குமாரர் மஹாவித்வான் ஸ்ரீதாதாசாரியர் ஸ்வாமி ஸ்வஹஸ்தத்தால் தெலுங்கு லிபியில் ஒரு மணிப்ரவாள க்ரந்தம் ஏறியருளப்பண்ணி

யிருந்தார். அதை ஶோதிப்பதற்கு அடியேனைக்கூட இருக்கும்படி நியமித்தார்; ஶோதிக்கும்போது ["ஊன்வாட வுண்ணுமதென்கிற படியே"] என்று வந்தவிடத்தில் தெலுங்கு லிபியில் (உஊன்வாட) என்றெழுதியிருந்தார். இங்ஙனே பல மாறுதல் இருந்தன. அவைகளைத் திருத்தினேன். தெரிந்தவர்களுக்கும் இப்படி பல பிழைகள் ஸம்பவித்துவிடுகிறது. நல்ல நிரூபகர்கள் ஏதேனும் ஒரு தாள கோஶத்தை யெடுத்து ஆநுபூர்வியாக ஊன்றி ஸேவிக்கப்புகுந்தால் எல்லாம் அவரவர்களின் திருவுள்ளத்திற்கே நன்றாய்ப் புலப்படும். எல்லாரும் இப்போது அச்சு ஸ்ரீகோஶங்களிலேயே பழகி வருவதால் ஓலை ஸ்ரீகோஶங்களின் தன்மைகளை அநுபவமுடையார் எடுத்துரைப்பது சிற்றத்திற்கு உடலாகிறது. இது நிற்க.

ஜகத்ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த (அடியேனுடைய வித்யாசார்யரான) காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் ஸ்வரூப க்ரந்தங்களை அதிகரிக்கும்போது பகவத்விஷயத்தில் யானொட்டியென்னுள் பாசுரம் வந்தவாறே அப்போது சரமஶ்லோகார்த்த விஷயமாக நேர்ந்தவைகளையும், ஸ்ரீ; உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையில் இதுவிஷயமான விபுல விசாரத்தை ஸேவிக்க நேர்ந்தபோது, அடியேனுக்கு தத்வஶாஸ்த்ரப்ரவர்த்தகரும் ப்ரஸித்தவித்வானுமான ஸ்ரீ. உ. வே. சேரங்குளம் பஹுகுடும்பி வரதாசார் ஸ்வாமி ஸாதித்த ப்ரகாரமும், இதையொட்டி அடியேனுக்குப்பட்டதொரு ப்ரகாரமுமாகிய இவைகளை யதாஶ்ருதமாக விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஸந்நிதியில் யானொட்டியென்னுள் பாசுரம் காலக்ஷேபமாகும் ஸமயத்தில், அத்யமே ச்லோகத்தில் ஸ்வாமி நம்பிள்ளை வ்யுத்க்ரமாந்வயம் காட்டியிருப்பதற்கு நிதானமென்ன என்கிற கேள்வி பிறந்தது. மேல் ஸாவதாநய என்றிருப்பதைக் கடாக்ஷித்து வ்யுத்க்ரமாந்வயம் திருவுள்ளம் பற்றியது என்று அரும்பதத்திலிருப்பதான வார்த்தையும் நடந்தது. சரணாகதிகாலத்திலேயே நிக்ரஹாபி ஸந்தியையும் பெருமாள் உள்ளத்தே கொண்டாரென்பது பெருமாளுடைய சீலத்திற்குப் பொருந்துமா என்கிற ப்ரஸ்தாவமும் விளைந்தது. ஈட்டில் பாடம் தவறியிருக்



குமோ என்கிற ஸம்ஶயமும் உண்டாயிற்று. அரும்பதக்காரர் விவரித்திருப்பதால் பாடம் மாறுதலும் கொள்ள இடமில்லையே என்னும் வார்த்தையும் நடந்தது. கடைசியில், இந்த இடத்தில் நெடுநாளாய் ஶங்கை ஜநிப்பதுண்டு என்கிற பேச்சுமுண்டாயிற்று. ஆனால், இவ்விடத்தில் உள்ளபடியே கொள்ளவேண்டியது இதுதான் என்றுவது, பாடபேதம் இருந்திருக்கத்தான் வேணுமென்றுவது முடிவு பிறந்ததாக இப்போது ஞாபகமில்லை. ஶங்கைகள் தோன்றிய ப்ரஸ்தாவம் நடந்ததுமட்டும் இப்போது நன்றாக ஞாபகத்திற்கு வருகிறது.

ஸ்ரீ அண்ணாஸ்வாமியின் திவ்யார்த்த தீபிகையை ஸேவித்த பிறகு பழைய ப்ரஸ்தாவமெல்லாம் ஒருபடி ஞாபகத்திற்குவந்தது. இந்தஸமயம் சித்தியா எழுந்தருளியிருந்தால் இதுவிஷயமாக ஸ்வாமி திருவுள்ளம்பற்றும் முறை எப்படியிருக்குமென்று தெரிந்துகொள்ளப் பெறலாமேஎன்றும் தோன்றிற்று. ஸ்ரீஸ்வாமி சித்தியா (சிங்கப்பெருமாள்) அடிக்கடி ஸாதிப்பது ஒன்றுண்டு; அதாவது — ஸ்வாமி மணவாளமாமுனிகளுக்குப் பின்னிட்டாருடைய க்ரந்தங்களில் யாவதம்ஶமும் ஸ்வரஸமன்று என்று கொஞ்சம் சுதூஷியாய் ஸாதிப்பதுண்டு. அடியேனுக்கும் அந்த வாஸனையே ஏறி அரும்பதவுரைகளில் ஆங்காங்கு அடியேனும் தோஷங்களை நினைப்பதுண்டு.

ப்ரக்ருதத்தில் ஸ்ரீ அண்ணாஸ்வாமி காட்டியபடி பாடபேதம் புகுந்தபடியையும் அரும்பதவுரைக்கு அந்யதாஸித்தி ஸாதித்திருக்கிற முறையையும் ஸேவிக்கும்போது வாஸ்தவமாய் பரமத்ருப்தியுண்டாயிற்று, அந்தஸமயம் சேனங்குளத்தில் ஸ்ரீ பஹுகுடும்பி வரதாசாரியர் ஸ்வாமி பகவத்விஷய ப்ரவசநம் நடத்திக்கொண்டிருந்தார். அதேஸமயத்தில் அடியேனிடத்திலும் பகவத்விஷயம் ப்ராரம்பித்து ஸேவித்து வந்தார்களுமுண்டு. இரண்டிடத்திலும் ப்ராயேண ரஸிகர்களாயே சேர்ந்திருந்தார்கள். அடிக்கடி அண்ணாஸ்வாமியின் க்ரந்தங்கள் கிடைக்கும்போதெல்லாம் அவற்றை காலக்ஷேப கோஷ்டியில் பலரும் கேட்க வாசித்து அநுபவிப்பது வழக்கம். அநேகநாள் அதுவே காலக்ஷேபமாக முடிவதுமுண்டு, அத்யமே ச்லோகார்த்தவிஷயமான அண்ணா

ஸ்வாமியின் திவ்யார்த்ததீபிகை கிடைத்தபோதும் அப்படியே கோஷ்டியில் வாசித்து அனுபவித்து ஆனந்தித்துவிட்டு, ஸ்ரீ உ. வே. பஹுகுடும்பஸ்வாமி ஸந்நிதிக்குக் கொண்டுபோனேன். அந்த ஸ்வாமி அடியேனையே ஸேவிக்கச்சொல்லிக் கேட்டருளி, சற்றுப் போது மௌநமாக இருந்துவிட்டு—"இந்தவிடம் நெடுநாளாகவே கொஞ்சம் க்ஷுத்ருஷ்டியாயிருந்தது; இந்தவிடத்தில் பாடபேதம் புகுந்தமை காட்டியிருப்பது முதலிய நிரூபணங்கள் வெகு அழகாகவும் மிகவும் பொருத்தமுடையதாகவும் இருக்கிறது. ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியினுடைய ஆராய்ச்சிகள் மிகவும் அழகியவை" என்று நெடும்போது கொண்டாடி, பின்னையும், "யதிஹ ஸஹஸ்ரவதநாபி வைபவ இத்யாதிப்படியே அவருடைய ஸ்ரீஸூக்திப் பெருமைகளைக் கொண்டாடுவதற்கு நாம் ஆர்" என்று ஸாதித்துவிட்டு, இந்த நிரூபணம் மிகவுமழகியது; பரமாநந்த ஜநகமாயிருக்கிறதென்று தாம் சொன்னதாக எழுதும்படிக்கும் அடியேனிடம் நியமித்தார். அந்தஸ்வாமி பரவசமாய்ப் பேசினது முழுவதையும் அடியேன் இங்கு எழுதவில்லை. அப்போதே அண்ணாஸ்வாமி ஸந்நிதிக்கு எழுதிக்கொண்ட விண்ணப்பத்திலும் இங்ஙனே சுருக்கமாகவே சிலது விஜ்ஞாபித்தேன். அப்போது கோஷ்டியிலிருந்தார் பலரும் திவ்யார்த்த தீபிகையிலுள்ளபடி கேட்டுப் பரமரஸமாகக் கொண்டாடினார்கள்.

"ஸ்ரீ அண்ணங்கராசாரியர்ஸ்வாமி இதுவரையில் ஆதுநிகர்களை மட்டும் தூஷித்துவந்தார்; இப்போது பூருவாசாரியர்களையும் தூஷிக்கத்தொடங்கிவிட்டார்" என்று சில விபக்ஷிகள் சொல்லக் கேட்டேன். ஶாந்தம் பாபம், ஶாந்தம் பாபம் என்று செவி புதைக்கவேண்டிய வார்த்தைகள் இவை. பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளின்மீது அணுமாத்திரம் அவத்யம் சொன்னாலும் ஸஹிக்கமாட்டாமல் ஸர்வப்ரகாரங்களாலும் ச்ரமங்களை ஸஹித்து எல்லிப் பகலென்னாதெப்போதும் படாதன பட்டு வருகின்ற அண்ணாஸ்வாமிக்கு இப்படிப்பட்ட வார்த்தைகளினாலாவது சிலர் கைம்மாறு செலுத்துகின்றார்களே யென்று வியந்தேன். அண்ணாஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளை யனுபவித்து ஆநந்திக்க ப்ராப்தியில்லாதாருடைய திரளிலே அடியேனை எம்பெருமான் நிறுத்தாமைக்கு மிகவும் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணி நிற்கிறேன்.



ப்ரக்ருத விஷயத்தில் அண்ணாஸ்வாமி இவ்வளவு நிரூபணம் செய்தருளாதிருந்தால் ஸ்வாமி நம்பிள்ளைபக்கலில் சிலர் அவத்யம் சங்கிக்கவும் இடமுண்டாகுமே. அதற்கு அவகாஶ மறுப்பதன்றோ அண்ணாஸ்வாமி செய்தருளும் கைங்கரியம். பூருவாசாரியர்கள் தவறாக எழுதிவிட்டார்களென்று அண்ணாஸ்வாமி எழுதுகிறாரோ? அதில் பாடபேதம் புகுந்துவிட்டது என்றன்றோ நிரூபித்திருக்கிறார். காட்டிய முறையில் குறையுண்டாகில் சொல்லலாம்; அத்தனை போக்கி வீணே த்வேஷம் காரணமாக அஸம்பத்தோக்திகளை எதுக்காகப் பெருக்கவேண்டுமென்று மறுத்துரைத்தேன், பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை நன்கு பாதுகாப்பதற்காகவே அண்ணாஸ்வாமியின் க்ரந்தங்கள் அவதரிக்கின்றனவென்று உண்மையுணர்ந்து உகப்பவர்கள் பொலிக பொலிக.

ப்ரக்ருதவிஷயத்தில் அடியேனுடைய புல்லிய அறிவுக்குப் பட்டதொரு முறையை இங்கு எடுத்துரைப்பேன். அண்ணாஸ்வாமி "இற்றை முடிதல் கடத்தல்" என்கிற பாடபேதம் காட்டியபிறகுதான் அடியேன் சிறிது ஆராயப்புகுந்தேன். இற்றை முடிதல் என்கிற பாடத்திற்குப் பொருத்தமாகவே சில உபபத்திகள் நெஞ்சிலே பட்டன. அடியேனுக்குப்பட்டவைகளும் அதற்கும் மேற்பட்ட அம்ஶங்களும் பலமுகமாக வெளிவந்திருந்தாலும் இரண்டொன்றைமட்டும் இங்கு முக்கியமாக விஜ்ஞாபயே.

(இத்தை முடித்தல்) கடத்தல் என்கிறபாடமே நம்பிள்ளை திருவுள்ளமாயிருக்குமானால், மூலத்திலுள்ள ஸாகரபதத்திற்குத் தகுதியாக(கடலைமுடித்தல் கடத்தல்) என்ன ப்ராப்தமாயிருக்க, அப்படியில்லாமல் (இத்தை) என்றது சேராது. மூலத்தில் ஸப்தமீ ஶ்ரவணமில்லையே. ப்ரதீக க்ரஹண பூர்வகமாகவே வியாக்கியானம் செய்வதாயிருந்தால் (இத்தை) என்று நிர்த்தேஶித்திருந்தாலுமிருக்கலாம். விஶதார்த்தமாக அருளிச்செய்யுமிடத்தில் (இத்தை) என்று ஸாதிப்பது நம்பிள்ளை ஶைலிக்கு ஒத்ததாகத் தோற்றவில்லை. (இற்றை) என்று பாடமானால் மூலத்தில் அத்ய என்பதற்கும் இதற்கும் எவ்வளவு பொருத்தமென்பதையும் இதன் ஸ்வாரஸ்யத்தையும் ரஸிகர்கள் உணரலாம்.

"இற்றைப் பறைகொள்வான்" என்று திருப்பாவையிலும் "இற்றை யிரவிடை யேமத்தென்னை" என்று பெருமாள்

திருமொழியிலும் இன்னம் அநேக இடங்களிலும் இற்றை யென்கிற பிரயோகமிருந்தாலும் இப்பிரயோகம் வசனங்களில் அவ்வளவாகக் காணவில்லையே என்று சிலர் சங்கிப்பதும் அழகிய தல்ல, (என்றிய) என்றும், (குவால்) என்றும் இப்படி பல பதங் களை ஈட்டில் அபூர்வமாகவே பிரயோகித்திருக்கக் காண்கிறோம். இது வொருவிஷயமாகாது. முழுதும் ஊன்றி ஆராய்ந்தவர்களு மில்லை.

இத்தை என்கிற பாடங்கொண்டு கடலைக் குறிப்பதாகக் கொள்ளுமளவில் ஶரணாகதி காலத்திலேயே நிக்ரஹாபிஸந்தியை யும் பெருமாள் நெஞ்சிலே கொண்டாராகக் கொள்ளவேண்டி வருகிறது, அது பெருமாள் ஶீலத்துக்கு மிகவும் பொருந்தாது. ஸாமாந்யமாயுள்ள ஒருகுரங்கையும் இசைவிக்க இழிந்தவர் ஸாவஶேஷம் துளியுமில்லாமே (ஸாகரம் ஶரணம் கத:) என்று ஶரணாகதியைத்தானே நெஞ்சிலே கொண்டார். வேறு உபா யத்தை நெஞ்சிலே கொண்டாராக இல்லை. இங்குக் கடலரையன் ஒரு தேவஜாதியாயிருக்க, அவனைக் கால்கட்டும்போது நிக்ரஹாபி ஸந்தியையும் நெஞ்சிலே கொண்டாரென்பது பொருந்துமோ?

தவிர, மஹாராஜர் புதியர்; அவருடைய பாவம் ஒருவகை யாலும் தெரிந்துகொள்ள வழியில்லை. இங்குக் கடலரையன் பெரு மாள் திறத்தில் விஶேஷாபிநிவேஶத்தை ஆதரத்தோடு முந்தியே காட்டியவன். பிராட்டியைத் தேடிச் சென்ற திருவடி கடலைக் கடக்கும்போது அவர் விஷயத்தில் மைநாகத்தையிட்டு மரியாதை செய்தான். அந்த ஸமயம் அநுமானுக்குக் கடலரையன் அங்ஙனம் மரியாதைசெய்யவேண்டிய அவசியமில்லை. செய்யாவிடில் கடலை நிந்திப்பார் ஆருமில்லை. அப்படியிருக்கவும் திருவடி விஷயத்தில் அஸ்தாநே பயஶங்கையும், தான் ஏதேனும் கிஞ்சித்கரித்ததாக வேணுமென்கிற ஆதராதிஶயமும் காரணமாகவன்றோ கடலரச னுக்குப் பரபரப்பு உண்டானது. பகவத்விஷயத்தில் அஸ்தாநே பயஶங்கை விளைந்து துடிக்கும் அதிகாரிகளைக்காட்டிலும் பாகவத விஷயத்தில் அங்ஙனே துடித்துப் பரபரப்புக்கொண்ட இக்கடலை உத்தமாதிகாரியாகக் கொள்ளவேண்டியதாச்சுதே. ஸ்ரீராமாபிநிவேஶ த்தையே குவாலாகக் கொள்ளும் பெருமாள் இப் ப்ரபரப்பை எவ்வளவு பெரிதாகக் கொள்வர்! அபிநிவேஶம் கிடையா



மையாலன்றோ ராவணனை முடித்தது. அது கிடைக்கைக்காகவே யன்றோ அரும்பாடுபட்டது. பெருமாள் தாம் செய்யும் நன்மை களை அவன் விலக்கமாட்டாத தஶைபெற்றபின் (நிவ்ருத்தம் ந: ப்ரயோஜநம்) என்று தம் நினைவு கூடிற்றாக உகந்தார் என்றன் றோ பெரியார் பேச்சு. அப்படியிருக்க, ப்ரதீத விஶேஷாபி நிவேஶத்தை ஆதராதிஶயத்தோடு காட்டியிருக்கின்ற கடலரசனை முடித்துவிடுவதான நினைவையும் முந்தியே நெஞ்சில் கொண்டா ரென்பதை இசைய பாவியேன் நெஞ்சு கொஞ்சமும் துணியவில்லை.

இனி, ராஜநீதியில் ஸாமாத்யுபாயங்களில் ஏதேனுமொன்றை கார்யஸாதகமாகக் கொள்ளுவதும், ஒன்று பலியாவிடில் மற்றொன் றைக் கைக்கொள்ளுவதும் ப்ராப்தம். அந்த முறையில் இங்கு முந்தி ஸாமப்ரவ்ருத்தி; அது பலிக்கக் காணாவிடில் தண்டோபாய ப்ரவ்ருத்தியை நெஞ்சில் கொண்டதாகக் கொள்ளலாம் என்னில்; அதுவும் இங்குப் பொருந்தாது. இங்கு ஶரணாகதியானது ராஜ நீதிப்படி மந்திரிகள் ஒன்றுகூடி ஆவாபோத்வாபங்கள் செய்தோ, அல்லது ஏகமனதாய் முதலிலேயே நிர்ணயிக்கப்பட்டோ வந்த தில்லை. இதற்கு முந்தி விபீஷணாழ்வானைப் பரிக்ரஹிக்கும் விஷய மாக ஆலோசித்த முறையை நோக்கவேணும். பெருமாளுக்கு விபீஷணனை அங்கீகரிக்கத் திருவுள்ளமிருந்தும் அதை மந்த்ரிகள் வாய்க்கொண்டு நிர்ணயித்ததாகவன்றோ இருப்பது. தவிர, லங்கை புகுந்தபின்பு மந்த்ரிகளுடன் கலந்து அங்கதப்பெருமாளைக் கொண்டு "ஸீதையைவிட்டு ஶரணமடைகிறாயா? சண்டைக்கு வருகிறாயா? என்று ராவணனைக் கேட்டு வரவிட்டபோது ஸாமத் தையும் தண்டத்தையும் உடன் ப்ரஸ்தாபித்துவிட்டதுபோல் இங்கு இல்லையே. அங்கு ராஜநீதியை யநுஸரித்து ஸாமத்தில் கேட்போம்; தவறில் தண்டத்தில் ப்ரவ்ருத்தி செய்யவேண்டிய தென்கிற நிர்ணயம் செய்துகொண்டு ஆள்விட்டது. அப்படி ஒன்றுகூடி யிங்கு ஆலோசனை நடைபெறவில்லை.

கடற்கரை சேர்ந்தவுடன், "இனி யிவ்விடத் திலிருந்து கடல் கடப்பதற்கு ஒரு முடிவு செய்துகொள்ளவேண்டியது, ஆகையால் ஸைந்யத்தை இங்கு நிறுத்துவோம் என்று ஸைந்யம் நிறுத்தப்

பட்டது. அந்தப்படி ஆலோசனை தொடங்கப்பட்டது'' என்பதாக அந்தஸமயம் சொல்லவில்லை. விபீஷணன் வந்தபிறகும் மேற்குறித்த ஆலோசனை விஷயமாக மந்த்ரிகள் ஒன்றுகூடினார்களென்றுவது இதைப்பற்றி ஏதாவது ஆலோசனை செய்தார்கள் என்றுவது தோன்றும்படியான வாக்யங்கள் ஒன்றுமில்லை. மந்த்ராலோசனை செய்யவேண்டியது அவசியந்தானே, சரணாகதி ப்ரஸ்தாவந்தான் எப்படிவந்தது? என்று கேள்விபிறக்கும். வந்தவழி இப்படியாக வேணுமென்று தோன்றுகிறது. அதாவது — மஹாராஜர் விபீஷண விஷயத்தில் விசேஷ விரோதத்தைச் செய்தவர். பின்னிட்டு அவரை ஸாதுவாக அறிந்துகொண்டபிறகு தனக்கு அநுதாபம் பிறந்திருக்கவேண்டியது ப்ராப்தம். அதற்கு அறிகுறியாக அவரை ஆதரித்து அவசியமாக மேல் நடக்கவேண்டிய காரியத்தைப்பற்றி ஆதரம் தோற்றக்கேட்டது. இது வார்த்தைப்பாட்டிலே கேட்டது. ஆலோசனைக்காகக்கூடிக் கேட்டதல்ல. அப்படியாகில் விபீஷணனை இளையபெருமாளோ பெருமாளோ கேட்டிருக்கலாம். 'ஸமுத்ர தரணத்திற்காக மந்த்ராலோசனை உபக்ரமிக்கப்பட்டது' என்றும் சொல்லியிருக்கலாம், அப்படியொன்றுமில்லை. மஹாராஜர் கேட்டதுகொண்டு, மஹாராஜர் அவரிடத்தில் தமக்குண்டான அன்பு மிகுதியைக்காட்டுவதற்குக் கேட்டதென்று தோற்றுகிறது. அவரும் சரணாகதி தமக்கு பலிக்கக் கண்டவராகையாலே (எருது கெட்டார்க்கும் ஏட்டே கடுக்காய்) என்கிற கணக்கிலே கடலரசனைச் சரண்புகுவதுவே ஓவாயமாய் நமது காரியம் கைகூடுமென்று தெரிவித்தார். இதைக் கேட்டதும் மஹாராஜர் பெருமாள் இருந்தவிடம் தேடிவந்து விபீஷணாபிப்ராயத்தை வெளியிட்டார் என்றிருக்கிறது.

மஹாராஜர் பெருமாளிருந்த விடம் தேடிவந்ததாகச் சொன்னபடியாலே மந்த்ராலோசனை உபக்ரமிக்கப்பட்டதாகக் கொள்ள இடமில்லை என்று தோற்றுகின்றது. நிற்க, சொன்ன உபாயத்தைப் பெருமாளும் தமது சீலத்திற்குப் பொருத்தமுடையதாயிருந்ததாகையாலே ஏற்றுக்கொண்டாரித்தனை. குரங்கின் காலிலும் விழுமவர் ஒரு தேவயோநியின் காலில் விழ இசையாதொழிவரோ?

இவ்வவதாரம் (ஸாதூநாம் ரக்ஷணாய) (ஹராஜஸ்ய ஸாவனாய) இத்யாதிப்படியே வாநரேந்த்ர ஸமாச்ரயணத்திற்காகவே ஏற்பட்டதாகையால் சரணமடைவதிலும், அதிலும் அன்றின்றகன்றுக்கித்யாதிப்படி ஸத்யஸ் ஸம்ஸ்ருஷ்டத ப்ரியதமே விபீஷணனிடத்திலுண்டான ஆதராதிசயத்தால் அவர் வார்த்தையைக் கேட்பதிலும் மிகவுகப்பாகையாலே ஏற்றுக்கொண்டார். ஆகவே ஸமகாலமாக நிக்ரஹாபிஸந்தியும் நெஞ்சிலே யுண்டென்று கொள்வது பொருந்தாது.

மேலும், விபீஷணஸ்ய மதேநாய இத்யாதியைக்கொண்டு வார்த்தைப்பாட்டிலே சரணாகதி வரவில்லை, பிறகு ஆராய்ச்சி செய்தும் அது நிர்ணயிக்கப்பட்டது. "லக்ஷ்மணா! விபீஷணன் சொன்ன உபாய பரிக்ரஹம் எனக்கு ருசிக்கிறது; உன் அபிப்ராயமெப்படி?'' என்று பெருமாள் கேட்டிருப்பது முதலியவற்றைக் காணலாம். ஸாமம் பலிக்காவிடில் தண்டத்தையே கொள்ள வேண்டுமென்கிற ப்ரஸ்தாவமே யில்லை. இராவணனுக்கு அங்கதப் பெருமானை விட்டபோது அப்படிப்பட்ட நிர்ணயம் முந்தியே உண்டாயிருந்ததன்றோ, ராவணன் துஷ்ப்ரக்ருதியாய் அக்ருத்யத்திலே ஊன்றி நின்றுகையாலே அப்படிக் கேட்கவேண்டிற்று. இங்கு அப்படி யில்லாமையாலே ஸாமத்தையே நிர்ணயித்தது.

முகங் காட்டாவிட்டவாறே தண்டத்தில் ப்ரவ்ருத்தி நேர்ந்தது என்று சொல்லுவதற்குங்கூட அவகாசமில்லாமலிருக்கிறது. ஸாமம் பலியாதவாறே மேல் என்ன செய்ய வடுப்பது? என்று மந்த்ரிகளுடன் கலந்திருக்கவேண்டுவது பெருமாள் சீலத்திற்குப் பொருந்தியது. அப்படியன்றிக்கே ஒரு நிர்ணயமின்றிச் சீறி வில்லெடுத்தமுறைக்கு ஒத்துமையாக ஒரு ஸாவகல்பநம் செய்வதே உசிதமென்று தோன்றுகிறது. "முந்தி தவஸா ஸேதுபந்த ஸாமரோ ஹாஷணேநவா என்றுளது. மேல் ஸாமரம் ஸோஷயிஷ்யாமி என்றுளது. நடுவிலுள்ளதான கஷ்டசேச்லோகத்திலும் ஸாமரசரணமே சுஹிஸம்யி விஷயம். அதுவிஷயமாக

மந்த்ரிகளுடன் கலக்கவேண்டிய அவகாஶமு மில்லை. மேலும் ஸாமோபசாரமான தாந பேதங்களுக்கு ப்ரஸக்தியில்லாமையாலே தண்டத்தையே கைப்பற்றவேண்டு மாகையாலே கொண்டார்'' என்று சொல்லலாகாது. ராஜநீதிப்படி செய்கிற காரியம் இது என்னும்பக்ஷத்தில் எதுவிஷயமும் மந்த்ரிகள் ஆலோசனைக்கே வராமல் பெருமாள் செய்யமாட்டாரே. திடீரென்று அவரையு மறியாமல் வந்ததாகவன்றோ சீற்றம் தோற்றுகிறது. இளையபெருமாளும் ஓடி மறுத்தாரே; அவருக்கு ஸமுத்ரதரணம் அநிஷ்டமா? அவர் மறுத்தது உபாயாந்தர சிந்தை பண்ணுவோமென்ற கருத்தினாலன்றோ? ஒரு கருத்துமின்றியே ஸஹஸா மறுக்கப் போவரோ?

தவிரவும், தவஸா ஸேதுபந்தேந ஸாகரஶோஷணேந வா என்றவிடத்தில் ஸாகரஶோஷணம் உபாயமாகக் கொண்டதன்று. திருவடிவாய் கொண்டு லங்காப்ரஸ்தாநத்தைக் கொண்டபோது ஸமுத்திரத்தை நினைத்துக் கலங்கினார் மஹாராஜர். அவரை ஸமாதானப்படுத்தவேண்டி, உபாயகதந மில்லாமலே, எப்படியும் தாண்டிவிடுவோம். ஶூரர்கள் இருக்கிறார்கள் என்றும், இன்னம் பலவிதமாக பௌருஷோத்ஸாஹகமாக வார்த்தைகளைச் சொல்லக்கேட்டு பௌருஷம் தலையெடுத்து 'ஸமுத்திரத்தை அணைகட்டியோ வற்றவைத்தோ தாண்டுவதற்குத் திறமையுண்டு' என்று பேசும்போது, இரண்டு காரியமும் ஸாமாந்யமானதல்லவே, எப்படி கைகூடும்? என்று ஶங்கை விளையாமைக்காக (தவஸா) என்றார். தபோபலப்ரயுக்தமான ஸேதுபந்தத்தையோ, அகஸ்த்யாதிகளுக்குப் போலே தத்ஸாத்யமான ஸாகரஶோஷணத்தையோ கொண்டு தாண்டுவேன் என்று சொன்னபடி. அங்கு உபாயப்ரஸ்தாவ ப்ரஸக்தியே யில்லை. முதலில் அந்த இடத்தில் தண்டம் நெஞ்சில் தோற்ற நியாயமுமில்லை.

அத்ரைவ மரண மென்றவிடத்தில், கார்பண்யம் தலையெடுத்து ஶோகாவேஶ ப்ராயோபவேஶாயாமென்று சித்திரகூடத்தில் பரதாழ்வான் படுகாடு கிடந்ததுபோல் பெருமாளும் தைந்யம் தலையெடுத்துக் கல் நெஞ்சரும் நெஞ்சுளகிக் காரியம் செய்தே தீரும்படி அநதிக்ரமணீயமான ஊற்றத்தை நெஞ்சிலேகொண்டு கிடந்தபடி. கடலரையனே! இரங்காவிடில் நான் முடிந்தே கிடப்பேன் என்றுயிற்றுக் கிடந்தது. தவஸா என்ற வங்கு மஹாராஜர் வார்த்தை கேட்டு பௌருஷம் தலையெடுத்து ஸாமர்த்தியம் தோற்றப் பேசினது. இங்குக் கடல் இரங்கவேண்டி தைந்யமடியாக நைச்சியந் தலையெடுத்துக் கிடந்தபடி. அது க்ஷத்ரியத்வப்ரயுக்தமான பௌருஷத்துக்கும் பரத்வத்துக்கும் சேரும். இது அவதார மெய்ப்பாட்டுக்கும் நீர்மைக்கும் பொருந்தும்.



பிறகு ஸாகரம் ஶோஷயிஷ்யாமி யென்றதும் தண்டோபாயமே இனித் தகுந்ததென்று கொண்டதன்று. மண்டலமிட்டுக் கிடந்த மஹாநாகம் கால்பட்டதும் சீறிப் படமெடுப்பதுபோல், தைந்யமடங்கலும் தோற்றத் தாம் கிடந்தகிடை கடலுக்குத் திரஸ்காரஹேதுவாய் விழுந்த தென்கிற பாவம் விளைந்ததனால் உடனே ஆலோசனை வேண்டாதே சீறிப்பேசினபடி, இயற்கையாயுள்ள க்ஷத்ரியத்வ ப்ரயுக்தமான பௌருஷம் தலையெடுத்துப் பேசினபடி. இதுவும் பரத்வத்துக்குப் பொருந்துமது.

கீழே தவஸா இத்யாதிவசநமும் ஶரணாகதிக்கு ஒத்துமைப் பட்டதாகவே கொள்ளலாம். தபஸ்ஸானது தேவதா ப்ரஸாத ஜநகவ்யாபார விஶேஷந்தானே. இங்கு ஶரணாகதியும் தேவதா ப்ரஸாத ஜநநார்த்தமாகக்கொண்டதுதானே. * தஸ்மாந்ந்யாஸ மேஷாமித்யாதிப்படியே ஶரணாகதியும் தபஸ்ஸுதானே. ஆகையால் தபஸ்ஸாத்யமான ஸேதுபந்தனமோ ஶோஷணமோ பூர்வம் விவக்ஷிதமான முறைக்கு ஶரணாகதி இசைந்ததாகிறது. ஆகவே பூர்வமும் உபாயாதிஸம்பந்தமில்லை. பிந்தியும் உபாயவிஷயாதீநமான நிர்ணயம் காரணமாக வந்ததுமில்லை. தத்தத்காலிகபாவாநுகுணமாக வந்ததித்தனை. தத்தத்காலங்களில் உள்ளக்கும் பாவாநுகுணமாக சொலவும் செயலும் யாருக்கும் மாறுபடுவது இயல்வே. எம்பெருமானுக்கும் ஒரு சேதந விஷயத்தில் கோபமடியாக ஸ்வாதந்திரியம் தலையெடுத்து க்ஷிபாமி யென்

பதும், அருள் தலையெடுத்தபோதாக ப்ரதீதி யென்பதும் உள்ளது தானே.

பெருமாளும் பிராட்டியும் அவதாரத்துக்கு முந்தி ராவண வதத்தை ஒருவாறு ஸங்கல்பித்துக்கொண்டுதானே அவதரித்தது. பிந்தி தைவயோகமாக இருவரும் காடேறவந்தபோது தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளின் ப்ரார்த்தநாநுகுணமாக ராக்ஷஸ வத ப்ரதிஜ்ஞையைப் பெருமாள் செய்தருளினபோது, பிராட்டி ராக்ஷஸவதம் ஹிம்ஸாச்லேஷத்திலே மூட்டுவிக்குமென்றும் அப்பால் பெருமாளுக்கு என்ன தீங்கு விளையுமோவென்றும் கூசி பரிவு தலையெடுத்து அப்போதுண்டான பாவத்துக்குச்சேர பெருமாள் திருமுன்பே. 'நாம் காட்டில் வாழுமிக்காலத்தில் இக்காரியம் வேண்டா; நாட்டிலே சென்று முடிசூடி வாழுங்காலத்தில் கைக் கொள்ளலா' மென்று தடுத்துரைத்தது ப்ரேமப்ரகர்ஷ ஸம்க்ஷுபித ஹ்ருதயமாக அப்போதுண்டான பாவத்துக்கீடாகச் சொன்னபடி யன்றோ. இப்படி மஹாஸங்கல்பத்திலும் பாவபேதமடியாக வார்த்தைகள் வேறுபடுமேயானால் கிம்வக்தவ்யம் ஸாதாரணஜநவிஷயே ।

பிராட்டி தடுத்தவிடத்தில் ஸ்வாமிநீவசநாநந்தர ஸ்ரீராமக்ஷணஸ்வீகாரணமென்கிற வியாக்கியானம், ஓரிடத்தி லும் சொல்லப்படாத பிராட்டி க்ஷமாப்ரார்த்தநம் பண்ணினது, அதுக்கீடாக உத்தர ஸர்க்க வைஷம்யத்தாகம், இன்னம் பலவும் ப்ரக ரணவிசேஷ விரோதங்களால் தூஷ்யம் என்பதை இங்கெடுத் துரைப்பதை ப்ரக்ருதாநுபயுக்தமாய் விரியுமென்று விட்டொ ழித்தேன்.

ராக்ஷஸநிரஸநாபிலாஷையாகையாலே க்ஷத்ரிய தர்மம் மென்று ஸங்கல்பித்தபடி செய்யாதொழிந்தது குறையென்று கூறுவது பொருந்தாது. விரஹாஸஹிஷ்ணுத்துக்கு விஷய வைலக்ஷண்யம் கொள்ளவேணும். அதுவன்று இது. அப்படியாகில், சக்ர வர்த்தி துஞ்சினனென்று வார்த்தை செவிப்பட்டதும் 'வநவாஸம் முடிந்தபிறகும் அயோத்திக்கு நான் வருவதில்லை' என்று சொன்ன



வார்த்தையும் அநுஷ்டாநத்திற்கு வாராதது விரோதிக்கும். அவ்வணு, ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் தபோவநவாஸமேவமென்று ஒருபோதும் ஒருவகையாலும் கொள்ள இயலாது. ஆகையால் (இற்றை முடிதல் கடத்தல்) என்றே ஈட்டுப்பாட மிருக்கவேணும்.

அப்போதுதான் ப்ரஸ்தாவ ப்ராஸங்கிகாநுஸந்தேஹமும் நேரும். (இத்தை முடித்தல்) என்னுமளவில், கடல் ஸ்தானத்தில் ஆழ்வாராகும்போது, ஆழ்வாரை முடித்தல் என்னவேண்டிவரும். இற்றை முடிதல் என்கிற பாடம் ஸ்ரீராமாயண ப்ரகரணத்திற்கு நன்கு பொருந்துவதுபோலவே ஈட்டு ப்ரகரணத்திற்கும் வெகு ஸ்வாரஸ்யமாகப் பொருந்துகிறபடியை ஸஹ்ருதயர்கள் கவனிக்க வேணும். [யானொட்டியென்னுள் இருத்துவமென்றிலம்] என்று பாசுரமிருப்பதால் ஆழ்வா ரிசைவுகொண்டு எம்பெருமான் அவருள்ளத்தே புகுர நினைத்தமை தோற்றுகிறது. ஆழ்வாரை யிசைவித்து அவர் நெஞ்சிலே புகுவோம்; அவரிசையாவிடில் அவரை வஞ்சித்துப் புகுவோம்; வஞ்சனையும் பலிக்காவிடில் ஆழ்வார் திருமுன்பே படுகாடு கிடப்போம் என்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றினமை இங்கு விவக்ஷிதம். ஸர்வ சக்தனுக்கு இப்படியும் ஒரு திருவுள்ளமுண்டாகப் பொருந்துமோ வென்று கேட்கலாகாது. ஆழ்வார் பாசுரங்களிலே ஆழ மூழ்கினவர்களுக்கு இத்தகைய சங்கையும் உதியாது, ஸமாதானமும் அநபேக்ஷிதம்.

இப்படி பலவகைப் பொருத்தங்களையும் நோக்குமிடத்தில், அண்ணஸ்வாமி நிரூபித்திருக்கிற வகைகளே ஸ்வரஸமாகத் தோற்றுகிறது. பலகாலமாகப் பலபேர்கள் ஆதரிக்கிற பாட மென்றும் அரும்பதக்காரர்கள் வியாக்கியானித்த பாட மென்றும் கொண்டு வாதிப்பது அழகியதல்ல. "மால் உமது வாஞ்சை முற்றும்" என்ற திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்தை (மாலுமது) என்றோதியும் இன்னமும் வெவ்வேறுவகையாக ஓதியும் மஹான்களும் சில விசேஷாவதாநங்கள் செய்யக்

கெட்டிருக்கிறேன். இப்படிப்பட்டவை வாசாமகோசரம். அரும்பதக்காரர்களைப்பற்றி அடியேனும் விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை. இயற்பா அரும்பதவுரையில், ஸாமாக்ஷாஜாதசத்ருஸம்வாத மென்று வந்தவிடத்தில் [அஜாத சத்ரு: — யுதிஷ்டிர:] என்றெழுதியுள்ளார். யுதிஷ்டிரனுக்கு அங்கு என்ன ப்ரஸக்தியோ தெரியவில்லை. இங்ஙனேயாகப் பார்க்கும்போது அரும்பதவுரைகளின் சுவிவாஸித ரமணீயத்வத்தை ப்ராமாணிக ப்ராஜ்ஞர்கள் இசையா தொழியார்கள்.

ப்ரக்ருதவிஷயத்தில் விஸம்வாத முடையவர்களோ மஹான்களா யிருக்கின்றார்கள். அல்பஜ்ஞனை அடியேன் விவாதத்தை வளர்த்தும் முறைக்கு இத்தனை யெழுதினேனல்லேன். ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் அனேக விடங்களில் ஸம்சயநீயங்கள். ஸம்சயநாசத்துக்கும் ஆராய்ச்சி ஆவச்யகம். ஆராய்ச்சியில் ஏதேனும் அபிப்ராயபேதம் வந்து புகுமானால் அதை விவாத விஷயமாக்கிப் பலரறியப் பரவவிடாமல் ஸமரஸமாய்க் கலந்து ஒருபடி நிர்ணயித்து வெளியிடவேணுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். சிறியேனுடைய இவ்வபிப்ராய ப்ரகாசநம் மஹான்களுக்குச் சீற்றத்திற்கு உறுப்பாகாதொழியவேணும். இப் புன்மொழிகளிலுள்ள பிழைகளையும் பொறுத்தருளவேணும்.

யதாவகப்ரதிபாதாநாம் விஷயாணாம் நிவேதநம் ।
க்ஷமாவந்தோ ஹ்யதோ ஜ்ஞா: ப்ராணயவண்டிதா: ॥

218932

## நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
7. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள
8. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸுகதுக்காநுபவங்களை யுடையவர்கள் ( Sympathizers ) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவனாக் கடவேன்.
9. (25) இருபத்தைந்து ரூபாய் கொடுக்குமவர்களை ஜீவியச் சந்தாதாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பணமன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.
10. பத்திரிகையின் வருஷசந்தா

| | | | | |
|---|---|---|---|---|
| வெளியூர் | ... | 1 | 12 | 0 |
| உள்ளூர் | ... | 1 | 8 | 0 |
| தனிப்ரதி | ... | 0 | 3 | 0 |

ஷை ரூபாயை அனுப்பி சரியான விலாசத்தைத்தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

## விளம்பரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் முழுப்பக்கம் ஒரு தடவைக்கு | | ... | 5 | 0 | 0 |
| அரைப்பக்கம் | ,, | ... | 3 | 0 | 0 |
| | | ... | 2 | 0 | 0 |

—பத்ராதிபர்.

Registered No. M. 3401


## விளம்பரம்

1. தங்கம், கெம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச் சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1 - க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம் பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசு வளையல்களுக்கும் கேட்லாக்கு உண்டு. அதை வாங்கி நெம்பரைக் குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்துகொடுக்கப்படும்.

**பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,**

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ் டவுன், மதரூஸ்.

**ப்ராணஸுத**

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப் போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏர்ப்பட்ட பலஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனாம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்**

107, பிராட்வே, சென்னை


Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali S
and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St., Madras.

ஸ்ரீ:

11 OCT 1938
MADRAS

# ஸ்ரீ ராமானுஜ

# ஸித்தாந்த  வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை


| ஸம்புடம் 1 | தாதுஸூ ஆவணியில் ரோஹிணி | சஞ்சிகை 10 |
|---|---|---|

பத்ராதிபர்:

வடகரை இராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1936 ஆகஸ்டு] [தனிப்ரதி விலை 0-3-0

## விஷய ஸூசிகை

விஷயங்கள். பக்கம்


1. ஆவணியில் ரோஹிணி நாள் .... 221
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்

2. ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் .... 229
—பத்ராதிபர்

3. தியானம் .... 233
—வி. கே. ஏ. எஸ். ரகுநாதாச்சாரி., பி.ஏ., எம். ஐம். எஸ். ஏ.,

4. ஸ்ரீ பாஷ்ய முத்ரணம் .... 237
—ஸ்ரீ. உ. வே. அனந்தா சாரியார், ஸமஸ்க்ருத பண்டிட், பச்சையப்பன் காலேஜ்

5. பத்திராதிபரின் குறிப்பு .... 239

6. எண் குணத்தான் .... 240
—பந்தல் குடிபாரத் வாஜமாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, தமிழ்ச்சங்கம், திருவல்லிக்கேணி

7. ப்ரபந்த குலம் .... 243
—ஸ்ரீ. உ. வே. திருமலை நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார், ஆழ்வார் திருநகரி

8. ஓர் ஸந்தேஹ நிவ்ருத்தி .... 249
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

9. வர்த்தமானங்கள் .... 250

10. ஸ்ரீ முதலியாண்டான் வைபவ ஸங்க்ரஹம் ....
—அகரம் கஸ்தூரி கிருஷ்ணமா சாரியார்


---

ஆரியர்காள் :—

நமது வைஜயந்தீ பத்திரிகை ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் அபிநிவேசமுடைய பெரியோர்கள் அநுக்ரஹிக்கும் விஷயதானங்களைச் சிரமேலேற்று நிஷ்பக்ஷபாதமாய் வெளியிடுவதற்கென்றே வெளிவந்திருக்கின்றது. ஆயினும் அவ்வாறு விஷயதானங்களை அநுக்ரஹிக்குமவர்கள் பிறர்மனம் வருந்தும்படி வசைமொழிகளை அறவே ஒழித்தும் விஷயத்திற்குப் பொருத்தமுடையனவாயும் அனுவஸ்யகமான விஷய விசாரங்களை வளர்த்தாமலும் அநுக்ரஹிக்கவேண்டும். இவற்றிற்கு விருத்தமாயிருக்கும் விஷயதானங்களை நமது பத்திரிகை அங்கீகரிக்காதென்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்கிறேன்.

V. இராமானுஜாசாரியார்,
பத்ராதிபர் S. R. S. வைஜயந்தி,
24, சந்த்ரப்ப முதலி தெரு G. T. மதராஸ்.


L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது




மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.



அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வியாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.




அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

# சலோனுடவர் பிராண்ட்

## போர்ட்லாண்ட் சிமெண்ட்

### காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர் வேலைகளுக்கும், ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிருர்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்.

சோல் எஜெண்ட்

**M. குப்புசாமி நாய்க்கர்**

**83. செம்புதாஸ் தெரு,**

மதருஸ், ஜி. டி.



ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

| தொகுதி 1. | பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார் | பகுதி 10. |
|---|---|---|


𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁

𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ॥
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌤𑌾𑌮𑍍 ॥

## ஆவணியில் ரோஹிணி நாள்.


[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]


இம்மாதத்தில் நமது வைஜயந்தீபத்ரிகை வெளிவரும் நாளாய இத்திருநன்னாளில் உலகுக்கோர் முந்தைத்தாய் தந்தையான கண்ணபிரானும், ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்குப் பேராசிரியரான பெரியவாச்சான் பிள்ளையும் திருவவதரித்தனர். இவ்விருவருடைய பெருமையையும் இன்று நாம் அநுபவிக்க ப்ராப்தமாகின்றது. ஆனாலும், எம்பெருமானுடைய அவதாரத்திற் காட்டிலும் ஆசாரியர்களின் அவதாரமே மிகச் சிறந்ததாதலாலும் கண்ணபிரானுடைய பெருமை பெரும்பாலும் ப்ரஸித்தமேயாதலாலும் இப்போது நாம் பெரியவாச்சான் பிள்ளையின் பெருமையைச் சிறிது அநுபவிக்க ஆசைகொண்டோம்.

இவ்வாசிரியர் தம் சரித்திரவரலாறுகளைப்பற்றி இங்கு நாம் ஒன்றும் எழுதப்புகுகின்றிலோம். இவர் தம்மால் உலகுக்கு விளைந்த மஹோபகாரங்களைப்பற்றிப் பேசுவோம். ஆழ்வார்களின்

அருளிச்செயல்களுக் கெல்லாம் மிகச் சிறந்த வியாக்கியானமும், ஸ்ரீ ராமாயணத்தில் பலபல ச்லோகங்களுக்கு இன்சுவையே வடிவெடுத்த வியாக்கியானமும், ஆளவந்தாரருளிய ஸ்தோத்ர ரத்நத்திற்கு உருக்கமான வியாக்கியானமும், சில ரஹஸ்யார்த்த க்ரந்தங்களும் முதலானவை இவர் அருளிச் செய்தவையாகும்.

நம் பிள்ளையென்கிற லோகாசார்யரின் திருவடிவாரத்தில் நெடுநாள் பரிசர்யைபண்ணிப் பெற்ற விசேஷார்த்தங்களை இவ்வாசிரியர் தமது திவ்யக்ரந்தங்களில் அமைத்தருளினர். இவர் தாம் நம் பிள்ளையைப்பற்றி ஓரிடத்தில் அருளிச் செய்திருக்கும் ஸ்ரீ ஸூக்திகள் நினைவுக்கு வருகின்றன; அவற்றை இங்குக் குறிப்பிடுவோம்; பெரிய திருமொழியில் (5—8—7) "அந்தணனொருவன்" என்ற விடத்து வியாக்கியானத்திலே—"முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாம்ஸைகளும் அதிகரித்து, போது போக்கும் அருளிச்செயலிலேயாம் பிள்ளையைப் போலே. . . ." என்றருளிச் செய்தார். இதனால், நம் பிள்ளை ஸகல சாஸ்த்ரங்களையும் வரியடைவே அதிகரித்து அந்தப் பாண்டித்யம் முழுவதையும் அருளிச் செயற்பொருளுபந்யாஸங்களிலே உபயோகப்படுத்தி வந்தாரென்பது விளங்கும். அவ்வண்ணமாகவே இவ்வாசிரியரும் ஸகல சாஸ்த்ரஜ்ஞராகித் தமது ஞானவிளக்கத்தை வியாக்கியானங்களருளிச் செய்வதில் வெகு அழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மஹோபகாரகர்களில் ப்ரதமஸ்தானம் பெற்றருளினர்.

அருளிச் செயல்களுக்கு வியாக்கியான மிட்டருளும் திருப்பணியில் மற்றுஞ் சில ஆசாரியர்களும் கைவைத்ததுண்டு. ஆனால், பூர்த்தியாக நாலாயிரத்திற்கும் வியாக்கியானமிட்டருளினவர் என்னும் பெருமை இவ்வாசிரிய ரொருவர்க்கே அஸாதாரணமாக அமைந்ததாகும். இவ்விஷயம் உபதேசரத்தினமாலையில், "பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை தெள்ளார்வடக்குத் திருவீதிப் பிள்ளை, மணவள யோகி திருவாய் மொழியைக் காத்த குணவாளரென்று நெஞ்சே கூறு." "நஞ்சீயர்செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு, எஞ்சாமை யாவைக்குமில்லையே—தஞ்சீரால் வையகுருவின் தம்பி மன்னுமணவாளமுனி செய்யுமவை தாமுஞ் சில," "பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்கும் தெரிய வியாக்கியைகள் செய்வால்—அரிய அருளிச் செயல் பொருளை



ஆரியர்கட்கிப் போது அருளிச் செயலாய்த் தறிந்து." என்ற பாசுரங்களினாலும் உணரத் தக்கது. பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியர்தம் வியாக்கியானம் லுப்தமாயிருந்த தென்றும், மணவாளமாமுனிகள் பலருடைய ப்ரார்த்தனைக்கிணங்கி அக்குறையைத் தாம் நீக்கியருளினரென்றும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பகர்வர்.

"கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும், மற்றைநிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து" என்கிறபடியே பரமகாருணிகனை ஸர்வேச்வரன் இவ்விருள் தருமா ஞாலத்துக்கு அணிவிளக்காக அனேகவிதமான சாஸ்த்ரங்களை உபகரித்த ருளினன். அவற்றுள் வேத சாஸ்த்ரமே மூலப்ரமாணம். அது வடமொழி வேத மென்றும் தென்மொழி வேதமென்றும் பாகுபாடுற்றது. வடமொழி வேதத்திற்கு வித்யாரண்யஸ்வாமிகள் பலபலபண்டிதர்களை வைத்துக் கொண்டு பாஷ்யம் அவதரிப்பித்தார். இவ்வுலகுக்கு அஃது வொரு மஹோபகாரம். அந்த வடமொழி வேதத்திற்காட்டிலும் பலவகையினும் சிறப்புப்பெற்ற தமிழ்வேதத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை பரம ரஸபரிபூர்ணமான வியாக்கியானமிட்டருளினது யாவர்க்கும் கைம்மாறிலாத பேருதவியாகும்.

இவ்வாசிரியரின் வியாக்கியானசைலி அநுபவிக்க அநுபவிக்க அனைவரையும் ஆனந்தக்கடலில் அமிழ்த்துவதாகும். மற்றையோர் பத்தெட்டு வாக்கியங்களினால் விரியவுரைக்கும் பொருளைச் சிறியதொரு வாக்கியத்தினால் மிக அழகாக அருளிச் செய்து வைக்குந் திறம் இவர்க்கு அஸாதாரணமானது.

கடல் ரத்நாகரமென்று பெயர் பெற்றிருத்தல் போல இவ்வாசிரியரது வியாக்கியானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்தரத்ன நிதியாகப் புகழ்பெற்றுள்ளது. அவற்றுள சில அர்த்த ரத்னங்களை ஈண்டெடுத்து விளக்குவாம்:—ஆளவந்தார் எம்பெருமானர் பட்டர் நஞ்சீயர் முதலான பூருவாசாரியர்கள் அருளிச் செயல்களுக்கு ஆங்காங்கு அழகாக நிர்வஹித்துக் கொண்டிருந்த அர்த்த விசேஷங்களை இவ்வாசிரியர் நமக்கு எடுத்துரட்டியிருக்கின்றாராதலால் அப்படிப்பட்ட அர்த்தங்களை முந்துற அனுபவிப்போம். திருமங்கையாழ்வாரருளிச் செயலான பெரிய திருமொழியிற்செல்வோ மிப்போது.

(1—2—10) "கரியமாமுகிற்படலங்கள் கிடந்து அவை
முழங்கிட, களிறென்று பெரியமாசுணம் வரையெனப் பெயர்தரு
பிரிதி." என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில்—மலைப்பாம்
புகளானவை யானைக்கு அஞ்சிப் புற்றிலேபுக்கொளிக்கும் என்று
நஞ்சீயர் அருளிச் செய்தார்; அதைக் கேட்ட நம் பிள்ளை 'இது
வோ இதுக்கு அருளிச் செய்யும்படி?' என்று கேட்க; "நீர்
இப்படிக் கேட்கும்போது ஒன்றை நினைத்தல்லது கேளீர்; அத்தைச்
சொல்லும்" என்று ஜீயர் நியமிக்க, நம் பிள்ளை பணித்தபடி—
பெயருகையாகிறது போக்குவரத்து இரண்டுக்கும் ஸாதாரணமா
யாய்த்திருப்பது; இனித்தான் மலைக்குச் சிறப்புச் சொல்லு
மவர்கள் மலைப்பாம்புகள் ஆனையை விழுங்கு மென்னக் கடவர்கள்,
ஆகையாலே கரியமாமுகிற் படலங்கள் கிடந்து முழங்க, அவற்றைப்
பெரிய மலைப்பாம்பானது ஆனையாக வெண்ணி ஆஹாரமாகக்
கொள்ளக்கருதி மலைபெயர்ந்தாற்போலே கால் வாங்கிவந்து கிட்ட
நிற்கும் என்று பொருள் கொள்ளலாம் போலிருக்கிறதே என்று
விஜ்ஞாபிக்க, ஜீயர் அதுகேட்டு 'இப்படியேதான் பொருள்' என்று
போரக் கொண்டாடியருளினார்—என்கிற ஐதிஹ்யம் உள்ளது.

இதனைச் சிறிது விவரிப்போம்; சில மலைப்பாம்புகள் யானை
யைப் பார்த்து அஞ்சி நடுங்கி ஓடிப்போய்விடுமென்றும், ப
மலைப்பாம்புகள் யானையை அணுகி விழுங்கி விடுமென்றும் தமி
நூற்களால் தெரிகின்றது. 'திரையன்பாட்டு' என்ற ஓர் பழை
நூலில்—"கடுங்கண்யானை நெடுங்கை சேர்த்தி, திடங்கொண்
றைதல் திண்ணமென்றஞ்சிப், படங்கொள் பாம்பும் விடரக
புகூஉம், தடங்கொள் உச்சித்தாழ்வரையடுக்கத்து" என்றதனா
மாசுணம் களிற்றைக் கண்டு அஞ்சி யொளிக்குமென்பது தெ
கின்றது. "ஞால்வாய்க் களிறு பாந்தட்பட்டெனத், துஞ்சா
துயரத்தஞ்சு பிடிப்பூசல், நெடுவரை விடரகத்தியம்பும், கடுமா
புல்லிய காடிறந்தோரே." என்று சங்கநூல்களுள் ஒன்று
நற்றிணையிலும், "பரியகளிற்றை அரவு விழுங்கி மழுங்கவிரு
கூர்ந்த, கரிய மிடற்றர் செய்ய மேனிக் கயிலைமலையாரே" என்
தேவாரம் திருக்கயிலாயம் முதல் திருமுறையிலும், "இடிகொ
வேழத்தை எயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும், கடியமாசுண
கற்றறிந்தவரென வடங்கிச், சடைகொள் சென்னியர் தாழ்வி
தாம் மிதித்தேறப், படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பன



ராய்." என்று கம்பராமாயணச் சித்திரகூடப் படலத்திலும் உள்ள பாட்டுக்களால் மாசுணம் யானையை விழுங்கும் என்பது தெரிகின்றது. அஞ்சி யொளித்தல் சிறுபான்மையும், விழுங்குதல் பெரும்பான்மையுமாயிருத்தலால் "களிறென்று பெரிய மாசுணம் வரையெனப் பெயர்தரு" என்ற இவ்விடத்திற்கு—மலைப்பாம்புகள் மேகங்களை நோக்கி யானைகளாக ப்ரமித்து அவற்றை விழுங்குதற்காக மலை பெயருமாபோலே பெயர்ந்து கிட்ட வருமிடம்—எனப் பொருள் கொள்ளுதல் நன்கு பொருந்துமென்பது நம் பிள்ளை திருவுள்ளமாயிற்று.

(1—3—1.) "முற்றமூத்துக் கோல் துணையா" என்றவிடத்து வியாக்கியானத்தில் ஓர் ஐதிஹ்யம் அருளிச் செய்கிறார்! நஞ்சீயர் ஸந்ந்யாஸாச்ரமஸ்வீகாரம் செய்துகொள்ளும்போது த்ரிதண்டம் தரித்துக்கொள்வதற்கான மந்திரம் "ஸகா மே கோபாய—ஸகா மா கோபாய" (ஓ த்ரிதண்டமே! நீ எனக்குத் துணையாயிருந்து என்னை ரக்ஷிக்கவேணும்) என்பதாகக் கேட்டு, ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும் பரம சேதநனுமிருக்கிற எம்பெருமானையே துணையாகப் பற்றவேண்டியிருக்க, அசேதநமான தண்டத்தை நோக்கி இங்ஙனே சொல்லும்படியாக ஒரு ஆச்ரமம் நேருவதே: என்று (நஞ்சீயர்) ஸாதித்தாராம்.

இவ்விடத்தில் இன்னுமோர் ஐதிஹ்யமும் சொல்லுவதுமுண்டு; நஞ்சீயர் பட்டர் திருவடிகட்கு அந்தரங்கராய் வர்த்திக்கிற நாளிலே ஒரு கைசிகத்வாதசியன்று பட்டர் ப்ரஹ்மரதத்திலெழுந்தருளித் திருவீதியலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப் புக, "உத்தமாச்ரமியாய் த்ரிதகண்ட தாரியான உமக்கு இக்காரியம் தகாது" என்று பட்டர் முதலானார் மறுத்துக் கூற, நஞ்சீயர், 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடைய மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல்தானே இன்று எனக்கு விரோதியாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூப ரக்ஷணத்திற்கு இக்கோல் இடையூறாயின் இஃது எனக்கு வேண்டா' என்று சொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய பக்தி விசேஷத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.]

(3—7—3) "அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் அரக்கர் குலப் பாவை தன்னை, வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்."

என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில்—“பட்டர் இப்பாட்டை யருளிச் செய்து, ஒரு ஸ்த்ரீயை விரூபையாக்கினவனுடைய திறம் கேட்கில் அஞ்சுவன் என்கையால் இத்தலைக்கு குணஹாநியாய்த் தோற்றுகின்றது; இது ஆழ்வார் அருளிச் செய்யக்கூடாது; இது எங்ஙனே சேரும்படி? என்று ஆச்சானைக் கேட்க; ‘துடுப்பிருக்கக் கைவேகவேணுமோ? எம்பெருமானார்தாமே அருளிச் செய்து வைத்தாரிறே’ என்ன, அருளிச் செய்தபடி எங்ஙனே? என்று கேட்க, முன்பொரு புணர்ந்து உடன் போக்கிலே பிறந்த ப்ரமாதத்தைக் கேட்டு அத்தை நினைத்து இப்போது பயப்படுகிறாள் என்றருளிச் செய்தார்—என்றுள்ளது.

இதனைச் சிறிது விவரிப்போம்: இவ்விடத்தில் ஆழ்வாருடைய திருத்தாயார் சூர்ப்பணகாபங்க விருத்தாந்தத்தை யெடுத்துரைத்து ‘இப்படிப்பட்ட தன்மையைக் கேட்க நான் அஞ்சுகின்றேன்’ என்று சொல்லியிருப்பதன் கருத்து யாது? அரக்கியின் மூக்கையறுத்ததுபோலே என் மகளின் மூக்கையும் (திருவாலியெம்பெருமான்) அறுத்திடுவனோவென்று அஞ்சுகின்றேனென்பதாகவன்றோ இங்குக் கருத்துத் தோற்றுகின்றது. குணக்கடலாகிய எம்பெருமான் விஷயத்தில் இவ்வாறு நினைத்து அஞ்சுதல் கூடுமோ? இது குணஹாநி சொல்லுகிறபடியாகுமன்றோ என்று பட்டர் சங்கித்து ஆச்சானைக் கேட்டார். அதற்கு ஆச்சான், ‘துடுப்பு இருக்கக் கைவேக வேணுமோ? எம்பெருமானார் இனிதாக நிர்வஹித்துப் பொருளருளிச் செய்து வைத்திருக்க நாம் ஏன் வருந்தவேண்டும். என்று சொல்லி அப்பொருளையும் வெளியிட்டார்; அதாவது—‘அரக்கர் குலப்பாவை தன்னை மூக்கரிந்த விறலோன்’ என்றதனால் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நேர்ந்த பிரிவு தெரிவிக்கப்படுகிறது. இராவணன் ஸீதையைக் கவர்ந்து சென்றதற்கு மூலகாரணம் சூர்ப்பணகையின் அங்கபங்கமேயாதலால் இந்த அங்கபங்கத்தை ப்ரஸ்தாவிக்கும் முகத்தால் ஸ்ரீ ராம ஸீதைகளின் பிரிவு நினைப்பூட்டப்படுகின்றது. ஆகவே முன்பு இருவருமாய்ப் புறப்பட்டுச் சென்று ஒருவரையொருவர் பிரிந்து பலநாள் வருந்திக்கிடக்க நேர்ந்ததே; அவ்விதமாக இப்போதும் இவர்களுக்கு [வயலாலி மணவாளனுக்கும் பரகாலநாயகிக்கும்] ஏதேனும் விதிவசத்தாலே பிரிவு நேர்ந்து பரிதபிக்க ப்ராப்தமாகுமோ வென்று அஞ்சுகின்றேன்—என்பதாம்.



(4—4—6) “தான் போலு மென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பானரக்கர் தங்கள், கோன் போலு மென்றெழுந்தான், குன்றமன்ன இருபது தோளுடன் துணித்தவொருவன் கண்டீர்—நாங்கூர்த் திருத் தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே.”—இப்பாட்டின் முன்னடிகட்குப் பொருள் சொல்லுவது ஸூக்ஷ்மபுத்திசாலிகளுக்கன்றி மற்றையோர்க்கு இயலாது. மூற்காலத்தில் ஆப்பான் திருவழுந்தூரரையர் என்கிற ஒரு ஸ்வாமியும் இன்னுஞ் சில முதலிகளுமாக இதற்குப் பொருள் என்னவென்று ஆராயத் தொடங்கினர். அவர்கட்குப் பொருள் புலப்படவில்லை. அப்போது பட்டர் மிகச் சிறு பிராயத்தவராயிருந்தார். அப்போது அவர் அருளிச் செயல் மூலம் ஓதியிருந்தாரல்லர். ஆனாலும் பட்டர் சிறுபிராயமே தொடங்கி எல்லா வழிகளிலும் தமது ஸூக்ஷ்ம புத்தியைச் செல்லவிட்டுப் பல வகையான அர்த்த விசேஷங்களை வெளியிட்டுக் கொண்டு ஆச்சரியமாக விளங்கிவந்தமையால் பல பெரியோர்களும் பட்டரைப் பணிந்து அர்த்தங்கள் கேட்பதுண்டு: அப்படியே கீழ்ச் சொன்ன அரையர்முதலானாரும் பட்டரிடம் சென்று இப்பாட்டுக்குப் பொருள் என்ன? என்று கேட்டனர். அப்போதே பட்டர் ‘பாசுரத்தை விளங்கச் சொல்லுங்கள்’ என்று சொல்லி ஒருகால் பாசுரத்தைக் கேட்டவாறே ‘தான் போலுமென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும்’ என்கிறவரையில் இராவணன் வார்த்தையின் அநுவாதம் என்று சொல்லிப் பொருளை விளக்கிக் காட்டினர். இங்கே பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி வருமாறு—“ஆப்பான் திருவழுந்தூரரையரும் மற்றுமுள்ள முதலிகளுமாக இப்பாட்டிற் சொல்லுகிறதென்? என்று பட்டருக்கு விண்ணப்பஞ் செய்ய, ஒருகால் இயலைக் கேளா ‘ராவணன் வார்த்தை காண்’ என்றருளிச் செய்தார். [தான் போலுமித்யாதி] ஒரு க்ஷத்ரியன்போலே எதிரி யென்று வந்தான்; அது கண்டு தரித்திருப்பான் ராக்ஷஸராஜனும்—என்று கிளர்ந்தெழுந்த ராவணனுடைய மலைபோலேயிருக்கிற இருபது தோளையும் துணித்த தனிவீரன் கிடீர்”—என்று. இப்பொருளை விவரித்துக் காட்டுவோம். நாங்கூர்த் திருத்தெற்றியம்பலத் தெம்பெருமான் யாவனென்னில்; இராவணனுடைய மலைபோன்ற இருபது தோள்களை

யும் துணித்த தனிவீரன். அந்த இராவணன் எப்படிப்பட்டவனென்னில்; மிகவும் அஹங்காரந் தோற்றச் செருக்கி வார்த்தை சொல்லிக்கொண்டே போர்க்களத்தில் கிளர்ந்தவன். அப்படி அவன் செருக்குடன் சொன்ன வார்த்தை ஏதென்னில்; '(தான் போலுமென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும்' என்கிற இவ்வார்த்தையாம். இவ்வார்த்தைக்கு அர்த்தமேதென்னில்?; இராமனென்று ஒரு பயல் தான் ஒரு பெரிய க்ஷத்ரியன் போல எதிரியென்று வருகிறதாம்; அதைக் கண்டு ஒருவன் பொறுத்திருக்கிறதாம். அப்படிப் பொறுத்திருப்பவன் ராக்ஷஸர்கட்குத் தலைவனென்று பெயர் சுமந்திருப்பதாம். என்று வெகு அற்பமாகச் சொல்லி யுத்தத்திற்குக் கிளம்பினனென்கை. இதனால், இராமன், தனக்கு எதிரியென்று புறப்படுவதற்கும் தகுதியற்றவன் என்பதும், இராமன் போர்க்கு வரச் செய்தேயும் இராவணன்தான் ஆறியிருப்பது தன் பெருமைக்குத் தகாதென்பதும் தெரிவிக்கப்பட்டனவாம்.

இப்பாட்டின் இவ்வரியே பெரிய பொருளை உணராதவர்கள் பிறரும் உணர்ந்து கொள்ள இடமில்லாதபடி "தான் போலுமென்றெழுந்தான்" என்றும் "கோன்போலு மென்றெழுந்தான்" என்றும் பாடத்தையே மாறுபடுத்திப் பதிப்பித்தும் ஓதுவித்தும் வருவது வருந்தத்தக்கது.

(5—1—2.) "பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனியதனுள் போய்ப், புள்ளுப்பிள்ளைக்கு இரைதேடும் புள்ளம் பூதங்குடிதானே."—முற்காலத்தில், ஆலவாயுடையான் என்பானொரு தமிழன் பட்டரிடம் வந்து இப்பாட்டில் ஒரு கேள்வி கேட்டான்: பள்ளச் செறுவில் கயலுகள' என்றபோதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றமை வெளிவந்துவிட்டது; அப்படி யிருக்க ஈற்றடியில் 'இரைதேடும்' என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப் பட்டிருந்தாலன்றோ இரைதேட வேண்டும்; கொள்வார் தேட்டமாம்படி குறையற்றுக் கிடக்கும்போது தேடிப்பிடிப்பதாகச் சொல்லுவது பொருந்துமோ? என்று கேட்டான்; இதற்குப் பட்டர் அருளிச் செய்ததாவது—பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்திலை; "பிள்ளைக்கு இரை தேடும்" என்றுள்ளது காண்; அங்குள்ள மீன்கள் நிலமிதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும்; அவை



பறவைக்குட்டிகளின் வாய்க்குப் பிடிக்கமாட்டாவாகையால் உரிய சிறுமீன்கள் தேடிப்பிடிக்க வேண்டுமத்தனையன்றோ என்றாராம். (ஸா) பாலசிஷ்யர்கள் அவகாஹித்துக் கொள்ளக்கூடிய சிறு விஷயங்களை மஹாசாஸ்த்ர ஸாகரத்திலிருந்து ஆசாரியர்கள் உபதேசிக்கத் தேடுகின்றமை இவ்விடத்திற்கு உள்ளுறை பொருளாகும். (தொடரும்.)

இந்த வியாஸத்தின் அநுபந்தம் இனி "அருளிச் செயல் விசேஷார்த்தங்கள்" என்ற மகுடத்தின்கீழ் ஸஞ்சிகை தோறும் வெளிவந்து கொண்டிருக்கும்.

---

# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

[பத்ராதிபர்]

(201-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

கீழ் வாஸுதேவாதி வ்யூஹங்களைப்பற்றி யதாமதி தெரிவிக்கப்பட்டது. இங்கு அந்த வ்யூக சதுஷ்டயங்களில் நின்றுமுண்டாய் தங்களை த்யாநியாநிற்கும் சேதனர்களின் லலாடாதி (நெற்றி முதலான) அவயவங்களில் வீற்றிருந்து அவரவர்களின், தாபத்ரயாதிகளாலுண்டாகும் தாபத்தின் ஶமநத்தையும், ஶரீர ரக்ஷணத்தையும் பண்ணுநிற்கும் கேஶவாதி வ்யூஹாந்தரங்களைப் பற்றிச் சிறிது தெரிவித்துக்கொள்கிறேன். அடியேன் சிற்றறிவுடையனாதலால் அடியேனால் எழுதப்படுமவைகளில் தவறுகள் மலியக் காணக்கூடும். அத்தவறுகளை அறிவாலுயர்ந்த பெரியோர்கள் திருத்தி யநுக்ரஹித்தால் அவைகளை அனைவருமறியுமாறு வைஜயந்தியின் வாயிலாய் வெளியிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்குத் தலையல்லால் கைமாறிலாதவனாகக் கடவேன்.

கேசவன், நாராயணன், மாதவன் என்று சொல்லப்படுகிற மூன்று திருநாமங்களும் ஶாந்தோதிதர் என்கிற வ்யூஹவாஸுதேவரிடத்தில் நின்றும் உத்பன்னர்கள். கோவிந்தன், விஷ்ணு, மதுஸூதனன் என்கிற மூன்று திருநாமங்களும், ஸங்கர்ஷணரிடத்திலிருந்து உத்பன்னர்கள். த்ரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன் என்று சொல்லப்படுகிற மூன்று திருநாமங்களும் ப்ரத்யும்நரிடமிருந்து உத்பன்னர்கள். ஹ்ருஷீகேசன், பத்மநாபன், தாமோதரன் என்கிற மூன்று திருநாமங்களும் அநிருத்தரிட

மிருந்து உத்பன்னர்கள். ஆக வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்தர்களென்கிற வ்யூஹசதுஷ்டயத்தில் நின்றுமுண்டான கேஶவாதி வ்யூகாந்தரங்கள் பன்னிரண்டு.

1. அவர்களில் ப்ரஹ்மருத்ரர்களுக்கு நியந்தாவாய் தன்னை ஆஶ்ரயித்தவர்களின் க்லேஶத்தைப் போக்குமவனுயிருக்கும் கேஶவன் ஸ்வர்ணவர்ணனுய் நான்கு சக்ரங்களை ஆயுதமாகக் கொண்டு ஸ்ரீதேவியோடு லலாடத்தில் வீற்றிருந்து "லலாடே ஸததம் தே(தெ)வ்யா ஸ்ரீயாஸஹ விராஜிதம்—சதுஶ்சக்ரம் நமஸ்யாமி கேஶவம் கநக ப்ரப(ஹ)ம் என்று தன்னை வணங்குமவர்களை வாழ்வியாநிற்பன்.

2. ஸமஸ்த சேதநாசேதநங்களை ஆதாரமாகவும் ஆதேயமாகவுமுடைய நாராயணன் நீருண்ட காளமேகம்போல் ப்ரகாஶியாநின்றுகொண்டு நான்கு ஶங்க(வ)ங்களை ஆயுதங்களாகவுடையனுய் அம்ருதோத்பவா தேவியோடு கூட வயிற்றின் நடுவில் வீற்றிருந்து "அம்ருதோத்பவயா தேவ்யா ஸமாஶ்லிஷ்டமதோ த(யொத)ரே—நாராயணம் க(ஙு)நஶ்யாமம் சதுஶ்ஶங்க(வ)ம் நமாம்யஹம் | என்று தன்னைத் தொழுவார்க்குத் துணையாகாநிற்பன்.

3. மாவித்யா(தூ)ா)ச ஹரேঃ ப்ரோக்தா தஸ்யாঃ ஸ்வாமீ த(ய)வঃ ஸ்ம்ருதঃ என்கிறபடி ஸமஸ்தமான வித்யைகளுக்கும் ஸ்வாமியாயிராநின்ற மாதவன் இந்த்ர(ஸ்ரு) நீல நிப(ஹ)னுய் நான்கு க(த)தைகளைக் கையிற்கொண்டு கமலா தேவியோடு ஹ்ருத(த)யத்தில் வீற்றிருந்து நித்யம் கமலயா ஶ்லிஷ்டம் ஹ்ருத(த)யேஹம் த(த)யாம் பு(பு)தி(யி)ம்—மாத(ய)வம் மணி ப(ஹ)ங் காப(ஹ)ம் சிந்தயாமி சதுர் க(த)த(த)ம் | என்று தன்னைச் சிந்திப்பார்க்குச் சரணுயிருப்பன்.

4. நஷ்டாம்ச த(ய)ரணீம் பூர்வம் கோ(கொ)விந்தோ(தொ)யஸ் ஸலப்த(ஙு)வாந் என்கிறபடி நஷ்டமான பூமியையடையப் பெற்றவனுன கோ(கொ)விந்தன் சந்த்ரனைப்போல் ப்ரகாஶியா நின்றுகொண்டு நான்கு தநுஸ்ஸுகளை ஆயுதங்களாகவுடையனுய் சந்த்ர(ஸ்ரு)ஶோ பி(ஹி) நீ தேவியுடன் கண்டத்தில் வீற்றிருந்து தே(தெ)வ்யாச சந்த்ர(ஸ்ரு) ஶோபி(ஹி)ந்யா தே(தெ)வம் கண்டே(டெ) விராஜிதம்—சந்த்ர(ஸ்ரு) பா(ஹா)ஸம் சதுஶ்



ஶார்ங்க(ங)ம் கோவிந்த மஹமாஶ்ரயே | என்று தன்னையாஶ்ரயிக்குமவர்களை, யாதரியாநிற்பன்.

5. நதத(த)ஸ்தி விநாயத் ஸ்யாத் மயா பூ(ஹு)தம் சராசரம் என்கிறபடியே எங்கும் வ்யாபித்திராநிற்கும் விஷ்ணுவானவன் பத்ம கிஞ்சல்க நிபனுய் நான்கு ஹலத்தை (கலப்பைகளை) ஆயுதங்களாகக்கொண்டு விஷ்ணு பத்நீதேவியோடு கூட வயிற்றின் வலது பக்கத்தில் வீற்றிருந்து விஷ்ணு பத்ந்யாக்ய(வு)யா தேவ்யா குக்ஷௌ த(த)க்ஷிண பார்ஶ்வக(ங)ம்—விஷ்ணும் சதுர்ஹலம் வந்தே(தெ) பத்ம(த்ம) கிஞ்சல்க ஸந்நிப(ஹ)ம் | என்று தன்னைச் சேவிப்பார் க்ஷேமத்தைக் கருதாநிற்பன்.

6. மத்வாக்ய (யூாவு)ம் அஸுரம் ஹந்தி என்கிறபடி மது என்ற அஸுரனைக் கொன்று நிஷ்ப்ரதிபக்ஷ லக்ஷ்மீகனுன மதுஸூதநன் கமலத்தின் காந்தியையுடையனுய் நான்கு உலக்கைகளை ஆயுதங்களாகக் கொண்டு வைஷ்ணவீ தேவியோடு வலது புஜத்தில் வீற்றிருந்து வைஷ்ணவீ ஸம்ஜ்ஞயா தேவ்யா கலிதம் த(த) க்ஷிணே பு(ஹு)ஜே—சதுர்முஸலமப்ஜா(ஜா)ப(ஹ)ம் ஸம்ஶ்ரயே மதுஸூதநம் என்று தன்னையடைந்தார்களை ஆதரியாநிற்பன்.

7. த்ரிரித்யேவம் த்ரயோ வேதாঃ கீர்த்திதா முநிஸத்தமை:—க்ரமஸே தாம்ஸ்ததா (யா) ஸர்வாந் த்ரிவிக்ரம இதி ஸ்ம்ருதঃ | என்கிறபடி ஸர்வவேத ப்ரதிபாத்ய((தூ))னுயிருக்கும் த்ரிவிக்ரமன் அக்நிவர்ணனுய் நான்கு கத்திகளைக் கையில் தரியாநின்றுகொண்டு வராரோஹா தேவியோடு வலது தோளில் வீற்றிருந்து தக்ஷிணாம்ஸே தயாவார்யிம் வராரோஹாயிபம் ப்ரஹும் அக்நிவர்ணம் சதுঃ வட்கம் ஹாவயாமி த்ரிவிக்ரமம்—என்று தன்னை த்யாநிப்பார்க்கு ரக்ஷகனுயிருப்பன்.

8. த்ரு(தூ)ஷ்ட்யா ஸ்வகாந்த்யா வாமாநி ஸுகா(வா)நி நயதீதி யঃ என்கிறபடி ஸுவப்ரதனுன வாமநன் பா(வா)லஸூர்யகாந்தியையுடையனுய் நான்கு வஜ்ராயுதங்களையுடையனுய் ஹரிப்ரியா தேவியோடு வயிற்றினிடது பக்கத்தில் வீற்றிருந்து ஹரிப்ரியாயுதம் குக்ஷௌ வாமபார்ஶ்வஸ்த(ம) புண்டரக(ங)ம்—வாமநம் பா(வா) லஸூர்யாப(ஹ)ம் சதுர்வஜ்ரம்

விஹாவயே | என்று தன்னை ஹாவிப்பார் பாபங்களைப் பஞ்சு போல் பரக்கடியா நிற்பன்.

9. ஶ்ரியம் த(ய)ரதி நித்யம் யஃ ஸ்ரீயரஸ்ஸது கீர்த்திதஃ என்று பெரிய பிராட்டியாரை பரத்வத்திற்போலே வ்யூஹத்திலும் விடாமல் மார்பில் தரியாநின்ற ஸ்ரீயரன் புண்டரீகநிஹனைய் நான்கு பட்டாக்கத்திகளை ஆயுதங்களாகக்கொண்டு ஶார்ங்கிணீ தேவியோடு இடது புஜத்தில் வீற்றிருந்து வாமபாஹௌ மஹாபாஹூம் ஶார்ங்கிணீபதி மவ்யயம்—ஸ்ரீயரம் புண்டரீகாக்ஷம் சதுஃ பட்டஸமாஶ்ரயே என்று தன்னை படைந்தாரை பாதரியா நிற்பன்.

10. ஹ்ருஷீகாணீந்த்ரியாண்யாஹுஃ தேஷாமீஶோய தோஹவாந்—ஹ்ருஷீகேஶஸ்ததோ விஷ்ணுஃ வ்யாதோ தேவே ஷுகேஶவஃ என்று இந்த்ரியங்களை நியமியாநின்ற ஹ்ருஷீகேஶன் மின்னற்போல் ப்ரகாஶியாநின்றவனைய் நான்கு முத்கரங்களை ஆயுதங்களாகவுடையனைய் தேவதேவிகாதேவியுடன் இடது தோளில் வீற்றிருந்து தேவதேவிகயா தேவ்யா ஶ்ரிதம் வாமாம்ஸ ஸம்ஶ்ரிதம்-சதுர்முத்கரதூரமப்யே (ஹ்யு) மி ஹ்ருஷீகேஶம் தடித் ப்ரஹம் | என்று தன்னையடைந்தார்க்கடைக்கலமா யிருப்பன்.

11. பார்த்தி(பி)வம் ஹுரிபத்மம்ச நாஹா வஷ்டதளம் மஹத்—யஸ்ய ஹேமமயீ திவ்யா கர்ணிகா மேருருச்யதே | யஸ்ய நாஹௌ தஹுத்பத்திஃ பத்ம நாஹஸ் தஹுச்யதே என்கிறபடி உந்தியில் பத்மத்தையுடைய பத்மநாபன் சூர்யனைப்போல் ப்ரகாஶியாநின்றவனைய் பஞ்சாயுதங்களையுமுடையனைய் மஹாலக்ஷ்மீ தேவியோடு ப்ருஷ்டபாகத்தில் (முதுகில்) வீற்றிருந்து ப்ருஷ்டேஸம்ருஹ்ஷ்டயா தேவ்யா மஹா லக்ஷ்ம்யா விராஜிதம்—பஞ்சாயுயம் பத்நாஹம் ப்ரணமாம்யர்க்க ரோசிஷம் | என்று தன்னை வணங்கினரை வாழ்வியா நிற்பன்.

12. தாமாநி லோகநாமாநி ஹாந்தியஸ்யோதராந்தரே— என்கிறபடி லோக நாமங்களை உதரத்திலுடைய தாமோதரன் பட்டுப்பூச்சிபோல் ப்ரகாஶியா நின்றுகொண்டு நான்குபாஶங்களைக் கையிலே யுடையனைய் லோகஸுந்தரீ தேவியோடு பிடரியில் வீற்றிருந்து ஸதா ககுதமதம் லோக ஸுந்தரீபதிமவ்யயம் தாமோதரம்சதுஃ பாஶம் இந்த்ரகோப நிஹம் ஹஜே என்று தன்னைத் துதிப்பார்க்குத் துணையாகா நிற்பன்.



ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கும்போது அநுஸந்திக்கும் ப்ரகாரம் ப்ரஸங்காத் இங்கு எழுதப்படுகிறது.

| | திருமண் | ஸ்ரீ சூர்ணம் |
|---|---|---|
| நெற்றியில் | கேஶவாய நமஃ— | ஸ்ரீயை நமஃ |
| வயிற்றில் | நாராயணாய நமஃ— | அம்போத்பவாயை நமஃ |
| மார்பில் | மாதவாய நமஃ— | கமலாயை நமஃ |
| கழுத்தில் | கோவிந்தாய நமஃ— | சந்த்ரஶோபிந்யை நமஃ |
| வயிற்றின் வலது பக்கத்தில் | விஷ்ணவே நமஃ | விஷ்ணுபத்ந்யை நமஃ |
| வலது புஜத்தில் | மதுஸூதநாய நமஃ | வைஷ்ணவ்யை நம: |
| வலது தோளில் | த்ரிவிக்ரமாய நமஃ | வரரோஹாயை நமஃ |
| வயிற்றினிடது பக்கத்தில் | வாமநாய நம: | ஹரிப்ரியாயை நம: |
| இடது புஜத்தில் | ஸ்ரீதராய நம: | ஶார்ங்கிண்யை நம: |
| இடது தோளில் | ஹ்ருஷீகேஶாய நமஃ | தேவதேவிகாயை நமஃ |
| முதுகில் | பத்மநாபாய நமஃ | மஹாலக்ஷ்ம்யை நமஃ |
| பிடரியில் | தாமோதராய நமஃ— | லோகஸுந்தர்யை நம |

—

# தியானம்

(வி. கே. ஏ. எஸ். ரகுநாதாச்சாரி, பி. ஏ., எம். ஐ. எஸ். ஏ.)

நாமெல்லோரும் தியானமென்ற வார்த்தையை அடிக்கடி பிரயோகப் படுத்துகிறோம். ஆனால் அது எதைக்குறிக்கின்றது, அதனுடைய தன்மை தானென்ன? என்பனவற்றைப் பற்றி நாம் ஸாதாரணமாக ஆராய்வதில்லை. அதன் பொருள் நம் மனத்தகத்தே பதிந்து கிடக்கின்றதாதலின் அச்சொல் வழங்கி வரத் தலைப்பட்டு விட்டது. தியானம் என்ற பக்குவ நிலையை நம்முணர்ச்சிகளால் சிறிதளவு அறிதலாகுமாயினும் விவரித்துரைத்தல் கடினமானதே.

இவ்வுலகத்திலே நாம் தோன்றிய காலத்திலேயே நம்முடன் பிறப்பாகத் தோன்றி நம்மை முற்றிலும் அழித்து விடுகின்ற 'பற்று' என்று ஸாதாரணமாகக் கூறப்படும் ஆசையாகிற பந்தத்தை நாமறிவோமல்லவா? அது எவ்வளவுக் கெவ்வளவு நமக்குக் கீழ்மைத்தனத்தை உண்டு பண்ணுவிக்கின்றதோ அவ்வளவுக்

கவ்வளவு நமக்கு மேன்மையை யளிக்கக்கூடிய 'பற்று' மொன்றுளது. அதனை நாம் 'பக்தி' என்ற பெயர் கொண்டழைக்கிறோம். எப்படி நீசப் 'பற்று' உலகப் பொருள்களுக்கும் நமக்கும் பாந்தவ்யத்தை ஏற்படுத்துவிக்கின்றதோ அப்படியே தூய்மையான 'பற்றாகிய' பக்தியும் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு மந்தரங்க ஸம்பந்தம் செய்விக்கின்றது. அது சேஷியின்பால் சேஷனுக்கு அர்ஹத்வத்தையும் சேஷன்பால் சேஷிக்குக் கிருபா கடாக்ஷத்தையும் நிலை பெறச் செய்கின்றது. இவ்வளவு குணவிசேஷங்களுள்ள பக்தி தலையெடுத்து ஓங்கி வளருங் காலத்திலே தளிர்த்து நிற்கின்ற தன்மையில் தியானமாக மிளிர்ந்து முற்றின நிலையிலே தியானமே ஆகிவிடுகின்றது (மாகவே தழைக்கின்றது.)

இப்படிப்பட்ட தியானம் ஒருவர் பால் காணப்படுமாயின் அவர் எம்பெருமானுடைய பரிபூர்ண கடாக்ஷத்திற்குப் பாத்திரரானவரென்பதை நாம் அநேக வாயில்களால் அறியலாகும். பண்டைக் காலத்தில் ஒரு முனிவர் வனமொன்றில் தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடம் சிஷ்யனாக விருப்பான் வேண்டி ஒருவன் வந்து சேர்ந்தான். வெகு நாட்கள் வரையில் அவன் அவருகந்த பணிவிடைகளைச் செவ்வனே இயற்றி வந்தும் அவர் அவனுக்கு ஒன்றுமுபதேசியாது மௌனமாகவே யிராநின்றார். அந்நிலையிலும் அவன் தன்குன்றாப் பக்திப் பெருக்கினால் சற்றும் மனம் தளர்ந்திலன், நொந்துமிலன். முதலில் நம்பிக்கை யேற்பட்டு அது பக்தியாக வளர்ந்து பிறகு பக்தி முதிர்ந்து தியானமாக வளர ஆரம்பித்தது. இப்படித் தியானத்திலேயே சில நாள் சென்றது. ஒரு நாள் காலை முனிவர் ப்ருஹத் சங்கையைக் கழித்துக் கொள்ளச் சென்றார். சிஷ்யனும் கூடவே சென்றான். முனிவரை நெருங்கி ஒரு பன்றி வர அவர் 'டுர் டுர்' என்று உச்சாரணம் செய்தார். உடனே பன்றி விலகிப் போயிற்று. சிஷ்யன் ஸத்ஸங்கத்திலே இத்தனை நாள் பொறுமையுடன் வதிந்து வந்தவனே யன்றோ? ஆகவே எப்படி அசுசித்தன்மை பொருந்திய பன்றி 'டுர் டுர்' என்று சொன்ன காலத்திலேயே முனிவரை விட்டு விலகிச் சென்று விட்டதோ அவ்வண்ணமே இகப்பற்றும் 'டுர் டுர்' என்று சொன்னவளவிலே அகன்றிடலாகும் என்று அவனுக்கு எண்ண முதித்தது. அவ்வினாடியே முனிவர், தனக்கு இத்தனை நாள் பொறுத்ததின் பெரும் பலனையளித்துவிட்டார் என்று



ஆனந்தக் கூத்தாடினார். மேனி சிலிர்த்தான். மெய் மறந்தான். அவன் வாயினின்றும் 'டுர், டுர்' என்ற சொற்களே புறப்படலாயின. அவ்விடத்திலேயே குரு சரணாரவிந்தத்தின்பால் ஏகாக்ரசித்தனாய்த் தனக்குபதேசிக்கப்பட்ட மந்த்ரத்தை உச்சாடனம் செய்துகொண்டேயிருந்து பரிபக்குவ நிலையை யெய்தினவளவிலே "கனக கிரிமேல் கரியமுகில் போல் வினதை சிறுவன் மேற்கொண்டு" எம்பெருமான் அவனுக்குக் காட்சியளித்து ஆசீர்வதித்துச் சிலகாலம் அடியார்கள் நிமித்தம் இப்பூமியில் வசிக்கும்படி ஆக்ஞாபித்தான். சீடனும் எம்பெருமான் கட்டளையைச் சிரஸாவஹித்துச் சின்னாள் உலகத்திலே இனிது வாழ்ந்திருந்து பிறகு" இந்த உடல் விட்டு இரவி மண்டலத்தூடேகி

இவ்வண்டங் கழித்திடையிலாவரண மேழ்போய்
அந்தமில் பாழ்கடந்து அழகார் விரசை தனிற்குளித்து அங்கு
அமானவனொலொளி கொண்டசோதியும் பெற்று அமரர்
வந்தெதிர் கொண்டலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம்புக்கு மாமணி மண்டபத்துச் சென்று
அடியார்கள் குழாங்களுழ கோலக்க மிருக்க
ஆநந்தமயமான மாமணி மண்டபத்துப்
படியாதுமில் படுக்கையாயிருக்கும் நந்தன்
பணமணிகள் தம்மிலொளி மண்டபத்தினிடையில்
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும் இருக்க
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கூடினான்.

பின்னும் வால்மீக முனிவருடைய ராம நாம ஜபம் எவரு மறியாததன்று. இப்படிப்பட்ட தன்மை வாய்ந்தது தியானம்.

ஆகவே தியானமே இவ்வுலகத்திலின்றும் நம்மைக் கைதூக்கி விடுவதாகிய உண்மைப் பொருளாகும். மற்றவை யனைத்தும் தோற்றமேயன்றி நித்தியமானவையல்ல. மானுயே உருவாகிய இவ்வுலகத்திலேயே மக்களாய்த் தோன்றின நாம் அநுஸரிக்கக் கூடிய முக்கிய கடமைதானென்னெனில், பரிசுத்தம் பொருந்திய தூயவாழ்க்கையைக் கைப்பிடித்தொழுகுதலேயாகும். அப்பொழுதுதான் பற்றும் பக்தியும் தியானம் வளரும். பக்குவ நிலையெய்தும்.

ஆமாம், எல்லோரும் புண்ணியமானதொரு கண்ணிய வாழ்க்கையை நடத்துதல் வேண்டுமென்று நாக்கடிப்பாகவும் வாய்ப்பறையாகவும் சாற்றுதலியலும். ஆனால் அநுபவ பூர்வமாகக் கையாளுதற்கில்லையே, எத்தனையோ பெயர் அவ்வண்ணம் முயன்றும் தம் முறுதியினின்றும் நழுவிப் போந்தனரே ஆதலின் இஃதியலாததாகும் என்று ஒரு சிலர் கூறுவர். அநேகர் அவ்வண்ணமாகத் தாழ்ந்தும் போயிருப்பதாகக் காணப்படலாம். ஆனால் உண்மை யஃதன்று ஏனெனில் "விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமிதமல்லால் திருப்பொலிந்த மார்பனருள் செய்யானன்றோ? ஆகவே நாம் செய்யவேண்டியதென்ன? எவர்க்கும் இத்தகைய மேன்மைத்தான காரியம் முடித்தற்பாலதன்று என்று சொல்பவர்க்கு அதை முடித்துக்காட்ட முற்படவேண்டும். இவ்வண்ணம் முற்படுவது அஹம்பாவத்தைக் காட்டாது. ஏனெனில்? இப்படிப்பட்ட காரியத்தைச் சிரஸாவஹித்து நாம் முடித்துக் காட்டினால் எல்லோரும் நம்மைப்போல முற்பட்டு நற்பலனை யடைவர். ஆகவே நாம் உலகோர் மாட்டு நன்மை செய்தோரேயாகின்றோம். 'நாம் கைக்கொண்ட காரியத்தைப் பூர்த்தி செய்வோமென்றெண்ணி யிருப்பது பேதமைத்து' என்று கலியின் மாயையினால் கவரப்பட்டுரைப்பவருடைய கட்டுரைகட்குச் சிறிதும் செவி சாய்க்காது நாம் தியானத்தின் மாட்டு நம்முடைய சிரத்தையைத் தினே தினே அதிகரிப்பித்துக் கொண்டே செல்லவேண்டியதே நமது கடமை. அதன் பலனைப் பற்றி நமக்குக் கவலை யெற்றுக்கு? நாம் விதியை யநுஸரித்துக் கர்மத்தைச் செய்துவருவோமாயின் ஸர்வாந்தர்யாமியே அதனுடைய பலனை இனிதாக்கிடுவன். அதையே யன்றோ பகவத்கீதையிலும். "நான் ஸ்வேச்சாதிகாரி. ஆயினும் பக்தபராதீனன்" என்ற கருத்துப்பட ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அருளிச் செய்திருக்கிறார்.

ஆகவே, நாம் நம்முடைய காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து பிறருடைய தூண்டுதலான வார்த்தைகளையும் அவருடைய அசிரத்தையையும் கொஞ்சமும் கண்ணெடுத்துப் பாராது நம்முடைய மேற் போக்கையே கவனித்துவரவேண்டும். நாம் உய்வதன்றிப் பிறரையும் உய்விக்க வழிகாட்டியாக விருக்கும் இத்தூய்மையான வாழ்க்கையிலே நாம் ஈடுபட்டிருப்போமாயின் முயற்சியே திருவினையாக்கிவிடும். நம்முடைய தியானம்



சிறிதளவும் தளர்ச்சி யடையாவண்ணம் நாமதனை இமைபோலப் பாதுகாத்து வரல் வேண்டும். அன்புந் தியானமுந் ததும்பும் தன்மை என்னே பெரிது! அன்பு அதிகரிக்க அதிகரிக்கத் தியானமும் ததேவத் ததும்புகின்றது. மேற்கண்ட வற்றால் தியானமே ஒருவற்கு நிரந்தரமான ஸந்தோஷத்தை மிகுதியும் தரவல்லது என்பது வெள்ளிடை மலையன்றோ?

மேன் மேலும் ஒருவனுக்கு உற்சாகத்தை ஊட்டக்கூடிய தியானத்தின் சக்திகள் வெகு அபூர்வமானவையே யாகும். பக்தனொருவன் கல்லிலும் கடவுளைக் கண்ணாரக் காணலாகும் என்றால் அதன் சக்தியினருமை தானென்னே! அச்சக்தி நிரந்தரமாயிருப்பது. எந்நாளும் அழியாதது. உயிருதறிய உடலத்திலும் உயிரையுண்டாக்க வல்லபெருமை அச்சக்திக்குளது என்பதினின்றே அச்சக்தியின் போற்றருந்தன்மை தெற்றென விளங்குவதாகின்றது. இச்சக்தியைத் தன்னகத்துக் கொண்டு ஒளிரும் தியானம் எவருக்கு ஸ்ரீய: பதியின் பால் இயற்கை யாகவே உண்டாகின்றதோ அவர்கள் உண்மையிலேயே மிகுந்த ஸந்தோஷவந்தராகின்றனர். தியானம் இயற்கையிலேயே உண்டாதல் வேண்டும் என்று ஒரு பெரியார் பின்வருமாறு வற்புறுத்தியுள்ளார். "நம்பிக்கையினாலும் தியானத்தினாலும் ஏற்படும் ஒரு சக்தியைக் கொண்டு வெகு எளிதில் நம்முடைய லக்ஷ்யத்தை அடைதல்கூடும். ஆனால் வாதத்தினால் ஒருகாலும் அதனை யெய்துதலியலாது"

ஆகவே நாம் "ஒன்றே செய்க. ஒன்றும் நன்றே செய்க. நன்றும் இன்றே செய்க" என்ற பிரகாரம் மேற்சொன்னபடி தூய வாழ்க்கையில் இன்று தொட்டே ஈடுபட்டு தியானப் பிழம்பாய் ஒளிர்ந்து, எம்பெருமானுடைய திருப்பாதார விந்தங்களை நாம் புகலுமாறு எம்பெருமானார் தம் கருணை நோக்கெனுந் துடுப்புக்கொண்டு நம்மை உந்திச் செல்வாராக.

கோயில் அண்ணன் திருவடிகளிலே சரணம்

## ஸ்ரீ பாஷ்ய முத்ரணம்

[ஸ்ரீ. உ. வே. அனந்தாசாரியார் ஸம்ஸ்க்ருத பண்டிட் பச்சையப்பன் காலேஜ்]

ஸ்ரீ பகவத் ராமாநுஜன் அருளிச் செய்த ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்திற்கு முக்கியமான அநேக வ்யாக்யானங்களுடன் தேவநாகர

லிபியில் ஒரு பதிப்பு இதுவரை வெளிவராதது பெருங்குறையாகக் காணப்படுகிறது. இக் குறையைப்பற்றி, வடதேசங்களில் (காசி, கல்கத்தா முதலிய இடங்களிலிருந்து வந்த அநேக வித்வான்களும் அடியேனிடத்தில் சொன்ன துண்டு. நமது தென்தேசத்தில் அவதரித்த அபூர்வ க்ரந்தங்களை நல்லநிலையில் ஸம்ரக்ஷிக்கவேண்டுவது தென் தேசத்தவர்களுடைய கடமையல்லவா? இக்குறையை நீக்குவதன் பொருட்டு ஸ்ரீஸ்ருதப்ரகாசிகை முதலான பத்துவ்யாக்யாநங்களுடன் ஸ்ரீ பாஷ்யத்தை அச்சிட்டு வருகிறோம். அதில் க்ஷேத்ரமாத்ர ஷஷ்டீ ஸம்பந்த இதி ப்ரதிபத்த்யவ ஸஜ்ஞாவாக, என்ற வங்க்தி ஆஸேது ஹிமாசலம் பரிநிஷ்டித வித்வான்கள் அனைவராலும் ஸேவிக்கப்பட்டு வருகிறது. இதற்குமுன் அச்சிட்ட அநேக முத்ரித புஸ்தகங்களிலும் இப்படியே பாடம் இருந்தபடியால் இந்த பாடத்தில் விவாதம் இல்லை என்று எண்ணி அச்சிட்டோம். கழிந்த வைகாசியீ பெருமாள் கோயிலில் ஸ்ரீ தேவப் பெருமாள் மஹோத்ஸவத்தில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார் ஸ்வாமி அடியேனிடத்தில், ப்ரதிபத்த்யவஸஜ்ஞாவாக என்றல்லவோ சுத்தமான பாடம். அதை கவனித்ததில்லையோ? என்று கேட்டார். அடியேன் இந்த பாடபேதத்தைப்பற்றி கேள்விப்படாததால் அப்படி இருக்குமோ வென்று ஸம்சயப்பட்டு, அந்த ஸ்வாமிக்கு, அடியேன், இன்னும் பல ஸ்ரீகோசங்களைப்பார்த்து ஆராய்ந்தும், இன்னும் பல வித்வான்களைக் கேட்டும் தெரிந்துகொண்டு நிர்ணயம் சொல்லுகிறேன் என்று விண்ணப்பம் செய்துகொண்டேன். ஷை அண்ணங்கராசார் ஸ்வாமி சிறிதுநேரத்துக்கெல்லாம் பழைய ஓலைப்ரதி ஒன்றை அடியேனுக்கு அனுப்பி வைத்தார். அதைப் பார்த்ததில் ஸஜ்ஞாவாக என்ற பாடமே இருந்தது. அதற்குப்பின் அங்கு எழுந்தருளி இருந்த அநேக வித்வான்களிடம் இந்த விஷயத்தை ப்ரஸ்தாபித்தபோது சிற்சில பெரியவாள் ஸஜ்ஞாவாக என்ற பாடமே சரி என்று ஒப்புக்கொள்வதுண்டு எனத் தெரியவந்தது. அதன்மேல் ஸ்ரீதத்வடீகையை அச்சிடுவதற்காகப் பரிசோதித்தபோது அதில் ப்ரதிபத்த்யவ:—ஸவ்யாக்யாவ்யாக:, தஸ்ய ஸஜ்ஞாவாக என்று வங்க்தியைக் கண்டோம். கண்ட பிறகு ஸஜ்ஞாவாக என்ற பாடமே ஸ்ரீ தேசிகன் உகந்தருளின பாடம் எனத் தெரியவந்தது. ஸஜ்ஞாவாகஎன்ற பாடம் ஸ்ரீ தேசிகனுடைய காலத்தில் இருந்திருக்காது. அப்படி இருந்தால் ஸ்ரீ தேசிகன் அந்த பாடத்தையும் எடுத்து ஆவாபோத்வாபங்களைச் செய்யாமல் இருக்கமாட்டார். ஆகையால் ஸஜ்ஞாவாக என்ற பாடம் பிற்காலத்தில் முளைத்திருக்க வேண்டும் என ஊஹிக்க வேண்டியிருக்கிறது. இவ்விரண்டு பாடங்களில் ஸஜ்ஞாவாக என்பதே ஸ்வரஸாநுகுணம் என்றும் தோன்றுகிறது. இவ் விரண்டு பதங்களுக்கும் அர்த்தத்தில் ஸ்வல்ப வ்யத்யாஸமுண்டு. சந்தர்பாநுகுணமாக ஒருபதத்தினுடைய அர்த்தத்தை மற்றொரு பதத்திற்குக் கொள்ளவேண்டியதுண்டு. ஸஜ்ஞாவாக என்னும் பாடத்தை ஒப்புக்கொண்டால் அதற்கு ஸஜ்ஞாவாக என்ற பதத்தின் அர்த்தத்தை ஆரோபணம் செய்து வாக்யார்த்தத்தைப் பூர்த்தி செய்யவேண்டி வரும். ஸஜ்ஞாவாக என்னும் பாடத்தை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அந்த ச்ரமம் இல்லை. இந்த விஷயத்தில் பண்டிதர்கள் யதோசிதம் வ்யவஸ்தை செய்துகொள்ளுவார்கள் என்று விஜ்ஞாபிக்கிறேன்.

> நிகமாந்தகுரூணாம் விசேஷாம் ஸாரஸாரவிவேகி நாம்
> ஸஹாதி வாணகஜ்ஞாஜ வாராஹாநு ஸிரஸாதிஸம்
> சடகோபயதீந்த்ராணாம் நாமநாமிஜ நமோஸ்து
> ஸ்ரீ பாஷ்ய வாஸஜ்ஞாஸம்விதிவைவ ஸதாம் முதே ॥

வெ. சடகோபயதீ.

---

## பத்ராதிபரின் குறிப்பு

ஸ்ரீ பாஷ்ய விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சர்ச்சையைப் பற்றிச் சிறிது கவனிக்கும்படி நேர்ந்ததில் 1916-ஆம் வருஷத்தில் ஸ்ரீ நராசார்யரால் பரிஷ்கரிக்கப்பட்டு ஸ்ரீப்ருந்தாவனத்தில் ஸ்ரீநிவாஸ யந்த்ராலயத்தில் அச்சிட்ட புஸ்தகத்தில் ப்ரதிபத்த்யஸஜ்ஞாவாக'' என்றே மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. 1886-ஆம் வருஷத்தில் பாரத்வாஜ ராமாநுஜாசார்யரால் பரிஷ்கரிக்கப்பட்டு காஞ்சீபுரம் திருவேங்கட முதலியாரால் அச்சிடப்பட்ட ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் ஸம்ஸவாஸம்கா என்றே அச்சிடப்பட்டிருக்கிறது. இது விஷயம் ஸ்ரீ அனந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமியிடம் ப்ரஸ்தாபித்த காலத்தில் மேற்சொன்ன பாடங்கள் பழையதாள

கோஶங்களில்மாத்ரமல்ல அச்சுப்புஸ்தகங்களிலும் முன்னமேயே அச்சிடப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லி ஷை க்ரந்தங்களையும் எடுத்துக்காட்டினார். இத்தால் ஸ்ரீ அண்ணங்கராசாரியாரநுக்ரஹித்த பாடமே பெரியோர்கள் திருவுள்ளமாகக் காணப்படுகிறது. இவ்வாறிருக்க அபத்தபாடத்தை ஆதரித்து அதை ஸமர்த்திக்க முன்வருவது ஆரியர்கட் கழகன்றென்பதை ஸவிநயம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம் பத்ராதிபர்

## எண் குணத்தான்

(பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி, தமிழ்ச் சங்கம் திருவல்லிக்கேணி.)

எண் குணத்தான் என்பது எண்வகைப்பட்ட குணங்களையுடையான் என்று பொருள் படும். இதனை, "எட்டுமா மூர்த்தி எண் கண்ணன் எண்திக்கு எட்டு இறை எண் பிரகிருதி எட்டு மாவரைகள் ஈன்ற எண்குணத்தோன்" என்று எம்பெருமானை விவகரித்தார் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன். ஐந்து பூதங்கள், சந்திரன், சூரியன். யாகம் பண்ணுகிறவன் முதலிய எட்டுப் பெரிய உடம்புகளை உடைய ருத்திரன், நான்கு முகங்களில் எட்டுக் கண்களை யுடைய பிரம்மா, எட்டுத்திக்குகள், அஷ்டதிக் பாலகர்கள், பஞ்சபூதங்கள், மஹத், அகங்காரம், மனசு ஆகிய எண்வகைப் பிரகிருதிகள், ஹிமயம் முதலான எட்டுப்பெரிய மலைகள் இவற்றை எல்லாம் உண்டு பண்ணின எட்டுக் குணமுள்ளவனை எம்பெருமான் என்பது இதன் பொருள். "இவனுக்கு எட்டு குணங்களென்கிறது கர்மவஶ்யத்வஜராமரணஶோகக்ஷுத்பிபாஸைகளன்றிக்கே யொழிகையும், நித்யங்களான போகங்களையுடையனாகையும்" நினைத்தது முடிக்கவல்லனாகையும் (கர்மத்துக்கு உட்படாமை, கிழத்தனமில்லாமை, மரணமில்லாமை, பசியில்லாமை, தாஹமில்லாமை, சோகமில்லாமை, நித்யமான போகங்களையுடைமை, நினைத்ததை முடிக்கவல்லமை என்பன.)

நாயனார் கடவுள் வாழ்த்ததிகாரத்தில் "கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான் றாளை வணங்காத்தலை" எனப் பகர்கின்றார்.



பரிமேலழகர் உரை பின் வருமாறு.

"தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன் படுதலுடைய வல்ல, எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது தாளை வணங்காத் தலைகள்."

"எண் குணங்களாவன—தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது." அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் முதலியவற்றை முதலாக வுடையவன் எனவும் கூறலாம். கடையிலாவறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என வகுப்பர் சமணர்.

எண் குணத்தான் என்பதை ஆனந்தவல்லியிற் சொல்லுகிற கணக்கிலே எண்ணுக்குப்பெருகியிருப்பதாய் ஆனந்தாதி குணத்தையுடைய ஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணன் எனக் கொள்வது சாலப் பொருந்தும்.

ஆழ்வாரும், "எண்பெருக்கந் நலத்து ஒண்பொருள் ஈறில வண்புகழ் நாரணன் திண் கழல் சேரே" எனப் பணித்தருளினார்.

"இப்படி ஸகல ஸமாஶ்ரயணீயனாகச் சொல்லப்பட்ட ஈஶ்வரன் தான் ஆர் ? என்னில்,—அஸங்க்யேயராய் ஜ்ஞாநாநந்தஸ்வபாவராயிருந்த ஸர்வாத்மாக்களையும் நியமிக்கைக்கு கல்யாணகுணங்களையு முடையனாயிருந்த நாராயணன் அவனுடைய ஆர்த்தரை ஒருகாலும் கைவிடாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவமான திருவடிகளை ஆஶ்ரயி என்கிறார்" (ஆறாயிரப்படி)

"பத்தாம்பாட்டு. அழகிது; அப்படியே யாகிறது: பஜநத்துக்கு ஆலம்பநமான மந்த்ரம் எது? என்ன,—அது இன்னதென்றும், அதினுடைய அர்த்தம் அநுஸந்தேயமென்றும் சொல்லுகிறார். இது தன்னைப் புறம்புள்ளார் ஜபஹோமாதிகளாலே கார்யங் கொள்ளாநிற்பார்கள்; நம் ஆசார்யர்கள் 'ஸ்வரூபாநுஸந்தாநத்துக்கு ஈடாயிருக்கிற இதினுடைய அர்த்தாநுஸந்தாநம் மோக்ஷ ஸாதநம்' என்று தாங்களும் அநுஸந்தித்து, தங்களைக் கிட்டினார்க்கும் உபதேசித்துக்கொண்டு போருவர்கள். * * * ஆழ்வான் இப் பாட்டளவும் வரப்பணித்து, இப்பாட்டளவிலே

வந்தவாறே 'இத்தையுந் தம் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்' என்ன, பட்டரும் சீராமப் பிள்ளையும் எழுந்திருந்து போகப் புக்கவாறே அவர்களை யழைத்து, 'இன்னபோது இன்னார் இருப்பார், இன்னார்போவார் என்று தெரியாது; இருந்து கேளுங் கோள்' என்று திருமந்திரத்தை உபதேசித்து, இப்பாட்டை நிர்வஹித்து, 'இப்பாட்டை இதுக்கு அர்த்தமாக நினைத்திருங்கோள்' என்று பணித்தான்'' (ஈடு).

நிர்க, கௌதமஹாரீதி

"அதாஷ்டாவாத்ம குணா: — தயா ஸர்வபூதேஷு க்ஷாந்திரநஸூயா சௌசமநாயாஸோ மங்களமகார்பண்யமஸ்ப்ருஹேதி'' என்றும், "யஸ்யைதே சத்வாரிம்சத் ஸம்ஸ்காரா நசாஷ்டாவாத்மகுணா ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி'' எனவும் கூறுகிறார். இவற்றின் பொருள் கூறுதும். பிராஹ்மணர்களுக்கு அவசியமாக ஆத்மகுணங்கள் என்று எட்டுக்குணங்கள் அபேக்ஷிதங்கள். அவை யாவன தயை, க்ஷாந்தி அநஸூயை, சௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை. ஒரு பிராஹ்மணனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களும் பூர்ணமாக இருந்தாலும், இந்த எட்டு ஆத்ம குணங்கள் இல்லாமற்போனால் அவனுக்குப் பிரஹ்ம ப்ராப்தி இல்லை. சத்துருவாயினும், மித்ரனாயினும் ஒருவனை ஆபத்தினின்று யதா சக்தி ஸம்ரக்ஷிப்பது தயை. இதரர்கள் நமக்கு எவ்வித தீங்குசெய்யினும் அவர்கள்மேற்கோபங் கொள்ளா திருத்தல் க்ஷாந்தி. பிறருக்கு எவ்வித ஸ்ரேயஸ் ஸம்பவித்தாலும் அதில் அஸூயையின்றிக்கே ஆனந்திக்கும் குணம் அநஸூயை. அபக்ஷ்யங்களை விலக்கி, ஸத்ஸங்கம் செய்து, ஸ்வதர்மத்தை அநுஷ்டித்தலே சௌசம். தர்மத்தை அனுஸரித்ததாயினும் எப்பொழுதும் பீடாகரமாக இருக்கும் வியாபாரத்தை விலக்குதல் அநாயாஸம். ப்ரசஸ்த காரியங்களைச் செய்து அப்ரசஸ்தங்களை விலக்குவதே மங்களம். தமக்குள்ளது அற்பமாயினும் அதில் ஏதாவதொரு அம்சத்தை நாடோறும் பிரீதியுடன் மற்றவர்களுக்குத் தானம் செய்வதே அகார்ப்பண்யம். தம்முடைய நியாயமான பரிச்ரமத்தால் தமக்கு வரும்பொருளைக் கொண்டு திருப்தி அடைவதும், பிறருடையபொருளுக்கு ஆசைப்படாமல் இருப்பதுமே அஸ்ப்ருஹைஇவை விரிக்கிற் பெருகும்.



புஷ்பங்கள் எம்பெருமானுக்கு போக்யங்கள், அவற்றால் அவனை அர்ச்சிக்கிறோம். மேலே சொன்ன எட்டு ஆத்மகுணங்களோடு கூடிய ஒரு சேதனன் எண் குணத்தானை எம்பெருமானை ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்வதே ஸ்வரூபம். எனவே எண்குணத்தான் எண்குணத்தானை வணங்கி உய்யலாம்என்பதாயிற்று, "எட்டுமாமலர்—

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பம் இந்த்ரியநிக்ரஹ: |
ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத: ||
ஜ்ஞாநம்புஷ்பம் தப: புஷ்பம்த்யாநம் புஷ்பம் ததைவ|
ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம்பவேத் ||

எட்டுப் புஷ்பங்களாவன ஒருவனுக்கும் தீங்கு செய்யாமை, இந்திரியங்களை அடக்கல், எல்லாரிடமும் இரக்கமுள்ளவனாயிருத்தல், ஒருவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளல், தன்னையும் எம்பெருமானையும் பற்றிய அறிவு, தபஸ், தியானம், உண்மை போன்றது.

"தனக்கு வமையில்லாதான் றன்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது''

"நம்பியைத் தென் குறுங்குடி நின்றவச்
செம்பொனே திகழும் திரு மூர்த்தியை
உம்பர் வானவ ராதியஞ் சோதியை
எம்பிரானை என் சொல்லி மறப்பனோ?

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ப்ரபந்ந குலம்

(ஸ்ரீ. உ. வே. திருமலை நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார்,
ஆழ்வார் திருநகரி.)

ஸ்ரிய: பதியான ஸர்வேச்வரன் "பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி'' ஸங்கல்பித்து, "சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச:'' என்கிறபடி நான்கு வர்ணங்களையும் படைத்து அவையவைக்கான குணங்களையும் கருமங்களையும் வகுத்து வைத்தான். ஏகப்ரகாரமாய் ஜ்ஞாநஸ்வரூபனாயிருக்கிற

ஆத்மவஸ்து பேதாஸஹமானாலும், ஶரீர ரூப உபாதிக்ருத பேதத்தைக்கொண்டு ப்ராஹ்மண க்ஷத்ரியத்வாதி வ்யபதேசம் உபபந்நமேயெனப்பூர்வர்கள் உபபாதித்துப் போந்தனர். ஆக பகவத்தாஸ்யமே ஆத்மாவுக்கு நிரூபகம் என்று உணர்ந்த பெரியோர் வர்ணாஶ்ரம வித்யா வ்ருத்தங்களை கர்தபஜந்மம், ஶ்வவஹாதமம், சில்பநைணம், பஸ்மாஹுதி, ஶவவிதவாலங்கார மென்று கழிப்பர்கள். ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர் ப்ராம்மண்யாதிப்ரயுக்தம் குலம் உச்ராயம் என்றுப்ரமிப்பர்கள். தோல்புரையே போமதுவான இதன் உண்மையை அஜ்ஞர்கள் எங்ஙனம் அறிவர்?

சரீர விநாசாவதியான இத்தகைய குலங்களைவிட, முடிவிலா (யாவதாத்மபாவி) வடிமைக்குலம் நலமிக்கதென நவில வேண்டுமோ? ப்ரபந்நரெனினும், ஸ்ரீவைஷ்ணவர் எனினும் அடியாரெனினும் ஒக்கும். ஆன்றோர் அடியார்தம் குலத்தையே ஆசைப்படுகிறார்கள். பகவத் பாகவதஸம்பந்தமுள்ள விடங்களில் அநேககீட ஜந்மங்கள்கூட அவர்கட்கு இனித்தாயிருக்கிறது. பகவத்தாஸ்யத்தில் ஜாதாஸ்வாதனுயுள்ள எவன்தான் அதைவிடமுடியும்? பிரபந்நகுலத்திற் பிறப்பு "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு" என்கிறபடியே ஜாயமாந காலகடாக்ஷவிஷயீபூதனை ஆயிரத்திலொரு ஞானவானுக்கே கிட்டும். இக்குலத்திற் பிறப்பாவது, ஞானமனுட்டான மானமிவை நன்றாகவுடைய குருவை யடைந்து பகவத்ஸம்பந்தத்தை யுணருகை. "[illegible]" என்கிறபடி ப்ரஹ்மசம்பந்தத்தை யுணர்ந்த பின்னரே யிவன் பிறந்தவனாகிறான். "அன்று நான்பிறந்திலேன்" என்கிற திவ்ய ஸூக்தியும் இங்கு ஒப்புநோக்கற்பாலது. சாரீர சம்பந்தத்தோடு ஞானஸம்பந்தமும் ஒரேகுலத்திலுண்டானால் அது பொன்மலர் நாற்றமுடைத்துப் போலாகும். "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய" (பிதாமஹம் நாதமுநிம் விலோகம்) என்ற ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் இவ்வுபய ஸம்பந்தமும் ஒள்ளொடுங்கி யுளது. இவ்வுபயசம்பந்தமும் பெறுகை, பட்டருக்கு ஆழ்வான் பக்கல் கிடைத்தது. இத்தகையபேற்றை ஸ்ரீ ஆண்டாள் பக்கலிலும் காணலாம். இவ்விருசம்பந்தங்களையும் தந்தையும் பெண்ணும் "மாயன்மணி வண்ணன் தாள்பணியும் மக்களைப் பெறுவர்களே" "வாய்த்தநன்மக்களைப் பெற்று



மகிழ்வரே." என்றும் "நிச்சலும்பாடுவார் நீள்விசும் பாள்வரே" என்றும் பரமபதத்தோடு வாசியற நமோ நாராயணாய வென்பாரே என்று சூழ்ந்திருந்தேத்தும் பல்லாண்டோடு வாசியற ஒக்க பலமாக வருளியிருப்பதால் இதனது பெருமை தெரியவரும். நன்மக்களாவர் நன்மையுடையமக்கள். நன்மையாகிறது பகவச் சேஷத்வமாகிற ஆத்மஸ்வரூபநிரூபகதர்மம். அதனை யுடைத்தாதல் பற்றி ஆத்மாவை "நன்பொருள்" என்று கூறுவதுமுண்டு. "நம்பினேன் பிறர்நன்பொருள் தன்னையும்" என்கிறவிடத்து நன்பொருள் என்கிறபதத்திற்கு ஆத்மாவென்று வியாக்கியானித் திருப்பதுங்காண்க. அவ்விடத்திய வியாக்கியானமாவது :—"நன்பொருள் என்கிறது ஆத்மாவை...................... வைலக்ஷண்யத்தை யுடையனாகையாலே..............பகவச்சேஷத்வத்தளவில் நில்லாதே சேஷத்வகாஷ்டையில் நிற்கக்கடவ ஆத்மவஸ்துவைக்கிடீர் நானபஹரித்தது." என்று.

ஆகவிங்கு நன்மக்கள் என்கிறது ஆத்மகதஶேஷத்வாநுரூபமான ப்ரபதனத் திலிழிந்தவரை யென்று கூறத்தட்டில்லை. "வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ நஸ் ஸந்தாரயிஷ்யதி" (வைஷ்ணவோ ந: குலே ஜாதஸ்ஸந்தார விஷ்யதி) என்றிறே பிதிருக்களும் தங்கள் குலத்தில் வைஷ்ணவன் உண்டானால் போர உவப்பது. "வாயுநன்மக்களைப் பெற்றுமகிழ்வரே" என்கிற விடத்திலும் "பெரியாழ்வாரைப் போலே பகவத்ப்ரவணரான புத்ரர்களைப் பெற்று ஹ்ருஷ்டராவர்கள்" என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்தருளினார். இதிலிருந்து "ப்ரபந்நபுத்ர லாபத்தையே ஸ்ரீஆண்டாள் பலமாகக் கருதி அருளினாளென்று வெளியாகின்றதன்றோ? ஆக ஸ்ரீ ஆண்டாளும் பெரியாழ்வாரும் தாம் கை கண்ட ஶரீர வித்யாஸம்பந்தங்களினாலுண்டாகும் ஆநந்தம், எல்லோருக்கும் ஒக்க உண்டாகவேணுமென்று ஆஶாஸிக்கிறார்கள். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்." என்று புத்ரஸம்ருத்தி பெரிதும் பெற்றோரை மகிழ்விக்குமன்றோ?. கூடுமனமுடையீர் வரம்பொழுவத் தொல்லைக் கூடுமினோ" "போதுவீர் போதுமின்" என்று மனமுடையோர் எல்லோரையுமே தங்களது ப்ரபந்நகுலத்திற் சேர வழைக்கு மிவ்விருவருடைய கருணையைப்பாருங்கள்.

பிராம்மண குலாதிகளிற் பிறப்பு அநாதி கர்மாதீனமாயிருக்

கும். தோல்புரையே போமதுவான பிராஹ்மண குலத்தில் பிறப்புக்கும் இறப்புக்கும் பஹுவித யோக்யதாபேக்ஷையுண்டு. பிரபந்நகுலப் பிறப்புக்கு இச்சையொன்றே வேண்டுவது எல்லாமவனே என்றிருப்பேவமையும். "கஷ்டம் கஷ்டம்" என்கிறபடியே க்லேசசாத்யமான கர்மத்துறையில் இறங்கவேண்டிய அவச்யமில்லை. ப்ரபந்நனுக்கு பகவத் ஸம்பந்தத்தையிட்டே கிராமகுலாதிவ்யபதேசம்.

"ஸதாசாரஹீநேஷ்வபி ஜாதேஷு வைஷ்ணவோத்தமாதிஷு ஸத்குலாதிஷு: |
விஷ்ணு நாமஹ்வஜேஷு வ்யூஹஸவ்யுஹவஸம் ஸ ஸவஹி ||"

என்னும்பிரமாண மிங்கு அநுஸந்தேயம். பகவத்ஸம்பந்தத்தையிட்டுத்தான் "குருகூச்சடகோபன் என்னும், காரிமாறன் என்னுமாழ்வாருக்கு ஸ்வக்ராம குலவ்யபதேசம். "வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்கள்" என்றும், "கோயில்வாழும் வைட்டணவர் என்றும் பகவத்ஸம்பந்தாந்வயா தேசத்தைக் கொண்டு தந்தையும் பெண்ணும் வ்யபதேசிக்கையாலே மேலேகாட்டிய ப்ரமாணம் பகவத்ஸம்பந்தமற்ற க்ராமகுலங்களையே குறிக்கும் எனக்கண்டு கொள்க. பிராமணனுக்கு வேதாத்யயனம் போலே ப்ரபந்நனுக்கு சந்தங்கள் ஆயிரமும் அறியக்கற்கை. பிராம்மணதியருக்கு கர்ம ப்ரம்சாதிபயமும், "ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ" என்று ஈசுவரன் கோபத்திற்காளாகிறபயமும் உண்டு. ப்ரபந்நனுக்கது இல்லை. இவன் ப்ரவிருத்திபரனன்றே! ப்ரபந்நன்புரிந்த வறியாவிழுக் காட்டிலுள்ள அபராதங்களை தோஷங்களில் போக்யத்வபுத்தி ரூபமான வாத்ஸல்யம் கொண்டவீஸ்வரன் பொறுத்தருள்வான். ஆக நிர்ப்பயமாய் பலிஷ்டமாய் தர்மாஷ்டமான வொருராஜகுலம் போலேயாயிற்று ப்ரபந்நகுலமும். ஈசுவரவாத்ஸல்யம் ப்ரபந்நரல்லாதார் விஷயத்தில் கிடையாதோவெனில் ஆம் இல்லையென்க. எல்லாம் தானேயாக நடத்திப் போருமவர்களாக நினைப்பவரிறே ப்ரபந்நேதரர். "பராத்து தச்ச்ருதே:" என்று ஜீவகர்த்ருத்வம் ஈசுவராதீனம் என்கிற ஸித்தாந்தத்தைத் யுணர்ந்து, என்னாற் செயற்பாலதென்? என ஸ்வப்ரவிருத்தியை விட்டு "களைவாய் துன்பங்களையாதொழிவாய்" என்று கிடக்குமவரிறே! ப்ரபந்நர்கள். இத்தகையோர் அபராதம் புரியப்ரஸக்தியேது.? காதாசித்கமாகவதெங்கேயானும் உண்டானாலும் ஸர்வபாவேந தன்னைப்பார்க்கும் மஹாத்மாவானவிவன் செய்ததை அவன்



போக்யமாகவே கைக்கொள்வானத்தனை. "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்" என்றிறே அவனருளும் சந்தை. ப்ரபந்நேதரர் ஜ்யோதிஷ்டோமாதிகளால் ஸ்வதந்திரராய் ஸ்வர்க்கத்தை பெறுக்குமாப்போலே பாபமடியாக நரகாநுபவமும் பண்ணிப்போருகிறார்கள். இதனால் ஈசுவரனுக்கு வைஷம்யநைர்க்ருண்ய ப்ரஸக்திபரிஹ்ருதமாயிற்று. ஒருதகப்பன் ஸ்வேச்சாதீநப்ரவ்ருத்தியில்லா சைசவாவஸ்தையிலுள்ள தன்புத்திரன், தன்னைக் காலாலுதைத்திடில் அதைப்போக்யமாகக் கொள்கிறான். அப்புத்திரனே ஸ்வதந்திரனான பின்னர் அச்செய்கை தந்தையின் சினத்திற்கே ஆஸ்பதமாகும். இதுபோல்தான் ஈசுவரனுக்கு ப்ரபந்ந ப்ரபந்நேதரர்கள் விஷயத்திலிருக்கு மிருப்பும். தோஷபோக்யத்வப்புத்தி வாத்ஸல்யமாயின் "சாஸ்திரானர்த்தக்யம்" என்கிற சங்கையும் இதனால் ஒருவாறுபரிஹ்ருதமாயிற்று. சாஸ்திரம் பிரவிருத்திபாருக்கேயன்றி நிவிருத்திபாருக்கில்லை. "நசாஸ்த்ரம் நைவச க்ரம:" என்னக் கடவதிறே. எனவே குழந்தைகள்போல் தனக்கென்றொரு பிரவிருத்தியின்றிக்கே மாசில்லாதாராயிருக்குமவர்கள் ப்ரபந்நர் என்றதாயிற்று. இதுகொண்டே ப்ரபந்நகுலத்தை "மாசில்குடி" என்று ஆழ்வாரும் அருளிச்செய்தார். மாசாவன அகங்காரமமகாரங்கள். "அஹந்தே நாஹந்தேவிஹரணபதம்" என்று அகங்காரத்தை ப்ரபந்நர்கள் "வானேமறிகடலோ மாருதமோ" என்கிற கணக்கிலேவிரட்டி யடிப்பவர்கள். ஆகையாலிறே மாசில் குடியாயிற்று ப்ரபந்நகுலம். "நாவிஷ்ணு:-ப்ருதிவீபதி:" என்றும் "திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே" யென்றும் அரசரை ஈசுவரனாகவும், "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்று தெய்வத்தோடொப்பக் குழந்தையை கொண்டாடியிருப்பதாலும் அரசர்குலம் போலும் குழந்தையினம் போலுமுள்ளது தொண்டர் குலம் என்னதாயிற்று. ராஜகுலம் ஸ்ரீஸம்ருத்தியுள்ளது. இக்குலமும் அழியாத ஸ்ரீஸம்ருத்தியுடையது. ப்ரபத்தியே இதற்குத் தலைசிறந்த ஸ்ரீ ஆகும். "ஸஹ சதுர்பிர்மந்த்ரிபி:" என்று உற்றாரையும் ஊரையும் போகட்டு ஆகாசத்திலே நின்று ப்ரபத்தி பண்ணும் விபீஷணாழ்வானை "அந்தரிக்ஷகத ஸ்ரீமாந்" என்று ஸ்ரீ உள்ளவனாகக்கூறிற்றிறே ஸ்ரீராமாயணம். ஸ்ரீவைஷ்ணவர் என்னும் வ்யபதேசமும் இதுபற்றியே எனக்கொள்க.

குழந்தைகள் மனம் கல்மஷமற்றது. "பால்யேந திஷ்டாஸேத்" என்று பெரியோரைப் பால்யமாக இருக்கவாசை கொள்ளுமாறு வேதபுருஷனும் விரும்புகிறான். "சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்" என்று "பாலகனென்று பரிபவம் செய்யும்" மதியைநோக்கிப் பணித்த பெரியாழ்வார் குழந்தைகளின் பெருமையறிந்தவரில் தலைவராகிறார். கண்ணனிடம் ஆழ்வார்கள் ஈடுபட்டதற்குக்காரணம் ஸௌசீல்ய ஸௌலப்யங்களுக்கு ஏற்றவவனது குழந்தைச் செய்கைகளே யாகும். மத்திறம் உரலினோடிணைந்திருந்தேங்கிய வெளிமே! என்று உரலினோடிணைப்பிற் போலயற்ற அவனது பிடிக்குர் செய்கைகளில் ஆழ்வார் ஈடுபடவில்லை. ப்ரபந்நவம்சம் ராஜா குலஸாதிருஶ்யத்தையும் குழந்தைத்தன்மையும் பெற்றிருப்பதை ஸ்ரீபட்டர் ஸ்ரீரங்க ராஜாஸ்தவத்தில் அழகாக நிரூபித்திருக்கிறார்.

"கிஞ்சாவ்யூவந்தீ பஹுதாவித விஷண்ணாயா
உத்ஸ்ருஜ்ய ராஜகபலம் ப்ருதுபுஷ்டிதம் கிமேவம்
ஸ்ரீரங்கராஜகலயா பதயோர் விதக்ஷம்
யத்ராவராய்ருதி ஸ்துதி ஸாஹஸேஷு ஸ்திஷு"

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே. என்றருளிறே ஸ்ரீதாசாரியன். ஏவகாரத்தால் த்ருடாத்யவஸாயம் கூறப்படுகிறது. அதுவே ப்ரபத்திபலமேறது. ப்ராபத்திபலகாரித என்னும் சொற்கள் ஸ்ரீபட்டரது அநுவதந ஶக்தியை அழகுற அறிவிக்கின்றன. வாநரபலத்தைக் கொண்டு ஸாதாரணமான வோர்ஸாகரத்தைத் தாண்டக்கிமர் சக்ரவர்த்தித் திருமகன் "ஸுக்ரீவம் ஶரணம் வாயுதாரணம் ஸாமரஷு வா" என்று ஆர்த்தன் போலே பேசிப்படுத்தது. ப்ரபந்நகுலராஜனே ப்ரபத்திபலங் கொண்டு தன்னோடு தன்பரிவாரங்களும் "யாமுறுமாறு அடியேன் செய்யும் விண்ணப்பம்" என்று "ஶரணாய" என்று கூறப்படுகிற வைஷ்ணவ மாயாஸாகரத்தைத் தாண்டும்படி செய்தருளினான். அத்தகையமாசில் குடிப்பிறப்புக் கிமர் அறிவிற் சிறுமனி எனை மடியேனை ஸ்துதிஸாஹஸத்தில் இறக்குகிறது. ராஜ குலத்திற் பிறந்தவனுக்கு ராஜாபராத பயமில்லகிமர். இதனால் ராஜாகுல ஸாத்ருச்யம் கூறப்பட்டது. இனிக்குழந்தைத் தன்மையைக் கூறுகிறார் ஸ்ரீரங்கராஜேதி. ஆதிகாப்பதிகளின் திருவடிகள் செய்த லாலனை ஸ்துதியிலிறங்கமேறது. பட்டா ரங்கராஜனுக் ஸ்வீக்ருத புத்திரர் என்று ப்ரஸித்தமிறே. ப்ரபந்நன் தலைக்கு மேலேயும் தனிர்புரையும் தன்மை திருவடிகளுக்கு இயற்கையாம். லாலித புத்ரர்களுக்கு அபராதபயம் இல்லை யென்பது வெள்ளிடைமலை.



ஆக இவ்விரு த்ருஷ்டாந்தங்களையுங் கொண்டு ப்ரபந்நகுலத்தின் பெருமையை நாம் நன்கு அறிந்துகொள்ளுகிறோம் அன்றோ?

அடியேன் இப்பத்திரிகையில் முதன் முதலின் எழுதும் வியாசமிது வாதலின் ஒருவேளை இது இப்பத்திரிகை நடைக்கு ஒவ்வாமலுமிருக்கலாம். ஆயினும் விஷயமஹாத்மத்தை யுத்தேசித்து இதையாதரித்திடல் வேண்டுமென வறிஞர்களைப் பிரார்த்திக்கிறேன்.

திருமலை நல்லான் ரநாமகிருஷ்ணய்யங்கார்

# ஓர் ஸந்தேஹ நிவ்ருத்தி.

(ப்ரதிவாதி பயங்கரம், ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்.)

சமையலறைகளில் பலவகையான அநாசாரங்கள் நடக்கின்றன. நமது க்ருஹங்களிலுள்ள சமையலறைகளில் நடப்பவற்றைப் பற்றி நாம் சொல்லவரவில்லை. பெரும் பெரும் தேவாலயங்களில் திருமடைப்பள்ளிகளில் நடக்கிற அநாசாரங்களைப் பற்றியே இங்கு ப்ரஸ்தாவிக்கிறோம். ஸ்ரீவைஷ்ணவ தேவாலயங்களில் ப்ரஸாதங்களின் போகம் விசேஷமாக நடைபெறுகின்றது. ஆசாரசீலர்களான மஹா சிஷ்டர்களும் பகவத் ப்ரஸாதமென்று மிக்க பக்தியோடு உட்கொள்ளுகிறார்கள். அதைப்பெறுவதற்குப் பெருமுயற்சிகளும் செய்கிறார்கள். தம்தம் திருமாளிகைகளில் விறகு முதலியவற்றையும் ஜலம் விட்டுக்கழுவி அடுப்பிலிடும் மஹா சிஷ்டர்கள் தேவாலயங்களுள் நுழைந்தபின் அந்த ஆசாரங்களையெல்லாம் மறந்து விட வேண்டியிருக்கிறது. தேவாலயச் சமையலறைகளில் நடக்கும் அநாசாரங்களைக் கட் கூடாகக் கண்டால் எவ்வளவு முட பக்தியுள்ளவர்களாயிருந்தாலும் அந்த ப்ரஸாதங்களை உட்கொள்ள முற்படமாட்டார்களென்பது உண்மை. இதற்காகவே திருமடைப்பள்ளிகளில் யாரும் போகாதபடி பார்த்துக்கொள்ளும் வழக்கமுமுண்டு. சில பெரியோர்கள் வேணுமென்றே சமையலறைகளுள் நுழையாமல் ஒதுங்குகிறார்கள். 'உள்ளே என்ன நடக்கிறதென்பதை நாம் பார்க்கக்கூடாது; அதெல்லாம் தேவரஹஸ்யம்' என்று சொல்வதையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகவே, திருமடைப்பள்ளிகளில் நடக்கும் அநாசாரங்களை அறியாதார் இல்லை. யாவரும் அறிந்திருந்தும் அவற்றைக் கவனிப்பதில்லை. வாய்க்கு இன்பமாகப் பண்டங்களைப் புஜிப்பதிலேயே பெரும்பாலும் அனைவர்க்கும் ஊக்கம். எங்கேயாவது ஆசாரங்களைப்பற்றி மேலதிகாரிகள் கவனிப்பதாயிருந்தால் தளிகைபண்ணுகிறவர்கள் கிடைப்பதே அரிதாய்விடுகிறது.

இவ்விதம் துராசாரங்கள் நடக்கப் பெரியோர்களும் கூசாமல் பிரஸாதங்களை வாங்கிப்புஜிக்கிறார்களே, இதற்கு ஏதாவது சாஸ்த்ர ஆதாரமுண்டோ வென்று வெகுநாளாக நாம் சங்கை கொண்டிருந்தோம். வைகாநஸஸூத்ரானுவர்த்தியான ஒரு மஹானுடன் ஸமீபகாலத்தில் நாம் ஸம்பாஷிக்கையில் அவர் வைகாநஸ தர்ம ஸூத்ரத்தில் இதற்கு ஆதாரம் இருப்பதாக எடுத்துக் காட்டினர். அதில் மூன்றாவது ப்ரபாடகம், நாலாவது கண்டம், பதினோராவது ஸூத்ரம்.——

[ஆதுரே! பாலே! பசநாலயே! ச! சௌசம்! ந! விசாரணீயம்: யதாசக்தி! ஸ்யாத்.] என்றுள்ளது. ரோகி, சிறுவன், சமையல்வீடு இவற்றில் சுத்தியைப்பற்றி விசாரிக்கத் தேவையில்லை; யதாசக்தி இருக்கலாம்——என்பதே இதன் பொருள்.

இந்த ப்ரமாணாதாரம் இருந்தாலும் வேணுமென்றே துராசாரங்களைச் செய்யாமல் கூடுமானவரை ஸதாசாரங்களில் முயல்வது நலம்.

## வர்த்தமானங்கள்

### திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

ஷை சங்கத்தினாதரவில் ஸ்ரீஜயந்தீ உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி திருவல்லிக்கேணி மடத்தில் அடியிற்கண்ட உபந்யாஸங்கள் நடைபெற்றன. 6-9-36-மாலை 4-மணிக்கு அட்வகேட் ஸ்ரீமான் R. கேசவய்யங்கார் **கேசவன் கீர்த்தி** என்னும் விஷயத்தைப்பற்றி மிகவும் அழகாக 2-மணிஸமயம் உபந்யஸித்தார். 7-9-36 மாலை 6 மணிக்குமேல் அட்வகேட் ஸ்ரீமான் C. நரஸிம்மாசாரியார் **கண்ணனும் தென்குருகூர் நம்பியும்** என்ற விஷயத்தைப்பற்றி $1\frac{1}{2}$ மணிகாலம் தற்காலம் ஆங்கிலேய பாஷாபிமானிகளும் உகக்குமாறு எளியநடையில் உபந்யஸித்தார். 8-9-36 மாலை 4 மணிக்குமேல் **கண்ணன் திருவவதாரத்தைப்** பற்றி ஸ்ரீமான் R. கேசவய்யங்கார் உபந்யஸித்தார். இன்னும் 9-10 11-12-13 தேதிகளிலும் அனேகம் வித்வான்களின் உபந்யாஸங்கள் நடைபெறுமென்று தெரியவருகிறது.

**ஸ்ரீ ரங்கம்** :—புரட்டாசி 31-உ (16-10-36) நவராத்ரி உத்ஸவாரம்பம்.

**திருப்பதி** :—ப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம் புரட்டாசி 6-உ (21-9-36) கருடஸேவை 10-உ (25-9-36) திருத்தேர்.

**வாநமாமலை**:—புரட்டாசி 14-உ (29-9-36) ஒன்றான வாநமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி உத்ஸவ ஆரம்பம் 23-உ (8-10-36-ல்) கன்னிப்புனர்வஸுவில் சாற்றுமுறை.



அது எங்ஙனே? என்ன அஸ்மதாதிகள் ப்ரபந்நராயிருக்கச் செய்தே சரீராவஸாநத்தளவும் ஸ்திரீ அந்ந பாநாதிகளோடே இருக்கிறாப்போலே ஸ்ரீ விபீஷணாழ்வானும் அநந்யப்ரயோஜநர். அதிகாராவஸாநத்தளவும் அநந்யப்ரயோஜநராகவே எழுந்தருளியிருப்பரென்ன, ஐஸ்வர்யம் அநுபவியாநிற்க அநந்ய ப்ரயோஜநரானபடி என்? என்ன ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸர்வஸங்கபரித்யாகம் பண்ணி வந்தவர். அவர் தலையிலே முடியை வைத்து ராஜ்யாபிஷேகம் பண்ணி "மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு என்னிலங்கு நாமத்தளவு மரசென்ற மின்னலங்காரர்" என்று பெரியாழ்வார் அருளிச்செய்தருளினபடி. அவாந்தர பலமான ஐஸ்வர்யம் புஜிக்கும்படி சக்ரவர்த்தித் திருமகன் நியமித்து வைத்தாராகையாலே அவாந்தரபலம் புஜிக்கக் குறையில்லை தானுமென்று அருளிச்செய்தார்.

### முதலியாண்டான் பணித்த வார்த்தைகள்

(1) பிராட்டிக்கு ராவணபவநம்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸாரம்.

(2) பிராட்டி இளைய பெருமாள் விஷயத்தில் அபசாரப்பட்டு, பெருமாளைப்பிரிய நேர்ந்ததுபோல சேதநருக்கு ததீயரிடத்தில் அபசாரம், ஈஸ்வரன் திருவடியில் நினைவை லயியாமற்பண்ணும்.

(3) பிராட்டிக்கு அசோகவநம் போலே இவர்களுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமான தேஹம்.

(4) பிராட்டிக்கு ராக்ஷஸ ஸ்த்ரீகள் ஸஹவாஸம் போலே இவர்களுக்குப் புத்ரமித்ரர்கள் ஸஹவாஸம்.

(5) பிராட்டிக்கு மாரீச தர்சனம்போலே இவர்களுக்கு விஷயப்ராவண்யம்.

(6) பிராட்டி திருவடியைக் கண்டாற்போலே இவர்களுக்கு ஆசார்ய ஸமாச்ரயணம்.

(7) பிராட்டிக்குத் திருவடி சொன்ன ஸ்ரீராம குணங்கள் போலே இவர்களுக்கு ஸ்ரீராமாயண, மஹாபாரத பாகவத பகவத் விஷயங்கள்.

(8) பிராட்டிக்குத் திருவடி ஸ்ரீராமவிருத்தாந்த கதநபூர்வகம் ஸ்ரீ முத்ரை கொடுத்தாற்போலே இவர்களுக்குக் குரு பரம்பரா பூர்வகமாகத் திருமந்த்ரோபதேசம்.

(9) பிராட்டி திருவடிக்குச் சிரோரத்நம் கொடுத்தாற்போலே இவர்கள் ஆசார்யனிடத்தில் பண்ணும் பரஸமர்ப்பணம்.

(10) பிராட்டிக்கு ஸ்ரீ விபீஷணாழ்வார் திருமகளார் பேச்சும் துணையும்போலே இவர்களுக்கு பாகவத ஸஹவாஸமும் அவர்கள் திவ்ய ஸூக்தியும்.

(11) பெருமாள் பிராட்டிக்கு விரோதிகளான ராவண கும்பகர்ணாதிகளை ஸம்ஹரித்து பிராட்டியை அழைத்துக்கொண்டு திருவயோதிக்கு எழுந்தருளினாற்போல, இவர்களுக்கு விரோதியான தேவதாந்தர பரத்வப்ரதிபத்தியையும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும் ஒழித்து உடையவன் இந்தச் சேதநரைத் திருத்திப் பணிகொண்டு ததநந்தரம் நித்யஸூரிகளோடு நித்யாநுபவம் பண்ணுவித்தல்.

(12) பாகவத சேஷத்வ விதுரமான பகவச் சேஷத்வமும் தேஹாத்மாபிமானம்போலே பொல்லாது. என்று அருளிச்செய்தார்.

இவர் நூற்றைந்து திரு நக்ஷத்திரம் எழுந்தருளி யிருந்தார்.

எம்பெருமானார் திக்விஜயம் செய்தருளின பிறகு கோயிலுக்கு எழுந்தருளினவாறே பெருமாளும் முன்போலே செங்கோல் முதலான வரிசைகளை எம்பெருமானாருக்கு ப்ரஸாதித்தருளி மடத்தேற அனுப்பி யருள, அவரும் தமக்கு ப்ரஸாதித்த வெள்ளை வகச்சல் குருமாலைகளிலே, வெள்ளையை ஆண்டானுக்கும் வகச்சலை ஆழ்வானுக்கும் ஸாதித்தார். பிறகு குலோத்துங்க சோழனும் கோயிலுக்கு வந்து எம்பெருமானாரை ஸேவித்து அவருக்கு தாரா பூர்வகமாக திருவரங்கம் திருப்பதியை தாந சாஸனம் பண்ணிக்கொடுத்து "திருவடிகளிலே ஆஸ்ரயிக்கவேணும்" என்ன உடையவரும் உகந்தருளி அந்தச்சோழனை ஆண்டான் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பித்து திருவரங்கந் திருப்பதியை ஆண்டானுக்கு தாரா பூர்வகமாக தாந சாஸநம் பண்ணுவித்து இந்த விருத்தாந்தத்தை ஆர்யபடாள் வாசலிலே சிலா லிகிதம் பண்ணுவித்தார். உடையவரும் யதா பூர்வமாக ஆண்டானைக் கொண்டு ஸ்ரீ கார்யத்தை நடத்திக் கொண்டு வருமளவில் ஒரு மஹோத்ஸவத்தில் தாநப்ரகரணத்திலே உபகார ஸ்ம்ருதியாலே பெரிய நம்பி குமாரருக்கு மாடமாளிகை சூழ் திருவீதியில் ஆளவந்தார் மடத்தையும், ஆழ்வானுக்கு அதற்கு எதிர் மனையையும் ஆண்டானுக்கு அதற்குத் தென் மனையையும் தாநம் பண்ணுவித்து தாந சாஸநமாக ஸ்ரீ சேநாபதி பட்டயமும் ஸாதித்தருளினார்.



## 2

இவருடைய (ஸ்ரீ முதலியாண்டானுடைய) திருக்குமாரர் கந்தாடை ஆண்டான். இவருடைய அவதார ரஹஸ்யம் எங்ஙனே என்னில் :—

(1) "ஸ்ரீமத் தாசரதே: பாதஸரஸம் யோகிநாம் வரம் |
அமேய ஜ்ஞாந வைராக்ய பக்தீநாமாகரம் பஜே||."

(2) "ஸ்வாவதாரஸ் கலேர்ச்சாபூத் ஸ்ரீரங்கேச யதீச்வர: |
யந்முதே தம் குணாவாஸம் ராமாநுஜகுரும் பஜே||."

(3) "ப்ரேம்ணா ப்ராகார நிர்மாதா மஹாபூதபுரே முநே: |
ஜீயாத் ராமாநுஜாசார்யோ யதீந்த்ரார்ச்சா ப்ரதிஷ்டக்ருத்||

(4) "வாதூலாந்வய வார்த்தீந்தும் ஸ்ரீமத் தாசரதே: ஸுதம் |
வேதாந்தத்வய நிஷ்ணாதம் வந்தே ராமாநுஜம் குரும்||."

இராமாநுஜன் பொன்னடி என்று வழங்கப்படுகிற ஸ்ரீ முதலியாண்டானுடைய அஹங்கார மமகார நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய பாரதந்த்ர்யமும், பாரதந்த்ர்ய பராகாஷ்டையான ததீய சேஷத்வமுமே ஓர் வடிவெடுத்தாற்போலே 'பூர்வம் "கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக:—சத்ருக்நோ நித்ய சத்ருக்நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத:" என்கிறபடியே பகவச் சேஷத்வ பூர்த்தி, ஈஸ்வரனுடைய அடியார், அடியார், அடியார் பர்யந்தம் உண்டான வாழ்விலே அடிமை நிறைவில்லாது உண்டாகாததாகையினாலே, பாகவத சேஷத்வமே பரம புருஷார்த்தமென்று ஸ்ரீ பரதாழ்வானுக்கே சேஷபூதராய் அவருடைய பாவநத்வ போக்யத்வங்களிலே கால் தாழ்ந்து "புமஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிறபடியே ஆண்களும் பெண்ணுடை யுடுக்கும்படியாயிருக்கிற பெருமாளுடைய வடிவழகிலே நெஞ்சாழாமல் தம்முடைய கைங்கர்யத்திற்கு அது நித்ய சத்ரு வென்று அறுதியிட்டிருக்கச்செய்தே ஸ்ரீ பரதாழ்வானுக்கு அது உகப்பாகையாலே உத்தேச்ய ப்ரீதி புரிந்து பெருமாள் வடிவழகிலே நெஞ்சு சென்று எப்போதும் அத்தை பகலிரவில் கொண்டிருந்த, சத்ருக்நாழ்வாரும், இப்போது ததீயாடிமை என்று சொல்லப்படுகிற பாகவத சேஷத்வத்தையே விரும்பி, கும்பபுநர்வஸுவில் ஸ்ரீ முதலியாண்டானுக்கு குமாரராக திருவவதாரம் செய்தருளினார். இவருக்கு அவதாரஸ்தலம் கோயில் ஆசார்யர்

பெருமானார். ஸ்ரீபாஷ்ய, வேத சாஸ்த்ர ப்ரபந்தங்கள் ஸாதித்தருளினவர் திருத்தகப்பனாரான ஸ்ரீ முதலியாண்டான். ரஹஸ்யார்த்தங்கள்ஸாதித்தருளினவர் ஆட்கொண்ட வில்லி ஜீயர். எம்பெருமானாருக்குப் பஞ்ச ஆசார்யர்கள்போலே இவருக்கு மூன்றாசார்யர்கள். கந்தாடை ஆண்டானும், உடையவரை மிகவும் உகப்பித்து தேவரீர் திருவவதரித்தருளின ஸ்ரீபெரும்பூதூரிலே, ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும், எல்லாரும்சேவிக்கும்படி தேவரீருடைய அர்ச்சா விக்ரஹத்தை யேறியருளப்பண்ணவேணுமென்று விண்ணப்பம் செய்ய, எம்பெருமானாரும் அதற்கு அநுமதி பண்ணியருள, கந்தாடை ஆண்டானும் அப்பொழுதே ஒரு ஸ்தபதியை அழைப்பித்து உடையவருடைய திருமேனியை ஸேவிக்கப்பண்ணி அப்போதிருந்த வார்த்திக்ய வடிவை நன்றாக ஒரு விக்ரஹமாக எழுந்தருளப்பண்ணி உடையவர் ஸந்நிதியிலே கொண்டு வந்து வைக்க, உடையவரும் கடாக்ஷித்து மிகவும் உகந்தருளி, அந்த விக்ரஹத்தை ஆலிங்கனம் பண்ணி, தம்முடைய ஸகல சக்தியையும் அதிலே வைத்து புஷ்ய மாஸத்தில் குரு புஷ்யத்திலே ப்ரதிஷ்டை பண்ணுவதாக நாளிட்டு திருமுகத்தைக்கொடுத்தருள, ஆண்டானும் அத்தைப்பெற்று ஆதரத்துடனே அந்த விக்ரஹத்தை ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு வந்து, மூல விக்ரஹத்தை ஏறியருளப்பண்ணி திருமுகப்படியே குரு புஷ்யத்திலே ப்ரதிஷ்டை பண்ணும்போது அந்தத்தினத்திலேகோயிலிலே உடையவர் திருமேனியிலே மிகவும் தளர்ச்சியுண்டாக உடையவரும் இதென்னவென்று நினைத்துப் பார்த்தவிடத்தில் கந்தாடை யாண்டானுக்குத் திருமுகமிட்டுக் கொடுத்த நாள் அந்நாளாயிருக்கையாலே மிகவும் ஆஶ்சர்யப்பட்டு ஆண்டானுக்கு, கடுக, கோயிலுக்கு வருவதென்று திருமுகம் அநுப்பியருள, கந்தாடை யாண்டானும் அத்தைக்கண்டு அதிசீக்ரம் கோயிலுக்கெழுந்தருளி உடையவரை ஸேவித்துக் கொண்டிருந்தார். பிறகு கந்தாடை யாண்டானைக் கடாக்ஷித்தருளி தம்முடைய சரம கைங்கர்யத்தையும் தம்மைத் திருப்பள்ளிபடுத்து மிடத்திலே, அர்ச்சா விக்ரஹத்தையும் ஏறியருளப் பண்ணும்படி நியமித்தார். பின்பு கந்தாடையாண்டான் பெருமாள் நியமனத்தாலே அகளங்கன் திருவீதியிலே தென் கீழ்புறத்திலே சந்த்ரபாண்ட்யன் துரை புருஷ மண்டபத்திலே திருப்பள்ளி படுத்தி அவ்விடத்திலேயே எம்பெரு



மானாருடைய அர்ச்சா விக்ரஹத் திருமேனியை ஏறியருளப் பண்ணி ப்ரதிஷ்டை செய்தருளினார். உடையவருடைய திருவாதிரை திரு நக்ஷத்திரத்தை மஹோத்ஸவமாக நடத்தி, பின்புள்ளோரும் அப்படியே கொண்டாடும்படியாக நியமித்தருளினார். பின்னும் மார்கழி மாஸம் முப்பது நாளும் பெரிய ஸந்நிதி நம்பியார் எதிராஜனுக்குத் தளிகை யமுதுசெய்யப் பண்ணவும், திருமொழி திருவாய்மொழி நாளிலேயும் இயற்பா வன்றைக்கும் ஆழ்வார்களுடனே ஸந்நிதிக்கு எழுந்தருளும்படியும், திருநக்ஷத்திர உபலாலநமும் ஏழு நாளாகப் பண்ணி திருநக்ஷத்திரத்தினன்று (உடையவர்) திருவாசலிலே திருக்கைத் தலத்திலே பெருமானை மங்களா சாஸனம் பண்ணும்படியும், இவ்வாறு எம்பெருமானார்க்கு எல்லாப் பெருமையையும் கந்தாடை யாண்டான் கண்டருளப் பண்ணுவித்தார். இவருக்கு இராமாநுஜதாஸர் என்று திருநாமம். இவர் நாற்றைந்து திருநக்ஷத்திரம் எழுந்தருளி யிருந்தார்.

3

இவர் குமாரர் துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர். இவருக்கு அவதாரஸ்தலம் கோயில். திருநக்ஷத்திரம் கடக பூர்வா பாத்ரை.

"ராமாநுஜார்ய ஸத்புத்ரம் வாரணாதீச தேசிகம் |
லோகாசார்ய க்ருபா பாத்ரம் வந்தே குண கணார்ணவம் ||"

இவர் திருநாமங்கள், பச்சை வாரணப் பெருமாள், வாரணாதீசர், ஶ்யாமஹஸ்தீசர். இவருக்கு ஆசார்யரும், உபயவேதாந்தங்கள் ஸாதித்தருளினவரும் திருத்தகப்பனாரான கந்தாடை ஆண்டான். சக்ர வர்த்தித்திருமகனான பெருமாளுக்கு ஸ்ரீ ஶத்ருக்நாழ்வானோடும் பரதாழ்வானோடும், கூடப் பொருத இழவு கூட நிற்கிற பிராட்டியோடும் இளைய பெருமாளோடும் கூடியிருப்பதாகத் தோற்றாமல், ஸ்ரீ குஹப்பெருமாளோடு கூடின பின்பு "குஹேந ஸஹிதோ ராம: லக்ஷ்மணேந ச ஸீதயா" என்று இளைய பெருமாளோடும் பிராட்டியோடும் கூடிற்றாய்த் திருவுள்ளம் பற்றி "உகந்து தோழன் நீ யெனக்கு" என்று ஸ்ரீ குஹப்பெருமாளுக்குத் திருநாமம் சாற்றினாற்போல, ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் அத்திமாமலையில் எழுந்தருளியிருக்கும் பக்தபராதீனனான பேரருளாளனும், பெருந்தேவித்தாயாருடனும் மற்றுமுள்ள பரிவாரங்களோடும் கூடி எழுந்தருளியிருக்கச் செய்தேயும், வாரணா

தீஸரான இவரோடு கூடாதபோது அவர்களோடு கூடி யிருப்பதாக நினையாமல் இவரோடு கூடினபோது மற்றவர்களோடும் தான் கூடியிருப்பதாகத் திருவுள்ளம்பற்றி இவர்க்குத் தோழப்பர் என்று திருநாமம்சாத்தியருளினார். ஆகையாலேயிறே;இவருக்குமித்ர தாதரென்கிறது. இவருக்குப் பரமாசார்யர் ஸ்ரீ நம்பிள்ளை அது எங்ஙனே என்னில் :—இவர் அபிஜந வித்யாவ்ருத்தங்களாலுண்டான யஶஸ்ஸம்ருத்தியையுடையவராய், ஸ்ரீ முதலியாண்டான் திருப்பேரனென்கிற வத்தாலே ஸ்ரீ நம்பிள்ளையுடைய ஜ்ஞாநஸம்ருத்தியையும் சிஷ்ய ஸம்பத்தையும் கண்டு அஸஹிஷ்ணுவாய், அஸூயை கொண்டாடி, அவரைப்பெருமாள் திருவோலக்கத்திலே பரிபவித்து, பின்பு திருமாளிகையிலே எழுந்தருள, அநுகூலையாயிருக்கிற அவர் தேவியார் இத்தைக்கேட்டு அநுதாப ஹேதுவாகச் சிலவார்த்தைகளைச்சொல்ல, தோழப்பரும் கேட்டு "ப்ரமாதாத் புத்திதோவாபி யதாக: க்ரியதே ஸதா - அநுதப்தஸ்து தாநேவ க்ஷாமயேந்நாந் யதாஶமம்:" என்கிறபடியே அஸூயையால் வந்த கலக்கம் தெளிந்து அத்யந்தம் அநுதாபத்துடனே கெடுத்தவிடத்திலே தேடும்படி அவரை (ஸ்ரீ நம்பிள்ளையை) க்ஷாமணம் பண்ணுவதாக ஸஹகாரிகளுடனே புறப்பட்டுவர, அவ்வளவிலே ஸ்ரீ நம்பிள்ளைகளும் "அஹோதோரபி ஸக்ரோதமர்ச்சயந் நச்யுதப்ரியம்— ப்ரபோத்ய விவிதைர்யத்நை: ப்ராஜ்ஞோதீத: ப்ரஸாதயேத்" என்கிறபடியே தம்மை உகப்பிப்பதாகத் தம் திருமாளிகை வாசலிலே வந்து கைப்புடையிலே கிடக்கிற நம்பிள்ளையுடைய அத்யந்த நைச்யமான உக்திவ்ருத்திகளைக்கண்டு கேட்டு மிகவும் ப்ரீதராய் இது ஒரு பரிமாற்றம் இருந்தபடி என்? என்று தம்முடைய ஆதராதிசயத்தாலே இவரைப்பார்த்து தேவரீர் இத்தனை நாளும் சில பேர்களுக்கு ஆசார்யராய் இருந்தீர். இப்போது லோகத்துக்கெல்லாம் ஆசார்யராகப் ப்ராப்தராகாநின்றீர் என்று அருளிச்செய்ய "லோகாசார்யாபிதாம் தாது: கலிஜித்தாஸ ஸூரயே—ஶ்யாமே பேசஸ்ய சரணௌ கரணைஸ்த்ரிபிராஶ்ரயே | தயயா தேவராஜஸ்ய தாசரத்யார்ய ஸந்ததே:—அபிவ்ருத்திகரம் வந்தே ஹரிதத்விப தேசிகம்" | என்னக் கடவதிறே. இப்படி கந்தாடைக்குல தேசிகரான இவர் அநுவர்த்தித்து ஆஶ்ரயித்தபோதே இவர்க்கு நம்பிள்ளை பரமாசார்யரானார். இத்தைப் பற்றியிறே; விசதவாக் சிகாமணியான ஸ்ரீ மணவாள மாமுநிகளும் "துன்னு புகழ்க்கந்தா



டைத் தோழப்பர்தம் உகப்பால் என்ன உலகாரியனோ? என்றுரைக்க பின்னை உலகார்யனென்னும் பேர் நம்பிள்ளைக்கு ஓங்கி விலகாமல் நின்றது என்னும்மேல்" என்று அருளிச்செய்தாரிறே. இவர்க்கு ஶிஷ்யர்கள் அநேகர்.

4

இவர்க்கு குமாரர்கள் நாலு திருநாமங்கள். (1) பெரிய வரதாசாரியர் (2) சின்ன வரதாசாரியர் (3) ஈயான் (4) அம்மாள்.

1 பெரிய வரதாசாரியருக்கு அவதாரஸ் தலம் கோயில். திருநக்ஷத்திரம் சித்திரையில்ஹஸ்தம்.

2 சின்னவரதாசாரியர். அவதாரஸ்தலம் கோயில். இவருக்கு ஸந்ததியில்லை. இவர்கள் இருவரும் நம்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ முதலியாண்டான் நாளைப்போலே ஸ்ரீ கார்யம் நிர்வஹித்து வருகையில் ஜ்ஞாந பக்திவைராக்ய நிஷ்டர்களானபடியாலே அழகிய மணவாளப்பெருமாள் திருமேனி, திருப்பவளை கைங்கர்யங்களையும் ஆராய்ந்து கொண்டு பாலமுது காய்ச்சி அமுது செய்யப் பண்ணுகையில் ஒருநாள் இராத்ரி சின்னவரதாசாரியர் பாலமுது காய்ச்சி பெருமாளுக்கு அமுதுசெய்யப் பண்ணி பெரியவரதாசாரியருக்குக் காட்டியருள அவரும் அந்தப் பாலிலே ஒருத்ருணம் இருக்கக் கண்டு இது பெரிய பெருமாள் திருமிடற்றிலே குத்தும் என்று தொண்டைவிக்கி மோஹிக்க சின்னவரதாசார்யரும் அது கேட்டு மூர்ச்சித்து க்ரமத்திலே மோஹம் தெளிந்தவாறே பெரிய பெருமாள் ப்ரஸந்நராய் இவர்களுக்கு மாத்ருபாவனையாக பெரியாயி, சிறியாயி என்று திருநாமம் ஸாதித்தருளினார். சிலகாலத்துக்குப் பின், ராஜ கோபத்தாலே பெரியாயி நம்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ கார்யம் அதிகத்தை விட்டு திருமழிசைக்கு எழுந்தருளினார் பெரியாயி தநியன் :—

"தயயா தேவராஜஸ்ய தாசரத்யார்ய ஸந்ததே:— அபிவ்ருத்திகரம் வந்தே ஹரிதத்விப தேசிகம்."

"குரோர் வரதராஜஸ்ய வாதூலஸ்ய விபஶ்சித:
ஶிரஸா ப்ரதிக்ருஹ்ணாதி பாதௌ மங்களதாயிநௌ"

3 தோழப்பர், கோயில் ஸ்ரீ கார்யங்களை தன்குமாரரான பெரியாயி அதீநம் கொடுத்து மற்றைய குமாரர்களான ஈயான் என்னும் ராமாநுஜா சாரியரோடும் அம்மாள் என்னும் தேவராஜரோடும் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளினார். அத்திகிரி

அருளாளரும் (தோழப்பருடைய) ஸ்வப்நத்திலே "வாரீர் தோழப்பரே நீர்! நம் தெற்கு வீட்டில் நம் கார்யங்களை நிர்வஹித்தாற் போலே இங்கும் குறைவற நடத்துவீராக" என்று நியமித்தருள இவரும் பகவந்நியமனத்தை சிரஸா வஹித்து ஸ்ரீ கார்யம் நிர்வஹித்து வந்தார். ஈயான் திருநக்ஷத்திரம் சுந்யாஸ்ரவணம். இந்த நான்கு குமாரர்களுக்கும் ஆசார்யரும் ஸகல ஸாஸ்த்ரங்களும் ஸாதித்தருளினவரும் திருத்தகப்பனாரான தோழப்பர். ஈயான் என்னும் ராமாநுஜாசார்யர் தன் தகப்பனாருடனே பெருமாள் கோவிலிலே வாஸம் செய்யுங் காலத்திலே சில காலத்துக்குப் பின்பு தேவப்பெருமாள் தோழப்பருடைய ஸ்வப்நத்திலே ஸ்லோக ஷட்கத்தாலே" உம்முடைய மூன்றும் குமாரராலே ஸ்தலம் செல்லப்போகிறீர் "என்று நியமிக்க பின்பு ஒரு காலத்திலே பஞ்சதிருவடிக்ருஷ்ண ராஜா அரசு செய்யும் நாளிலே அழகிய மணவாளப் பெருமாள் அவன் ஸ்வப்நத்திலே "நம் கார்யம் பார்க்கைக்கு உத்தரவேதியிலே தேவப்பெருமாள் ஸந்நிதியிலே போயிருக்கிற ஈயானை வரவழைத்து ஸ்ரீ முதலியாண்டான் அதீநத்தை அவர் அதீநமாக்கும்" என்று நியமித்தபடியாலே அந்த ராஜாவும் ஆள் போகவிட்டு ஈயானை வரழைக்கவே மறுபடியும் ஈயான் ராமாநுஜாசார்யரும் வாதூல தேசிகராய் அநேக கோபுர ப்ராகார மண்டபங்களை ஜீர்ணோத்தாரணம் பண்ணி ஸ்வாமிக்கு நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவங்களையும் ஸர்வோபசாரங்களையும் கண்டருளப் பண்ணி ஆண்டான்நாளைப் போலே ஸ்ரீ கார்யம் நிர்வஹித்தார். ஈயான் தநியன்:—

"வாதூலாநாமலங்காரம் ராமாநுஜகுரும் பஜே!
ஸந்த: ஸதா ப்ரஸம்ஸந்தி யஸ்ய ஸாந்த்யாதிகாந் குணாந்"

ஸ்யாமஹஸ்தி குரோஸ்ஸூநும் வாதூல குலபூஷணம் |
வரதார்ய க்ருபாபாத்ரம் ராமாநுஜ குரும் பஜே ||
வேதாந்ததத்வாதி விசார போதாத்
உத்பாவிதாசார ஷடாத்ம பாவம்
வாதூல துக்தாப்தி ஸுதா மயூகம்
வந்தே ஸதா லக்ஷ்மண தேஸிகேந்த்ரம்.

4. தோழப்பா நயனாங் குமாரர் அம்மாள் என்னும் தேவராஜர் திருநக்ஷத்திரம் புரட்டாசி ஸ்ரவணம் இருப்பிடம் கோயில்.

## நிபந்தனைகள்

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.

உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.

எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.

ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.

அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.

ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.

வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள

மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸுகதுக்காநுபவங்களை யுடையவர்கள் (Sympathizers) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவனாகக் கடவேன்.

(25) இருபத்தைந்து ரூபாய் கொடுக்கு மவர்களை ஜீவியச் சந்தாதாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பணமன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பத்திரிகையின் வருஷசந்தா வெளியூர் | ... | 1 | 12 | 0 |
| உள்ளூர் | ... | 1 | 8 | 0 |
| தனிப்ரதி | ... | 0 | 3 | 0 |

டி ரூபாயை அனுப்பி சரியான விலாசத்தைத்தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

## விளம்பரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப்பர் முழுப்பக்கம் ஒரு தடவைக்கு | | ... | 5 | 0 | 0 |
| அரைப்பக்கம் | ,, | ... | 3 | 0 | 0 |
| கால்பக்கம் | ,, | ... | 2 | 0 | 0 |

—பத்ராதிபர்,

Registered No. M. 3401

விளம்பரம்

1. தங்கம், செம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச் சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயு மிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1 - க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம் பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசு வளையல்களுக்கும் கேட்லாக்கு உண்டு. அதை வாங்கி நெம்பரைக் குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்துகொடுக்கப்படும்.

**பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,**

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ் டவுன், மதருஸ்.

**ப்ராணஸுத**

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் என் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப் போன்ற டானிக் ராஜா-"பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏற்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனும்.

விலை புட்டி 1க்கு 2—8—0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்**

107, பிராட்வே, சென்னை

Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St. and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St., Madras.

1050

11 NOV 1936

ஸ்ரீ:



# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ



ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

| ஸம்புடம் 1 | தாது ஸ்ரீ புரட்டாசித் திருவோணம் | சஞ்சிகை 11 |
|---|---|---|

பத்ராதிபர்:

வடகரை இராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1936 செப்டம்பர்] [தனிப்ரதி விலை 0-3-0

## விஷய ஸூசிகை


விஷயங்கள். பக்கம்.

1. புரட்டாசித் திருவோணம் .... 251
—பத்ராதிபர்

2. வைராக்ய பஞ்சக வ்யாக்யானம் .... 256
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

3. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் .... 266
—பத்ராதிபர்

4. ஸ்ரீ உ. வே. ஜகத்குரு அநந்தாசார்ய ஸ்வாமி விஷயமான செய்யுட்கள் .... 271
—T. K. இராமாநுஜ அய்யங்கார்

5. ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஜகத்குரு அனந்தாசார்ய ஸ்வாமி .... 273
—C. P. இராஜ கோபாலாசாரியார்

6. ஸ்ரீ பாஷ்ய விஷய பரம கிராஸ: .... 275
—முசர்ப்பாக்கம் அக்காரம் திருவேங்கடாச்சாரியார்

7. ஓர் விண்ணப்பம் .... 279

8. வர்த்தமானங்கள் .... 280

9. ஸ்ரீ ராமாயண ச்லோகார்த்தங்கள்


---

ஆரியர்காள் :—

நமது வைஜயந்தீ பத்திரிகை ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் அபிநிவேசமுடைய பெரியோர்கள் அநுக்ரஹிக்கும் விஷயதானங்களைச் சிரமேலேற்று நிஷ்பக்ஷபாதமாய் வெளியிடுவதற்கென்றே வெளிவந்திருக்கின்றது. ஆயினும் அவ்வாறு விஷயதானங்களை அநுக்ரஹிக்குமவர்கள் பிறர்மனம் வருந்தும்படி வசைமொழிகளை அறவே ஒழித்தும் விஷயத்திற்குப் பொருத்தமுடையனவாயும் அனுவஸ்யகமான விஷய விசாரங்களை வளர்த்தாமலும் அநுக்ரஹிக்கவேண்டும். இவற்றிற்கு விருத்தமாயிருக்கும் விஷயதானங்களை நமது பத்ரிகை அங்கீகரிக்காதென்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்கிறேன்.

V. இராமாநுஜாசாரியார்,
பத்ராதிபர் S. R. S. வைஜயந்தி,
24, சந்த்ரப்ப முதலி தெரு G. T.


# L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது —




மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.



# அம்ருதாஞ்சனம்.




ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

# சலோருடவர் பிராண்ட்

## போர்ட்லாண்ட் சிமெண்ட்

## காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர் வேலைகளுக்கும், ரயில் வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட் ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்.

சோல் ஏஜெண்ட்

**M. குப்புசாமி நாய்க்கர்**

**83. செம்புதாஸ் தெரு,**

மதராஸ், ஜி. டி.


ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ


மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஸந பத்ரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 1. | பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார் | பகுதி 11 |


ஸ்ரீரஸ்து

ஸ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நமோஸ்து ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே

ய: ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஸீஸமத் ||

வேதவேதாந்த வேதாங்க ஸர்வஸாஸ்த்ரார்த்த வர்ஷிணீ |

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

## புரட்டாசித் திருவோணம்

பத்ராதிபர்

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ

வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

நமது வைஜயந்தியின் பதினோராவதுபகுதி புரட்டாசித் திருவோணத்திலவதரிக்க நேர்ந்ததுபற்றி அத்திருநன்னாளின் பெருமையைப்பற்றிச் சிறிது எழுத நேர்ந்தது:

புரட்டாசித் திருவோணத்திற்குப் பெருமையென்? எனில் ஆசார்ய சிகாமணியாகிய நம் ஸ்ரீ நிகமாந்ததேசிகன் அவதரிக்கும் பாக்யம் பெற்றதே. அத்திருநன்னாளில் அவ்வாசார்ய சிகாமணியின் பெருமையைச் சிறிது எழுதி யநுபவிக்கும் பாக்யம் சிற்றறிவுடையவடியேனுக்கு ப்ராப்தமாயிற்று.

அம்மஹாநுபாவரான ஸ்ரீ தேஸிகன் பெருமையைப் பற்றிப் பேசவும் எழுதவும் சீலமில்லாச்சிறியனான வடியேன் அர்ஹனல்லே

ஞயினும் அம்மஹாநுபாவர் நமது எம்பெருமானார் தர்ஶநமென்கிற விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குச் செய்திருக்கும் உபகாரங்களும், அவரது ஜ்ஞாநபக்தி வைராக்யங்களும், அவரது ஸ்ரீஸூக்திகளும் அவருடைய அவதார ரஹஸ்யத்தின் பெருமையும் அறிவொன்றுமில்லாதவடியேனையும் சிறிது எழுதும்படி தூண்டின.

பவளம் சங்கு முத்து முதலான ரத்நங்களை யுடையதாய் அதனால் ரத்நாகரமென்று ப்ரஸித்தமான ஸமுத்ரத்தின் நீர் உவர்க்குமாயினும் அச்சமுத்திரத்தை நீக்குவாருண்டோ? அதுபோலவே சமுத்திரத்தின் உவர்நீர்போல நிஷ்ப்ரயோஜனமான என்னுடைய புன் சொற்களில் ஸ்ரீதேஶிகன் பெருமைகளாகிற ரத்நம் பொதிந்திருக்கின்றமைபற்றி என்புல்லிய சொற்களையும் ஆரியர்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

இம்மஹாநுபாவர் பொய்கை யாழ்வாரவதரித்த காஞ்சீபுரத்திற்கருகே ஹிமவநம் என்று ப்ரஸித்தமான திருத்தண்கா என்கிற திவ்ய தேஶத்தில் எம்பெருமானாரால் ஸ்தாபிக்கப்பட்ட எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதி பதிகளில் தூப்புல் (விஶ்வாமித்ர) குலதிலகராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அனந்த ஸோமயாஜியாரின் பௌத்ரரான ஸ்ரீ அனந்த ஸோமயாஜியாருக்கும் கிடாம்பி அப்புள்ளார் ஸஹோதரியான தோதாத்ரி அம்மைக்கும் திருக்குமாரராக கலி 4369 ஶாலிவாஹந ஶகாப்தம் 1190 விபவஸு புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்திலவதரித்து, பெரிய திருவடியின் பேரருளால் ஹயக்ரீவ மந்த்ரோபதேஶத்தைப் பெற்று, அம்மந்த்ரத்தால் ஹயக்ரீவரையாராதித்து, அவருடைய கடாக்ஷத்தால் ஸமஸ்தமான வித்யைகளையும் கரதாமலகமாகக் கற்றறிந்து, குதர்க்கவாதிகளான புறமதத்தவர்களை புறங்காட்டி போடும்படி தர்க்கித்து, அப்ரகாரங்களைப் பின்புள்ளாரு மறியுமாறு ஶததூஷணி ஸங்கல்ப ஸூர்யோதயம் முதலானக்ரந்தங்களையருளிச்செய்து, அப்பெருமையினால் **கவிதார்க்கிக ஸிம்ஹம்** என்கிற பிருதைப்பெற்று, வேதாந்தார்த்தங்களை ப்ரவசனம் செய்து அனேக வேதாந்த க்ரந்தங்களையுமருளிச்செய்து, வேதாந்தாசார்யர் என்கிற பெயர்பெற்று, ஸ்ரீ பாஷ்யகாரரருளிச் செய்த ஸ்ரீ பாஷ்யத்திற்கு தத்வடீகை முதலான க்ரந்தங்களையு மருளிச்செய்து, இவ்விருள் தருமாஞாலத்தைத்தமது ஸ்ரீ ஸூக்திகளால் தெருள்தருமா ஞாலமாக்கி வாழ்வித்தருளினார்.



இவரது அவதாரத்தைப் பற்றிப்பேசா நின்ற ஶ்லோகரத்ந மொன்று இங்கு நினைவுக்கு வருகின்றது. அதாவது,

𑌵𑍇𑌦𑍇 𑌸𑌂𑌜𑌾𑌤𑌖𑍇𑌦𑍇 𑌮𑍁𑌨𑌿𑌜𑌨𑌵𑌚𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌵𑌮𑌾𑌨𑍇 𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑍇 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑍇 𑌸𑌤𑌿 𑌤𑌦𑌨𑍁𑌗𑍁𑌣𑍇 𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇—𑌮𑌾𑌯𑌾𑌵𑌾𑌦𑍇 𑌸𑌮𑍋𑌦𑍇 𑌕𑌲𑌿𑌕𑌲𑍁𑌷𑌵𑌶𑌾𑌚𑍍𑌛𑍂𑌨𑍍𑌯𑌵𑌾𑌦𑍇𑌽𑌵𑌿𑌵𑌾𑌦𑍇 𑌧𑌰𑍍𑌮𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌯𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 𑌸 𑌜𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌘𑌣𑍍𑌟𑌾𑌵𑌤𑌾𑌰𑌃 (வேதே ஸம்ஜாத கேதே முநிஜநவசநே ப்ராப்த நித்யாவமாநே ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி ததநுகுணே நிஷ்பரமாணே புராணே—மாயாவாதே ஸமோதே கலிகலுஷவஶாச் சூந்யவாதேऽவிவாதே தர்மத்ராணாய யோபூத் ஸ ஜயதி பகவாந் விஷ்ணு கண்டாவதார:) கலியின் கொடுமையால் வேதபுருஷன் வேதத்தையடையவும், அவ்வேதார்த்தத்தை பரத்யக்ஷீகரித்த மஹாநுபாவர்களான முனிகளின் வசநம் அவமாநத்தை யடையவும, ஸர்வஜாதிகளும் பேதமின்றிக்கலக்கவும் வர்ணாஶ்ரம பேதங்களைப்பற்றிப் பேசா நின்ற புராணங்கள் அப்ரமாணங்களாகவும், மாயாவாதம் ஆனந்தமடையவும், ஶூந்யவாதம் நிராபாயமாய்ப் பரவவும், ஆகாநின்ற காலத்தில் தர்மத்தைப் பரிபாலிப்பதற்காக எக்காலத்திலும் எவ்விடத்திலும் வ்யாபித்திராநின்ற விஷ்ணுவான திருமலைமாலின் திருமணியின் திருவவதாரமாக யாவரொருவர் அவதரித்தாரோ? அந்த தேஶிகன் ஸர்வோத் க்ருஷ்டராய் விளங்கா நிற்கிறார்—இன்னும்

𑌵𑍇𑌂𑌕𑌟𑍇𑌶𑌾𑌵𑌤𑌾𑌰𑍋𑌽𑌯𑌂 𑌤𑌦𑍍𑌘𑌣𑍍𑌟𑌾𑌂𑌶𑍋𑌽𑌥𑌵𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍—𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑍋𑌽𑌥𑌵𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌂𑌗𑌲𑌂 । வேங்கடேஶாவதாரோயம் தத்கண்டாம் ஶோதவாபவேத்—யதீந்த்ராம் தவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் | திருவேங்கடமுடையான் திருநக்ஷத்திரமான திருவோணத்திலவதரித்ததை நோக்குமிடத்து திருவேங்கட முடையானே இக்கலியுகத்தில் ஸ்ரீதேஶிகனா யவதரித்தாரோ? என்றும், குதர்க்கவாதிகளான புறமதத்தவர்களின் வாதங்களை யடக்கி தம்முடைய கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகளை எங்கும் பரவும்படி பண்ணுகையால் திருமலைமால் திருமணியின் திருவவதாரமோ? என்றும், ஶாங்கராதிமதங்களைக் கண்டித்து விஶிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபிக்கையாலே யதிஶ்ரேஷ்டரான எம்பெருமானாரே

மறுபடியும் ஒரு அவதாரம் செய்தருளினரோ? என்றும் விதர்க்கிக்கத்தகுந்த தேசிகனுக்குப் பல்லாண்டு) என்று அவர் திருக்குமாரரான ஸ்ரீ நயனாசாரியாரருளிச் செய்திருக்கையால் இவரது அவதாரத்தின் பெருமை வாசாமகோசரம்.

ஸ்ரீ வேங்கடாத்வரீணக்ருதா: ப்ரபந்தா: ஸம்க்யாதுமுர்வ்யாம் விபுதைர் ந சக்யா:—ஸ்ரீ வேங்கடார்யேண க்ருதா: ப்ரபந்தா: ஸங்க்யாது முர்வ்யாம் விபுதைர் நசக்யா: என்கிறபடி இவரநுக்ரஹித்த ஸ்ரீஸூக்திகள் அஸங்க்யாதங்கள்.

ஸ்ரீ தேசிகனருளிச் செய்திருக்கும் க்ரந்தங்களில் வைராக்கிய பஞ்சகமென்றொரு க்ரந்தரத்நமுளது. அக்ரந்தத்தை தேசிகனருளிச் செய்ததின் காரணத்தையும் வைராக்யபஞ்சகத்தினர்த்தத்தையும் சிறிது கவனித்தால் ஸ்ரீ தேசிகனுடைய ஜ்ஞாநபக்தி வைராக்யங்கள் நன்கு விளங்கும்.

திருமலைமால் திருமணியின் அவதாரமான தூப்புல் வேதாந்த தேசிகன் கூரத்தாழ்வானைப்போலே உஞ்சவ்ருத்தி செய்து அதனால் அந்தர்யாமி ஆராதநத்தை குறைவற நடத்தி உபயவேதாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டு த்யாக மண்டபமென்கிற பெருமாள் கோவிலில் பேரருளாளனையே யெல்லாமாகக் கருதி அவருக்கு அநுதினம் பல்லாண்டு பாடிக்கொண்டு பரமானந்தமா யெழுந்தருளியிருக்கும் காலத்தில் விஜய நகர ஆஸ்தாநத்தில் விசேஷமான செல்வாக்குடைய வித்யாரண்யர், விரக்தாக்ரேஸரரான தேசிகனுடைய உஞ்சவ்ருத்தி ஜீவனத்தை யறிந்து இவருக்கு விசேஷமானத் த்ரவ்யஸஹாயத்தைச் செய்யக்கருதி விஜய நகரத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்று விஜ்ஞாபந பத்ரிகை யொன்றனுப்ப அதைக் கடாக்ஷித்த ஸ்வாமி தேசிகன் இந்த வித்யாரண்யர் நம்முடன் பழகி நம்முடைய ஸ்வபாவங்களை நன்கறிந்தும் இவ்வாறு எழுதுவதே! என்று போர நொந்து அவருடைய பத்ரிகைக்குப் பதிலாக அனுப்பிவைத்த ஶ்லோகமொன்றே போரும். தேசிகனுடைய ஜ்ஞாந பக்தி வைராக்யங்களின் பெருமையை யுணர்த்துகைக்கு. அதாவது.

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம்
அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ||

என்னுடைய பிதாவினால் ஸம்பாதிக்கப்பட்ட தொன்றுமில்லை.



என்னால் ஸம்பாதிக்கப்பட்டதும் ஒன்றும் கிடையாது. ஆனால் அத்திமாலையின் அக்ரத்தில் பிதாமஹனால் ஸம்பாதிக்கப்பட்ட பொருள், எனக்கு தனமாக விருக்கிறது.

இதன்கருத்து யாதெனில் பிதா ஸ்வயமாகஆர்ஜித்தபொருளை அவரிஷ்டப்படி விநியோகப்படுத்திக்கொள்ளக் கூடும். ஆகலின் அப்பொருளைத் தன்னுடையதென்று எவ்வாறு சொல்லமுடியும்? ஆகலால் பித்ரார்ஜிதம் எனக்குக் கிடையாதென்றார். தனக்கு ஸம்பாதிக்கவேண்டுமென்கிற இஷ்டமே கிடையாது. அவ்வாறு ஸம்பாதிக்கவேண்டிய ஆவஶ்யகமுமில்லை. ஒருக்கால் தனக்கென்றொரு செல்வம் வந்தாலும் அச்செல்வம் வந்ததுபோலவே செல்லும் ஸ்வாபாவமுடைத்தாகையால் அதையும் நம்புவதற்கில்லையென்று என்னால் ஸம்பாதிக்கப்பட்டதும் ஒன்றுமில்லை என்றார். பிதாமஹனால் ஸம்பாதித்து ஸம்ரக்ஷிதமாக வைக்கப்பட்ட பொருளைத் தன்னாலும் தன் பிதாவாலும் இருவரும் சேர்ந்தாலும் மற்றெவராலும் அழிக்கமுடியாது. ஆனால் அதனாலேற்படும் வருமானத்தை யதேஷ்டமாக அநுபவிக்கலாம். ஆதலின் பைதாமஹம் தநம் எனக்கிருக்கின்றதென்றார். இது ஒரு ஶ்லேஷை. உண்மையென்ன வெனில்?

அத்திமாமலையில் வீற்றிருக்கும் பேரருளாளன், பிதாமகன் என்கிற ப்ரஹ்மாவின் யாகத்தில் ஹவிர்பாகக்ரஹணார்த்தம் எழுந்தருளினவராதலால் பேரருளாளனைப் பைதாமஹம் தநம் என்றார். சேலேய் கண்ணியரும் பெரும் செல்வமும்....அவரே என்னுமாப்போலே இவரும் பேரருளாளனே எனக்கு தனமென்கிறார்.

இவ்வாறு தம்முடைய விரக்திதோன்ற எழுதி யனுப்பிய ஶ்லோகத்தைப் பார்த்தும் வித்யாரண்யர் ஸ்வாமி விஷயத்தில் வைத்திருந்த பக்த்யதிஶயத்தால் எப்படியாவது ஸ்வாமி விஷயத்தில் சிறிது கிஞ்சித் கரித்து க்ருதார்த்தராக வேண்டுமென்று நினைத்து மறுபடியும் எப்படியும் எழுந்தருளவேண்டு மென்று போரப்ரார்த்திக்க, அப்போது அநுக்ரஹித்த ஶ்லோகரத்நங்கள் ஐந்து. அவைகளுக்கே வைராக்ய பஞ்சகமென்று பெயராகும். அது முமுக்ஷுக்களுக் கத்யந்தம் அறியவேண்டியது ஆவஶ்யகம்.........ஆதலின் அவ்வைராக்ய பஞ்சகம், பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியாரநுக்ரஹித்த உரையுடன் இங்கு அச்சிடப்படுகிறது.

# வைராக்ய பஞ்சக வ்யாக்யாநம்

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

அவதாரிகை:—*திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந் தருளின தூப்புல் வேதாந்த தேசிகன் ஸர்வதோமுகமான ஞானம் படைத்ததுபோலவே விரக்தியையும் லோகவிலக்ஷணமாகப் பெற்றவராதலால் கூரத்தாழ்வானைப் போலவே தாமும் உஞ்சவ்ருத்தியையே கொண்டு பெருமாள் திருவாராதநத்தைக் குறையற நடத்திக்கொண்டு செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவர்க்கு உபய வேதாந்த க்ரந்தப்ரவசநம் செய்தருளா நின்றுகொண்டு *கார் மேனி யருளாளர்கச்சிப்பதியிலே பேரருளாளனை மங்களாசாஸநஞ் செய்து கொண்டெழுந்தருளி யிருந்தார். இவர்க்குப் பரம மித்திரரான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் விஜயநகர மஹாராஜனிடத்தில் மிகுந்த வாத்ஸல்யம் பெற்றுப் பலபல வித்வான்களை ஆதரிப்பதற்குரிய ஸௌகர்யங்களையுடையரா யிருந்தபோது இந்த ஸ்ரீதேசிக சிகாமணியை ஸ்மரித்து இவருடைய ஏழைமையைப் போக்கிச் செல்வச் சிறப்பை யுண்டாக்கக் கருதி அந்த விஜயநகராதீசனிடத்திற்கு எழுந்தருளுமாறு ப்ரார்த்தநா பத்திரிகையை அனுப்ப, அதனைக் கடாக்ஷித்தருளின ஸ்வாமி தேசிகன் தம்முடைய நிஷ்டா விசேஷங்களை அந்த வித்யாரண்ய ஸ்வாமி அறிந்துவைத்தும் வீணாக இப்படி ஆஹ்வாநம் பண்ணுகிறாரே! எனத் திருவுள்ளம் நொந்து, அவருடைய பத்திரிகைக்கு உத்தரமாக

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சிந் ந மயா கிஞ்சிதார்ஜிதம் |
அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ||

என்கிற ச்லோகத்தை யெழுதியனுப்ப, அவரும் அதைக் கண்டு, ஸ்வாமி தேசிகனிடத்தில் அவர் தாம் வைத்திருந்த வாத்ஸல்யத்தினால் எப்படியாவது இவர்க்கு ஸம்பத்ஸம்ருத்தியை யுண்டாக்கி வைக்க வேணுமென்கிற ஆசையினால் மீண்டும் மிக நிர்ப்பந்தித்துப் பத்ரிகை விடுக்க, அப்போது ஸ்வாமி அநுக்ரஹித்தருளி யனுப்பிய ச்லோக ரத்நங்கள் **வைராக்ய பஞ்சக**மென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும். இதன் பொருளைச் சிறிய ஞானத்தர்களும் எளிதாகத் தெரிதுகொள்ளுமாறு சிறிய உரை எழுதப்படுகின்றது.



ஸ்வாமி தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் ஒவ்வொரு பதத்திலும் பலபல விசேஷார்த்தங்கள் அமைந்திருக்குமென்பதை அடியேன் சிறிய ஞானத்தன் ஸம்பாவிக்கவும் அநர்ஹன். யாதவாப்யுதயத்தில் முதல் ஸர்க்கத்தில் ஒன்பதாவதான *க்ரீடாதூலிகயா ஸ்வஸ்மிந் க்ருபாரூஷிதயா ஸ்வயம் | ஏகோ விச்வமிதம் சித்ரம் விபு: ஸ்ரீமாநஜீஜநத்* என்ற ச்லோகத்தின் வியாக்கியானத்திலே "சித்ரம் விவிதாச்சர்ய [illegible] ||" என்று தீக்ஷிதர் பணித்திருப்பதை நினைப்பூட்டுகின்றேன். ஆசார்ய கடாக்ஷ விசேஷத்தினால் அப்படிப்பட்ட விசேஷார்த்தங்களைப் பெற்று மிக விரிவாகவே வியாக்கியானஞ் செய்யலாமாயினும், விரிவின்றித் தெளிவான பொருளை ஸ்பஷ்டமாக வுணர்த்தும் வியாக்கியானமே வேணுமென்று பல பக்தர்களின் அபேக்ஷை தெரிவதாலும், ஸ்வாமி தேசிகனுடைய திவ்ய ஸ்ரீ ஸூக்திகளெல்லாவற்றுக்கும் அடியேனுடைய ஆயுளில் உரையெழுதி வெளியிட வேணுமென்கிற குதூஹலம் மிக்கிருப்பதனாலும், மற்றும் பலவகை ஸௌகர்யங்களை அநுஸரிக்க வேண்டியதனாலும் சுருக்கமான வியாக்கியானமே யெழுதப்படுகின்றது. .... ....

க்ஷோணீகோணசதாம்சபாலநகலாதுர்வாரகர்வாநல
க்ஷுப்யத்க்ஷுத்ரநரேந்த்ரசாடுரசநாதந்யாந் ந மந்யாமஹே |
தேவம் ஸேவிதுமேவ நிச்சிநுமஹே யோஸௌ தயாளு: புரா
தாநாமுஷ்டிமுசே குசேலமுநயே தத்தே ஸ்ம வித்தேசதாம் ||

1. க்ஷோணீ கோண சதாம்ச பாலந கலா துர்வார கர்வாநல க்ஷுப்யத் க்ஷுத்ர நரேந்த்ர சாடு ரசநா தந்யாந் நமந்யாமஹே—தேவம் ஸேவிதுமேவ நிச்சிநுமஹே யோஸௌ தயாளு: புரா தாநா முஷ்டிமுசே குசேலமுநயே தத்தே ஸ்ம வித்தேசதாம்!

(பொழிப்புரை). பூமண்டலத்தின் ஏகதேசத்திலே நூற்றிலொருபாகத்தை ஆளுகையாகிற தொழிலினாலுண்டாகிய அடங்காச் செருக்காகிய தீயினால் (கதுவப்பட்டு) நிலைகலங்கிநின்ற அல்பப்ரபுக்களைப் புகழ்வதனால் செல்வம் பெறுகின்றவர்களை ஒரு பொருளாக மதிக்கமாட்டோம்; (எம்முடைய அத்யவஸாயம்

எப்படிப்பட்டதென்றால்) இரக்கமுடையனை யாவனொரு எம்பெருமான் முற்காலத்தில், ஒரு முஷ்டியள்வான அவல் கொடுத்த குசேல முனிவனுக்குக் குபேரனுகுந் தன்மையைக் கொடுத்தருளினனோ அந்தப் பரம புருஷனை அடிபணிவதற்கே அறுதியிட்டிராநின்றோம்.

“இக்ஷ்வாகூணாமியம் பூமி: ஸஶைலவநகாநநா” என்றாற்போலவும் * ஒருநாயகமாய் ஓடவுலகுடனாண்டவர் * என்றாற்போலவும் பூமண்டலம் முழுவதையும் அரசாளவல்லவர்கள் இப்போது இல்லையே. பூமியின் பலகோடி நூறாயிரத்தில் ஒரு பங்குமாத்திரமான நிலத்தை ஆளப்பிறந்த அற்ப அரசர்களே உள்ளார்கள். இந்த அல்ப அதிகாரத்திற்கே இவர்களுடைய அஹங்காரம் வாசாமகோசரம். அந்தச் செருக்கினால் தீக்கதுவினாற்போல் தடுமாறிக்கிடக்கின்ற அந்த அல்பர்களிடஞ் சென்று ‘நீ இந்திரன் சந்திரன் குபேரன்’ என்று இல்லாத பொய்யுரைகளைப் புனைந்து புகழ்ந்து ஜீவிப்பவர்களுடைய ஜீவநத்தை ஒருபிழைப்பாகவே மதிக்கமாட்டேன். “உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன் இனிப்போயொருவன் தனக்குப் பணிந்து, கடைத்தலை நிற்கை நின்சாயை யழிவு கண்டாய்” என்னும்படியான திண்ணிய அத்யவஸாயமுடைய நான் அந்த எம்பெருமானைத் தவிர்த்து மற்றொருவன் மனைக்கடையிலே புகுந்து துவளமாட்டேன்; “அடிமை யென்னும் அக்கோயின்மையாலே அங்கங்கேயவை போதருங் கண்டாய்” என்றாற்போலே எம்பெருமானை அடிபணிந்தார்க்கு ஐஹிகத்தில்தானும் ஒரு குறை யுண்டாகுமோ? அப்பெருமான் அல்பஸந்துஷ்டன் என்னுமிடமும் குசேலோபாக்கியான முகத்தினால் நன்கு அறியக் கூடியதன்றோ. ஆகவே ஆமுஷ்மிகத்திற்குப் போலவே ஐஹிகத்திற்கும் எம்பெருமான் கைபார்த்திருக்குமத்தனையே நமக்குள்ளது-என்றாராயிற்று.

* கோணோ வாத்யப்ரபேதே ஸ்யாத் வீணாதீநாஞ்ச வாதநே । சடுஶ்சாடு, ப்ரியப்ராயவாக்யே * என்கிற மேதிநீ கோஶத்தின்படி கோணஶப்தம் இங்கு சடுஶப்த பர்யாயகம். [சாடுரசநா] அரசர்களைப் புகழ்வதை சாடூக்தி யென்பர்கள். பொதுவாகப் புகழ்ந்துரைப்பதற்கும் பெயர். “ப்ரியவாக்யே சாடு ப்ரியவாக்யம்” என்பர் கோஶகாரர்கள். “சாடுரசநாம் ப்ரதாநதாநே” என்பது புதிய பாடம்.



* யாசநாத் ஹரிதா த்ருஷ்டி:—யாசநாத்ருஷ்டி:, தாம் த்ருஷ்டிம் ததீதி யாசநாத்ருஷ்டித்ருக், தஸ்ய. இவ்விடத்தில் ப்ரஸ்துதமான குசேலமுநி சரித்திரத்தை ஸ்ரீபாகவத ஸார ஸம்க்ஷிப்த ரூபமாக எழுதி வெளியிட்டிருக்கிறேன்; ரஸிகமநீஷிகள் கண்டு களிக்க. .... .... .... க.

2. ஶிலம் கிமநலம் பவேதநலமௌதரம் பாதிதும்
பய: ப்ரஸ்ருதிபூரகம் கிமு ந தாரகம் ஸாரஸம் ।
அயத்நமலமல்லகம் பதி படச்சரம் கச்சரம்
பஜந்தி விபுதா முதா ஹ்யஹஹ! குக்ஷித: குக்ஷித: ॥

2. ஸிலம் கிமநலம் பவேதநலமௌதரம் பாதிதும் பய: ப்ரஸ்ருதி பூரகம் கிமு ந தாரகம் ஸாரஸம்—அயத்நமலமல்லகம் பதிபடச்சரம் கச்சரம் பஜந்தி விபுதா முதாஹ்யஹஹ! குக்ஷித: குக்ஷித:॥

ஜாடராக்நியைத் தணிப்பதற்கு [அதாவது, பசி தீருவதற்கு] நிலங்களில் கதிர் பொறுக்கி ஜீவித்தல் போதாதோ? (அதுதானும் கிடைக்காவிடினும்) ஒரு சிறுங்கை நிறைக்கும்படியான குளத்துத் தண்ணீர் தாரகமாகமாட்டாதோ? வழிகளிலே (விழுந்துகிடக்கின்ற) எளிதாகக் கிடைக்கக்கூடிய அழுக்கடைந்த கந்தைத் துணியும் கோமணமாகப் போதுமே. (இப்படியிருந்தும்) பண்டிதர்கள் வயிற்றுக்காக வீணாய் அரசர்களைப் பணிகின்றார்களே! ஐயோ!.

மநுஸ்ம்ருதியில் நான்காவது அத்யாயத்தில் * அத்ரோஹேணைவ பூதாநாமல்பத்ரோஹேண வா புந: । யா வ்ருத்திஸ்தாம் ஸமாஸ்தாய விப்ரோ ஜீவேதநாபதி * என்று அந்தணன் ஜீவிக்கவேண்டிய வழியைச் சொல்லத்தொடங்கி * யாத்ராமாத்ரப்ரஸித்த்யர்த்தம் ஸ்வை: கர்மபிரகர்ஹிதை: । அக்லேஶேந ஶரீரஸ்ய குர்வீத தநஸஞ்சயம் * என்று ஶாஸ்த்ரகாரன் ஸம்ஸாரநிர்வாஹார்த்தம் ஸ்வதேஹப்ராண தாரணார்த்தத்திற்காகப் பொருளீட்டலாமென்று சொல்லி, எவ்வகைக் கருமங்களால் பொருளீட்டுவதென்ன, * ருதாம்ருதாப்யாம் ஜீவேத்து ம்ருதேந ப்ரம்ருதேந வா । ஸத்யாந்ருதாப்யாமபி வா ந ஶ்வவ்ருத்த்யா கதாசந * என்று சொல்லி அவற்றை மேல்

ச்லோகங்களிலே விவரிக்கிறார்— * ஈத்ருசம் ஸஹிஷ்ணம் ஜெஜுயத்ரூதம் ஹ்ருதயாதிதம் * உதாஹ்ருதியாலே. இங்கு குல்லூக பட்டருடைய வியாக்கியானம்—"அநேகேஷ்வபி ஸமாநேஷு ஸமானதுல்யாதம் உக்தம்; தேஜஸ்வீநாம் ஹிதாநாம் அநந்யதுல்யானம் ஸிலம்:" என்று. அதுவே இங்கு ஸிலம் எனப்பட்டது. ஔஷதம்—அலிதவ்யத்தி:.

அநலம் என்ற இரண்டில் முதலது அவ்யயம். (அபர்யாப்த மென்றபடி.) அஷ்டச்லோகியில் "அதம்பதுருக்ஷமலம் ப்ரபவஸ்தநலம்:" என்று பட்டரும், அதிமாநுஷஸ்தவத்தில் "தேவதேவாத்மநலம்" என்று ஆழ்வானும் ப்ரயோகித்தமை காண்க. [ப்ரஸ்ருதி ப்ரகரணம்] "பாணிர்நிகுப்ஜ: ப்ரஸ்ருதி:" என்றான் அமரன். இதைத் தமிழர் சிறங்கை என்பார்கள். 'சொறங்காய்' என்பது ஆபாஸ வழக்கு. ஸராவி ஹவம்— ஸராவம். அயந்தநதேஷம் என்று ஒரே பதமாகக்கொண்டு சிலர் உரைப்பர்கள்; "சூத்ராதநம் ஸம்வியாநம் ஸௌவீநம் தநதேஷம்" என்று வைஜயந்தீ கோஶம் என்றும் காட்டுகிறார்கள். அயந்தம் அநம் அஷம் என்று மூன்று பதமாகவே பிரிக்கவேணு மென்றும், மேற்காட்டிய கோஶத்தில் 'ஸௌவீநம் தநம் அஷம்' என்று பதச்சேதமென்றும் பெரியோர் பணிக்கக் கேட்டிருக்கை. தமிழ்க் கோசங்களிலும் "அல்லகம்....கௌபீனம்" என்று காண்கிறது. இங்கு தேசிக ஸ்ரீஸூக்தி சைலியை ஆழ்ந்து நோக்குமிடத்து அநம் என்கிற பதம் ஆவச்யகமாயிருப்பதால் தநதேஷ மென்று விவக்ஷித்து ப்ரயோகித்திருக்கமாட்டா ரென்றும் அறுதியிடலாகிறது. இத உபரி விவேசநவிசக்ஷணாநாம் தந: ப்ரமாணம் ॥

அயந்தம்—அவிஷ்ருதமேநா யந்த: யஷ்டகஸ். அநாயாஸா ஸ்ரீதியாகஸ். *படுத்தாம் ஜீர்ணவஸ்த்ரம் அத்ரம் நஷ்டம் ஷிதம் * இத்யமர:. * அஹதே ஸந்தூர்த்தே வஸநே * இதிச அமர:. "காக்ஷித: காக்ஷித:" என்ற விடத்தில் ஶப்தாநா ப்ராஸம் ரஸிக்கத்தக்கது. ஒன்றில், ஸாவலிஹக்ஷிகஷ்வலித்ரு ப்ரத்யய:— காக்ஷிதிதிஷிதமத்யய:. மற்றொன்றில் காக்ஷிஷ்யம் த்விதீயாவஹாவசநாதம். * ராஜ்ஞா ராட்வாயிஷ்



வக்ஷாஹ்ருஷ்யவஹேவநீக்ஷித:" என்ற அமரகோஶத்தில் படிக்கப்பட்டுள்ள நீக்ஷிதஶப்தத்திற்கு இது பர்யாயம். * ஶோத்ரா கா: ப்ரயதீ ப்ருஷ்டி * என்ற அமரகோசத்தின்படி காஶப்தம் ப்ரயதீபர்யாயமாதல் அறிக. காம் க்ஷியதீதி காக்ஷித:; க்ஷி நிவாஸ கத்யாரிதி யாத:। அதவா, கௌ (ஸ்வர்கே) க்ஷியதீதிவா. * க்ஷி க்ஷயைச்வர்யயோரிதி த்வதி யாத:. (2)

3. ஜ்வலது ஜலதிக்ரோடக்ரீடத்க்ருபீடபவப்ரபா
ப்ரதிபடபடுஜ்வாலாமாலாகுலோ ஜடராநல: ।
த்ருணமபி வயம் ஸாயம் ஸம்புல்லமல்லிமதல்லிகா
பரிமளமுசா வாசா யாசாமஹே ந மஹீச்வராந் ॥

3. ஜ்வலது ஜலதிக்ரோட க்ரீடத் க்ருபீட பவ ப்ரபா ப்ரதி பட படு ஜ்வாலா மாலாகுலோ ஜடராநல:—த்ருணமபி வயம் ஸாயம் ஸம்புல்ல மல்லி மதல்லிகா பரிமளமுசா வாசா யாசா மஹே ந மஹீச்வராந்.

கடலினிடையே களித்து வர்த்திக்கின்ற (பாடபாக்நி யென்னப் படுகிற) நெருப்பினுடைய ஜ்வாலைக்குத் தோள்தீண்டியாயும் (எவ்வளவு ஸ்தூலவஸ்துக்களையும் ஒரு நொடிப்பொழுதில் கொள்ளை கொள்ளவல்ல) ஸாமர்த்திய முடையதாயிருக்கின்ற ஜ்வாலாபுஞ்ஜங்களினால் வ்யாப்தமாயிருக்கின்ற ஜாடராக்நியானது (தாராளமாக) எரியட்டும்; (எவ்வளவு கொடிய பசி மிகுந்தாலும்) மாலைப் பொழுதில் மலர்ந்த சிறந்த மல்லிகைப்பூவின் நறுமணத்தை வீசுகின்ற வாக்கினால் அரசர்களிடத்தில் நாம் ஒரு சிறு புல்லையும் யாசிக்கமாட்டோம்.

கடலினிடையே அபாரமான கடல்நீரைப் பருகிக்கொண்டு பாடபாக்நி யிருப்பதாக நூற்கொள்கை. அதனால் தான் கடல்நீர் புறம்போகாமல் ஒரு மர்யாதையிலே நிற்பதாகவும் கூறுவர். *பாஷாணஸாகரேஷுபாடபாக்நி:* இத்யாதிகளைக் கொண்டும் இதனையறியலாம். அப்படிப்பட்ட பாடபாக்நி போலவே நம்முடைய ஜாடராக்நியும் எவ்வளவேனும் படர்ந்து எரியட்டும்; (அதாவது) எவ்வளவு தீவ்ரமான பசி பொறுக்கவொண்ணுதபடி நலிந்தாலும் நலியட்டுமென்றபடி. 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது' என்னுமாபோலே அந்த நிலையை

யிலும் * என் நாவிலின் கவி யாதொருவர்க்குங் கொடுக்க கில்லேனென்கிறார் பின்பாதியில். மல்லிகை மலரின் பரிமளம் எவ்வளவு கொண்டாடத் தகுந்ததோ அவ்வளவு கொண்டாடு தற்குரிய நம் வாக்கு எம்பெருமான் விஷயத்தில் ப்ரஸரிக் குமே யல்லது அல்ப ப்ரபுக்களின் விஷயத்தில் சிறிதும் ப்ரஸரிக்க மாட்டாது: அருமருந்தன்ன வாக்கைக் கொண்டு அன்னவர்க ளிடத்தில் ஒரு த்ருணமும் யாசிக்கமாட்டோம் என்றாராயிற்று. விஷயகௌரவத்தைப் பற்றத் தம்வாக்கைத் தாமே புகழ்தல்ஏற்கும்.

கௌராஶஸ்யஸ்ய லக்ஷணயா ஶப்தப்ரதேஶவாசகஸ்ய. கீலால ஹவ: — அக்நி:. (கீலாலமென்று ஜலத்திற்குப் பெயர்.) *கீலால யோநிஜ்வலந:* இத்யமர: * அக்நிராவ: * இதிஶப்தஸ்தோமமஹாநிதிஸ்ச. "ப்ரதிஹத ... ஸத்ருஶீ; * ப்ரதிபக்ஷப்ரதிமம்விப்ரத்வீகவிரோதிந: * இதி ஸத்ருஶவாசக ஶப்தநிரூபணாத: இதி உஹாந: || [உத்தமகா] * உத்தமகா உபவிஷ்கா ப்ரகாண்டஉத்தமஜள | ப்ரஶஸ்தவாசகாந்யமூநி * இத்யமர:. யாவதாவிகல்பக மாதலால் த்ருணம், உக்ஷ்மாநிதி கல்பவதுமயம் (௩)

4. துரீஶ்வரத்வாரபஹிர்விதர்திகா
துராஸிகாயைரசிதோயமஞ்ஜலி: |
யதஞ்ஜநாபம் நிரபாயமஸ்தி மே
தநஞ்ஜயஸ்யந்தநபூஷணம் தநம் ||

4. துரீஶ்வரத்வார பஹிர்விதர்திகா துராஸிகாயை ர தோயமஞ்ஜலி:—யதஞ்ஜநாபம் நிரபாய மஸ்தி மே தநஞ்ஜய ஸ்யந்தந பூஷணம் தநம்.

(அஹங்காரமே வடிவெடுத்த) கெட்ட ப்ரபுக்களினுடைய வாசல் திண்ணையில் துவண்டிருக்குமிருப்புக்கு இதோ ஒரு கும்பீடு கொடுக்கப்பட்டது. (அப்படிப்பட்ட நிலைமை நமக்கு வேண்டா மென்றபடி.) ஏனெனில், அர்ஜுநனுடைய தேருக்கு அலங்கார மாய் மைபோன்ற நிறமுடையதாய் அழிவற்றதான (கண்ணபிரா னென்கிற) செல்வம் எனக்கு உள்ளதன்றோ.

அஹங்காரிகளான அரசர்களைக் காணவேண்டிச் செல்லுமவர் கள் வாசல் திண்ணையிலே யிருந்துகொண்டு 'மஹாப்ரபுவை இப்



போது ஸேவிக்க நேருமோ?' என்று கேட்பதும் அங்குள்ள த்வா ரபாலகங்கள் * நிஷ்ப்ராதி ஸ்தாநி ஸாம்ப்ரதம் வஶதி கவஹரம் ஶோஷயத்யஷ்டாஶ்ஷு தீவ்யத்யக்ஷைர்பவாயம் மதி தாவ ஸரோ ஹஸ்ய ஸுயாஹி யாஹி * என்றாற்போலே திரஸ்கரிக் கவுமாய்ப் படும் பரிபவங்கள் நமக்குக் கனவிலும் நேரவேண்டா என்கிறார். * ரசிதோயமஞ்ஜலி:* என்றது அதிலுள்ள ஜுகுப் ஸையைக் காட்டினபடி. இங்ஙனம் சொல்லுதல் கவிமரபு. "உஷ்யம் நமோஸ்து கவயே நிரவத்யவாய" என்றார் ஆளவந்தாரும்.

பிரபுக்களை ஸேவியாவிடில் சரீர போஷணம் முதலியவை எங் ஙனே நடைபெறு மென்ன; * யோகக்ஷேமம் வஹாம்யஹம் * என்று தேர்த்தட்டிலே நின்று பிரதிஜ்ஞை பண்ணின பெருமானே நமக்கு அழியாச் செல்வமாதலால் அப்படிப்பட்ட பெருமானாலே நித்ய ஸ்ரீமான்களான நாம் பிறர்மனை திரிதந்துண்ணவேண்டிய கடப்பாடு உடையோமல்லோம் என்றாராயிற்று. யத் என்றது யஸ்மாத்காரணாத் என்று அர்த்தமுள்ள அவ்யயம்.

அஞ்ஜநாபம், நிரபாயம் என்ற இரண்டு விசேஷணங்களும் வ்யதிரேகப்ரகாசகம். வெளுத்த ரூபமாயும் அழிந்து போவதாயுமிறே உலகத்தில் தனமுள்ளது; இங்ஙனன்று காணும் தெய்வத்தேரினில் கீதை செப்பிய எங்கள் தனம் என் கிறார். நிரபாய மென்றவிடத்து * உத்தாப்யயோகஸ்ய ஹ்ருத யாதுஜாஸம் ஸந்தேஷ்ஷிராதபி ஸதாரசித்ருஷ்டகாணம் | ஸ: ப்ரஸ்தாரத்விரதம் பரிபஶ்யதாமபூதே ஸ்வஶஸ்த ஜிஶதா ஶாஶ்வதிகம் தநம் ந: * என்ற அப்பய தீக்ஷி தருடைய ச்லோகம் நினைக்கத் தகும். "யோக க்ஷேமம் வஹாம்யஹம்" என்ற பகவத் ப்ரதிஜ்ஞையையே நம்பியிருக் கிறோமென்று காட்டுதற்காகவே 'ஸ்யந்தந பூஷணம்' எனப்பீட்டது. .... .... .... .... (௪)

5. ஶரீரபதநாவதி ப்ரபுநிஷேவணாபாதநாத்
அபிந்தநதநஞ்ஜயப்ரஶமதம் தநம் தந்தநம் |
தநஞ்ஜயவிவர்தநம் தநமுதூடகோவர்தநம்
ஸுஸாதநமபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம் ||

5. ஶரீரபதநாவதி ப்ரபு ஷேவணு பாதநாத் அபிந்தந தநஞ்ஜய ப்ரஶமதம் தநம் தந்தநம்—தநஞ்ஜய விவர்த்தநம் தநமு தாடகோவர்த்தநம் ஸுஸாதநமபாதநம் ஸுமநஸாம் ஸமா ராதநம் ||

இந்தவுடல் விழுமளவும் அரசர்களை அநுவர்த்திப்பதாகிற ஆபத்திற்குக் காரணமாய்க்கொண்டு ஜாடராக்நிக்கு சாந்தியைத் தருகின்ற பொருள் பாழாகுக. அது நமக்கு வேண்டா. அர்ஜுநனை அபிவ்ருத்தி செய்ததும், கோவர்த்தன மலையைக் கொற்றக் குடையாகத் தாங்கிநின்றதும், தேவதைகளுக்குப் பரமத்ருப்தியை அளிக்க வல்லதும், எதையும் நாம் அடைவதற்குச் சிறந்த ஸாதநமானதும், தன்னை நம்பினார்க்கு ஒருவகையான தீங்கையும் தரமாட்டாததுமான செல்வமன்றோ செல்வம். அதாவது *திருவுக்குந் திருவாகிய செல்வம். அதுவிறே நமக்குள்ளது.

க்ஷுத்ரப்ரபுக்களைப் பணிந்து பொருளீட்டுமவர் தங்கள் ஆயுள் உள்ளளவும் அவர்களைப் பணிந்தே தீரவேண்டும். பொருளீட்டுவதற்கு முன்பு அவர்களைப் பணிந்தேயாக வேண்டுமென்பது நிர்விவாதம். அபாரமான பொருளை ஆர்ஜித்துவிட்டு விலகி விடலாமே யென்னில்; அதுவுமாகாது; ஆர்ஜித்த பொருளுக்கு அபாயம் விளையாத படி அடிக்கடி அவர்களை உபஸத்தி செய்தாக வேண்டும். ஆகவிப்படி யாவஜ்ஜீவம் ஸ்வரூபநாசத்தை ஸஹித்துக்கொண்டு பொருள் படைப்பது இந்தப் பாழும் வயிற்றுக்காகவே யாதலால் அப்படிப் பட்ட பொருள் நமக்குத் தேவையில்லை. சரீரயாத்திரை ஆத்மயாத்ரை என இரண்டையும் நிர்வஹிக்கவல்ல பரம்பொருள் நமக்குக் கைப்பட்டே யிருக்கின்றது என்றார்.

ஜடராநலதநஞ்ஜய:=ஜாடராக்நியைச் சொல்லுகிறது. க்ஷுவ: ஜடராநலவஹ்நி:| இங்கு க்ஷுவ: என்றது அந்நத்திற்கும் உபலக்ஷணம். சோறுந் தண்ணீரும் எதிர்பார்க்கிற அக்நி என்றபடி: தநஞ்ஜய ஶப்தம் அக்நிக்கும் அர்ஜுநனுக்கும் பெயர். இங்கு அக்நியையும் மூன்றாம் பாதத்தில் அர்ஜுநனையும் சொல்லுகிறது. தநம் என்பது அஸாரமென்றபடி. யித் என்கிற ஸ்தானத்தில் தந மென்கிறது என்பாருமுளர். இங்கு வ்யாக்யாநத்தில் அக்ஷராநுப்ராஸத்தில் தநஶப்தம் நான்கு தடவை வந்திருக்கிறது;



மேல் உர்த்தரார்த்தத்தில் இந்தப்பதமே ஏழுதடவை வந்திருக்கிறது; இதனால் எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் துணையாக நிற்கும் தநம் அதுவே யென்று ஸூசிப்பித்தபடி. இந்த ச்லோகத்தில் பல்வகையான அர்த்த விசேஷங்கள் தொனிக்கும். அறிவுடையார் ஆழ்ந்து அறிக.

[தநஞ்ஜயவிவர்த்தநம்] "தநஞ்ஜய வ்ருத்தம் தநம்" என்று கீழ்ச் சொன்னபடியே தநஞ்ஜய ஶாந்திவர்த்தமான தநம் போலன்றியே இது தநஞ்ஜய வ்ருத்திகர மென்கிறார். [உத்த்ருத கோவர்த்தநம்] எடுத்து வஹிக்கப்பட்ட கோவர்த்தன மலையை யுடையது. திருவாய்ப்பாடியில் கண்ணபிரானுடைய அதிமாநுஷ சீலவ்ருத்த வேஷங்களைக் கண்டு ஆயர்களனைவரும் 'இவனே நம் குலக்கொழுந்து; இவனது கட்டளைப்படியே நாம் நடக்கவேண்டும்' என்று அறுதியிட்டிருந்தனர்: அங்ஙனமிருக்கையில் சரத்காலம் வந்தது. அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடத்துவது போல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூசை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜா த்ரவ்யங்களுமாகிய இவைகளைச் சேகரிப்பதைக்கண்டு க்ருஷ்ணன் 'ஓ பெரியோர்களே! நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்கே பூஜை செய்வது தகுதி; இக் கோவர்த்தநகிரியே பசுக்களுக்குப் புல்லுந் தண்ணீருங் கொடுத்துக் காப்பாற்றுகின்றது; இந்திரனால் நமக்கு என்ன பயனுண்டு, ஒன்றுமில்லை. ஆகையால் நீங்கள் இப்பூசனை யனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள்' என்ன, இடையர்கள் இதைக்கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான் தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை ஏவி, கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்குறும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது கண்ணன் கோவர்த்தன மலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையுங் காத்தருளினன் என்ற வரலாறு இங்கு உணர்க.

உதரபோஷணார்த்த தனமென்ற இதில் மற்றொரு பொருளும் தொனிக்கும்; அதாவது, நாநார்த்தமான ஶாஸ்த்ரத்திற்கு வாக்கும் அர்த்தமாதலால் வாக்கின் வ்ருத்தியையும் நிர்வஹிப்பது இந்த தனமென்கை. வயிற்றை வளர்க்கிற தனம் அது; வாக்கை வளர்க்கிற தனம் இது என்று ரஸோக்தி. [ஸாதனம்] ஐஹிகங்களான க்ஷுத்ர பதார்த்தங்களை மாத்திரம் வாங்குவதற்கே அது ஸாதனம்; ஆமுஷ்மிகங்களான சிறந்த ச்ரேயஸ்ஸுக்களுக்கும் இது ஸாதனம் என்றவாறு. ஶோபநாநி ஸாதநாநி யஸ்ய தத் என்று பஹுவ்ரீஹியாய் பக்திப்ரபத்திகள் முதலிய சிறந்த ஸாதனங்களை யுடையது என்றும் விவக்ஷிதம். அந்த தனத்தின் ஸாதனங்கள் [ஆர்ஜனோபாயங்கள்] ஹேயமென்று காட்டினபடி. [அபாயனம்] கொள்ளக் கொள்ளக் குறையும் அது; * கொள்ள மாளாவின்பவெள்ளம் இது; ஜ்ஞாதிதஸ்கராதிகளால் கொள்ளை கொள்ளப்படுகையாகிற அபாயங்களும் இதற்கில்லை. * ஜ்ஞாத்யாதி விஹார்யாஹார்யம் ஸர்வதாவிவசம்வதம் | அதஸ்கராபஹார்யஞ்ச வ்ருத்தியேயம் தனம் ஹி ந: || [ஸுஜனஸுரஸாரதனம்] அறிவுடையார்க்கும் அமரர்க்கும் பேரின்பம் பயக்குமென்றபடி. இப்படிப்பட்ட சீரிய பொருளாக ஸ்வாமி விவக்ஷிக்கும் தனம் இன்னதென்பது விளங்க விஶேஷ்ய நிர்தேஶமில்லாவிடினும் விசேஷணப் பொருத்தங்களாலே எம்பெருமானாகிற பரம்பொருளே அது என்பது வெளிப்படை .... .... ௫

# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

[பத்ராதிபர்]

### 288-வது பக்கத்தின் தொடர்ச்சி

கீழ்வாஸுதேவாதி வ்யூஹங்களைப் பற்றியும், அந்த வ்யூஹங்களிலிருந்து உத்பன்னர்களான கேஶவாதி பன்னிருதிருநாமங்களைப் பற்றியும் தெரிவித்துக்கொண்டேன்; இங்கு விபவாவதாரங்களைப் பற்றிச்சிறிது விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

விபவமென்பது அஜாயமானோபஹுதா விஜாயதே என்கிறபடி பிறப்பிலியான பரமபுருஷன் ஆஶ்ரிதாநுக்ரஹார்த்தம் தன்



னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை அநேகப்ரகாரமாக்கிக் கொண்டவதரித்தல் என்று அர்த்தமாகலாம். அவ்விபவமாவது இத்தனை யென்று கணக்கிட்டுச் சொல்ல வொண்ணாதபடி அஸங்க்யாதமாய் கௌணமென்றும் முக்யமென்றும் இரண்டுவகைப்பட்டிருக்கும். இதில் கௌணமென்பது அவ்வளவு ஶ்ரேஷ்டமானதன்று. முக்யமென்பது ஶ்ரேஷ்டமானது. ஸர்வேஶ்வரன் லோகரக்ஷணார்த்தமாக ஒருசேதனனை ஆவேஶித்துச் சில கார்யங்களை ஸ்வேச்சையாலே செய்யுமதை கௌணமென்று சொல்லுவார்கள். அதுவும் ஸ்வரூப ஆவேஶமென்றும் ஶக்த்யாவேஶமென்றும் இரண்டுபடிப்பட்டிருக்கும். ஸ்வரூப ஆவேஶமாவது தன்னுடைய ஶுபாஶ்ரயமான அஸாதாரண விக்ரஹத்தோடே ஆவேஶிக்கை. பரசுராமாவதாரத்தை ஸ்வரூப ஆவேஶ அவதாரமென்பர்கள். ஶக்த்யாவேஶமாவது உசிதகாலங்களில் சில சேதனர்களிடத்தில் தனது ஶக்திமாத்ரத்தாலே ஆவேஶித்து அக்கார்யம் முடிந்த பிறகு கடக்கநிற்கை.

இதுதான் ஸ்ருஷ்டிகாலத்தில் ப்ரஹ்மாவுக்குள் ஆவேஶித்து ஸ்ருஷ்டித்து அக்கார்யம் முடிந்தபிறகு அவனைவிட்டகன்று நிற்றல். இதுபோலே ருத்ரனை ஆவேஶித்து ஸம்ஹரித்தல். மற்றும் அக்நிமுதலான தேவர்களை ஆவேசித்து அவ்வோ காரியங்களைச் செய்தல். ஸ்ருஷ்டிக்குக் கடவனான ப்ரஹ்மாவும், ஸம்ஹாரத்தைப் பண்ணுகின்ற ஶங்கரனும், வேதங்களை விபாகித்து, பஞ்சமவேதமாகிய மஹாபாரதத்தைப் பண்ணிய வ்யாஸமஹருஷியும், வென்றிமா மழுவேந்தி மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்று அவ்வரசர்களின் ரக்தங்களால் பித்ருதர்ப்பணத்தைப் பண்ணிய பரசுராமனும், அகார்ய சிந்தாஸமகாலமேவ ப்ராதுர்ப்பவம் ஶ்சாபத(ய)ர: புரஸ்தாத் அகார்த்யத்தை அகத்தில் நினைக்க ஆரம்பிக்குமப்பொழுதே அவர்கள் முன்னே வில்லும் கையுமாய் ஆவிர்ப்பவித்து ரக்ஷித்துப்போந்த கார்த்தவீர்யார்ஜுநாதிகளும் பகவானுடைய ஆவேஶாவதாரமாயிருந்தாலும் அஹங்கார விஶிஷ்ட ஆத்மாக்களை கார்யார்த்தமாக ஆவேஶித்து அக்கார்யம் முடிந்தபின் தான் கடக்க நிற்கையால் அவ்வவதாரங்கள் முமுக்ஷுக்களுக்கு உபாஸிக்கத் தகுந்தவைகளாக ஆகமாட்டா.

முக்யாவதாரமாவது ஶுபாஶ்ரயமான தன்னுடைய அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தை அதற்கேற்பட்ட ஸ்வபாவவிஶே

க்ஷங்களொன்றையும் விடாமல் ஆதியஞ்சோதி யுருவையங்கு வைத்திங்குப் பிறந்து என்கிறபடியே தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவர ஸஜாதீயமாக்கி ஸகலமநுஜநயந விஷயமாக்குகை. அவ்வவதாரங்களாவன மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்கள்.

இவைகளில் மத்ஸ்யாவதாரமாவது சென்ற கல்பத்தின் கடைசியில் சதுர்முக ப்ரஹ்மா நித்ரைசெய்யும் காலத்தில் மூன்று லோகங்களும் ப்ரளய ஜலதியில் முழுகாநிற்க நித்ரைபண்ணிக்கொண்டிருக்கும் ப்ரஹ்மாவின் முகங்களில் நின்று வேதங்கள் ஆவிர்ப்பவித்தன. அப்போது ஸமீபத்தில் வர்த்தியாநின்ற ஹயக்ரீவன் என்று பெயரையுடைய அஸுரனொருவன் அவ்வேதங்களை அபஹரித்துக்கொண்டு அப்ரளயார்ணவத்தில் முழுகி மறைந்துவிட்டான். அத்தையறிந்த பரமகாருணிகனான பரமபுருஷன் அந்நீருக்குச் சளைக்காத மீனுருக்கொண்டு அம்மஹார்ணவத்தில் ப்ரவேஶித்து ஹயக்ரீவனென்கிற அவ்வஸுரனைக்கொன்று அவ்வேதங்களைக்கொணர்ந்து ப்ரஹ்மாவிற்குக் கொடுத்தான். இதுவே ஸர்வேஶ்வரனுடைய விபவாவதாரங்களில் முந்தினதாயிருக்கும்— இவ்விடத்தில் மதஸ்யாவதாரத்தைப் பற்றி ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ரீ ஶுகர் பரிக்ஷித்மஹாராஜாவிற்குச் சொன்ன ப்ரகாரத்தைச் சிறிது எழுதி அநுபவிக்க ப்ராப்தமாகிறது.

அதாவது நடந்த கல்பத்தில் ஸத்யவ்ரதன் என்கிற ராஜருஷி ஒருவன் இருந்தான். அவன் ஒருகால் க்ருதமாலா என்கிற நதியில் ஜலதர்ப்பணம் பண்ணாநிற்க, அவரது அஞ்சலி தீர்த்தத்தோடே மீன் ஒன்று கையில் வந்தது. ஜலத்தோடே கையில் வந்த அம்மீனை அம்மன்னன் அத்தீர்த்தத்தோடே நதியில் விட்டுவிட்டான். அவ்வாறு நதியில் விடப்பட்ட அம்மீனானது, பரம காருணிகனான அம்மன்னனை நோக்கி, ஓ தீனவத்ஸல! நான் இந்த நதியில் என்னுடைய ஜ்ஞாதிகளான மத்ஸ்யங்களின் உபத்ரவம் ஸஹிக்க முடியாமல் உன் கையில் அடைக்கலம் புகுந்தேன். நீ மறுபடியும் அந்த நதியிலேயே என்னை விட்டு விட்டாய். அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாகுமோ? என்று மிகவும் இரக்கமாய் வேண்டிக் கொண்டது. தன்னை அநுக்ரஹிப்பதற்காக பரமப்ரீதியுடன் பரமபதத்திலிருந்து பரமபுருடன் மீனுருவாய் வந்ததை யறியாத அம்மன்னன், ஆர்த்தியுடன் சொன்ன அம்மீனின் வார்த்தையைக் கேட்டு மிகவுமிரங்கித் தன்னுடைய தீர்த்த பாத்திரததின் ஜலத்தில் அம்மீனை ஆதரவுடன் எடுத்துவிட்டு தன் ஆஶ்ரமத்திற்குக் கொண்டு வந்தான். அன்றிரவே அம்மீன் அப்பாத்ரம் போதாதபடி அதிகமாக வ்ருத்தியடைந்து அவ்வரசனை நோக்கி அய்யா அரசனே! இத்தீர்த்த பாத்ரம் நானிருப்பதற்குப் போதாது. மிகவும் கஷ்டப் படுகிறேன். எவ்விடத்தில் நான் சுகமாக ஸஞ்சரிக்கமுடியுமோ? அவ்விடத்தில் என்னை கொண்டுபோய் விடவேண்டும் என்று வேண்டிக்கொண்டது. அப்போதே அம்மன்னன், அம்மீனை எடுத்துக்கொண்டு போய், அகன்றதொரு தடாகத்தில் விட்டான். ஜலத்தில் விட்டவுடன் அத்தடாகத்தளவு வ்ருத்தியடைந்து எனக்கு சுகமாக வசிக்க இத்தடாகமும் போதாது ஆகையால் பெரியதோர் ஜலாஶயத்தில் என்னைக் கொண்டு விட்டு விட வேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டது. உடனே அத் தடாகத்தளவு அகன்றிருக்கும் அம்மீனை எடுத்துக்கொண்டுபோய் ஸமுத்ரத்தில் விட்டான். அப்போது மீன் அவ்வரசனை நோக்கி ஓ மன்னனே! சிறிய மீன் பெரிய மீனுக்கு ஆஹாரமென்பதை யறியாயோ? இச்சமுத்திரத்திலிரா நின்ற பெரிய மீன்கள் என்னைத் தின்று விடுங்களே. இதில் என்னை விடுவது உசிதமா? என்று சொல்லிற்று.



இவ்வாறு சொல்லாநின்ற அம்மீனைப் பார்த்து ஸத்யவ்ரதன் உன்னைப்போன்ற பெரிய மத்ஸ்யத்தை நான் எங்கும் கண்டதில்லை இவ்வளவு பெரிய உன்னைத் தின்னும் படியான மத்ஸயம் எங்கேயும் கிடையாது. ஒரு தினத்தில் நூறு யோஜனை தூரம் வளர்ந்த நீ யார்? ப்ரஹ்ம ஶப்தவாச்யனான ஸ்ரீமந் நாராயணனே நீயாக வேண்டுமென்றும், நீ உலகைக் கடாக்ஷித்து வாழ்விக்க இம்மீனுருக் கொண்டிருக்கிறாய் என்றும் பலவாறு ஸ்தோத்திரம் பண்ணினான். அப்போது மீனுருக்கொண்ட பகவான் ஓ ஸத்யவரத இன்றைக்கு ஏழாவது நாள் யுகமுடிவு. அப்போது ப்ரளய முண்டாகப் போகிறது. அச் சமயம் ப்ரளய சமுத்ரத்தில் ஓர் ஓடம் தோன்றும். அதில் நீ ஸமஸ்தமான ஓஷதிகளோடும் ஸப்தருஷிகளோடும் ஸமஸ்தமான வித்துக்களோடும் கூட ஏறி யாதொரு வருத்தமுமின்றி ஏகார்ணவத்தில் ஸஞ்சரிக்கப்போகிறாய். அவ்வோடமானது பெருங்காற்றால் அங்குமிங்கும் அலைக்கப்பட, அப்போது ஸமீபத்திலிராநின்ற பெரிய ஸர்ப்பமாகிற வாஸுகியினால் அந்த ஓடத்தை என்னுடைய கொம்பில் கட்டிவிடு. நான் ப்ரஹ்மாவின் இரவு முடி

யும் வரை அப்ரளயத்தில் ஸஞ்சரிப்பேன். நான் பரப்ரஹ்ம ஶப்த வாச்யன். ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் நிரதிஶயமான பெருமையை யுடையவன். உன்னுடைய அழகான ப்ரஶ்நங்களால் இவ்வர்த்தத்தை உனக்கு அறிவித்தேன். நீ இதை யறிவாய் என்று சொல்லி பகவான் அந்தர்த்தாநமாய் விட்டார்.

அப்பால் ஸத்யவ்ரதன் தர்ப்பங்களை கிழக்கு நுனியாயிருக்கும்படி பரப்பி அதன்மேல் வடகிழக்குத் திசையை நோக்கி உட்கார்ந்துகொண்டு மதஸ்ய ரூபதாரியான பகவானுடைய பாதாரவிந்தத்தைப் பரிவுடன் த்யானம் செய்துகொண்டு பகவானால் சொல்லப்பட்ட அக்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ஏழாவது தினத்தில் மேகங்கள் ஊழிமுதல்வனுருவம்போல் கருத்து ஆகாஶத்திற் சிறிது மவகாஶமின்றிப் பரந்து மின்னலோடும் இடியோடும் கூடி அதிபயங்கரமாக இடைவிடாது வர்ஷிக்க, எங்கும் ஜலமயமாய் ஸமுத்ரமும் வேலையைக் கடந்து உலகம் முழுதும் வ்யாபித்து விட்டது. அப்போது பகவானை த்யானித்துக் கொண்டிருந்த ஸத்யவ்ரதன் முன்னே ஓர் ஓடம் தென்பட்டது. உடனே ஸத்யவ்ரதன் அவ்வோடத்தில் ஸமஸ்தமான வித்துக்களோடும் ஸப்தருஷிகளோடும் ஒஷதிகளோடும் ஏறிக்கொண்டான். அதைப்பார்த்த ருஷிகள் ஸத்யவ்ரதனைப்புகழ்ந்து ஓ அரச ஶ்ரேஷ்டனே! தன்னைத்துதிப்பார் க்லேஶத்தைப் போக்குமவனான கேஶவனை த்யாநம் செய்வாயாக. அவன் இப்போது ஏற்பட்டிருக்கும் ஸங்கடத்தில் நின்றும் நம்மைக் காப்பாற்றுவான் என்று சொல்ல, ஸத்யவ்ரதனும் அவ்வாறே த்யானிக்கப் பரமகாருணிகனான ஸர்வேஶ்வரன் அனேக யோஜனை தூரமுடைய ஸ்வர்ண மயமான திருமேனியையும் ஒற்றைக் கொம்பையுமுடைய ஓர் மீனுருவாய் அப்ரளயார்ணவத்திலாவிர்ப்பவித்தான். ஸமீபத்தில் நீண்டதோர் ஸர்ப்பமும் காணப்பட்டது. உடனே ஸத்யவ்ரதன் அவ்வோடத்தை மீனுருவாகிய பகவானுடைய கொம்பில் அந்தப்பெரிய ஸர்ப்பத்தைக் கயிறாக் கொண்டு கட்டிவிட்டுப் பரமானந்தபரிதனாய் பகவானைப் பலவாறு ஸ்தோத்ரம் பண்ணினார். அவ்வாறு ஸ்தோத்ரம் பண்ணா நின்ற ஸத்ய வ்ரதனைக்கடாக்ஷித்து மத்ஸ்ய பகவான் அப்ரளயார்ணவத்தில் ஸஞ்சரியாநின்று கொண்டு ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணமான ஆத்மதத்வத்தையும் அவ்வாத்மா



பகவானையடைவதற்கு ஸாதனமான பக்தியோகத்தையும் ப்ரதிபாதியா நின்ற மத்ஸ்ய புராணத்தை யருளிச்செய்தான். ஸத்யவ்ரதன் ஸப்தருஷிகளோடு கூட ஓடத்திலிருந்து கொண்டே மத்ஸ்ய பகவானால் சொல்லப்பட்ட அப்புராணத்தைக் கேட்டுப் பரமானந்த மடைந்தான்.

வேதங்களை அபஹரித்துச்சென்ற ஹயக்ரீவனைக்கொன்று அவ்வேதங்களை மீட்டு ப்ரளயம் போனவுடன் படுக்கையை விட்டு எழுந்திருந்த ப்ரஹ்மாவிற்குக் கொடுத்தான்.

இவ்வாறு ஜ்ஞாந விஜ்ஞாந ஸம்பன்னனாய் மீனுருவாகிய பகவானுடைய அநுக்ரஹத்தைப்பெற்ற அந்த ஸத்யவரதனே இந்தக் கல்பத்தில் வைவஸ்வத மநுவாயிருக்கிறான். இந்த ராஜருஷியான ஸத்யவ்ரதனுக்கும் மாயா மத்ஸ்ய ரூபியான பகவானுக்குமிடையே நடந்த இந்த வ்ருத்தாந்தத்தைச் சிந்திப்பார் இவ்வுலகில் அவர்கள் நினைத்த ஸமஸ்தமான ஐஶ்வர்யங்களையு மடைந்து ஶரீரவியோகாநந்தரம் “நசபுநராவர்த்ததே” என்கிற பரமபதத்தையடைந்து பகவானுக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டு பரமானந்த மடைவர்கள்.

## ஸ்ரீ. உ. வே. ஜகத்குரு அநந்தாசார்ய ஸ்வாமி விஷயமான செய்யுட்கள்

T. K. இராமானுஜன்
செந்தமிழ் உதவி பத்திராசிரியன்

### கோச்சகக் கலிப்பா

1. ஆரியமும் செந்தமிழும் ஆந்திரமும் முதலாய
சீரியபன் மொழிகளிலும் தேயமெலாம் நனிபுகழும்
மாரியென வுரைவழங்கும் வள்ளல் அநந்தாரியனார்
ஏரியல்செந் தாமரைத்தாள் எப்போதும் பணிகுவமே.

2. மன்னு புகழ்முடும்பை நம்பி வழித்தோன்றிக்
கன்னி முதலிமய மட்டும் கடல்வண்ணன்
றன்னடியார் வாழச் சமயப் பகைதடிந்து
மன்னுகதிர் ஞாலங் கடந்து மறைந்ததுவே.

3. தென்னாட்டுப் புலவர்திறம் தேயமெல்லாம் கொண்டாட
இந்நாட்டுப் பரசமய இகலழித்துத் திறைகொண்டார்
எந்நாட்டும் அதுபுரிய எண்ணி அநந்தாரியனார்
பொன்னாட்டுள் இஞ்ஞான்று புக்கனரோ புகல்வீரே.

4. உலககுரு என்றே உரைக்குமுறைக்கேற்ப
நிலமுழுதுந் தஞ்சீர் நிறுவினார் வானத்
தலமும் அடியிணைக்கீழ்த் தங்கப் புரந்து
நிலவுறச் செய்தற்கு நினைந்து பிரிந்தாரோ.

5. அண்ணல் மிகு காதி அநந்தாரியனார் தாம்
கண்ணன் கழல்கட்கு அனவரத கைங்கரியம்
பண்ணி மகிழ்தற்கிப் படிதகா தென்றெண்ணி
விண்ணுலகில் இன்னு விழைந்து புகுந்தனரோ.

6. ஆழ்வார்கள் செய்கலையும் ஆன்ற பழமறையும்
ஏழ்பாரும் உய்ய இசைக்கும் அநந்தாரியனார்
வாழ்வான வைகுந்த வானாடு புக்கனரேல்
தாழ்வாரை ஆளும் தகையார் இனியாரே?

7. வேதம் முதலான விழுநூல்கள் பற்பலவும்
கோதகல ஆய்ந்து குணம்பலவும் தந்துபதித்
தாதரவோ டெங்கட் கருளும் அநந்தாரியர்போல்
ஏதமறப் பன்னூல் தருவார் இனியாரே.

8. நித்தியமும் நைமித்திகமும் நெறிதவறாப்
பத்திமையோர் செய்யப் பரமனார் வீற்றிருக்கும்
உத்தமமாம் கோயில்பல ஊர்தோ றெடுப்பித்தற்கு
அத்தன் அநந்தாரியன்போல் வல்லார்கள் ஆரினியே.

9. சென்றவிட மெல்லாம் திருமால் பரத்துவமே
நன்று விரித்துவரும் நாவீறுடையபிரான்
இன்று திருநாடு புகுந்தாலும் எழுகதிர்போல்
துன்றும் ஒளியோ டுலகுதொழத் தோன்றுவரே.

## ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஜகத்குரு அனந்தாசார்ய ஸ்வாமிகளின் பிரிவு

---

[C. P. ராஜகோபாலன்]

"ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படுவார்"

என்பது மூதுரை.

ஊழி பெயரினும் தம் புகழ் குன்றாது வைகுந்தவானாடளவும் செல்லும் கீர்த்தியாய், மண்மிசைப் பிறந்த பயன் எய்தி, விண்ணுளார் செல்வம் வீறெய்த நம் ஜகத்குரு சுவாமிகள், சென்ற ஆடித் திங்களில் சாப்ரா என்னும் நகரில் வியோகமடைந்தார் என்பதை கேட்டுப் பரிதபிக்காத சஜ்ஜனங்கள் எவர். சென்ற நூற்றாண்டில். அன்னார் நம் இந்து மதத்திற்கும் ஸ்ரீ பகவத் ராமானுஜஸித்தாந்தத்திற்கும் சிறப்பாகச் செய்து வந்த அரியதொண்டு எம்போல்வரால் அளவிடற்பாலதோ. இருள் தருமாஞாலத்தில் கலிமிக்க காலத்தில் ஆழியானருளால், மாயாவாதிகள் செருக்கடங்கும்படிக்கும், எம்பெருமானார் தரிசனமே தழைத்தோங்கவும் தம்முடைய சரீரம் பொருள் ஆவி மூன்றையும் தனக்கென வாழா பிறர்க்குரியனவாக்கித் தம்வாழ்நாளைக் கழித்தார் என்று கூறுவது மிகையாது. மரவுரியுடுத்து மலைவன நெற்கொரித்து முதிர்வன சருகு வாயில் வந்தால் வன்பசி தவிர்த்து அனல் வெயில் மழையால் வருந்தி மூலவனலை சிரமளவு எழுப்பியும் நீரினிடைமூழ்கியும் தேகம் நமதல்லவென்று நிற்சுக வபேக்ஷையில் நிற்கும் அன்பரினும் துளக்கமில் நல்தவ முனிவர் கரைகண்டோர் யாவரினும் சீரிய பெருமை நம் ஸ்வாமியினுடையதாகும். திருமாலடியாரல்லாதவர் வீடில்லாதவரே என்று தெளிந்து அப்பெருமானையே, சதா சிந்தித்தும், அச்சிந்தனையின் பயனைக் கேட்டார்களை பிணிக்குந்தகையவாய் கேளாரும் வேட்ப மொழிகள் நவின்று, தனக்குள் அமைத்த தேவபிரானையே புறத்திலும் (பல கோயில்களில்) அமைத்து திவ்ய தேசங்களோறும் சஞ்சாரம் செய்து இரகஸ்ய கிரந்தகளின் ஸாரத்தை பல்லோர்க்கும் பயன்படும்படி இம்மையும் வீடும் பயக்கும்படி செய்யத் தெள்ளியார் திருநான்மறை வல்லவருள் பெரியோராவர்.

இவர் தம் குணங்களைப் பேசப்புகில் வாய் படைத்த பயன் பெறுவோம். அவை சொலப்புகில் வாயமுதம் பரக்கவேண்டும். சிறு மாமனிசர் என்பதற்கேற்ப மிகவும் க்ருசமான திருமேனியோடு தூய வெள்ளை தரித்து, காண்பார்க்கு எளியாராய், தம்மை அடைந்தோர்க்கு அருள் பொழியுமுகத்தராய் புறந்தூய்மை நீரான் அமைவதுபோல் அகந்தூய்மையும் வாய்மையார். கண்டவர் மனம் வழங்கும்படி கவரும் சக்தி வாய்ந்தவர். அரும் பெரிய வேதாந்த விளக்கின் தத்வங்கள் லேசில் எவர் மனதிலும் பதியும்படி எடுத்துச் சொல்லும் பேராற்றலுள்ளவர். வள்ளலென்னும் பெயர் இவர் மாட்டு வாயானவாய், பேசும் பேச்சில்லாமல் ஈந்துவக்கும் இன்பம் பெற்றவர். அன்னாரது அறுபதாவது அப்த பூர்த்தி விழாவில் செய்த தானதருமங்களும் பின்னர்ச் செய்த பெரிய தானங்களும் இன்னும் எவர் உள்ளத்திலும் பதிந்து கிடக்கின்றன. சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினாலும், ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தை வடநாட்டில் நிலைநாட்டிய பெருமை இவர் ஒருவருக்கே உரியது. தென்னாட்டில் இருப்பது இயல்பேயாகும். வடதேசத்தில் பல பாஷைகள் நிறைந்த இடத்தில் அப்பாஷைகளில் வல்லுநராகி சித்தாந்த ஸ்தாபனம்செய்து, பெரிய அரசர்களையும் ஜமீன்தார்களையும், மற்றும் பல்லோரையும் இச்சித்தாந்தத்தைத் தழுவும்படிசெய்யும் வன்மை எவ்வித ஆற்றலும் ஊக்கமும் வேண்டுமென்பதை அளித்தல் இவர் தம் பெருமையின் நற்கூறு அறிந்ததாகும். இவர் தாம் வேங்கடத் துறைவார்க்கு நமவென்பது போலல்லாமல் இந்தியாவின் தலைமை நகரமாகிய பம்பாயில் யாவரும் கண்டு வியக்கும்படியாய், விண்ணினின்று இழிந்ததோ! என்னலாம்படி மணிப் பெட்டகம்போன்ற அரவணைத்துயின்ற ஆழியானுக்கு ஆடகமாடம் அமைத்தது அப்பெருமான்பால் கொண்டுள்ள எல்லையில் பிரேமத்திற்கு ஓர் சாட்சியாகும். இதுவே இவரது ஞாபக சின்னமாக என்றும் விளங்கும். ஸ்ரீ ராமானுஜ சித்தாந்தம் பரவவேண்டுமென்னும் முழுநோக்கத்துடன் இத்தகைய நிலயம் ஒன்றை நிறுவியது, அர்ச்சாவதாரத்தில் பெருமையும், தேங்கின மடுக்கள் போலே என்றும் தாகித்தவர்க்கு பருகும் அமிர்தமாகும். இத்தூய வாழ்க்கையுடையார் பெருமை கூறப்புகின், அது “துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்திறந்தாரை எண்ணிக் கொண்டற்று” என்பதுவேயாகும்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ பாஷ்ய விஷய ப்ரம நிராஸ:

(முசர்ப்பாக்கம் அக்காரம் திருவேங்கடாசாரியர் எழுதியது)

ஸ்ரீராமானுஜஸித்தாந்தவைஜயந்தி திருவாடிப்பூர சஞ்சிகையில், பி. ஆர். ஆராவமுதய்யங்கார்ஸ்வாமி எழுதியதாக அடியில் கண்ட விஷயம் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாஷ்யத்தில் முதலிலும் முடிவிலும் இரண்டு பாடப்பிழைகள் ஸம்பதிதங்களாய் விட்டன என்று பிராமாணிக பண்டிதர்கள் கொண்டாடும்படியாக ஸ்ரீ அண்ணஸ்வாமி தத்வப்ரதிஷ்டையில் நிரூபித்திருக்கிறார். அதாவது “க்ஷேத்ரஜ்ஞாவஸ்தா ஷஷ்டீ ஸம்ஸ்ருத இதி ப்ரதிப்ரஸவ ஸம்ஹாரா:” என்ற விடத்தில்-ஸம்ஹாரா: என்கிற பாடம் சரியானதில்லை. ஸஞ்சாரா: என்கிறபாடம்தான் சரியானது என்றும் ஸ்ரீபாஷ்யத்தின் பழைய தாளகோசங்களைக் கொண்டும் வித்வான்கள் முன்னிலையில் சொந்தமான உபபாதநங்களைக் கொண்டும் நிரூபித்துக் காட்டினதாகவும் அந்த வித்வான்களும் ஒத்துக்கொண்டதாகவும், நிகமாந்ததேசிகன் தத்வடீகையில் ஸஞ்சாரா: என்ற பாடத்தையே ஆச்ரித்திருப்பதாகவும்; ஸ்ரீபாஷ்யத்தில் சரமஸூத்ர அவதாரிகையில் “யதி வ ...ஷயத்தும்”—“வா நராவ்ருத்தி ஸம்ஹாராஸக்ஞா இத்யுக்தாஸு.” என்ற விடத்தில். ஸம்ஹாவநாசங்கா என்றுமாறி தப்பாக வந்துவிட்டதாகவும் ஸம்பாவநையும் சங்கையும் பர்யாயமானதால் இது தப்புபாடம், ஸம்ஹவாசங்கா என்றேயிருக்க வேணும், என்றும் காட்டினதாகவும் வெளிவந்தது.

இந்த விஷயத்தில் அனைவரும் பிரமிக்காமல் தெளிவு பெறுவதற்காக நிரூபணம் பண்ணவேண்டியதாக வந்தது. “ப்ரதிப்ரஸவஸம்ஹாரா:” என்கிற விஷயத்தில் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகையின் உபபாதனத்தை நன்றாக யோசித்தால். ஸம்ஹாரா: என்றபாடமே ச்ருதப்ரகாசிகாசார்யருக்கு அபிமதம் என்று தோற்றுகிறது.

“ப்ரதிப்ரஸவோऽபவாதாபவாத: ஸவிஷயோபஜ்ஞாந நிவ்ருத்தி ப்ரயோஜனம் “ஜ்ஞாऽவிஷயஸ்ய கரணே” இதி ஸூத்ர விஹிதாயாம் ஷஷ்ட்யாம் ஸம்ஸக்திஷயஸ்ய ஸாவகா

ஶக்யம், ஸவிஶேஷா ப்ரவ்ருத்திரிதி ஹி தஸ்ய வாக்யஸ்யார்த்த: யத்யபி ஜ்ஞாநவதாம் ச்ரேஷ்ட:—ததாபி ஸவிஶேஷ இதி ஷஷ்டீ ந ப்ரத்யயாபிஹிதா; ஸவிஶேஷா ஜநித இதி த்ரிபத வ்யாஸஸமாஸ; யதோ விஶேஷஸ்ய ப்ரவ்ருத்தி தத்காரணாயத்தா; ந ஹி தத்பதம் ப்ரத்யயாபிஹிதஸ்ய விஶிஷ்டதி கதோ நாத்ர ப்ரத்யக்ஷப்ரவ்ருத்திரிதி நிஷேதஸ்ய அவகாஶ:" இந்த உபபாதநப்பிரகாரத்தால் ஸம்ஹவாஸ என்கிற பாடமே அங்கீகரித்ததாக ஏற்படுகிறது. எப்படியெனில் ஸஹூவாஸ என்றுபாடமானுல். ப்ரதிப்ரஸவம் இருப்பதால் என்று அர்த்தமாகும். இந்தவாக்யம் ஸிஷாந்த கௌமுதி ஸமாஸ விதிகள் படித்தவர்கள் எல்லாருக்கும் இருப்பதாக தெரிந்த விஷயம். அவர்களுக்கு இருப்பதினுல் என்று சொல்லவேண்டியதில்லை. இருந்தாலும் பிரகிருதஸ்தலத்தில் அந்த வாக்யம் ப்ரவர்த்திக்குமா; ப்ரவர்த்திக்காதா, என்கிற ஸந்தேஹத்தைப் போக்க ப்ரக்ருதஸ்தலத்தில் ஸம்பவிக்கும் என்று உபபாதநம் பண்ணுவதுதான் ப்ரயோஜந ஶேஷம். ஆகையால் சாஸ்திரத்தில் பிரதிப்ரஸவ மிருந்தாலும் பிரகிருதத்தில் ஸம்பவிக்கிறபடியால் என்று சொன்னுல் தான் உபபாதநம் பண்ணிக்காண்பிப்பது வ்யாக்யாதாக்களுக்கு பணியாக விருக்கும். ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் உபபாதநம் பண்ணிக்காண்பித்ததினுல் 'ஸம்ஹவாஸ' என்ற பாடமே அந்த வ்யாக்யாதாவுக்கு திருவுள்ளமாகத் தெரிகிறது. ஸஹூவாஸ என்றுல் ஶாஸ்திரத்தில் இருப்பதனுல் என்றர்த்தமாகும். அது வ்யாகரணஶாஸ்த்ரம் படித்தவர்களுக்குத் தெரியுமாதலால் அது சொல்லவேண்டிய விஷயமாக விராது. சில விடத்தில் சாஸ்திரத்திலிருப்பதால் என்று சொன்னுலும் அது பிரகிருதத்தில் ஸம்பவிக்கிறபடியால் என்று ஶேஷபூரணம் பண்ணியே தீரவேண்டி வரும். ஆகையால் ப்ரதிப்ரஸவ ஸம்ஹவாஸ. என்றபாடத்தில் ஶாஸ்திரத்தில் ஏற்பட்ட ப்ரதிப்ரஸவம் ப்ரக்ருதத்தில் ஸம்பவிக்கிறபடியால் என்றர்த்தமாகிறபடியால் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ப்ரக்ருதத்தில் ஸம்பவத்தை உபபாதநம் பண்ணிக் காண்பித்தபடியால் அவருக்கு ஸம்ஹவாஸ. என்ற பாடமே திருவுள்ளத்திலிருப்பதாகத் தோற்றுகிறது.



அவர் ஸஹூவாஸ என்றுவது ஸம்ஹவாஸ என்றுவது ப்ரதீகம் எடுக்காமலிருந்தாலும், உபபாதனப் பிரகாரத்தில் ஸம்ஹவாஸ என்ற பாடமே தத்ஸம்மத மென்னக்குறையில்லை, தாளகோஶங்கள் அனேகங்களில் அடியேன் ஸ்வாமி சன்னிதியில் காலக்ஷேபம் பண்ணினது முதல் பார்த்ததில் ஸம்ஹவாஸ என்ற பாடமே காண்கிறது. அச்சிட்ட கோசங்களிலும் அப்படியே காணப்படுகிறது. அதற்கு உபபாதநமும் பண்ணி அந்த பாடமே ஸாது என்று காண்பித்தாய் விட்டது. இனி ஏதாவதுகோஶத்தில் ஸஹூவாஸ என்ற பாடமிருந்தாலும் தஸ்ய ப்ரக்ருதே விஸம்ஹவாஸ என்று சேஷ பூரணம் பண்ணி அர்த்தம் நிர்வஹிக்க வேண்டியதாயிருப்பதால் அதைக் காட்டிலும் ஸம்ஹவாஸ என்ற பாடமே ஸாத்யவாதலால் இதுவே ஸர்வ ஸம்ப்ரதிபந்நம் என்று தெளியக்கடவது. தத்வடீகையில் கூட ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் இந்த பாடத்தையே ஆதரித்ததாகவே கொள்ளலாம். எங்ஙனே யென்னில் "ப்ரக்ருதே—ப்ரதிப்ரஸவோ(அ)பவாத நிராஸ: தஸ்ய ஸஹூவாஸ." என்றிருக்கிறது. இங்கு செய்யவேண்டிய உபபாதநம் முன்னமே செய்யப்பட்டிருக்கிறது. "கர்மணி ஷஷ்ட்யா இத்யநேந ஸமாஸ: ப்ரதிபதவிதாநஶேஷ ஸூத்ரோ பாஹ்ய இதி ஸம்ப்ரதே. 'ஜ்ஞா(அ)விதயஸ்ய' த்ருந்ஶிஷ்டாயாமேவ ஸமாஸப்ரவாத: கர்த்ருநாமஸ்ய ஜாநாதே: ப்ரக்ருதே ஶ்ருதி தத்ர காரணஷஷ்ட்ய(அ)நபேக்ஷ்ய: ஸவிஶேஷாஜாநீத இத்யுதாஹரணாஸ—என்றிருக்கிறது. முன்னிலிருக்கும் இந்த உபபாதநத்தால்—பின்னுல்—தஸ்யஸஹூவாஸ என்றிருந்தாலும், ப்ரதிப்ரஸவஸ்ய ஶாஸ்த்ர ஸஹூவாஸ தஸ்ய ப்ரக்ருதே ஸம்ஹவாஸ என்றும் சேஷபூரணம் பண்ணி அர்த்தம் கொள்ளத் தட்டில்லை. ஆகையால் தத்வடீகை பங்க்தியும் ஸஹூவாஸ என்ற பாடத்திற்கு ஸாதகமாகவாகாது. ஆதலால் ஸம்ஹவாஸ என்ற பாடமே ஸாத்ய; ஸஹூவாஸ என்றபாடம் ஶேஷபூரணம் பண்ணி அர்த்தம் கொள்ள வேண்டியதாயிருப்பதால் அஸாத்ய வென்றே தோற்றுகிறது.

இனி ப்ராந்தராவ்ருத்தி ஸம்ஹவாஶங்கா, ப்ராந்தராவ்ருத்தி ஸம்ஹவநாஶங்கா என்ற விரண்டு பாடங்களில் எதுஸாத்ய வெண்

ணுல், ப்ராசீந தாளகோசங்களிலும் அச்சிட்ட கோசங்களிலும் நிபந்தநிரூபகர்களின் க்ருஷ்ட ப்ராசீந பாடங்களிலும் ஸம்ஹவாசஜ்ஞா என்றே யிருப்பதால் இதுவே சரியான பாடம். அநிரூபகர்களின் அபத்த பாடங்களைக்கண்டு இதுதப்பு என்று சொல்லுவதா யிருந்தால் ஒவ்வோரிடங்களிலும் அளவில்லாமல் தப்புகளைக்காட்டி புஸ்தகங்களைப் பெருக்கலாம் ஆனால் அது நிரூபகர்களின் பணியாகாது. எது நிபந்த நிரூபகர்களின் பணியென்றால்? அதுகேட்க. ஸ்ரீபாஷ்யம், த்விதீயாத்யாயம் த்விதீயபாதம் ரசநாநுபபத்த்யதிகரணத்தில் "அந்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத்" என்கிற ஸூத்ர ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகைகளிலும் வேதாந்தஸாரதீபங்களிலும் அச்சிட்ட எல்லா கோசங்களிலும் தாள கோசங்கள் அநேகங்களிலும் அடியில் காண்பிக்கப்பட்ட ரீதியில் பாடங்கள் காண்கின்றன. "யதி ஹி த்ருணாதிகாதிநட்வாஹாத்யுபயுக்தம் ப்ரஹீணம் வா க்ஷீராகாரேண பரிணமதே" என்று ஸ்ரீபாஷ்யம் "அநட்வாஹாத்யுபயுக்தேதி"—என்று ச்ருதப்ரகாசிகையில் ஸ்ரீபாஷ்யப்ரதீகம் "அத்ர ஷஷ்ட்யா அநட்வாஹாத்யுபயுக்த ப்ரஹீண த்ருணதாத்யயோமபேக்ஷிதயா என்று ச்ருதப்ரகாசிகாஸூக்தி:.

"அநட்வாஹாதிஷ்வுபயுக்தாநாம் என்று வேதாந்த ஸார ஸ்ரீஸூக்தி: "அநட்வாஹாத்யுபயுக்தஸ்ய ப்ரஹீணஸ்யவா என்று தீபவாக்யம் இந்த ரீதியில் தெலுங்கு லிபியில் முதலில் அச்சிட்டப்பட்ட ஸ்ரீபாஷ்யம் அதின் வ்யாக்யாநங்களிலும் "அநட்வாஹாத்யுபயுக்தம் என்றே காணப்படுகிறது. இவ்விடத்தில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. "வஸ்ஸ்ரம்ஸுத்வம்ஸ்வநட்வாஹாம் த:" ||8-2-72|| என்கிற வ்யாகரண ஸூத்திரத்தால். "அநட்வாஹ்" என்கிற ஹகாராந்த ப்ராதிபதிகத்திற்கு பதாந்தத்தில் தகாரம் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதி. 'அநட்வாஹ்.' ப்ராதிபதிகத்திற்கு ஸமாஸத்திலும் ஸுபாதிப்ரத்யயங்கள் வந்து லோபித்து. ஸ்தாநிவத்பாவத்தால் "ஸுப்திங்ந்தம் பதம்" என்பதனால் பதஸம்ஜ்ஞை வந்து. தகாரம் வரவேண்டியதாயிற்று. அப்படியிருக்க "அநட்வாஹாத்யுப



யுக்தம்-என்று ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகாதீப ஸாரங்களில் ஸாதித்திருப்பன வ்யாகரணவிருத்த மாகவே ஏற்படுகிறது. இதைப் பற்றி அடியேனுக்கு ஆசார்யரான திருப்பதியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமான் திருமலை அனந்தாண் பிள்ளை. புரிசை ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமி வெகு நாளாக யோசித்து யோசித்து ஏற்படாமல் அடியேன் அந்த ஸ்வாமி சன்னிதியில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் பண்ணும் போதும் ப்ரஸக்தமாய் அதற்குத்தகுந்த பரிஹாரம் ஏற்படாமல் யோசிக்கிற காலத்தில் எம்பெருமான் கிருபையினால் ஒரு ஸ்ரீபாஷ்ய தாளகோசம் கிடைக்க அதுவும் ஒரு வித்வானால் முன்னூறு வருஷங்களுக்கு முன்னால் தப்பில்லாமல் எழுதப்பட்டதாயிருக்க அதில் ப்ரக்ருதஸ்தலத்தில் பார்க்க "அநட்வாதாத்யுபயுக்தம் என்றிருந்தபடியால் அடியேனுக்கு இந்த பாடமே சரியானதென்று அருளிச்செய்தார். சிலர் அநட்வாஹாத்யுபயுக்தம் என்கிற பாடம் தவிர வேறு பாடம் காணமையால் ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீ ஸூக்தியை நாம்வேறு விதமாகத் திருத்தக்கூடாதென்கிற பக்த்யதிசயத்தால் இந்த ஸந்தேஹத்தை யொருவிதமாக ஸமர்த்தநம் பண்ணி எழுதியுமிருக்கிறார்கள். அது அவ்வளவு த்ருப்திகரமாக வில்லாததால் ஸ்ரீ ஸ்வாமிக்குத்தகுந்த ஸ்ரீ கோசமும் கிடைத்தபடியால் ஸ்ரீஸ்வாமி திருத்தி யருளினர். இப்படி யோசித்துச் செய்யவேண்டிய விஷயங்களிருக்க யோசிக்காமலே ஸம்ஹவாச என்கிற பாடத்தை திருத்தி ஸஹாவாச என்ற பாடத்தை ஸாது வென்று சொல்லுவது அடியேனுக்குச் சரியாக தோற்றவில்லை.

---

**வைஜயந்தீ க்ராஹக மஹாசயர்கள் சன்னிதியில் ஓர் விண்ணப்பம்**

நமது வைஜயந்தீ, கார்த்திகையில் கார்த்திகை ஆரம்பித்து நாளது புரட்டாசித் திருவோணத்தோடு 11-ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. அடுத்த அற்பிசியில் திரு மூலத்தோடு 12-சஞ்சிகைகளும் வெளிவந்து அப்த பூர்த்தியாய் இரண்டாவது வருஷம் ஆரம்பமாகும். ஆதலின் இந்த வருஷத்துச் சந்தாத் துகை ரூ. 1-12-0 இதுவரை அனுப்பாமலிருக்குமவர்களுக்கு வி. பி. மூலம் ஸஞ்சிகை அனுப்பினால் ஷெ செலவு அதிகப்படுமாதலால் அடியேனிடத்தில் க்ருபை பண்ணி மணியார்டர் செய்தருள வேண்டுகிறேன்.

—பத்திராதிபர்.

# வர்த்தமானங்கள்

### பனஸவாடியில் கோயில் கொண்டிருக்கும்
### ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் தாது ௵ ப்ரஹ்மோத்ஸவம்,

1936௵ அக்டோபர் ௴ 15தேதி முதல் 25ம் தேதி வரையில் நடைபெரும். 16௳ த்வஜாரோஹணமும் 24௳ தீர்த்தவாரியும் நடைபெறும். ஒவ்வொறுநாளும் இரண்டு வேளையும் ஸ்வாமி புறப்பாடு வீதிகளில் நடக்கும். தென்னிந்தியாவிலிருந்து வேத பாராயணக்காரர்களும் திவ்யப்ரபந்தம் ஸேவிப்பவர்களும் வந்து பாராயணம் ஸ்வாமியின் முன்னும் பின்னும் நடத்துவார்கள். தென்னிந்தியாவிலிருந்து பாண்டு வாத்தியக்காரர்களும் நாதஸ்வரக்காரர்களும் வந்து உத்ஸவ காலத்தில் வாசிப்பார்கள். வாணவேடிக்கையும் நடக்கும். வட இந்தியாவில் இப்படிப்பட்ட உத்ஸவம் வேறு எங்கும் ஸேவிக்க முடியாது. பக்த ஜனங்கள் எல்லோரும் இஷ்ட மித்ரர்களோடு வந்து உத்ஸவத்தில் கலந்து கொண்டு ஆனந்திக்கக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

### உத்ஸவ விவரம்

அக்டோபர் ௴ 14௳ புதன்கிழமை ம்ருத்ஸங்க்ரஹணம், அங்குராரோபணம். 15௳ வியாழக்கிழமை ஸேனைமுதலியார் வீதிசோதநோத்ஸவம். 16௳ வெள்ளிக்கிழமை காலையில் துவஜாரோஹணம், வெள்ளிச்சப்பரம் பேரீதாடனம். ராத்திரி ஹம்ஸ் வாஹனத்தில் புறப்பாடு. 17௳ சனிக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி சேஷ வாஹனம். 18௳ ஞாயிற்றுக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி கருட வாஹனம். 19௳ திங்கட்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி அனுமந்தவாஹனம். 20௳ செவ்வாய்க்கிழமை காலை பல்லக்கு மோஹினிவேஷம், ராத்திரி ஸிம்மவாஹனம். 21௳ புதன்கிழமை காலை தோளுக்கினியான் சூர்ணாபிஷேகம். ராத்திரி யாளிவாஹனம். 22௳ வியாழக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி யானை வாஹனம். சௌபாடியில் வாணவேடிக்கை. 23௳ வெள்ளிக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி குதிரைவாஹனம். 24௳ சனிக்கிழவை காலை பல்லக்கில் சௌபாடிக்கு எழுந்தருளி, தீர்த்தம் ஸாதிப்பது, ராத்திரி ஆனந்த விமானம். 25௳ ஞாயிற்றுக்கிழமை காலை புஷ்ப யாகம், ராத்திரி புஷ்பல்லக்கு.



யிருக்குமவள். புருஷோத்தமரான பெருமாளுக்கு ஆந்ருஸம்ஸ்யாதி குணஷட்கம் போலே நாரீணாமுத்தமையான விவளுக்கும் ராமஸ்ய தயிதா பார்யா இத்யாதிப்படி குணஷட்க மிருந்தபடி ஸகல குணங்களு மிவைகளி லந்தர்ப்பூதமா யிருக்கும்.

இப்படி ஸௌந்தர்யாதிகளை யொழியவும் துவக்கவற்றாயிற்றுப் பருவ மிருப்பது என்கிறார் வது: என்று.

ஸீதாபி பரமபதச் செவ்வியோடே வந்து பிறந்த வதிசயம் சொல்லுகிறது. ஸீதாபி ராமம் அநுகதா இப்படிப்பட்ட வேற்றத்தை யுடையவளும். "யஸ்த்வயா ஸஹ ஸஸ்வர்க்கः நிரயோயஸ் த்வயாவிநா" என்று பிரிவாற்ற மாட்டாதே அகல கில்லேன் இறையுமென்று அபிராமராயிருக்கும் பெருமாளை அநுகமநம் பண்ணினளென்கை.

மன்னனிராமன்பின் வைதேவி என்றுரைக்கும் அன்ன நடைய வணங்கு நடந்திலளே என்றாரிறே திருமங்கையாழ்வாரும்.

ஶஶிநம் ரோஹிணீ யதா இவளநுகமநத்திற் கிதுவே திருஷ்டாந்தம்.

வரிஷ்டா ஸ்ர்வநாரீணாம் ஏஷாச திவிதேவதா—ரோஹிணீ ந விநா சந்த்ரம் முஹூர்த்தமபி த்ருஶ்யதே என்று இவள் தானும் சொன்னாள். தயா ஸசரிதம் தேவ்யா புரா நூநம் மஹத்தபः— ரோஹிணீவ ஶஶாங்கேந ராமஸம்யோகமாபயா என்று பௌரநாரிகளும் ரொஹிணியையே த்ருஷ்டாந்தமாக சொன்னார்களிறே!

ஸர்வ ஸீமந்திநீப்யஶ்ச வராமமங்யத அதிகம்மேநிரே விஷ்ணும் என்கிறபடியே ஸ்த்ரீகளெல்லாரிலுங் காட்டிலும் பிராட்டியை அதிகமாக வெண்ணினார்கள். அவ்வாறு எண்ணினார்களெவர்களென்னில்? தாநார்யः (ஸர்வப்ரகாரங்களாலும் நிரவத்யங்களான அவயவங்களை யுடையவர்களாய் தங்களுடைய ஸௌந்தர்யத்தையே பெருமையாக நினைக்கும் ஸ்வபாவத்தையுடையவர்களாய் அதற்கேற்ற பருவத்தையு முடைய) அந்த ஸ்த்ரீகள். அவ்வாறு அவர்கள் நினைப்பதற்கு ஹேதுவைச் சொல்லுகிறார் ராமஸ்ய ஹ்ருதயப்ரியாம் (தன்னுடைய ஸௌந்தர்யத்தாலனைவரையும் ஆநந்திப்பிக்கும் பெருமைவாய்ந்த பெருமாளுடைய திருவுள்ளத்தையும் ஆனந்திப்பிக்கும் அழகையுடையள்) என்று.

அவ்வாறு பெருமாள் ஆசைப்படுவதற்குக் காரணத்தை

கோடே வந்த படியைச் சொல்லா நின்ற ஸீதாம் என்கிற ஶப்தம். ஸீமந்திநீம் அல்லாத ஸ்த்ரீகளின் ஸீமந்தம்போலேயோ? இவளுடைய ஸீமந்த மிருப்பது. “மணிரத்ந மிதம் தத்தம் வைதேஹ்யாஃ ஶ்வஶுரேண மே—வதூ காலே யதா பத்தம் அதிகம் மூர்த்நி ஶோபதே | அயம் ஹி ஶோபதே தஸ்யாஃ ப்ரியாயாஃ மூர்த்நி மே மணிஃ—என்று பெருமாளும் கொண்டாடும்படி மணிரத்நஶோபித மாகையாலே இவள் ஸீமந்தம் ப்ரஶஸ்தமா யிருக்குமிறே.

அப்படிகளாலே பிராட்டி பெருமாளுக்கு மநஃ காந்தையா யிருந்தாள். உலகத்தில் ஸாமாந்ய ஸ்த்ரீகளுங்கூட தங்களைக்காட்டிலும் இதரஸ்த்ரீகளை குவால் (மேல்) ஆக எண்ணக் கண்டதில்லையிறே! ஸர்வா நவத்யாங்கிகளாய் ப்ரக்ருஷ்டர்களான அந்தப் பௌர நாரிகள் (பட்டணத்து ஸ்த்ரீகள்) பிராட்டியை எல்லாஸ்த்ரீகளைக் காட்டிலும் அதிகமாக வெண்ணினார்கள். ஸர்வ ஸீமந்திநீப்யஶ்ச என்றதால் தேவஸ்த்ரீகளைக் காட்டிலும் அதிகமாக வெண்ணினார்க ளென்கிறது.

அயோநிஜை (கர்ப்பவாஸம் பண்ணிப் பிறவாதவள்) ஆகையாலும் அஸிதேக்ஷணா என்கிறபடி கண்ணழகை யுடையவளாகையாலும் அப்ராக்ருதமான குடிலகுந்தலங்களாலே ஶோபிதமான ஸீமந்தத்தை யுடையவளாகையாலும் பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரியான பெருமாளுக்கும் மநஃ காந்தையாகையாலும் நாரீணாமுத்தமையாக வெண்ணினார்க ளென்னவுமாம். ஸர்வஸ்ய காத்ரஸ்ய ஶிரஃ ப்ரதாநம் என்கிறபடி அவயவங்க ளெல்லாவற்றிற்கும் ப்ரதாநமான ஶிரஸ்ஸிலிரா நின்ற ஸீமந்தத்தைச் சொன்னதால் இதராவயவங்களுடைய அவ்யாஜ ரமணீயத்வமும் அநவத்யத்வமும் (தோஷமில்லாத்தன்மையும்) குறிக்கொள்ளத்தக்கது. ஸீமந்திநீம் என்றது மைவண்ண நறுங்குஞ்சியையுடையவனும் பேணும்படியான குழலையும் குறிப்பிடாநிற்கும். இமாமஸிதகேஶாம் தாம் என்னக் கடவதிறே!

தருணீரூபஸம்பந்நா ஸர்வாபரணபூஷிதா-த்ருஷ்டா தத்ர மயா நாரீதயோர்மத்யேஸுமத்யமா | ராமஸ்யச விசாலாக்ஷி பூர்ணேந்து ஸத்ருஶாநநா-தர்மபத்நீப்ரியாபர்த்துஃ நித்யம் ப்ரியஹிதே ரதா |

ஸா ஸுகேஶீ ஸுநாஸோருஸ் ஸுரூபாச யஶஸ்விநீ—தேவதேவ வநஸ்யாஸ்ய ராஜதே ஶ்ரீரிவாபரா | தப்தகாஞ்சந வர்ணாபா ரக்ததுங்கநகீ ஶுபா-ஸீதாநாம வராரோஹா வைதேஹீ தநுமத்யமா | நைவ தேவீ நகந்தர்வீ நயக்ஷீ நச கிந்நரீ-நைவம் ரூபா மயா நாரீ த்ருஷ்ட பூர்வா மஹீதலே | என்றுளிறே ஶூர்ப நகையும்.



தருணீ அஷ்டாதஶவர்ஷையாயிருந்தாள். மம பர்த்தாமஹா தேஜாஃ வயஸா பஞ்சவிம்ஶகஃ—அஷ்டாதஶஹி வர்ஷாணி மம ஜந்மநி கண்யதே நசாஸ்ய மஹதீம் லக்ஷ்மீம் ராஜ்யநாஶோப கர்ஷதி (பெருமாளுடைய நிரதிஶயமான ஶோபையை ஸமுத்ரம் சூழ்ந்த அகண்ட மஹீமண்டல ஸாம்ராஜ்யத்தினிழவாலும் அபகர்ஷிக்க முடியவில்லை) என்றும், “அப்போ தலர்ந்த செந்தாமரையினை வென்றது” என்றும் சொல்லப்படுகிற, காடேறச் செல்லும்போதுண்டான பெருமாளுடைய திருமுக மண்டல ஶோபை முப்பத்தெட்டுவயதான காலத்திலும் பதின்மூன்று வயதாலுண்டான முதுமையைக் காட்டாதே, “வயஸா பஞ்ச விம்ஶகஃ” என்று முக்தனைப்போலே எப்போதும் இருபத்தைந்து வயதாயிருக்கும்படியை “மஹாதேஜாஃ” என்று சொன்னாப்போலே பிராட்டியும் பூகர்ப்பத்தில் சிலகால மிருந்தவதரித்தவளா யிருந்தாலும் எப்போதும் அஷ்டாதஶ (பதினெட்டு) வர்ஷங்களாகவே காணப்படுவளாகையாலே தருணீ என்கிறாள்.

ரூபஸம்பந்நா அழகெல்லாம் திரண்டு ஓரிடத்திலே சேர்ந்தாப்போ லிருக்கை. ஸர்வாபரணபூஷிதா பருவமும் அழகும் கூடி ஆபரணங்களை அலங்கரித்தபடி ஸர்வாபரணாநி பூஷிதாநி யயா என்று வ்யுத்பத்தியாகக்கடவது. வடிவும் ஆபரணமும் பரஸ்பரம் தாரகமா யிருந்தபடி. த்ருஷ்டா பருவமுமழகும் பல்கலனும் கூடின வடிவின்படியை ஆஶ்சர்யப்ரகாஷத்துடன் பார்க்கப்பட்டபடி. த்ருஶிர்ப்ரேக்ஷணே யிறே! தாது. ஈக்ஷணப்ரகர்ஷமுண்டாம் போது ஆஶ்சர்யப்ரகர்ஷ முண்டாகத்தட்டில்லையிறே! தத்ர ஓரிடத்திலும் காணமுடியாத வஸ்துவை அக்காட்டில் கண்டேன் காண் என்கிறாள். மயா காமரூபிணியான வெனக்கும் அவளுடைய தர்ஶநம் ஆச்சர்யமாயிருந்தது என்கிறாள். நாரீ இவ்விசேஷங்களால் அவளே ஸ்த்ரீகளில் உத்தமை யென்றபடி. இப்படி யொருவ்யக்தியைக்கண்டேன் என்றாள். அக்காட்டில் அவள் தனியே நின்றாளோ? என்னில். தயோர்மத்யே ஒருவன் தனிநாயகனாய் மற்றவன் அவனுக்கு ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந்து அடிமை செய்யுமவனாயிருக்கு மவ்விருவர்களின்

நடுவே யிருக்கக்கண்டேன். இதை இவளிருந்தபடி எவ்வாறென்னில்? "கதம்தாஸஸ்ய மே தாவீ என்றாரிறே இளையபெருமாளும். ஸுமத்யமா மின்னினுண்ணிடை மடக்கொடி என்றபடி. ஸுமத்யமா சேவிக்கும் சேஷபூதனுக்கும் நடுவே யிருக்கு மவளை ஸுமத்யமா என்னத்தட்டுண்டோ? நல்லவாந்தராளிகை என்னவுமாம். ராமஸ்யது விஶாலாக்ஷீ உத்தரார்த்தத்தில் அதிஶயாந்தரங்களைச் சொல்லுகிறது "யதாகப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ" என்று ப்ரஸித்தமான திருக்கண்களையுடைய பெருமாளுக்கு மாகர்ஷகமாய்க் காணிருப்பது அவள் தடங்கண்கள் என்கிறாள். பூர்ணேந்து ஸத்ருஶாநநா அக்கண்களான இந்தீவரங்களை விகஸிப்பியா நின்றுகொண்டு அருகே ஒரு பூர்ணசந்த்ரனிருக்கு மாப்போலேகாண் அவள்முகமிருப்பது "திவளும் வெண்மதிபோல் திருமுகம்" "குவளையங்கண்ணி" என்றாரிறே ஆழ்வாரும்.

தர்மபத்நீ பார்யையாகையாலும் தேகஸௌந்தர்யங்களாலும் "ப்ரியாநித்யம் பர்த்து: ப்ரியஹிதே ரதா" என்று சொல்லப்படுகிற ஆத்மகுணங்களாலும் அபிமதையாயிருந்தாலும் "ப்ரியாது ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி" ஐயர் பண்ணிவைத்த விவாஹமென்று பெருமாள் பிராட்டியினிடம் ப்ரீதியை யுடையவராயிருப்பர். இதனால் உலகத்தில் ஸாமான்யர்கள் அழகைக்கொண்டு ஸ்த்ரீகளை விரும்புமாப்போலேயன்று பெருமாள் பிராட்டியை விரும்புவது என்றதாயிற்று. ஸா ஸுகேஶீ அப்ராக்ருதங்களான கேஶங்களையுடையவள். ஸா ஸுகேஶீ மைவண்ண நறுங்குஞ்சியையுடையவனும் பேணும்படியன்றோ அவள் கேஶமிருப்பது. ஸுநாஸோரு: ச (ம) ஜநாஸோரு:-என்று பெருமாளும் கொண்டாடும் படியானவள். நல்ல நாஸோருக் (மூக்கு துடை)களை யுடையவள். என்னுடைய மூக்கை அறுத்துப்போக விடும்படியிறே! அவளுடைய மூக்கு இருப்பது. "ஸர்வகந்த: என்கிற ஸர்வகந்தனுடைய ஸர்வாங்க பரிமளத்தையும் அவனும் விரும்பும்படியான தன்னுடைய முகாரவிந்த ஸௌரப்யத்தையும் ஆக்ராணிக்கும் பெருமையுடையதன்றோ அவள் நாஸிகை. "பர்யாயேண 'ப்ரஸுப்தஶ்ச மமாங்கே பரதாக்ரஜ:" என்று பெருமாளுக்கு உபதாநமா (தலையணையா)ய்த் தானும் கொண்டாடும்படியன்றோ! அவள் துடை யிருப்பது ஸுநாஸோரு: ஒருபமை சொல்லவொண்ணாதபடி அதி விலக்ஷணங்களான திருமூக்கையும் திருத்



தொடைகளையுமுடையவளாயிருக்கை. ஸுரூபா நல்ல ஆகாரத்தை யுடையவள் ஸுரூபா அநந்யகதித்வாதி ஆகார த்ரயங்களையுடையவளென்னுமாம். யஶஸ்விநீ அவ் வாகாரத்ரயஸம்பத்தை யுடைத்தாயிருக்கையாலுண்டான யஶஸ்ஸை யுடையவள். தேவதேவ வநஸ்யாஸ்ய இப்படி ஸர்வப்ரகாரங்களாலும் அவள் மனுஷ்யஜாதியன்று இவ்வநதேவதையே என்று சொல்லலாம் படியிரா நின்றாள். "அன்னநடைய வணங்கு" என்றாரிறே ஆழ்வாரும். உத்தரார்த்தத்தில் அபூர்த்தியாலே கிம் பஹுநா! ராஜதே ஸ்ரீரிவாபரா (மற்றொரு லக்ஷ்மிபோலே ப்ரகாஶியா நின்றா ளென்கிறாள்.

தேவதாபிஸ் ஸமாரூபே ஸீதா ஸ்ரீரிவ ரூபிணீ என்றார் வால்மிகி பகவானும். மேலே பெரிய பிராட்டியாரென்றே சொல்லுகிறாள். தப்தகாஞ்சநவர்ணாபா ஹிரண்ய வர்ணா என்கிற ஶ்ருதி ப்ரஸித்தமான லக்ஷணத்தைச் சொல்லுகிறாள். ரக்ததுங்கநகீ ஆதாம்ர கரதலாங்குளிகளை யுடையவனுக் கனுரூபையாயிருந்தபடி. புஜலதைக ளிரண்டும் கொழுந்துவிட்டுக்கொண் டிருக்குமாப்போலே யிருக்கை. ஶுபா ஸ்வரூப ரூபகுணாதிகளுடைய கல்யாண ராஶியா யிருந்தபடி. ஸீதாநாம பிறவாமையாலே வந்த அதிஶயத்தைச் சொல்லுகிறது. பன்னிரண்டுமாதங்கள் கர்ப்பவாஸம் பண்ணிப் பிறந்த பெருமாளைக் காட்டிலு மிவளுக்குண்டான பெருமையைச் சொல்லுகிறது. வராரோஹா உத்தமஸ்த்ரீயிறே:—அநந்தங்களான அதிஶயங்க ளெல்லாவற்றையும் சொன்னபடி. வைதேஹீ இத்தனை யதிஶயமும் கர்மணைவஹி ஸம் ஸித்திமாஸ்திதா ஜநகாதய: என்கிறபடி ஜ்ஞாநாதிகனாய் விதேஹவம்ஶத்திலுத்பன்ன ஸ்ரீ ஜநகராஜனபிமாநாந்தர்ப்பூதையாகையாலே என்றதாயிற்று. தநுமத்யமா (ஸூக்ஷ்மமான இடையையுடையவள்) ஸுமத்யமா என்று அடியிலே சொல்லி யிருக்கச் செய்தேயும், மறுபடியும் தநுமத்யமா என்றது தான் துவக்குண்டது இடையிலே யாகையாலே மறுபடியும் விஶேஷித்துச் சொல்லுகிறாள். இப்பேர்ப்பட்ட ரூபத்தையுடைய வ்யக்தியை தேவஜாதிகளிற் கண்டதுண்டோ? என்ன நதேவீ தேவஜாதியில் கண்டதில்லை. நகந்தர்வீ. கந்தர்வஜாதியிலும் காணப்படவில்லை. நயக்ஷீ யக்ஷஜாதியிலும் கண்டதில்லை, நச கின்னரீ கின்னரஜாதியிலும் கண்டதில்லை. நைவம் ரூபாமயா நாரீ த்ருஷ்ட பூர்வா மஹீதலே இப்பேர்ப்பட்ட ரூபத்தையுடைய ஸ்த்ரீ, பூமியிலேயும் இதற்குமுன் காணப்படவில்லை என்றாள் ஶூர்ப்பணகையும்.

வெளஒெராநுமதொஷரம் விதா ஷஸரமெ நவ

பௌரை ரநுகதோ தூரம் பித்ரா தஸரதேந ச

பௌரை: தூரம் அநுகத: பட்டணத்து ஜனங்களால் தூரம் பின் சொல்லப்பட்டான். இதனால் பட்டணத்து ஜனங்களுக்கும் ஸீதாலக்ஷ்மணர்களைப்போலே பரமபக்தியுண்டென்று மிடம் சொல்லப்பட்டது. "புநர் விஸ்லேஷபீருத்வம் பரமாபக்திருச்யதே மறுபடி பிரிவதினாலேற்படும் பயத்தையன்றோ பரமபக்தியென்று சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட பக்தியுண்டாவதற்கு அத்தேஸவாசமே என்பது, பௌரை: என்ற பதத்தாலே சொல்லப்பட்டது. பித்ரா தஸரதேந ச பிதாவான தஸரதனாலேயும் சிறிது பின் செல்லப்பட்டான். என்பது அர்த்தமாகிறது. "யாவத்து நிர்யதஸ்தஸ்ய ரஜோரூப மத்ருஸ்யத-நைவேக்ஷ்வாகுவரஸ்தாவத் ஸம் ஜஹாராத்ம சக்ஷுஷீ |. செல்லாநின்ற ராமனுடைய ஸம்பந்தத்தையுடைய தூளியின் ஸ்வரூபம் எவ்வளவு வரை காணப்பட்டதோ அவ்வளவுவரை தன்னுடைய கண்களைத் திருப்பவில்லை என்றதால் தஸரதனுடைய கண்களே ராமனைப் பின்சென்றன என்று சொல்வதால் அல்பம் அநுகத:—என்று சொல்லப்படுகிறது. தஸரதனும் ராமம்மே அநுகதாத்ருஷ்டி: என்னுடைய கண் ராமனைப்பின்சென்றது என்றானிறே! பித்ரா என்றதால் புத்ர க்ருதவாத்ஸல்யத்தால் பின் சென்றான் என்று சொல்லப்பட்டது.

இவ்வாறு பெருமாளுடைய பரத்வஸௌலப்யங்கள் சொல்லப்பட்டன. இனி வாத்ஸல்ய ஸௌஸீல்யங்களைத் தெரிவிக்கிறார்—ஸ்ருங்கிபேரபுரே என்று.

19 ஸ்ருங்கிவெரவுரெ ஸூதம் மஙா கூலெவ்யஸஜயக|
ஞஹமாஸாத் யமாத்மா நிஷாஷாயிவதிம் விரயம் ||

ஸ்ருங்கிபேரபுரே ஸூதம் கங்காகூலே வ்யஸர்ஜயத் |
குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம் ||

தர்மாத்மா தர்மங்களாவன ஆஸ்ரிதர்களிடமுள்ள வாத்ஸல்ய ஸௌஸீல்யங்கள். ஆத்மா ஸ்வபாவ:. இதனால் ஆஸ்ரிதவாத்ஸல்ய ஸௌஸீல்யங்களை ஸ்வபாவமாக உடைய பெருமாள் ஸ்ருங்கிண: மான் முதலான ம்ருகங்கள். பே(வெ)ராணி க்ருத்ரிம ஸரீரங்கள். மான்முதலான ம்ருகங்களின் ...



போலே பண்ணப்பட்ட ஸரீரங்கள், வஞ்சனையால் அவைகள் போன்ற ம்ருகங்களைப் பிடிப்பதற்காக அவ்வூரில் வைக்கப்பட்டிருப்பதால் அவ்வூருச்கு ஸ்ருங்கி பேரபுரம் என்று சொல்லப்படுகிறது. அவ்வூரில் கங்கா கூலே (அவ்வூருக்கு ஸமீபத்திலிரானின்ற) கங்கைக் கரையில். இதனால் அவ்விடம் கங்கைக் கரையிலுள்ளமை மாத்ரங் கொண்டு உத்தேஸ்யமானதன்று பின்னை யாதுகாரணம் பற்றியெனில்? பக்தனான குஹன்வசிக்கும் பாக்யம் பெற்ற ஸ்ருங்கிபேரபுர ஸமீபத்திலிரா நின்றதால் அக்கங்கைக் கரை உத்தேஸ்யமென்னுமிடம் காட்டப்பட்டது. நிஷா (ஷாயி) தாதிபதிம். வேடர்களுக்கரசனை. இதனால் ஜாதியினாலேற்பட்ட தாழ்மை சொல்லப்பட்டது. ப்ரியம் தன்னிடத்தில் ப்ரீதியையுடையவனை கு(ஹ)ஹம் இதரர்களுடைய ஸொத்தை வஞ்சிப்பவனாதால் கு(ஹ)ஹன் என்று சொல்லப்படுவானை. வ்ருத்தியினாலும் குணத்தாலுமுண்டான சிறுமை சொல்லப்பட்டது. இவ்வாறு ஜாதியினாலும் வ்ருத்தியினாலும் குணத்தாலும் தாழ்ந்தவனாயிருந்தாலும் தன்னிடத்தில் அவனுக்குண்டான ஆநுகூல்ய மாத்திரத்தால் ஆதரணீயனானமை சொல்லப்பட்டது. ஆஸாத்ய (ஷ்ய) அடைந்து. இதனால் ஸௌஸீல்யம் சொல்லப்பட்டது. ஸௌஸீல்யமாவது. உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு புரையறக்கலக்கை. தர்மாத்மா என்றதால் பெருமாளின் பெருமை சொல்லப் பட்டது. நிஷாதாதி (ஷாயி) பதிம் கு(ஹ)ஹம் என்றதால் (ஹ)ஹப் பெருமாளின் சிறுமை சொல்லப்பட்டது. ஆஸாத்ய (ஷ்ய) என்றதால் புரையறக்கலந்தமை கூறப்பட்டது. ஸ்ருங்கிபே (ஙிவெ) ரபுரே கு(ஹ)ஹமா ஸாஷ்ய என்றதால்தோஷபோக்ய (ஷொஷ-ஹொஷ்ய) த்வரூப வாத்ஸல்யம் சொல்லப்பட்டது. ஸூதம் ஸுமந்த்ரனை வ்யஸர்ஜயத் (பரம்பரையாக அநுவர்த்தியா நின்றவனையும்) விட்டான். இதனால் அப்போ தீன்ற கன்றின் கண்ணுண்டான வாத்ஸல்யாதிஸயத்தால் முன்னீன்ற கன்றைக் கைவிடும் பசுவைப்போல் பெருமாளுக்குக் குஹ பெருமாளிட முண்டான வாத்ஸல்யத்தின் பெருமை கூறப் பட்டது. நிஷாஷாயிபதிம் குஹம் ஆஸாத்ய (ஷ்ய) த(ய)ர்மாத்மா (அபூ(ஹூ)த்) நீசர்க்குத் தலைவனான ஸ்ரீகுஹப்பெருமானை யடைந்தபின் ஸீலமே தனக்கு ஸ்வரூப நிரூபகமாம்படியானார். இவ்விடத்தில் தர்மஸப்தமானது ஸீலபரமாகக் கடவது.

20. 𑌗𑍁𑌹𑍇𑌨 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌰𑌾𑌮𑌃 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 𑌚 𑌸𑍀𑌤𑌯𑌾

குஹேந ஸஹிதோராம: லக்ஷ்மணே ச ஸீதயா

ஸ்ரீராமன், ஸ்ரீ குஹப்பெருமாளோடு கூடின பின்பு இளைய பெருமாளோடும் பிராட்டியோடும் கூடினவனாக ஆனான். பரம பக்தனான குஹப்பெருமாளோடு கூடாத காலத்து இளைய பெருமாளோடும் யிராட்டியோடும் கூடியிருந்தாலும் அவர்களுடன் கூடியிருந்ததாகப் பெருமாள் திருவுள்ளம் பற்றவில்லை என்பது இதனால் அறியலாயிற்று.

அன்றிக்கே ஸ்ரீ குஹப்பெருமாளோடு கூடினது, இளைய பெருமாளோடும் பிராட்டியோடும் கூடினாப்போலே என்றும் அர்த்தமாகலாம்.

அங்ஙனுமன்றிக்கே 𑌸𑌃 𑌰𑌾𑌮𑌃 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌚 𑌸𑌹 𑌗𑍁𑌹𑍇𑌨 𑌹𑌿𑌤𑌃 அந்த ராமன் இளைய பெருமாளோடும் பிராட்டியோடும் கூட ஸ்ரீகுஹப்பெருமாளாலே (கங்கையை) தாண்டுவிக்கப்பட்டான். என்றும் சொல்லுவார்கள். "பத்தியுடைக்குஹன்" என்றும் "ராமஸ்ய ஆத்மஸகா(வா)" என்றும் கொண்டாடப் பெற்றவரிறே ஸ்ரீ குஹப்பெருமாள். 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌹𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌚𑌾𑌪𑌬𑌾𑌣𑌧𑍃𑌕𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌭𑌵𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌸 𑌯𑌤𑍍𑌰 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 ததஸ்த்வஹம் சோத்தமசாப் பாணத்ருத் ஸ்திதோபவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண: (அப்பால் நான் உத்தமமான வில்லையும் பாணங்களையும் தரித்துக்கொண்டு நின்றிருந்தேன். இளையபெருமாளிருக்தவிடத்தில்) என்று இளையபெருமாளையும் கூட அசிர்க்கும் (ஸந்தேஹிக்கும்)படியன்றோ! ஸ்ரீ குஹப்பெருமாளின் ப்ரேமவிஶேஷமிருப்பது.

ப்ரியம் குஹம் ஆஸாத்ய ஸீதயா லக்ஷ்மணேந ஸஹித: என்றதால் ஸ்ரீ குஹப்பெருமாளோடு கூடின பின்பே இளையபெருமாளோடும் பிராட்டியோடும் கூடியிருப்பது, தேனும் பாலும் கன்னலும் போலே ஸர்வரஸரான பெருமாளுக்கு அத்யந்த ரஸாவஹமான படி இதனால் குஹப்பெருமாளிடம்பெருமாளுக்குள்ள ப்ரேமாதிஶயம் சொல்லப்பட்டது.

𑌤𑍇 𑌵𑌨𑍇𑌨 𑌵𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌨𑌦𑍀𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌬𑌹𑍂𑌦𑌕𑌾𑌃

21 𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑍂𑌟𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍

𑌰𑌮𑍍𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌰𑌮𑌮𑌾𑌣𑌾

## நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்தி களில் பொதிந்துள்ள. அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்கார ணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷ யங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ர சுரிக்கப்படும்.
5. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
7. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள
8. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸூகதுக்காநுபவங் களை யுடையவர்கள் ( Sympathizers ) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவ னாகக் கடவேன்.
9. (25) இருபத்தைந்து ரூபாய் கொடுக்கு மவர்களை ஜீவியச் சந்தா தாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பண மன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.
10. பத்திரிகையின் வருஷசந்தா

| | | | | |
|---|---|---|---|---|
| வெளியூர் | ... | 1 | 12 | 0 |
| உள்ளூர் | ... | 1 | 8 | 0 |
| தனிப்ரதி | ... | 0 | 3 | 0 |

ஷை ரூபாயை அனுப்பி சரியான விலாசத்தைத்தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

## விளம்பரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ராப்பர் முழுப்பக்கம் | ஒரு தடவைக்கு | ... | 5 | 0 | 0 |
| ,, அரைப்பக்கம் | ,, | ... | 3 | 0 | 0 |
| ,, கால்பக்கம் | ,, | .... | 2 | 0 | 0 |

Registered No. M. 3401


## விளம்பரம்

1. தங்கம், செம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச் சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1 - க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம் பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசு வளையல்களுக்கும் கேட்லாக்கு உண்டு. அதை வாங்கி நெம்பரைக் குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்துகொடுக்கப்படும்.

**பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,**

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## ப்ராணஸுத

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் என் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப்போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏர்ப்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனாம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்**

107, பிராட்வே, சென்னை


Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St.
and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St. Madras.

ஸ்ரீ:



# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ




ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

| ஸம்புடம் 1 | தாது௵ ஐப்பசியில் திருமூலம் | சஞ்சிகை 12 |
|---|---|---|



பத்ராதிபர் :

வடகரை இராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.


1936 அக்டோபர்]

[தனிப்ரதி விலை 0-3-0

விஷயங்கள். பக்கம்

1. ஐப்பசியில் திருமூலம் .... 281
—பத்ராதிபர்

2. ப்ரபந்நர் யார் .... 295
—திருமலை நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி, ஆழ்வார் திருநகரி

3. ஸ்ரீ பாஷ்யபாட பரிஷ்கரணம் .... 301
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்

4. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ .... .... 309
—சேனூர் - ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாச்சாரியார் அட்வகேட், திருவல்லிக்கேணி
—ஸ்ரீ. உ. வே. R. கேசவய்யங்கார், அட்வகேட் திருவல்லிக்கேணி

5. ஸ்ரீ முதலியாண்டான் வைபவஸங்க்ரஹம் ....
—அகரம் கஸ்தூரி கிருஷ்ணமாசாரியரர்


---

## வர்த்தமானம்

**திருமங்கையாழ்வார் ப்ரஹ்மோத்ஸவம்:**—இவ் வாழ்வாரு[illegible] திவ்ய தேசங்களெங்கும் உத்ஸவம் நடைபெறு மாயினும் இவரது அவதார ஸ்தலமாகிய திருவாலி திருநகரியில் நடைபெறும் உத்ஸவம் மிகவும் சிறப்புடையதாய் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அத்யந்தம் ஆதரவுடன் ஸேவிக்க வுரியதாதலின் அங்கு நடைபெறும் உத்ஸவத்தின் ப்ரகாரம் இங்கு தெரிவிக்கப்படுகிறது.

19-11-36 கார்த்திகை 4உ அங்குரார்ப்பணம் ஆரம்பித்து 20-11-36-ல் த்வஜாரோஹணம் தொடங்கி 27-11-36-ல் சாத்து முறை ஆய்; த்வஜாரோஹணம் நடைபெறும். 27-11-36-ல் ஆடல்மா என்னும் குதிரை நம்பிரானில் எழுந்தருளும் ஸேவை கண்ணாரக்கண்டநுபவிக்கவேண்டியது. 29-11-36-ல் ஸாயங்காலம், திருமஞ்சனம், த்வாதசாராதநம் நடைபெறும். உத்ஸவத்திற் கெழுந்தருளும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு விசேஷமாய்த் ததீயாராதனம் நடைபெறும்.

இவ்வாழ்வார் வைபவம் கார்த்திகையிற் கார்த்திகை வெளி வரும் பத்திரிகையில் யதோசிதம் ப்ரசுரிக்கப்படும்.

பத்திராதிபர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஓர் வேண்டுகோள்

---

நமது வைஜயந்தீ பத்ரிகை சென்ற கார்த்திகையிற் கார்த்திகையில் ஆரம்பித்து இந்த ஐப்பசியில் திருமூலப் பத்ரிகையோடு (12 பகுதிகள்) 1-வது தொகுதி முடிவுபெற்று மறுபடியும் வருகிற கார்த்திகையிற் கார்த்திகை நாளில் 2-வது தொகுதியின் 1-வது பகுதி வெளிவரப் போகின்றது. ஆதலின் இதுவரை 1-வது தொகுதிக்குப் பணம் அனுப்பாம லிருக்குமவர்கள் 1-வது தொகுதிக்கும் 2-வது தொகுதிக்கும் சேர்த்து ரூ 3-8-0-ம் 1-வது தொகுதிக்கு முன்னதாகவே பணம் அனுப்பி யிருக்கும் மஹாநுபாவர்கள் 2-வது தொகுதிக்கு ரூ. 1-12-0-ம் தயவுசெய்து மணியார்டர் மூலம் அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறேன். இது தவிர முன் சஞ்சிகைகளில் கண்ட நிபந்தனையில் 6, 7, 8, 9-அயிட்டங்களில் கண்டபடி ஏதாவது உதவுவது பெருநல்லுதவியாகும்.

1-வது தொகுதியின் விஷய ஸூசிகை, கார்த்திகையிற் கார்த்திகைப் பத்திரிகையுடன் அனுப்பப்படும். அது வந்ததும் 1-வது தொகுதியை பயிண்டு செய்து கொள்ளலாம்.

பத்திராதிபர்.

## ஓர் விண்ணப்பம்

வர்ணாஸ்ரம தர்மங்கள் அடியோடு கேடுகெட்டு, அந்தணர்களும் கூட தங்கள் ஆஹ்நிகங்களை மறந்து, பிரளயம் மிகவும் சமீபத்திலேயே ஏற்பட்டு விடுமோ ? என்று பயப்படும் இத்தருவாயில், அந்யமதஸ்தர்களும் கூட கொண்டாடக் கூடிய நமது ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்தம் என்கிற விஸிஷ்டாத்வைதம் ஓங்கி அனைவரும் அறியும்பொருட்டு, "ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ" என்றும் பெயருடன் வெளிவந்திருக்கும் இப் பத்திரிகை மிகவும் ஆவஸியகமாகவும் முக்கியமாகவும் ஆகும். இக்காலத்தில் தநிகர்கள் முயர்ச்சித்து நடத்தும் பத்திரிகைகளும் நீடித்து நடத்த முடியாமல் தத்தளிப்பது யாவரும் அறிந்ததே யாகும். அப்படியிருந்தும், இப் பெரிய காரியத்தைக் கைக்கொண்டு ஸ்ரீவிஸிஷ்டாத்வைதோத்தாரணம் செய்விக்க முன்வந்த வைஜந்தியின் பத்திராதிபருடைய தைரியமும் உத்ஸாகமும் ஸ்லாகநீயங்களாகவாகும். கூடியவரையில் பேத அபிப்பிராயங்களுக்கு இடம்கொடுக்காமல் எளிய தமிழில் விஷயங்களை ஆராய்ச்சிசெய்து புகட்டுகிற இப் பத்திரிகையை ஒவ்வொரு விஸிஷ்டாத்வைதியும் ஆவஸியம் தங்கள் கையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது, இப்பத்திரிகை ஒரு முறை தருவித்து வாசித்துப்பார்த்தால் நன்குவிளங்கும். விஷயம் ஒன்றும் அறியாத சிறுவனும், விஸிஷ்டாத்வைத விஷயங்களில் ஈடுபடாதவனுமான அடியேன் அதிகம் எழுத அநர்ஹன்.

ஆகிலும் விஸிஷ்டாத்வைதம் மேலோங்கி வளருவதில் விசேஷ ஆஸக்தி கொண்டவனானதால் ஒவ்வொரு வைஷ்ணவனும் இப்பத்திரிகையைத் தருவித்து, யதோசிதம் த்ரவிய சகாயம்புரிந்து, ஆத்மார்த்தமான ரஸாம்ருதத்தைஊட்டும் இப்பத்திரிகை நீடூழி வாழ்ந்து மகா ஜனங்களுக்கு சேவை புரியச்செய்விப்பார்களாக.

ஓம் தத்ஸத்,

அ. கோ. வேணுகோபாலன்.

**C. V. CUNNIAH CHETTY & CO.,**

SILK, WOOLLEN AND COTTON PIECE GOODS MERCHANTS,

288, ESPLANADE ROW, MADRAS.

FOR COTHOOR BRAND SOYA BEANS.

# L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது -




மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.

பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,

8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

# அம்ருதாஞ்சனம்.




ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

# சலோனுடவர் பிராண்ட்

## போர்ட்லாண்ட் சிமெண்ட்

## காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர் வேலைகளுக்கும், ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்.

சோல் ஏஜெண்ட்

**M. குப்புசாமி நாயக்கர்**

**83, செம்புதாஸ் தெரு,**

மதராஸ், ஜி. டி.



ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை.

| தொகுதி 1. | பத்ராதிபர்<br>வடகரை இராமாநுஜாசாரியார் | பகுதி 12. |
|---|---|---|


ஸ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாம்ஶ ஸந்த்ராஸக்ஷ்ய ப்ரவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

## அற்பசியில் திருமூலம்

[பத்ராதிபர்]

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

மூலம் என்கிற நக்ஷத்திரமானது ஸமஸ்தமான நன்மைகளுக்கும் மூலமாக (காரணமாக) இருப்பது பற்றியே மூலம் என்று வழங்கப்படுகிறது.

மேலும் **ஆண்மூலம் அரசாளும்** என்ற பழமொழி அந்வர்த்தமாகும்படி மணவாளமாமுனிகள் அற்பிசியில் திருமூலத்திலவதரித்து **ஸத்யேந லோகாந் ஜயதி** என்கிறபடி தம்முடைய ஹிதமான அமுத மொழிகளால் இவ்வுலகை வாழ்வித்தருளினர். இவருடைய அவதாரத்திற்கு யோக்கியமான அத்திரு நக்ஷத்திரத்தைப்பற்றி ஒரு மஹாநுபாவர் யந்மௌலயாநுஜ மாஸு

வதார ஶுபம் காரணாவ்யயது யதீந꞉ காருண்யைகராஶே꞉—ஶ்ரீவசநபூஷணாதிக்ருத் ஶ்ரீஶைலேஶ ஸ்துதாம் ஶுபம் தஸ்யைவ ஜன்மதிநாத்யதிவ்யசுபம் । என்த அற்பிசியில் திருமூலத் திருநாளானது கருணையங் கடலான காந்தோபயந்த்ரு (மண வாளமா) முநிகளின் அவதாரத்திற்குக் காரணமாயிற்றே ? அந்தத் திருமூலம் அஸத்துக்களில் அக்ரகண்யனை அடியே னுடைய ஸத்தைக்கு மூலமாகவும் இருள் தரு மாஞாலத்திலுள்ள ஆத்மாக்களின் அப்யுதயத்திற்கு மூலமாகவும் ஆயிற்று என்று அருளிச் செய்தமை போற்றற்குரியது. இவ்வளவு பெருமை வாய்ந்த இவ்வாசிரியரின் பெருமையைப்பற்றி மனஸாலும் நினைக்க வரிதாயிருக்கப் பேசவும் எழுதவும் துணிவது ஸாஹ ஸமே யாகும். பாற்கடலின் பாலை முற்றவும் பருக நினைத்ததொரு பூசையைப்போல் ஆசை பற்றி வரையலுற்றேன்.

இம்மஹாநுபாவர் "செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள், சீருல காரியர் செய்தருள் நற்கலை தேச பொலிந்திடு நாள், மந்தமதிப் புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள், மாசறு ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள், கந்தமலர்ப் பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள், காரமர் மேனி யரங்க நகர்க்கிறை கண்கள் களித் திடுநாள், அந்த மில்சீர் மணவாளமுநிப்பரனவதாரம் செய்திடு நாள், அழகு திகழ்ந்திடுமைப்பிசியில் திருமூலமதெனு நாளே" என்று கொண்டாடத் தகுந்த, கலியுக வருஷம் 4471 சென்ற ஶாலிவாஹன ஶகாப்தம் 1292-வதான ஸாதாரண வருஷம் அற்பிசி மாதம் 26-வது தினம் வியாழக்கிழமை ஶுக்ல பக்ஷம் மூல நக்ஷத்திரத்தோடு கூடிய சதுர்த்தீ திதியில் சொட்டைக் குலத்தில் கோமட மென்கிற குடியில் திகழக் கிடந்தான் திரு நாவீறுடைய பிரான் தாதரண்ணரரையர் குமாரராக உடையவ ருடைய அபராவதாரராய் உபய விபூதியும் கொந்தளிக் கும்படி அவதரித்தருளினர். அவதார ஶ்லோக மிருக்கும்படி—

வாஸோ ஹாவம் ப்ரதாயாம் கலியுகமஶாதி ஶுக்லாயெ ஶகா ஸே வஷெ ஸாயாரணெ²கெ ஸமேயிமதந்தௌ வாஸரெ தீர ஸம்வெ—வாரெஜெவெ வதஞ்வ்ரோ ஸமஜநித்யஸ ஶுக்லவக்ஷ ஸுகமே ஹ்ராஜதூரா வ்ஹாரெ யதிவதிர வரோ ரக்ஷாமாரதாநாரோ ।



இவ்வாசார்ய சிகாமணி இவ்வுலகிலவதரித்தவன்றே கலி, வானேமறிகடலோ கானே ஒருங்கிற்றுக் கண்டிலம்....

இவ்வாறு உலகை வாழ்விக்க அவதரித்தருளின மாமுனி களுக்கு தாதரண்ணரும் பத்து நாளும் கடந்த விரண்டா நாள் ஜாத கருமம் செய்து திருவிலச் சினையும் ப்ரஸாதித்து, இவ ருடைய திவ்யதேஜஸ்ஸைப் பார்த்து இதொரு அவதார விசேஷ மென்று கருதி பணமாடரவணைப் பற்பல காலமும் பள்ளி கொள் மணவாளரான அழகிய மணவாளனுடைய திருநாமத்தை இவர்க்குத் திருநாமமாகச் சாற்றி யருளினர்.

இவ்வாறவதரித்த மாமுனிகள், உசித காலங்களில் அன்ன ப்ராஶந சௌளோபநயநாதி ஸம்ஸ்காரங்களை ஶாஸ்திர விதிப் படி செய்யப்பெற்று வேதாதி ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரங்களை அதி கரித்து திருத்தகப்பனரான தாதரண்ணரிடம் தமிழ் வேதங்களா கிற திவ்ய ப்ரபந்தங்களையும் ரஹஸ்ய க்ரந்தங்களையும் அதிகரித்து பதினறுவது திரு நக்ஷத்திரத்தில் ஷோடஶ கலைகளோடு கூடின பூர்ண சந்தரனைப்போலே ஸகல கலா ஸம்பூர்ணராய் விளங்கா நின்றார்.

அப்பால் அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் திருத் தகப்பனரால் திருக்கல்யாணம் செய்விக்கப்பெற்று மாதுலகுல மான சிக்கில் கடாரத்திற்சில காலம் எழுந்தருளியிருந்தார்.

அக் காலத்தில் ஆழ்வார் திரு நகரியில் தர்ஶந ப்ரவர்த்த கராயெழுந்தருளியிருக்கும் திருமலையாழ்வார், பின்னல் தர்ஶந ப்ரவர்த்தகராவார் யாரோ ? என்று ஆலோசியாநின்றுகொண்டு தொண்டர்க்கமுதான திருவாய் மொழியின் திவ்யார்த்தங்களை நிலத் தேவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பரமபோக்யங்க ளாக அருளிச் செய்யாநின்றுகொண்டு இதர ஶாஸ்த்ரங்களை அநாதரித்து திருவாய் மொழியின் ஶப்தரஸம் அர்த்தரஸம் பா(ஹா)வரஸம் முதலானவைகளை ஸர்வதா அநுபவியா நின்று கொண்டிருக்கையாலே திருவாய் மொழிப்பிள்ளை என்று எல்லா ராலும் போற்றும் பெருமையையுடையவராய் ஆழ்வார் திருவடி களையே தஞ்சமாகக் கருதி ஆழ்வார் திருவடிகளில் ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணுநின்றுகொண்டெழுந்தருளியிருந்தார்.

அப்போது நாயனரும் மாதுல குலமான சிக்கில் கிடாரத்தில் நின்றும் புறப்பட்டுத் தம்முடைய ஜன்ம பூமியான ஆழ்வார்திரு

நகரிக்கெழுந்தருளி பொருநற்சங்கணிதுறையிற் சங்கங்கள் சேருமாப்போலே ஶங்க வண்ண நம்பியான ஆதிசேஷனுடைய அவதாரமாகையாலே ஶுத்தஸ்வபாவரான தாமும் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை யாஶ்ரயித்து விலக்ஷண ஸம்பந்தத்தை யுடையராய் ஸாங்கோபாங்கங்களோடு த்ரவிட வேதமான திவ்யப்ரபந்தங்களின் திவ்யார்த்த விஶேஷங்களை திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளால் கையிலங்கு நெல்லிக்கனிபோலறியப்பெற்று அன்னையு மத்தனுமாசாரியனுமனைத் துறவும், மன்னிய பேரு முபாயமும் தெய்வமு மற்றுமெல்லாம், என்னையளித்த திருவாய் மொழிப்பிள்ளை என்று ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்கள் மூன்றையும் திருவாய் மொழிப்பிள்ளை விஷயத்திலேயே அநுஸந்தித்துக் கொண்டெழுந்தருளி யிருந்தார்....

இவ்வாறு தம்மிடத்தில் பக்தி பண்ணுநின்ற மாமுனிகளை பிள்ளை மிகவு முவந்தருளி அந்த உவப்பின் மிகுதியால் உமக்கு உடையவர் திருவடிகளே உபாயோபேயமென்று அத்யவஸித்திருமென்று நியமித்தருள அவ்வாறே மாமுனிகளும் தமது ஆசார்யரான திருவாய் மொழிப்பிள்ளை தமக்கு ப்ராப்யப்ராபகமாகக் காட்டிக் கொடுத்த உடையவர் திருவடிகளில் அத்யந்த ப்ராவண்யத்தையுடையவராய் அப்ராவண்யத்தினதிஶயத்தாலே யதிராஜ விம்ஶதியென்கிற உடையவர் விஷயமான ஸ்தோத்ரத்தை யருளிச் செய்து அத்தாலே வல்லார்கள் வாழ்த்தும் குருகேசர் தம்மை மனத்துவைத்துச், சொல்லார வாழ்த்தும் மணவாளமாமுனித் தொண்டர் குழாம், எல்லாம் தழைக்க வெதிராஜ விம்ஶதி யன்றளித்தோன், புல்லாரவிந்தத் திருத்தாளிரண்டையும் போற்று நெஞ்சே என்று பின் புள்ளாரும் ஈடுபட்டு யதீந்த்ர ப்ரவணர் என்று போற்றும் படியானார். பிள்ளையும் யதிராஜவிம்ஶதியைக் கேட்டு மிகவுமுகந்தருளி திருப்புளியாரடியிலே தாம் கண்ட உடையவரை மாமுனிகளுக்குத் திருவர்ராதனமாக விரங்கியருளினார்.

இவ்வாறு திருவாய் மொழிப்பிள்ளை தமக்குத் திருவாராதனமாக வநுக்ரஹித்த உடையவரையும் ஆழ்வாரையும் ஆராதியாநின்று கொண்டு திருவாய் மொழிப்பிள்ளை திருவுள்ளத்தை மிகவு முகப்பித்து, ஈடு முப்பத்தாறுயிரம் முதலான அருளிச்செயல் வ்யாக்யானங்களை காலக்ஷேபம் பண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்தார்.



அக்காலத்தில் மாமுனிகளுக்கு ஒரு குமாரரவதரித்தார். அவர்க்கு, பிள்ளை நியமனப்படி இராமாநுஜய்யன் என்று திருநாமம் சாத்தியருளினார்.

இவ்வாறு வாழ்ந்தருளும் காலத்தில் ஒரு திருவாதிரை யன்று திருவாய் மொழிப்பிள்ளை "இன்றோ? எதிராஜரிவ்வுலகில் தோன்றிய நாள், இன்றோ கலியிருள் நீங்கும் நாள், என்று பல தடவை இத்தையேசொல்லி ஈடுபட்டு மேலொன்றும் சொல்லாமல் மோஹித்து நிற்க நாயனாரும் இன்றோதான் வேதியர்கள் வாழ விரை மகழோன் தான்வாழ வாதியர்கள் வாழ்வடங்கு நாள் என்று அப்பாட்டை பூர்த்தி செய்தருள பிள்ளையும் இத்தைக்கேட்டருளி மிகவும் உகந்தருளினார்.

இவ்வாறு ஆசார்ய ஶிஷ்யக்ரமம் நன்றாக நடைபெறா நிற்க, பிள்ளையும் நித்ய விபூதியிலே நித்ய கைங்கர்ய நிரதராய் வாழக் கருதி அதற்கு இடையூறான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யொழிக்க தம்முடைய ஆசார்யரான உலகாரியன் திருவடிகளை ப்ரார்த்தித்துக் கொண்டிரா நிற்க, திருமேனியிலே மிகவும் தளர்வு ஏற்பட்டு மிகவும் ஆர்த்தியோடே எழுந்தருளியிருக்க, இவ்வாறு வருந்துவதற் கடியென்? என்று நாயனார் முதலான முதலிகள் கேட்க பிள்ளையும் காலம் கலிகாலமாயிருக்கிறதே உலகில் ஆழ்வார்களருளிச்செயல்களில் ருசி விஶ்வாஸங்களுடையராய்ப் ப்ரவசநம் பண்ணிக்கொண்டு போருவாரார்? என்று க்லேஶப்படா நிற்கின்றேன் என்ன, அப்போது நாயனார் அப்படியே அடியேன் செய்கிறேன் என்று விண்ணப்பிக்க பிள்ளையும் பரம ப்ரீதராய் நாயனாருக்கு ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரத்தி லிருக்கும் ப்ராவண்யத்தைப் பார்த்துச் சங்கித்து நாயனாரைக் கடாக்ஷித்து ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரத்தில் பலகால் கண்வையாதே எம்பெருமானார்க்கு உகப்பாக ஒருகால் ஸ்ரீ பாஷ்யத்தைக் காலக்ஷேபம்செய்து நமக்கும் எம்பெருமானார்க்கும் இஷ்டமாக ஆழ்வார்களருளிச் செயலையே எப்போதும் காலக்ஷேபம்செய்து கொண்டு பூர்வாசார்யர்களைப் போலே நம்பெருமாளுக்கு மங்களாஶாஸநம் செய்து கொண்டு கோயிலிலே நித்ய வாஸம் பண்ணவேண்டும் என்று நியமித்தருளி மற்ற முதலிகளை நாயனார் கையில் காட்டிக்கொடுத்து முதலிகளைப் பார்த்து நாய

னாரை அவதார விஶேஷமென்று நினைத்து நம்மைப்போலே ஆதரித்துப் போருங்கோள் என்று நியமித்தருளி ஸ்வாசார்யரான பிள்ளை லோகாசார்யர் திருவடிகளை த்யாநியா நின்றுகொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார்.

நாயனாரும் பிள்ளையை ப்ரஹ்ம மேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளி படுத்தி அவர்பெருமைக்குத் தக்கபடி திருவத்யயநம் நடத்தி யருளினார்.

அப்பால் நாயனாரும் பிள்ளை நியமநப்படி ஆழ்வார்களருளிச் செயலைக் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு ஆழ்வார் திருநகரியிலே சிலகால மெழுந்தருளியிருக்கச்செய்தே அழகிய வரதர் (வாநமாமலை ராமாநுஜ ஜீயர்) முதலானவர்கள் மாமுனிகளின் வைபவத்தைக்கண்டு அவர் திருவடிகளில் ஆஶ்ரயித்தார்கள். அவர்களில் வாநமாமலை ராமாநுஜ ஜீயர் மஹா விரக்தராய் ஸர்வ ஸங்க பரித்யாக பூர்வகம் ஆஶ்ரம ஸ்வீகாரம்செய்துகொண்டு மாமுனிகளுக்கு "நிழலுமடி தாறுமானோம்" என்னும்படி பாதரேகாமயராய் நித்ய ஸேவை பண்ணிக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.

இப்படி அந்தரங்கரானவர்களோடு எழுந்தருளி யிருக்கும் மணவாள மாமுனிகள். நம்பெருமாளை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு யாவத் காலம் கோயிலிலே யிருக்கவன்றோ நமக்கு ப்ராப்தம் என்றறுதியிட்டு அப்போதே ஆழ்வார் திருமுன்பே சென்று திருவரங்கம் திருப்பதியிலே நம்பெருமாளை ஸேவிக்க விடை கொள்ளுகிறேன் என்று விண்ணப்பிக்க, அப்படியே ஆழ்வாரும் விடை கொடுத்தருள, வாநமாமலை ராமாநுஜ ஜீயர் முதலான முதலிகளோடே புறப்பட்டு நடுவே வில்லிபுத்தூருறையும் வடபெருங் கோயிலுடையானையும் பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் திருவடிதொழுது அங்கு நின்றும் புறப்பட்டு திருமாலிருஞ் சோலை நின்றான் கனைகழல் தொழுது முடிச்சோதியிற்படியே கிரீடாதி நூபுராந்தமாக முற்று மநுபவித்துத் தீர்த்த ப்ரசாதங்கள் ப்ரஸாதிக்கப்பெற்று விடைகொண்டு அதித்வரையோடே கோயிலேற வெழுந்தருளி கங்கையிற் புனிதமாய் காவிரியில் நீராடி, கேஶவாதி பன்னிரண்டு திருநாமங்களையும் சாத்திக்கொண்டு, திருவரங்கப் பெருநகரைத் தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அவ்வளவில் அணியரங்கன் திருமுற்றத்தடியார்களனைவரும் வந்தெதிர்கொண் டெழுந்தருள்வித்துக் கொண்டு அக்காலத்தில் கோயிலுக்கதிபதியா யிருக்கும் பட்டர் திருமாளிகைக் கெழுந்தருள பட்டரும் மாமுனிகளை அப்யுத்தாந ப்ரணாம புரஸ்ஸரமாக வுபசரித்து ஆஸநத்திலே எழுந்தருளச்செய்து தேவரீரை ஸேவிக்கும்படியான பாக்யம் பெற்றோம் என்று மிகவும் ப்ரீதராய் திருவாய்மொழியில் ஒரு பாட்டை உபந்யஸிக்கும்படி வேண்டிக்கொள்ள அப்படியே மாமுனிகளும் ஈட்டில்படியே ஒரு பாட்டையுபந்யஸித்தருள திருமாலை தந்த பெருமாளாகிற பட்டரும் போரவித்தராய்மாமுனிகளுக்குமுப்பத்தாறாயிரப்பெருக்கர் என்று திருநாமம் சாத்தி மிகவும்கொண்டாடி மாமுனிகளை ஆதரவுடன் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போக மாமுனிகளும் யதாக்ரமமாக 'உடையவர் ஆழ்வார் ஸ்ரீரங்க நாயகியார் முதலானவர்களைத் திருவடிதொழுது ப்ரதக்ஷிணமாக உள்ளேசென்று கருவூலம் முதலானவைகளை ஸேவித்து ப்ரணவாகரமான விமாநத்தையும் ஸேநை முதலியாரையும் தெண்டன் ஸமர்ப்பித்து அழகிய மணவாளன் திருமண்டபத்திலே எழுந்தருளித் தெண்டன் சமர்ப்பித்து, பெரிய திருவடியையும் த்வார பாலகர்களையும் ஸேவித்து அவர்களை அநுமதிகொண்டு உள்ளே சென்று மணத்தூணருகே நின்று அரங்கமா கோயில்கொண்ட கரும்பினைக் கண்ணாரக் கண்டு வாயாரப்புகழ்ந்து அமலனாதி பிரானிற்படியே பாதாதி கேஶாந்த மநுபவித்து, பழுதே பல பகலும் போயின வென்றிழந்த நாளுக்கு அநுதபித்து, அரங்கத்தரவணைப் பள்ளியானைக் கண்வளர்ந்தருளும் பரமனை, படுத்த பைநாகணைப் பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டென்று மங்களாஶாஸநம் பண்ணாநிற்க, அழகிய மணவாளனும் மாமுநியைத் தன்னுடைய கருணாம்ருதவ் ருஷ்டிகளாலே குளிரக்கடாக்ஷித்துத் தம்திருப்பவள வாய் திறந்து, நம்மிராமாநுஜனைப்போலே நீரும் நம்வீட்டில் கைங்கர்யத்தையும் தர்ஶந ரஹஸ்யங்களையும் ஆராய்ந்துகொண்டு உம்முடைய ஶரீராவஸாநத்தளவும் இங்கேயே வாஸம் பண்ணிக்கொண்டிரும் என்று நியமித்தருளி தீர்த்தம் ப்ரஸாதம் சடகோடன் திருமாலைகளும் ப்ரஸாதித்தருள, மாமுனியும் மஹாப்ரஸாதம் என்று அங்கீகரித்து நம்பெருமாள் நியமனப்படியே அங்குண்டான ரஹஸ்ய க்ரந்தங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து அவைகளை ப்ரசாரம் செய்துகொண்டு அரங்கமா நகரிலேயே நித்ய வாஸம் பண்ணிக் கொண்டெழுந்தருளி யிருந்தார்.

அக்காலத்தில் கோயில் கார்யங்களை நிர்வஹித்துப் போகிற உத்தம நம்பி பெருமாள் அமுது செய்தருளுகிற தளிகை முதலான வைகளைச் சிறிது தாழ்வாக நடத்துவதை வானமாமலை ராமாநுஜ ஜீயர், நாயனார் ஸன்னிதியில் விண்ணப்பிக்க, நாயனாரும் அழகிய வரதரைக்குறித்து பெருமாளுக்கு எல்லாக்கைங்கர்யங்களையும் குறைவற நடத்தும்படி இந்த உத்தம நம்பியையே திருத்திப்பணி கொள்ளும்படி பெருமாளை நீரே ப்ரார்த்தியும் என்று சொல்லி தானும் ப்ரார்த்திக்கப் பெருமாளும் அப்படியே அநுக்ரஹித் தருளினார்.

அப்பால் அழகிய மணவாள நாயனார் திருமலை முதலான திருப்பதிகளை ஸேவிக்கத் திருவுள்ளம்பற்றிப் பெருமாள் சன்னிதியிற்சென்று விடைகொண்டு புறப்பட்டு திருவெள்ளறையிற் பங்கயச் செல்வியாரைப் புருஷகாரமாகக் கொண்டு செந்தாமரைக் கண்ணரைத் திருவடிதொழுது திருக்கோவலூரிடை கழியில் முதலாழ்வார் மூவரையும் ஸேவித்து, அவர்கள் புருஷகாரமாகத்திருக்கோவலூராயனைத் திருவடி தொழுது, அங்கு நின்றும் புறப்பட்டுப் பரன்சென்று சேர்திருவேங்கடம் சென்று, பாத பீடத்திலடியிட்டேறுமாப் போலே ஶேஷகிரியை ஏறி ஸேவாக்ரமத்திலே ஸேவித்து, அகலகில்லேன் இறையுமென்றலர் மேல் மங்கையுறையும் திருமார்பனான திருவேங்கடமுடையானைப் புகலொன்றில்லா வடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன் என்று அடி பணிந்து நிற்க, திருவேங்கடத் தப்பனும் தீர்த்தப்ரஸாதம் சடகோபன் அநுக்ரஹிக்கப் பெற்று விடைகொண்டு உலகேத்தும் ஆழியானத்தியூரான பெருமாள் கோவில் சென்று பேரருளாளனைத் தெண்டன் சமர்ப்பித்து நிற்க, பேரருளாளனும் “ நம் மிராமாநுஜனைப்போலே யிருப்பாரொருவரைப் பெற்றோம்” என்று அதி ப்ரீதியோடே தீர்த்தம் ப்ரசாதம் திருமாலை திருப்பரியட்டம் சடகோபன் ப்ரஸாதிக்கப் பெற்று, க்ருதார்த்தராய் திருவெஃகாமுதலான திருப்பதிகளையும் திருவடி தொழுது, ஸ்ரீபெரும்பூதூ ரெழுந்தருளி இதுவோ? பெரும்பூதூர் இங்கே பிறந்தோ வெதிராசரெம்மிடரைத் தீர்த்தார் இதுவோதான் தேங்கும் பொருநல் திருநகரிக் கொப்பான ஓங்கு புகழுடையவூர் ” என்று சொல்லிக்கொண்டே ஊருக்குள்ளே ப்ரவேபித்து, சந்நிதிக்குள்ளே சென்று யோநித்ய மச்யுதபதாம்புஜ ....ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே என்று எம்பெருமானாரைத் தெண்டன் சமர்ப்பித்து எதிராஜன் திருவுருவை நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்காதபடி நிலை நிறுத்திக்கொண்டு தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிக்கப்பெற்று சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி என்று மங்களாஶாஸநம் பண்ணி ஸ்ரீ பாஷ்யம் ஸேவிக்க நியமனம் பெற்றுக்கொண்டு மறுபடியும் பெருமாள் கோவிலுக்கெழுந்தருளி கிடாம்பியாச்சான் வம்ஶஸ்தரான கிடாம்பி நயினாரிடத்தில் ஸ்ரீபாஷ்யம் ஸேவித்துக்கொண்டு அங்கே சிறிதுகாலமெழுந்தருளியிருந்து அப்பால் பேரருளாளனிடத்தில் விடைபெற்று திருவரங்கம் திருப்பதியை அடைந்து அழகிய மணவாளனை அடிபணிந்து நிற்க, வந்தவரை வாழ்விக்கும் பெருமாளான அழகிய மணவாளன் தீர்த்தப்ரஸாதங்கள் ப்ரஸாதித்து, இனிமேல் இங்கேயே நித்யவாஸம் பண்ணிக்கொண்டிரும் என்று நியமிக்க அப்படியே ஸ்ரீரங்கத்திலே நித்யவாஸம் பண்ணா நின்றுகொண்டு காலே காலே வரவரமுநிঃ கல்பயந்மங்களாநி என்கிறபடி ஒவ்வொரு சமயமும் தவறாது நம்பெருமாளை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.



இவ்வாறிருக்கும் காலத்தில் ஒருசமயம் பெருமாள் மங்களாஶாஸனத்திற்கிடையூறாக ஆஶௌச மொன்று ஏற்பட, அதனால் பெருமாளை ஸேவிக்க முடியாமற்போக, பெருமாள் விஶ்லேஷம் ஸஹிக்கமாட்டாதவராய் பகவதநுபவத்திற்கு விரோதிகளான சரீரஸம்பந்தமுடைய பந்துக்களை பரித்யஜித்து, த்ரிதண்ட காஷாயாதிகளைத் தரித்து, உத்தம ஆஶ்ரமமான ஸந்யாஸ ஆஶ்ரமத்தை ஸ்வீகரித்துப் பெருமாளை தெண்டன் சமர்ப்பித்து நிற்க, பெருமாளும் அதி ஸந்தோஷத்துடனே துயரறு சுடரடியான சடகோபனையும் ப்ரஸாதித்துத் திருப்பவளவாய் திறந்து அழகிய மணவாள ஜீயர் என்கிற திருநாமத்தையே நீர் எப்போதும் வஹிக்கக் கடவீர் என்று நியமித்தருளி பல்லவராயன் மடத்தை இவர்க்கு வாஸஸ்தானமாக அநுக்ரஹித்து உத்தம நம்பி முதலானாரைக் கடாக்ஷித்து நம் அழகிய மணவாளஜீயரை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய் மடத்தே வைத்து வாருங்கோள்! என்று நியமித்தருள, அவர்களும் அப்படியே ஜீயரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய் மடத்திலே எழுந்தருளப்பண்ணி மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும் என்று மங்களாஶாஸநம் பண்ணி தெண்டன் சமர்ப்பித்து வந்தார்கள்.

அப்பால் வானமாமலை ராமாநுஜஜீயர் முதலானோர்களைக் கொண்டு மடத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வித்து தமது ஆசார்யரான திருமலை ஆழ்வார் பெயரையிட்டு ஒரு காலக்ஷேபகூடத்தை ஏற்பாடுசெய்து அதற்கு ரஹஸ்யம் விளைந்த இடமான பிள்ளை லோகாசார்யர் திருமாளிகையிலிருந்து மண்கொண்டுவந்து அக் கூடத்திற்கு மண் இடுவித்து அக் கூடத்தைக் குருகுலவாஸமாகக் கருதி அவ்விடத்திலேயே, ரஹஸ்யார்த்தங்களை யருளிச் செய்யா நின்று கொண்டெழுந்தருளியிருந்தார்.

அக்காலத்தில் திருவரங்கன் திருமுற்றத்தடியார்களனைவர்களும் நம்மை யுஜ்ஜீவிப்பிக்க அழகியமணவாளன் இங்கே எழுந்தருளினாற் போலே அழகியமணவாளஜீயரும் இங்கே எழுந்தருளினார் என்று மிகவும் ஆதரித்துப் போந்தார்கள்.

அக்காலத்தில் கோவிந்ததாஸரப்பன் என்கிறபட்டர்பிரான் ஜீயர், மாமுநிகளின் ஜ்ஞாநபக்தி வைராக்யங்களைக்கண்டு ஆஸ்ரயித்து, உடையவர் விஷயத்தில் எம்பாரைப்போலே மாமுநிகளின் திருவடியை க்ஷணகாலமும் விட்டுப்பிரிய க்ஷமரன்றிக்கே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார்.

இவ்வாறு எழுந்தருளியிருக்கும் மாமுநிகளின் அப்ரதிம வைபவத்தைக்கண்டு முதலியாண்டான் வம்ஶஸ்தர்களான கோயிற் கந்தாடை அண்ணன் முதலான ஆசார்ய புருஷர்கள் மாமுனிகளின் திருவடியை ஆஶ்ரயிக்க உத்தேசித்திருக்க அழகிய மணவாளனும் அவர்கள் ஸ்வப்நத்திலே எழுந்தருளி மணவாள மாமுனிகளின் அவதார விசேஷத்தைத் தெரிவித்து அவரையாஶ்ரயிக்கும்படி நியமித்தருள, அவர்களும் உடையவர் திருமேனி ஸம்பந்தத்தை யுடையவர்களாய் அபிஜந வித்யாவிருத்தங்களாலுயர்ந்த தங்கள் பெருமையைப் பாராதே இவர் திருவடிகளில் ஸம்பந்தமே தங்களுக்கு உத்தாரகமென்று நினைத்து மாமுனிகளை யாஶ்ரயித்தார்கள்.

இப்பேர்ப்பட்ட ஶிஷ்யஸம்பத்துடனே மாமுனிகள் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்தருளும் அநகல்லடிக்காலத்தில் குத்ருஷ்டிமதாவலம்பியான ஒருவன் கோயிலிலே தன்னுடைய மதத்தை ப்ரசாரம் செய்யா நிற்க, ஸர்வஜ்ஞரான மாமுனிகளும் கலையறக் கற்ற மாந்



தர் காண்பரோ? கேட்பரோ? என்கிறபடி அவனை அலக்ஷியம் செய்து அவனை ஊரைவிட்டு ஓட்டத் திருவுள்ளம்பற்றி வாதூல வம்ஶஸ்தரான வேடலப்பையை வரவழைத்து அவரைக்கொண்டு அவனை ஊரைவிட்டு ஓடும்படி செய்தருளினார்.

அக்காலத்தில் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் பிரதிவாதி பயங்கரரான அண்ணா மாமுனிகளின் வைபவத்தையறிந்து அவரிடம் ரஹஸ்யார்த்தங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்று உத்தேசித்துக் கோயிலுக்கு வந்து மாமுனிகளை தெண்டன் சமர்ப்பித்து நிற்க, மாமுனிகளும் ஒன்றுந் தேவின் ப்ரவேஶத்தைச் சிறிது உபந்யஸிக்க இவர்க்கு த்ரவிட ப்ரபந்தத்தில் தான் பரிசயம் விஶேஷமாகவுண்டென்றிருந்த அண்ணாவும் உபயவேதத்திலு மிவர்க்கிருக்கும் ப்ரவீணதையை ப்ரத்யக்ஷமாகக்கண்டு மிகவும் உகந்து, அடியேனை ஆட்கொண்டருள வேணுமென்று வேண்டிக்கொள்ள, மாமுனிகளும், நீர் ப்ரதிவாதி பயங்கரர். நாம் ஸாது. இது எங்ஙனே கூடுவது? என்ன அண்ணாவும், வாதேஷு கோஷ்டீஷு வாதிபயங்கர: — ஸ்ரீவைஷ்ணவானாம் கோஷ்டீஷு தாஸ இதி விஶ்ருத: அடியேன் பிரதிவாதிகள் கோஷ்டிகளில் பயங்கரன் என்று ப்ரஸித்தனா யிருப்பது போலவே ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் தாஸன் என்றும் ப்ரஸித்தனானவன் என்ன, அதைக்கேட்டு மாமுனிகள் மிகவுமுவந்தருளி அவர்க்கு பஞ்ச ஸமஸ்காரங்களையும் ப்ரஸாதித்து ஸ்ரீ வைஷ்ணவதாஸர் என்கிற திருநாமத்தையும் அநுக்ரஹித்தருளினார்.

அப்பால் தமது ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை யவதரித்த ஆழ்வார் திருநகரியில் ஆழ்வாரை ஸேவிக்க வாசையுண்டாய் நம்பெருமாளை விடைபெற்று ஆழ்வார் திருநகரிக் கெழுந்தருளி அங்கே யாத்ருச்சிகமாய் எழுந்தருளின ஆயியிடத்தில் ஆசார்ய ஹ்ருதயார்த்தத்தைக் கேட்டு அவ்வர்த்தத்தை அங்குள்ளார்க்கு அழகாக அருளிச் செய்துகொண்டிருக்க, அக்காலத்தில் அத்தேசத்திற்கதிபனா னொருவன் மாமுனிகளின் அப்ரதிம வைபவத்தைக்கண்டு திருவடிகளில் ஆஶ்ரயிக்க, அவனைத் திருத்திப் பணிகொண்டு அவனைக் கொண்டு காளமேகன் திருமண்டபம் முதலான அனேக கைங்கர்யங்களை ஆழ்வாருக்கு முகோல்லாசமாகச் செய்தருளினார்.

அப்பால் திருக்குறுங்குடி யெழுந்தருளி அங்கு திருவேங்கடமுடையான் என்கிற ஒருப்ராஹ்மணனைத்திருத்திப் பணிகொண்டு அவர்க்கு திருவேங்கடதாஸர் என்று திருநாமம் சாற்றி அவரை நம்பி கைங்கர்யத்தைச் செய்துகொண்டிருக்கும்படி நியமித்தருள அவ்ரும் அப்படியே நம்பிக்கு அனேக திருப்பணி முதலான கைங்கரியங்களைச் செய்துகொண்டிருந்தார். இவ்வாறு திருக்குருகூர் நம்பிக்கும் திருக்குறுங்குடி நம்பிக்கும் அனைத்தழகும் கண்டருளப்பண்ணி மற்றும் அத்தேஶத்திலுண்டான திவ்யதேசஶங்களில் கைங்கர்யங்களைச் செய்வதற் கநுகூலமான ஆஶ்ரிதர்களை நியமித்து, **பிறந்தகத்தில் சீராட்டுப் பெற்றாலும் தன்னைச் சிறந்துகக்கும் சீர்க்கணவன் றன்னை மறந்திருக்கலாமோ?** மனமே என்று அழகிய மணவாளனிடத்தில் திருவுள்ளம் சென்று கோயிலுக்கெழுந்தருளி முன்புபோலே எழுந்தருளி யிருந்தார்.

அக்காலத்தில் எறும்பியப்பா கோயிலுக் கெழுந்தருளி நம்பெருமாளை ஸேவித்து, கோயில் கந்தாடை அண்ணனோடு மடத்திற்கு வந்து மாமுனிகளைத் தெண்டன் சமர்ப்பிக்க, மாமுனிகளும் இவர் ஒரு பெரிய வித்வான். இவருகக்கும்படி விஷய மருளிச்செய்யக் கருதி பரத்வப்ரதிபாதகமான உயர்வற வுயர் நலத்தின் ப்ரவேஶத்தை யுபந்யஸிக்க, அப்பாவும் அதைக் கண்டு இவர்க்குத் தமிழில் தான் பரிசயமுண்டென்றிருந்தோம் ஸம்ஸ்க்ருதத்திலு மிவர்க்குண்டான பாண்டித்யம் வாசாமகோசரம் என்று போரவும் மாமுனிகளைப் புகழ்ந்து போற்ற, மாமுனிகளும் ப்ரீதராய் அப்பாவை மடத்திலே அமுதுசெய்யும்படி ப்ரார்த்திக்க, அப்பாவும் **தருவரேல் புனிதமன்றே** என்கிற விஶேஷஶாஸ்த்ரத்தை யறியாதவராய், யதியின் அன்னத்தைப் புஜிக்கக் கூடாதென்கிற ஸாமாந்யஶாஸ்திரத்தை யடியொற்றி, அவ்வாறுசெய்ய மறுத்து, ஊருக்கு எழுந்தருளினார். ஊரில் சென்று தம்முடைய திருவாராதனப் பெருமாளான சக்ரவர்த்தித் திருமகனுக்குத் திருவாராதனம் ஸமர்ப்பிக்கக் கோயிலாழ்வாரைத் திருக்காப்பு நீக்கப் புக, எவ்வளவு ப்ரயத்நம் செய்தாலும் திறக்க முடியாமற் போகவே அப்பாவும் அன்று அமுது செய்யாமல் முசித்துக் கிடக்க, அன்றிராத்திரி அவர் ஸ்வப்நத்திலே பெருமாள் எழுந்தருளி ஆதிஶேஷாவதாரமான அழகிய மணவாளமாமுனியினிடம் அபசாரப்பட்டுவந்த உம்முடைய கையால் திருவாராதனம் கண்டருளோம் மாமுனிகளை யாஶ்ரயித்து வாரும் என்று நியமித்தருள, அப்பாவும் உடனே கண்விழித்துப் பெருமாள் நியமனப்படியே கோயிலேற வெழுந்தருளி, கோயிற் கந்தாடை அண்ணனை புருஷகாரமாகக் கொண்டு மாமுனிகள் திருவடிகளை யாஶ்ரயித்துக் க்ருதார்த்தரானார்.



இவ்வாறு ப்ரஸித்தமான ஶிஷ்யஸம்பத்தோடே மாமுனிகள் கோயிலி லெழுந்தருளியிருக்கும் காலத்தில் நம்பெருமாள் தான் சக்ரவர்த்திக்குப் புத்திரனாய் அவதரித்த காலத்தில் **"இமௌஸ்ம முனிஶார்தூல கிங்கரௌ ஸமுபஸ்த்திதௌ"** முனிஶ்ரேஷ்டரான விஶ்வாமித்ர மகரிஷியே! இந்த நாங்களிருவரும் தேவரீருக்கு சிஷ்யர்கள் என்று, விஸ்வாமித்ரரை ஆசார்யராக வரித்தும், **"அவனே பின்னோர் தூது ஆதிமன்னர்க்காகிப் பெரு நிலத்தார் இன்னார் தூதனென நின்றான்"** என்றபடி பாண்டவர்க்குத் தூது செல்ல கிருஷ்ணனாயவதரித்த காலத்தில் சாந்தீபினி மகரிஷியை ஆசார்யராக ஆஶ்ரயித்து ஸமஸ்தமான ஸம்ஸ்க்ருத சாஸ்த்திரங்களையும் அப்யசித்து ஆசார்யனுக்குக் குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கவேண்டி அவருடைய திருவுள்ளமேதென்றபேக்ஷிக்க, சாந்தீபினியும் முன்னொருகால் மறிகடல்வாய் மாண்ட தன்புத்திரனைக் கொணர்ந்து கொடுக்கும்படி அபேக்ஷிக்க, அவ்வாறே ஓதுவித்ததக்கணையாய் அப்புதல்வனைக் கொணர்ந்து கொடுத்து அவர்களைத் திருப்தி செய்வித்தாலும், நம்மை யறிந்துவைத்தே நம்மிடத்தில் எல்லையில்லா வாநந்தத்தையுடைய பரமவிலக்ஷணமான மோக்ஷ புருஷார்த்தத்தை அபேக்ஷியாதே இவ்வாறு அபேக்ஷிப்பதே என்று அத்ருப்தி யடைந்தவனாகையால் இந்த அர்ச்சாவதாரத்தில் முன் ஆஶ்ரயித்த ஆசார்யர்களைப்போ லன்றிக்கே ஆசார்யனுக்கு வகுத்த ஸமஸ்த குணங்களுக்கும் கொள்கலமான மணவாள மாமுனியை ஆசார்யராக வரித்து, அர்ச்சாவதாரத்தை ப்ரதிபாதியா நின்ற ஆழ்வார்க ளருளிச்செய்த த்ரவிடவேதத்தின் அர்த்தத்தை அனைவரும் விஶ்வஸித்து கேட்டு க்ருதார்த்தராகப் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, மணவாள மாமுனியைக் கடாக்ஷித்து, நமது பெரிய திருமண்டபத்தில் ஒருவருஷம் த்ரவிட வேதத்தை ஈடுமுதலான ஸமஸ்த்தமான வ்யாக்கியானங்களுடன் அருளிச்செய்ய வேண்டுமென்று நியமிக்க, மாமுனியும் தந்யோஸ்மி, அநுக்ருஹீதோஸ்மி,

என்று மிகவும் உகப்போடே ஒரு ஸம்வத்ஸரம் திருவாய் மொழியை ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலான வ்யாக்யானங்களுடன் உபந்யசித்தருளினார்.

பெருமாளும் பிராட்டியும் ஸமஸ்தமான பரிவாரங்களோடும் ஸிம்ஹாஸநத்தி லெழுந்தருளி ஒரு ஸம்வத்ஸரம் திருவாய் மொழியினர்த்தம் கேட்டருளி சாத்து முறைதினத்தில் ஆசார்ய ஸம்பாவனை ஸமர்ப்பிக்க அடைக்காய் முதலான அநேக பரிசுகளைத் தட்டில் அமர்த்திவைக்க, அப்போது அழகிய மணவாள பட்டருடைய ஒரு குழந்தையாய்ப் பெருமாள் எழுந்தருளி ஸ்ரீ ஶைலேஶ தயாபாத்ரம் என்கிற தனியனை அருளிச் செய்துவிட்டு மறைய அங்குள்ள பெரியோர்கள் இதென்ன வாஶ்சர்யம் குழந்தை எங்கே? ஶ்லோகம் சொல்வதெங்ஙனே? என்று ஶங்கியா நிற்க, பெருமாளும் அருளப் பாடிட்டு அத்தனியனை ஓலையிலெழுதி மஞ்சள் காப்புச் சாத்தும்படி நியமிக்க, அப்படியே செய்ய, அதையும் தட்டில் வைக்கச் சொல்லி அப்பிள்ளையைப் பார்த்து வாழித் திருநாமம் சொல்லும்படி நியமிக்க, அவரும் வாழிதிருவாய் மொழிப்பிள்ளை என்று உபக்ரமித்து மணவாளமாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும் என்று முடிக்கப் பெருமாளும் மிகவுமுகந்து ஸமஸ்தமான வரிசைகளையும் ஸாதித்து மாமுனிகளை மடத்தில் எழுந்தருளப் பண்ணி வாருங்கோள்! என்று உத்தம நம்பி முதலானவர்களை நியமித்தருள அவர்களும் அப்படியே ஸமஸ்தமான கோயில் பரிவாரங்களோடு மாமுனியை மடத்திலே எழுந்தருளச் செய்து வந்தார்கள்.

அநந்தரம் அழகிய மணவாளன், கோயில் திருமலை பெருமாள் கோவில் முதலான திவ்யதேஶங்களிலெல்லாம் ஸேவாகால முபக்ரமிக்கும்போது ஸ்ரீ ஶைலேஶ தனியனை உபக்ரமித்து மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிருமென்று முடிக்கவேண்டும் என்று நியமித்தருளினார்.

இன்னமும் இத்தனியன் வைபவத்தை திருவேங்கடமுடையானும் திருமாலிருஞ் சோலை மலையானும் ப்ரகாஶிப்பித் தருளினார்கள். இவ்வாறு ப்ரஸித்த வைபவத்தையுடைய அழகிய மணவாளமாமுனியின் வைபவத்தை யநுஸந்தித்து அவர் பொன்னடியாஞ் செங்கலப் போதுகளை



அமானிவனின் கரத்தால் ஸ்பர்சிக்கப்படுவார். இவ்விடத்தில் காரப்பங்காடு ஸ்ரீ உ. வே. சிங்கப் பெருமாள் ஸ்வாமி மணவாளமாமுனிகளின் திருவடிகளை உன்னிச் சிரத்தாலே தீண்டுமவர்களுக்கு அமாநவகரஸ்பர்சம் அநாவஶ்யம் என்றருளிச் செய்வர்.

மன்னுயிர் காளிங்கே மணவாள மாமுனிவன்
பொன்னடியாம் செங்கமலப் போதுகளை—உன்னிச்
சிரத்தாலே தீண்டிலமானவனும் நம்மைக்
காத்தாலே தீண்டல் கடன்.

---

## ப்ரபந்நர் யார்

### திருமலைநல்லான் ராமகிருஷ்ணய்யங்கார்
### சிரோமணி ஆழ்வார் திருநகரி

கீழ் ப்ரபந்ந குலத்தைப்பற்றிச் சிறிது விவரித்தோம் இதில் ப்ரபத்தி ஸ்வரூபத்தையும், ப்ரபந்நர் யார்? என்பதையும் பற்றிச் சிறிது கூறுவோம்.

(1) ப்ரபத்தியானது "ஈசுவரனுக்கு நான் அடியான்" என்று உணர்கை. ஈசுவர ஸம்பந்தம் என்று முளதாதலின் அவனடியான் யானென்று இசைந்து அதை அநுஸந்திப்பதே ப்ரபத்தி யென்று கூறியதாயிற்று. சேஷத்வமாவது சேஷியின் இஷ்டப்படி உபயோகிப்பதற்குத் தகுந்ததன்மை. சேஷத்வமும் அடிமையும் ஒரே பொருளன. "ததேகஶேஷத்வாநுஸந்தாநம் ஶரணாகதிঃ என்பர் ஶ்ருதப்ரகாசிகா சார்யர். சரணாகதிபதம் ப்ரபத்தியைக் குறிக்கிறது. ஆழ்வாராதியரிடம் இத்தகைய ப்ரபத்தி நிலைநிற்கிறது. ஆதலின் அவர்கள் பிரபந்நர்களாகிறார்கள். பிரபந்நர்—பிரபத்தியுடையோர்.

(2) எனவே அவனுகந்தபடி உபயோகிக்கத் தகுந்ததன்மையே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்று உணர்ந்த பெரியோர், ப்ரபத்தியைக் கூடத்தான், அநுஷ்டிக்கும் உபாயம் என்று நினையார்கள். உபாயமும் ஈசுவரன்தான் அவர்களுக்கு. உபேயமும் அவனே. "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்று அவன் திருவடிகளையே உபாயமாக அத்யவஸிக்கிறார் ப்ரபந்நஜன கூடஸ்தர். ஆறு—உபாயம். எல்லா மவனதருளடியாகவே என்

திருப்பர் ப்ரபந்நர். "அதுவு மவன தின்னருளே" என்னக் கூடவதிறே! காதல் கடல்புரைய உண்டாவதும், அவாவற்று வீடு பெறுகையு மவனால்தான். அவனுக்காகத் தன்னைக் கொள்வது தான் புருஷார்த்தம். உமக்கே நாமாட்செய்வோம். கைங்கரியங் கள் கூட அவன் முகஉல்லாஸத்திற்காகத்தான்! அதனால் தனக்கு உண்டாகும் ஆநந்தம் அவஸாத ஸ்வேதம்போலே. அவஸாத ஸ்வேதந்யாயமாவது:—நெல் குத்துவது உமியை வேருக்கி அரிசி யைப் பெறுவதற்காகத்தான். ஆனால் குத்தும்போது வேர்வை யுண்டாகிறது. வேர்வைக்காக நெல்குத்துவ தில்லையன்றோ? அது போல் ஸ்வாநந்தத்திற்காகக் கைங்கரியம் செய்வார்களன்று ப்ராந்நர்கள், நிற்க,

(3) ஆழ்வார்கள் பிரபந்நர்கள் என்பதில் ஒரு ஸந்தேஹம் உண்டாகிறது. "நிஷ்யஹ்ராவலி தவ்ஃ" என்று விதிக்கப்பட்ட பக்தி ரூபமான பகவத் விஷய காமம் அன்றோ "மயர்வறமதி நலமரு ளினன்" என்கிறபடியே அவனருளடியாக ஆழ்வாருக் குண்டா யிற்று? பக்திமான்களான அவர்களை ப்ரபந்நர் என்பதெப்படி? ஒருவருக்கே பக்தியும், பரபத்தியு மிசையாது, விருத்ததர்மங்க ளாகையாலே. பிரவிருத்தி பரருக்கானதுபக்தி, நிவிருத்தி பரருக் கானது ப்ரபத்தி. ஹமவஸவ்ருவ்ருத்தி வ்ருதிவஙகஸுவ ரவ்ருத்தி நிவ்ருத்திஃ வரவத்திஃ பகவான் பிரவிருத்திக்குத்தடங்கலான தன் பிரவிருத்தியில் நின்று ஒழிதல்" என்று கூட ப்ரபத்தி லக்ஷணம் கூறுகிறார்கள். சேஷத்வாநு ஸந்தாநம் செய்பவன் ஒருபிரவிருத்தி யிலும் தானிறங்கமாட்டானன்றோ? பிரபத்தியையே உபாயமாக நினையாதவன் எப் பிரவிருத்தியில்தா னிறங்குவான்? எனவே பக்தியும் ப்ரபத்தியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாதலின் ஒருவரிடமே அவை யிருக்கமாட்டா. ஆதலின் பக்தி நிஷ்டர்க ளான ஆழ்வார்களைப் பரபந்நர் என்பது பொருந்தாது.

(4) உண்மைதான் நீ நினைப்பதுபோல் பக்தி, ஸாதந ரூப மாக ஆழ்வார்களுக்கு இருக்கும் பக்ஷத்தில் உன் கூற்று, சற்று பொருந்தும். ஆனால் அவர்களுடைய பக்தி ஸாதநரூபமன்று. நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் என்று அவன் பாதத்தை மட்டும் உபாயமாகப் பற்றியிருக்கும் ஆழ்வார்பக்தியையும் ஸாதந மாகக் கோண்டார் என்பது ஏற்குமோ? பின்னையவர்களது பக்தி தான் எது என்னில்? அத்யந்தப்ரீதிரூபமான ஸாத்யபக்தியென்



கிறோம். கர்மத்தை அங்கமாகவுடைய உபாஸநாரூபமான பக்தி தான் ஸாதநபக்தி. அத்தகைய பக்தி ஆழ்வாருக்கு இல்லை. விது ராதிகளைப்போல அபசூத்ராதிகரணத்திற்கு இலக்காகாவிடினும் ஸாதநபக்தியாயின் அவனருள இவர் பெற்ற வேற்றம் போய்விடும் ஆக ஸாத்யபக்தியென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. ஸாத்ய பக்தியை ஸாதந மென்று கூறமுடியாது. பகவத் விஷயமான காதலே ஸ்வயம்பிரயோஜனமானது. அதுவே மிக்க சுவை யுடைத்து.

"நின்புகழில், வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ-நீயவர்க்கு
வைகுந்தம் என்னருளும் வான்"

(உனது கல்யாணகுணங்களை அநுஸந்திப்பதைக்காட்டிலும் வைகுந்தம் இனிய தாமோ?) என்கிற உதாரப் பேச்சை நோக்கி டில் இவ்வுண்மை புலனும். ஆதல்பற்றித் தான் அதையே ஸாத்ய மாகக்கொண்டு "ஸாத்யபக்தி" யென்கிறார்கள். பிரயோஜனத்திற்கு ப்ரயோஜநாந்தராபேக்ஷை கிடையாதிறே. உபாஸநத்திற்கோ வெனின்? அவித்யா நிவிருத்தி ரூபமான மோக்ஷம் பிரயோஜன மாதலால் அது ஸாதனமாகிறது. ஸாதநமாயின் பிரவிருத்தியில் மூட்டும். பலனுக்காக ஸாத்யமாயின் பிரவிருத்தியில் மூட்டாது. அதுவே பலனாதலின் பலனடைந்தவன் அவ்விஷயத்திலேயே முயல்வதில்லை யல்லவா. ஆகவே ஸாத்யபக்தி நிவிருத்தி பரருக்கே யன்றி ப்ரவிருத்தி பரருக்கில்லை. சுருங்கக் கூறுமிடத்து ஸாத்ய பக்தியையே பிரபத்தி என்றிடில் அது பிசகாகாது. இப்பொழுது ஸாத்யபக்திக்கும் பிரபத்திக்கும் விரோதகந்தமாவது இருக்கிறதா வென்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

(5) ஸாத்ய பக்தியும் பிரபத்தியும் ஒன்றுதான் என்பதன் உண்மைக் கருத்தாவது:—ஸாத்யபக்தி யுள்ளவனுக்கவ்வளவே நிற்கவொண்ணாது. அதுதான் பிரபத்தியின் முந்தியநிலை. ப்ர பத்தி காரணத்வேநவே ஸாத்ய பக்தி எங்குமுளதாம். பகவத் விஷயமான காதல், தன் சேஷத்வரூபஸம்பந்தத்தை யுணராமல் நிலைநிற்க முடியாது. பார்யைக்குத் தன் பர்த்தாவினிடம் உள்ள காதலை, தான் அவன் காதலியென்று கருதாதவரை நிலைக்குமோ? இதனால் தான் ஸாத்யபக்திமான்களை ப்ரபந்நர் என்று காரியகார ணங்களின் அபேதத்தைக்கொண்டு வ்யவஹரிக்கிறார்கள். "ஹஞா

நெவவுராஜூஶாஜ வுராஷாநு" பக்தாநேவபராங்குசாதி புருஷாந் என்று பக்தர்களாகக் கூறப்படு மாழ்வார்களே, "காஸாரஸம் யதிபவாः கமலாஸஹாயஹனூாः வுரவத்தி வடி வீநிய தா ஜஹாஜூः"காஸாரஸம்யமிமுகாः கமலாஸஹாயபக்தா: ப்ரபத்தி பதவீநியதாமஹாந்த: என்று ப்ரபந்நர்களாகவ்யவஹரிக் கப்படுகிறார்கள். இதன் சைலியிலேயே கீழே காட்டிய உண்மை உணர்த்தப்படுகின்றதை உற்றுணர்மின்.

(6) இனி மற்றோர் சங்கை. ஆழ்வார்கள் பதின்மரும் ப்ர பந்நர் என்பதை ஒப்புக்கொள்கிறோம். மதுரகவிபோல்வார் ப்ர பந்நராவார்களா? அவர்கள் நித்யசத்ருவான பகவத்ஸௌந்தரி யத்திலாழங்கால்படுமவர்களன்றே? "மாமேகம்ஶரணம்வ்ரஜ" மாமேகம் சரணம்வ்ரஜ" என்று விதிக்கப்பட்ட ப்ரபத்தியவர் களுக் கேது? ஆசாரியனே உபாயோபேயமென்றன்றோ பற்றுவர் சரமபர்வநிஷ்டர். மதுரகவி யாழ்வார் நன்மையால் மிக்க நான் மறையாளர்கள் புன்மையாகக்கருதும் தன்னை ஆண்டிடும் தன்மை யான் சடகோபநம்பிதான் என்கிறார். இதுபோல் மணவாள மாமுனிகளும் " தந்தை நற்றாய் தாரம்தனயர் பெருஞ் செல்வம் என்றனக்கு நீயே எதிராசா " என்றும்,

தென்ன ரங்கர் தமக்காமோ தேவியர்கட்காமோ
சேனையர் கோன்முதலான சூரியர் கட்காமோ
மன்னியசீர் மாறனருள் மாறிதனக்காமோ
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்?
எதிராசா உனக் கன்றியானொருவர்க்காகேன்
உன்னருளாலெனக்கு ருசிதன்னையு முண்டாக்கி
ஒளிவிசும் பிலடியேனை ஒருப்படுத்து விரைந்தே.

என்றும் எதிராசனையே எல்லாமாகவும் பற்றியிருக்கிறார். இத் தகையோரை ப்ரபந்நர் என்று கூறமுடியுமோ? ஹதிவுரவதீய ஷிஷுஷூரெவொ ரா8ாநாஜாயூம நஜத" என்று சரமபர் வநிஷ்டர் பக்திப்ரபத்திகள் துஷ்கரங்களானபோது சரமபர் வமே உத்தாரகம் என்று நிஷ்கர்ஷித்திருப்பதும், மேலான சரம பர்வநிஷ்டர் துஷ்கரமான ப்ரபத்திமான்களாகார் என்பதை வலியுறுத்துகிறது என்று.



(7) இதற்குச் சுருக்கமாக விடையளித்து வாசகர்களிடம் அடுத்த கட்டுரை யெழுதுவதற்காக விடைபெற்றுக் கொள்ளு கிறோம். ஶரணாகதியின் ஸ்வரூபத்தை யலசிப் பார்த்தால் சர மபர்வமும் அதன் கண் அடங்கும் என்பதற்கு ஐயமில்லை. தச் சேஷத்வாநு ஸந்தாநம் ததீய சேஷத்வத்தளவிலன்றி நில்லாது அவனடிமையின் எல்லை நிலமாமிறே அவனடியார் தம்மடிமை. 88 ஊ ஹைஜூஹஷெவு வீரதிரஹ)யிகா ஹவெஊ" என்று அடிமை யின் எல்லைநிலம் சென்றவனிடமிறே! தானுவப்பதாக ஈசுவரனும் கூறுகிறார். எல்லைநிலமான ததீய சேஷத்வத்தளவில் சென்றவ னுக்குத் தான் ப்ரபந்நத்வ பூர்த்தி. உண்டபோது ஒரு வார்த்தை உண்ணாதபோதொருவார்த்தை பேசுபவரை பரிஹ ஸிப்பவரிறே சரமபர்வநிஷ்டர். உண்டபோது:—அநுபவிக் கிறபோது. ருஷி அரசனுக்கு விருந்தளித்தானெனில் அவன் பரிகரத்திற்குமென்று சொல்லவேண்டுமோ? ஈசுவரனைச் சேர்ந்தா ரை ப்ரபத்தி ரூபவிருந்திலிருந்து விலக்க முடியுமோ? உத்தமன் தன்னைவிடத் தன்னைச் சேர்ந்தாரை யுபசரிப்பதிலேயே கண்ணுங் கருத்தாயிருப்பான். அது போல் தான் ஈசுவரனும் தன்னைச் சேர்ந்தார் விஷயத்தில் இலை பூ முதலியவைகளையே அன்போடு கொடுத்திடல் "தடிஹம ஹகூ)வஹூரதம ஸ்ூாதி" என்று பெரு விருந்தாகக் கொள்ளுமவன். ஞானனந்த மயமான நன் பொருளை (ஆத்மாவை) அவனதென இசைந்து நல்கிடில் அது அவனுக்குப் பெரிய விருந்தாவதற்கையமென்ன? "விடிரா ஹாதி வுஹஜெஶவீதி மணவதிவ" என்று அநந்யார் ஹத்வ, அநந்யப்ரயோஜநத்வ விசிஷ்டமான விதுரனிட்ட வந்நத் தைப் பெருவிருந்தாகக் கண்ணன் கொண்டதைக் கண்டோ மிறே. மடிதடவாத சோற்றில் கடுங்கிறுக்கனிறே. ஆசார்யனே உபாயோபேயம் என்று ப்ரபத்தி பண்ணுபவருக்கு ப்ரபந்நத்வ பூர்த்தி யுண்டென்று இதனால் நிரூபிக்கப்பட்டது. ராஜஸம்பந்தி களை உபசரித்திடில் ராஜோபசாரம் செய்ததாமாப்போலே அவனடியாரைப் பற்றிடினுமவன் தன்னைப் பற்றினதாகவே கரு திக் கொள்கிறான். "மாமேகம்ஶரணம் வ்ரஜ" என்கிற இடத் தில் தன்னையும் தன்னைச் சேர்ந்தவனையும் எனக் கொள்ள வேண் டும். "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்று அவனைச் சொன்னால் அவனதாத்மாவான ஞானிகளையும் குறிக்கத் தட்டில்லை. ததீயவ்ய

திரிக்த மங்யார் ஹத்வம் என்றும் கொள்ளவேணும். ஆக ஊெவெய வ்ரவஷ்ஷெ, ஊெகேம்ஶரணம்வ்ரஜ, என்கிற இடங்களில் ஆசார்யாதி ப்ரபதநபரரையும் ஸ்வீகரித்தல் யுக்தமே. இல்லாதபோது சரமபர்வமும் த்யாஜ்ய கோடி ப்ரவிஷ்டமாகுமத்தனை.

(8) "ராமாநுஜாயநம" என்று ப்ரபத்தியிற் காட்டில் வேருக சரம பர்வத்தைக் கூறுவானென் என்னில்? ஆசாரியனிடம் பிரபத்தி செய்யாவிடினும், ஆநு கூல்யமாத்திரத்திய அவனது அபிமானத்திற் காளாவதால் மட்டும் கரையேறுவதைக் கொண்டு அங்ஙனம் கூறப்பட்டதெனக் கொள்க. திடமான "அத்யவஸாயம்" (தீர்மானம்) அபேக்ஷிதமாயிருக்கும் பிரபத்தியில் அதுவுமின்மையால் ஆசாரியன் அபிமானித்தல் ஸாகரமாம் அன்றோ? ஆதல்பற்றி ஆசாரியாபிமானம் வேறெனமேலாகச் செல்லப்பட்டதென்றறிக. ஆயின் ஆசாரியாபிமான பாத்திரரானவர் (ப்ரபத்தியின்மையால்) ப்ரபந்நராகாரே யெனில்? இவர்களுக்கு நேரேப்ரபத்தி யில்லாவிடினும் பரம்பரையாகப் ப்ரபத்தியுண்டு. (ஸ்வா ஶ்ரிதாசார்யாஶ்ரிதஸ்ய ஸம்பந்த ப்ரபத்திவைஶிஷ்ட்யம் ஆசார்யாபிமாந ஏவேதாவதீதி) ஆசாரியனிடம் ப்ரபத்தி நேரேயுளது. அவன் ஸம்பந்தமுள்ள சிஷ்யனிடம் ஆசாரியன் மூலமாயிருக்கிறது. ஆதலால் அவனையும் ப்ரபந்நன் என்னக்குறையில்லை. ஆசாரியப்ரபத்தியைவிட ஆசார்யாபிமானத்திலொதுங்குகைமேல். செய்(வயல்) நிறைய நீர் நின்றால் பக்கத்துவயலில் பொசிந்து காட்டுமாப்போல் ஆசாரிய நிஷ்ட ப்ரபத்தி யிவனிடமும் ஸம்பந்திக்கத் தட்டில்லை. நம் ஆசாரியர்கள் ஆசாரியாபிமானத்திலேயே ஒதுங்கிப் போவார்கள்.

"பூர்வே ஜ்ஞாயந்தே ஸர்வஜ்ஞதுர்யாஶ்ரிதோ யஸ்ய
உத்தரேஷ்வபி யஸ்யாஜ்ஞாதேஶிகா உபதேஶகா:"

என்று ஆசாரியர்களில் முன்னவரும், பின்னவரும், ஶரணாகதி ரக்ஷகம் ஶ்ரீராமாநுஜாயேதி" என்கிறபடியே திருபாதிக ஆசாரியனை உடையவர் சம்பந்தம் (திருமுடி திருவடி சம்பந்தங்களரல்) பெற்று உயர்ந்தனர் என்பதை இங்கு நோக்குக.

(9) இங்கு சுருங்கக் கூறுமிடத்து பகவானால் விதிக்கப்பட்ட பிரபத்தியே மோக்ஷஸாதகம். (ஆஶ்ரிதஸ்யாஶ்ரித ஸம்ப ந்தஸ்ய ஸம்பந்த ப்ரபத்தியோக காரணம், ஆஶ்ரிதஸ்ய ஸாக்ஷாத் ப்ரபந்நஸ்ய, ஆஶ்ரித ஸம்பந்தஸ்ய ஆசார்யாபிமாநதஸ்து இதி) நேராகவோ, பரம்பரையாகவோ ப்ரபத்தியுடையவர்கள் பிரபந்நர்கள். நமக்காக எம்பெருமானார் ரங்கராஜனிடம் பரபத்தி செய்திருப்பதால் நாமும் ப்ரபந்நர்களே.



"காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி
பாபக்ரியஸ்ய ஶரணம் பகவத்க்ஷமைவ ।
ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத்
க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ச்ரிதாநாம்,"

மூன்று காலங்களிலும் மூன்று கரணங்களினாலும் செய்யப்பட்ட பாபத்தை உடையவனுக்கு உன்க்ஷமைதான் சரணம். அது தேவரீரால்ரங்கராஜனிடம் ப்ரார்த்திக்கப்பட்டதென்பதே தேவரீரை யடைந்தோருக்கு க்ஷேமம்) என்னும்வரவர முனிகளின் பிரமாண மிங்கு அநுஸந்தேயம். ஆக நமக்கெல்லா மெம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிருப்பே அமையும்.

---

## ஸ்ரீபாஷ்யபாட பரிஷ்கரணம்.

(ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம். அண்ணங்கராசாரியர்.)

அடியேனுடைய தத்வப்ரதிஷ்டா க்ரந்தத்தில் ப்ராஸங்கிகமாக, ஸ்ரீபாஷ்யத்தில் நேர்ந்துள்ள இரண்டுபாடப் பிழைகளைப் பற்றி ப்ரஸ்தாவம் செய்யப்பட்டிருந்தது. முதல் ஸூத்ர பாஷ்யத்தில் [ஶ்ருதி ஶதஸஹஸ்ரவாச] என்ற ஸ்ரீஸூக்தியில் ஸஹஸ்ரவாச என்று ஓதப்பட்டுவருவதும், சரமஸூத்ரபாஷ்ய அவதாரிகையில் [பாநராவ்ருத்தி ஸம்ஹவாஶங்கா] என்ற ஸ்ரீஸூக்தியில் ஸம்ஹாவநாஶங்கா என்று ஓதப்பட்டுவருவதும் இடைச் செருகலாக நேர்ந்த பிழைகள் என்றும் ப்ராசீந தாளகோஶங்களில் இத்தகைய பிழையானபாடம் இல்லையென்றும், இப்பாடங்கள் ஒரு வகையாலும் பொருந்தவும் மாட்டா என்றும் அடியேன் விரிவாக நிரூபணம் செய்திருக்கிறேன். ஸ்ரீமான். உ. வே. சேனங்குளம் கந்தாடை ராமாநுஜாசார்யர்ஸ்வாமி யென்கிற மஹான்,

மேற்குறித்த இரண்டிடங்களிலும் தற்காலம் ஓதப்பட்டுவருகிற பாடங்களே அழகாகப் பொருந்துமென்று இந்த வைஜயந்தீ பத்ரிகையிலேயே எழுதியிருந்தார். அதன் பிறகு அடியேனுடைய நிரூபணங்களுக்குள்ள உபபத்திகளை ஆராய்ச்சி மணிமாலையில் விரிவாக வெளியிட்டேன்.

தற்காலம் ஸ்ரீபாஷ்யத்தைப் பத்து வியாக்கியானங்களோடு சென்னையில் தேவநாகரிலிபியில் பதிப்பித்துவருகின்ற வித்வான்களும் வ்ருதிவ்ருஸவஸம்ஹவாஸ என்ற பாடத்தையே முதலில் பதிப்பித்து மாத ஸஞ்சிகையை வெளியிட்டுவிட்டு, பிறகு அடியேனுடைய நிரூபணங்களை ஆமோதித்து (அடுத்த ஸஞ்சிகையில்) "ஸஹூவாஸ என்கிற பாடமே ஆசார்யாபிமதமாகத் தெரிகிறது" என்று வெளியிட்டார்கள்.

அடியேனுடைய நண்பரான ஸ்ரீமான் ஆராவமுதாசாரியர் இவ்விஷயங்களைச் சுருக்கமாகத் திருவாடிப்பூர வைஜயந்தீ ஸஞ்சிகையில் வெளியிடுவித்திருந்தார். அதைக் கடாக்ஷித்தருளின ஸ்ரீ. உ. வே. மு. அ. திருவேங்கடாசாரியர் ஸ்வாமி "ஸ்ரீபாஷ்ய விஷய ப்ரமநிராஸ:" என்கிற வொரு வியாஸமெழுதிச் சென்ற புரட்டாசித் திருவோணஸஞ்சிகையில் வெளியிடுவித்துள்ளார். இந்தஸ்வாமியின் திருவுள்ளமாவது—(1) வ்ருதிவ்ருஸவஸம்ஹவாஸ என்கிறபாடமே யுக்தம். இதுவே ச்ருதப்ரகாசிகைக்கு நன்கு பொருந்துவது. (2) ஸம்ஹாவநாஶங்கா என்பது யாரோசில அசடுகள் சொல்லிவருகிற பாடமாதலால் அதை எடுத்துக் கழிக்க வேண்டிய அவசியமேயில்லை—என்பதே. ஸ்ரீஉவே. சே. கந்தாடை ராமாநுஜாசார்ய ஸ்வாமியைப்போல் இந்தஸ்வாமியும் ஸம்ஹாவநாஶங்கா என்கிற ஸ்வாரஸ்யத்தை ஸமர்த்திக்க முயற்சி கொள்ளாததைப்பற்றி உவப்பே. மைஸூரிலும் ஸ்ருஷ்டியும் பரீக்ஷை கொடுத்த பண்டிதரென்று உலாவுகின்ற அந்த மஹநீயருடைய திருவுள்ளம் கன்றுமாறு "ஸநிரோதகர்களின் ஸ்வதந்த்ரவாதங்கள்" என்று இவர் அவலீலையாக எழுதினதைப் பற்றிமாத்திரம் உள் வெதும்புகின்றேன். ப்ராஜ்ஞர்கள் பரிசோதித்துப் பதிப்பித்த ஸ்ரீகோஶங்களிலும், அநேக வித்வான்களின் திருவாய்களிலும் "ஸம்ஹாவநாஶங்கா" என்ற பாடத்தை அடியேன் கண்டும் கேட்டுமிருந்தபடியால்தான் அதைபற்றிப்ப



ப்ரஸ்தாவம் விளைந்தது. இந்த (மு. அ. தி.) ஸ்வாமி வ்ருதிவ்ருஸவஸம்ஹவாஸ என்பதே சுத்தபாடம் என்று போராடுவது போலவே, ஸம்ஹாவநாஶங்கா என்பதே சுத்தபாடமென்று போராடுகிற மஹாபண்டிதர்களுமுளராதலால், ஸம்ஹவாஸ மென்ற ஸ்வாரஸ்யத்தை நிரஸிக்க முயன்றதுபோலவே ஸம்ஹாவநாஶங்கா என்ற ஸ்வாரஸ்யத்தையும் நிரஸிக்க அடியேன் முயன்றது மிகவும் யுக்தமே.

வ்ருக்ஷதம், ஸம்ஹவாஸ என்கிற பாடமே யுக்தமென்று ஸமர்த்திக்கப்புகுந்த ஸ்ரீமத் திருவேங்கடாசார்ய ஸ்வாமியின் நிரூபணங்களைப்பற்றி அடியேனுடைய விமர்சங்களை இங்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். "வ்ருதிவ்ருஸவ ஸம்ஹவாஸ என்கிற விஷயத்தில் ச்ருதப்ரகாசிகையின் உபபாதநத்தை நன்றாக யோசித்தால் ஸம்ஹவாஸ என்கிறபாடமே யுக்தமாகத் தோற்றுகிறது"—என்று முதலில் எழுதிவிட்டு, ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்திகளையும் உதாஹரித்துக்காட்டிவிட்டு, "இந்த உபபாதந ப்ரகாரத்தால் ஸம்ஹவாஸ என்கிற பாடமே அங்கீகரித்ததாக ஏற்படுகிறது" என்று கூறி, "எப்படியேனில்" என்று தொடங்கி மேல் உபபாதனம் செய்திருக்குமழகு ஆச்சரியமானது. இவர்தாமெடுத்துக்காட்டியுள்ள ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியிலிருந்து ஸம்ஹவாஸ என்கிறபாடமே புலப்படுகிறதென்பதை யன்றோ நிரூபித்துக்காட்டவேண்டும். அதற்காகவேயன்றோ (எப்படியெனில்) என்று அவதாரிகையும் இவர் இட்டுக்கொண்டார். மேலே இவர் செய்கிற நிரூபணத்திற்கும் ச்ருதப்ரகாசிகைக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்பதை அனைவரும் காணலாம். ததாஹி;—

"ஸஹூவாஸ என்று பாடமானால் ப்ரதிப்ரஸவம் இருப்பதால் என்று அர்த்தமாகும். இந்த வார்த்திகம் ஸித்தாந்த கௌமுதி ஸமாஸவிதிகள் படித்தவர்களெல்லாருக்கும் இருப்பதாகத் தெரிந்தவிஷயம். அவர்களுக்கு 'இருப்பதினால்' என்று சொல்லவேண்டியதில்லை" என்கிறவிதனையே ஸ்வஹஸ்தம் எழுதிபுள்ளார். இது இவருடைய சொந்த யுக்திவாதத்திற் சேருமத்தனை போக்கி ச்ருத ப்ரகாசிகா ஸூக்திக்கு இது விவரணமாகுமோ? இவர் "எப்படியெனில்" என்று ஆரம்பித்தது தம் சொந்த யுக்தியை விவரிப்பதற்கோ? அன்று. ச்ருதப்ரகாஶிகா

காரருடைய ஸ்ரீ ஸூக்தியின் ஹ்ருதயத்தை விவரிக்கப் புகுவ தாக ப்ரவேஶம் காட்டிவிட்டு அஸம்பத்தமான வேறொன்றை எழுதப் புகுந்துவிட்டார்.

இவருடைய அபிப்ராயம் முற்றிலும் பிசகு என்பதை ஸுஸ் பஷ்டமாக நிரூபிக்கிறேன் காண்மின். இங்கு ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாதிக்கிற விஷயம் வ்யாகரண ஶாஸ்த்ரம் வாசித்தவர்களுக்கெல் லாம் தெரியுமாகையாலே அதை இவர் எடுத்துக்காட்டுவது நிஷ் பலம் என்று இவர் கருதுவது யுக்தமன்று. அந்தந்த ஶாஸ்த்ரங் களை வாசித்தவர்களுக்கு அவ்வவ் விஷயங்கள் தெரிந்தவையே. ஆதலால் எதுவுமே எழுத வேண்டாவாகும். மல்லிநாதர் முத லானோர் வியாக்கியானங்களில் அடிக்கடி உக்தோऽர்த: என்றும் இதிபாவ: என்றும், இதிவாணிநீ: என்றும் பலபல ப்ரமாணங் களை உதாஹரிக்கிறார்கள். அமரம்வாசியாதாரில்லை; அப்படி யிருக்க உக்தோऽர்த: என்று இவர் ஏன் எழுதுகிறார்? வயம்வ்ருத்த:॥ ஜ்ஞாதாக்களுக்கு ஸ்மரிப்பித்தல், அஜ்ஞர்களுக்கு அபூர்வமாகத் தெரிவித்தல் என்கிற இரண்டையும் பயனாகக் கருதிப் பல பல ஶாஸ்த்ரார்த்தங்களை வ்யாக்யாதாக்கள் ஆங்காங்கு எழுதிவருவது வழக்கம். ஒன்று பார்க்கலாம். ப்ரஹ்மஸூத்ரத்தில் "அநாவ்ரு த்திஶ்ஶப்தாத் அநாவ்ருத்திஶ்ஶப்தாத்" என்பது கடைசி ஸூத்ரம். இதில் [ஶப்தாத்] என்பதற்கு ஶாஸ்திரமிருக்கிறபடியாலே என்று அர்த் தம். அங்கு விவக்ஷிதமான ஸவப்ரகாஶ்யத்வஹேதுகத்வ ரூபமான ஸாதநிஷ்டத்வம் மிருப்பது வேதாந்திகளுக்குத் தெரிந்ததே. அதை வியாஸர் புதிதாக நிருமித்துவிடவில்லை. அது இருக்கிறது என்று காட்டுவது தவிர வேறொன்றும் செய்யவுமில்லை. அந்த ஒரு ஸூத்திரத்தில் மாத்திரமன்று; நூற்றுக்கணக்கான ஸூத் ரங்களில் (ஶ்ருதேஸ்து) என்றும் (ஶ்ருதேஸ்து) என்றும் தத் த்ரோண ஸத்பாவஶாஸ்த்ரத்தையே காட்டி வருகிறார் ஶ்ருதிஸ்ம்ருதி ஸிஜ்ஞர்களுக்கு அவை தெரியுமாதலால் இவர் எதுக்கு தத்ஸத்பாவத் தைக் கூறுகிறாரென்று கேட்டால் என்ன விடையோ? தெரிய வேணும்.

இரண்டாவதாக இந்த ஸ்வாமி எழுதுவ தென்னவென்றால். 'சாஸ்த்திரத்திலிருப்பதால் என்று சொன்னாலும், 'அது ப்ரக்ரு தத்தில் ஸம்பவிக்கிறபடியால்' என்று ஶேஷ பூரணம் பண்ணியே



யாகவேணும் என்று அபூர்வ-விலக்ஷண-நியமஶிக்ஷணம் பண்ணு கிறார். இதுவும் அயுக்தம். ப்ரக்ருதத்திற்குப் பொருந்தக் கூடிய ப்ரமாணங்களைத் தானே மஹான்கள் எடுத்துக்காட்டுவர்கள். ஶங்கா பரிஹார ரூபமாக ஶாஸ்த்ரத்தை யெடுத்துக்காட்டின மாத்திரத்திலேயே அது ப்ரக்ருதத்தில் இஷ்ட ஸாதகம் என்பது தேறிவிட்டபடியால் இவர்சொல்லுகிற ஶேஷபூரணம் ஸர்வாத்மநா அநபேக்ஷிதம். பாதகஶாஸ்த்ர ஸத்பாவத்தைக் கொண்டு உதா விதமான ஶங்கைக்குப் பரிஹாரமாக ஸாதக ஶாஸ்த்ர ஸத்பாவ ப்ரதர்ஶநமே அபேக்ஷிதமென்று தெளிக.

ஶாஸ்திரத்தில் ப்ரதிபந்நமிருந்தாலும் அது ப்ரக்ருதத் தில் ஸம்பவிக்கிறதென்பதை உபபாதநம் பண்ணிக்காட்டினால் தான் வ்யாக்யாந பத்ததி யாகும் என்று இவர் எழுதுவது ஸ்ரீபாஷ்யத்திற்குக் குறை கூறினபடியே யாகும். ஏனென்னில்; ப்ரதிபந்ந ஶாஸ்த்ரம் ப்ரக்ருதத்தில் ஸம்பவிக்கிற தென் பதை ஸ்ரீபாஷ்யகாரர் எங்கே உபபாதநம் பண்ணிக் காட்டியிருக் கிறார்? ஒரு அக்ஷரமேனு முண்டோ? ஸம்பவாத் என்று ஸாதித் திருக்கிறாரே யென்னில்; ப்ரதிஜ்ஞாமாத்ரமே உபபாதநமாய் விடுமானால் எல்லாரும் க்ரந்தகாரர்களாக ஆய்விடலாம். ஸம்ப விப்பதற்கு ஹேது யுக்திகளை நிரூபணம் பண்ணிக் காட்டினாலன்றோ உபபாதநமாகும். அது அணுமாத்திரமும் ஸ்ரீபாஷ்யத்தில் இல்லையே;

ஸ்ரீ பாஷ்யத்தில் இல்லாவிடினும் ச்ருதப்ரிகாஶிகையில் அது உள்ளது என்னில்; ச்ருதப்ரகாஶிகையிலும் இது கிடையா தென்பதை நாம் அடுத்தபடியாகவே விவரிக்கப்போகிறோம். இவரிஷ்டப்படி வைத்துக் கொண்டாலும், ஸம்பவாத் என்பது ஸ்ரீபாஷ்யத்திலுள்ளதாக இவர் சொல்லுகிறாராகையாலே ஸம்பவ ப்ரகாரமான உபபாதநம் அதுதன்னிலேயே யிருந்தாலன்றிப் பயனில்லையே. க்ரந்தகாரஶைலீ என்று இவர் எழுதியிருக் கிறாரே, எதை க்ரந்தகாரஶைலியாக எழுதுகிறார்? ப்ரதிஜ்ஞா மாத் ரத்தையேயா க்ரந்த காரஶைலியாக எழுதுகிறார்? அந்தோ! இது மிக நன்று;

இங்கே ச்ருதப்ரகாஶிகையின் க்ருத்யம் எவ்வளவென்னில்; ஜிஜ்ஞாஸா என்கிறவிடத்தில் ப்ரதிபந்ந ஶாஸ்த்ரம்

ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற விசார லேசமும் அவர் செய்திருக்கவில்லை. உள்ள பங்க்தியை யாவரும் காணலாம். அவர் எவ்வளவில் போயிருக்கிறு ரென்னில்; கேண்மின் ;—வ்யாகரண ஶாஸ்த்ரத்தில் [ப்ரதிபதவிதானாஷஷ்டீ ந ஸமஸ்யதே] என்றும் [கர்த்ருகர்மணோ: க்ருதி] என்றும் இரண்டு அநுஶாஸநங்களுள்ளன. ஒரு ஶாஸ்த்ரத்தைக் கொண்டு மற்றொரு ஶாஸ்த்ரத்தை ஸர்வாத்மநா பாதிப்பது கூடாது. அப்படியானல் பாதிதமான ஶாஸ்த்ரம் உதியாமலே யிருந்து விடலாம். ஶப்தஶாஸ்த்ரவிதாம் நக: இரண்டு ஶாஸ்த்ரங்களுக்கும் ஸாமஞ்ஜஸ்யம் காட்டித்தீரவேண்டியது ப்ராமாணிகர்களின் கடமை. ஆகவே மேலெடுத்துக் காட்டிய ஸாமாந்யநிஷேத ஶாஸ்த்ரம், ப்ரதிபதவிதான ஶாஸ்த்ரம் என்ற இரண்டனுள் ப்ரதிபதவிதான ஶாஸ்த்ரத்திற்கு ப்ராபல்யம் இசைந்தால் நிஷேதஶாஸ்த்ரத்திற்கு ஏதேனு மோரிடத்திலாவது ப்ரவ்ருத்தி காட்ட வேண்டுமே; ப்ரதிபதவிதானா ஷஷ்டீ ஸாமாந்யநிஷேத ஶாஸ்த்ரம் ஸாவகாஶமாகக் கூடிய இடம் எது? என்று விசாரித்துக்கொண்டு (ஸர்பிஷோஜ்ஞாநம்) என்ற விடம் ஸாமாந்யநிஷேத ஶாஸ்த்ராவகாஶமென்று காட்டினர். அதற்குமேல், ஜ்ஞாநம் என்பதும் ஜிஜ்ஞாஸா என்பது போலவே க்ருதந்தமே யாதலால் [கர்த்ருகர்மணோ: க்ருதி] என்கிற ப்ரதிபதவிதானஶாஸ்த்ரம் அங்கும் ப்ரவர்த்திக்கத் தடையில்லாமையாலே * ப்ரதிபதோக்தநிஷேத ஶாஸ்த்ர வையர்த்யமே வந்து விடுகிறதே என்கிற ஶங்கையை யதோக்தரீதியாலே தோற்றுவித்து, மேல் ததாவ்ருத்தியாலே என்ன ஸமாதானம் காட்டினு ரென்னில்; கர்த்ருகர்மா ஷஷ்டீ என்பதற்கு கர்த்ருகர்மணோ: க்ருதி விஹிதா ஷஷ்டீ என்று பொருளாதலாலும் ஸர்பிஷ: என்பதிலுள்ள ஷஷ்டியானது ஜானாதேரஜ்ஞாநார்த்தஸ்ய கரணே என்கிற ஸூத்ரத்தால் விஹிதமாதலாலும், கர்த்ருகர்மா ஷஷ்டீ ஸமஸ்யதே என்கிற ப்ரதிபதவிதானஶாஸ்த்ரம் அங்கு ப்ரவர்த்திக்க வழியில்லை; ஆகவே ஸாமாந்யநிஷேதஶாஸ்த்ரம் அங்கு ஸாவகாஶமே யாயிற்று என்று தலைக் கட்டினர். ஸாவதி,



இவ்வளவும் ஶப்தஶாஸ்த்ர ஸம்பந்த விசார ப்ரஸக்தமேயன்றி, ப்ரஹ்மஜிஜ்ஞாஸா என்கிற ப்ரக்ருத ஸ்தலத்தில் ப்ரதிபதவிதான ஶாஸ்த்ரம் ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற ப்ரஸ்தாவமும் ச்ருதப்ரகாஶிகையில் கிடையாது. இப்படி ப்ரமிப்பதற்குங்கூட அங்கு ஸாதரீத்ய லேசமும் இல்லாதிருக்க எது கொண்டு இவர் ப்ரமித்தாரோ அறியோம்.

மேலும், இவர் கருதுகிறபடியே கொண்டாலும் [ப்ரதிபதவிதான ஶாஸ்த்ரே ப்ரவ்ருத்தி ஸம்பவாத்] என்று பங்க்தியிருந்திருக்கவேணும். ப்ரதிபதவிதான ஸம்பவாத் என்பது ஶாப்திக வழியே யன்று. ந்யாயஶாஸ்த்ரயோரேவ நாமாவகம் ப்ரயோகஸ்து மாதலால் ஸ்ரீபாஷ்யகாரர் ஒருகாலும் அப்படி அசட்டு ப்ரயோகம் செய்தருள மாட்டார். மேலும் முதலில் எவ்விதமான தோஷம் ப்ரஸக்தமாயிற்று என்பதைக் கவனித்தால் மேலே எவ்விதமான ஸமாதானம் சொல்லவுரியது என்பதும் தெளிவாகும். வ்யாகரண ஶாஸ்த்ரத்தில் ஸமாஸாபவாதமும் இருக்கிறதே என்று தோஷம் வந்ததே யல்லது வேறில்லை. அதற்குத்தக்க ஸமாதாநம் என்ன? அந்த ஶாஸ்த்ரத்திலேயே அந்த ஸமாஸாபவாதத்திற்கும் அபவாதம் இருக்கிறது என்ன வேண்டுவதே. அதைத்தான் பாஷ்யகாரர் அருளிச் செய்தார். அதற்கு ஏற்ற ஸ்ரீஸூக்தி ஸமாஸவிதானம் என்பதேயாம். ப்ரதிபதவிதான ஶாஸ்த்ரம் இங்கு ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற விசாரத்திற்கு உத்திதியே கிடையாது. கர்மணி ஷஷ்ட்யா ஸமாஸநிஷேதம் ப்ரக்ருதத்தில் ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற விசாரம் எப்படி இல்லையோ? அப்படியேதான் இதுவும் என்று நன்கு தெளியக்கடவது. ஶாஸ்த்ரேந, தத்வடீகா பங்க்திகளைப்பற்றி இவர் எழுதியிருப்பதும் ஸாஹஸமாத்ரம். (ஶேஷபூரணம்—ஶேஷபூரணம்) என்று இவர் அடிக்கடி ஸாஹஸமாத்ரமான தொன்றை எழுதிக்கொண்டிருப்பது வ்யுத்பந்நர்கள் அருவருக்கத்தக்கது. ஶேஷம் கோலேந பூரண என்னப்பட்ட ஶேஷபூரண மொன்றே இவர்க்கு ஶரணமென்னலாம். தாத்ருஶ ஶேஷபூரணம் இவர்க்கு ஸதா ப்ரத்யக்ஷ உண்டு.

திருத்தம் செய்யவேண்டியிருந்தால் நிதானித்து யோசித்துச் செய்யவேண்டுமென்று இவர் எழுதுகிறார். அடியேன் திருத்தம் செய்யவந்தவனல்லேன். ஈவவாം வ்யவாஸவா ஹாஜஷ்த்திறல் திரோஹிதமாயிருந்த ஸவாംத்தையெடுத்துக் காட்டினேனத்தனை. தாம் பார்த்த பல ஓலை ஸ்ரீ கோஶங்களில் ஸம்ஹவாக என்றே பாட மிருக்கின்றதாக இவர் எழுதுவது யதார்த்தமாயிருக்குமாயின், ஈநஸஹாஷவயஜ என்றே பல ஓலை ஸ்ரீ கோஶங்களிலும் தாம் கண்டதாகத் தாமே தெரிவிக்கும் ஈவவாംத்தோடொக்க அந்த ஈவவாംமும் ஸஜநீய மென்று தாமே தெளியக் கடவர்.

ஹாஷநீவ ஸாரங்கள் பலவற்றிலும் ஈநஸஹாஷி........ என்றே காணப்பட்டாலும் அதைப் பொருள்படுத்தும் பண்டிதர் எங்குமில்லை. ஸஷ்க்ஜ்ஞாந என்பதைச் சேர்த்து எழுதவேண்டுமிடங்களில் ஸஷ்ஜ்ஞாந என்றெழுதாமல் ஸஷ்ஜ்ஞாந என்றே பெரும்பாலும் எழுதியும் அச்சிட்டுமிருந்தாலும் அதைக் கணிசிப்பாரில்லாதாப்போலவே இந்த ஹகாரப் பிழையையும் கணிசிப்பாரில்லை. ஈநஸஷாஷி யென்றே ஈஷிஜ்ஞஶாஷிகளிலெங்கும் ஸவ்யஸிஃ வாம். இதைப்பற்றி இவரெழுதுமைதிஹ்யம் ஈதிகாவிஶ்வஸநீயமும் ஈசாஸவு மாகும். தகஷ்த்ரயவ்யாவ்யாநத்தில் ஶாமம்என்று நாலைந்து இடங்களில் ஸாதிக்கப்பட்டு இருக்கிறது. அவ்விடங்களிலெல்லாம் ஶோமம் என்றே அச்சிட்டு விட்டார்கள். அது கொண்டு மயங்குவாராருமில்லை.

கிംவஹநா? ஸ்ரீ காஞ்சியில் ஸப்ரஸித்த வித்வானாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ உவே. எம்பாவையங்கார் ஸ்வாமி திருமாளிகையிலிருந்த ஸ்ரீ ஹாஷ்ய தாளகோஶத்தை அடியேன் ஐடிம வரமாக ஸம்பாதித்து ஸேவித்ததில் ஸஹவாக என்கிற பாடம் காணப்பட்டது. கோயில் திருநாராயணபுரம் முதலிய இடங்களுக்கு விடைகொள்ளும்போதுகளில் அங்கங்கு ஓலை ஸ்ரீகோஶங்களை ஆராய்ந்ததிலும் பெரியோர்களையடியணிந்து கேட்டதிலும் இதுவேதான் ஈநவஷவாം மென்று அறுதியிடப்பட்டது. ஸஹிஸவிசாஸ நிணீதமான வதுவே ஸமயத்தில் வ்யகாஶிதமாயிற்று. இதில் ஸஹியிலாதாரைப்பற்றி நமக்குக் கவலையில்லை. வாംவாஸாக.

# ஸ்ரீ இராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

[ஸ்ரீ. உ. வே. கீரனூர் நரஸிஹ்மாசாரியார்,
அட்வகேட், திருவல்லிக்கேணி.]

மதம் என்றும் தர்சனம் என்றும் சொல்லப்படும் சாஸ்திரங்களின் கொள்கைகளினால் நாம் இப்பிறப்பில் சுகமே வாழ்ந்து மறுபிறப்பிலும் பேறு பெற்றாலன்றி பிரயோஜனமில்லை. ஸ்ரீ இராமாநுஜ ஸித்தாந்தம் என்று சொல்லப்படுகிற மதமானது நாம் பிரத்யக்ஷமாய் கண்டு அநுபவிக்கிற நம்முடைய சரீர தத்வத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட மதம். இதில் சொல்லப்படும் தத்வங்கள் அனைத்தும் சரீராத்ம பாவத்திலிருந்து ஸம்பாவிதமாகிறது. உடலிலுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றும் உயிருக்கு அநந்யார்ஹசேஷமாய் அந்த சேஷத்வத்தின் காரியமாய் ஒன்றோடொன்று ஒத்து உழைத்து வருகிறதல்லவா? இந்த சரீராத்ம பாவத்திலிருந்து தோன்றும் தத்வம் ஹிதம் புருஷார்த்தங்களாகிற இம்மூன்றையும் பரக்கப் பேசுவதுதான் விசிஷ்டாத்வைத மதம். பல காரணங்களினால் இம்மதத்தின் அருமை பெருமைகளை நம்மவர்கள் பலருமே அறியாமலிருக்க மற்றவர்கள் எவரும் அறியவில்லை என்பது ஆச்சரியமல்ல. கலா பேதங்களாலும் கிராம குலா திவ்யபதேசங்களாலும் அஹங்காரம் மகாரங்கள் மேலிட்டு தட்டித் தடுமாறுகிறோம். இதை நீக்கவேண்டுவது அவசியம். ஸ்ரீ இராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி பத்திராதிபர் இக்குறைகளை நீக்கப் பல படிகளாலும் பிரயத்தனங்கள் பண்ணிவருகிறார். அப்பத்திரிகையை ஆந்தனையும் ஆதரிப்பது அவசியம். பல துளி பெரு வெள்ளமாம். வருஷச் சந்தா 1—12—0. அந்தச் சந்தா போதாததால் சிலர் மாதம் ஒரு ரூபாய் உபகரித்து வருகிறார்கள். சக்தியாநுஸாரம் விஷய தானமும் பொருள் தானமும் பண்ணி இப்பத்திரிகையை அபிவிருத்தி செய்யவேண்டு மென்பதுதான் அடியேன் கைகூப்பி வணங்கிச்செய்யும் விண்ணப்பம்.

[ஸ்ரீ. உ. வே. ஆர், கேசவய்யங்கார், அட்வகேட்,
திருவல்லிக்கேணி.

“ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி” எனும் திருநாமம் பூண்ட இப்பத்திரிகையைத் தகவும் வலிமையும் பொருந்திய மஹா ரஸிகரான வடகரை ஸ்ரீ. உப. வே. ராமாநுஜாசாரிய ஸ்வாமி தலைவராயிருந்து மாதந்தோறும் வெளியிட்டு வருகிறார். தற்பொழுது இப்பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு ஆரம்பமாகப் போகிறது. எம்பெருமானார் தரிசனத்தைக் கசடற வோதிக்கற்று உலகெங்கும் பரவச்செய்வதே ஸ்ரீ வைஷ்ணவர்

களுக்கு பரம புருஷார்த்தம். இத்தரிசனம் ஒன்றேதான் "அகில தம: கர்சனம்" ஈதொன்றே ஸர்வலோக ஹிதைஷி. பரன் ஸர்வ சேதாசேதந விசிஷ்டன். உலகனைத்தும் பரனுக்கே விசேஷணம், எனும் எம்பெருமானார் தரிசன உண்மையறிவின்மைதான் உலகத்தின் குழப்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணம். அன்பே சேதநஸ்வரூபம். அருளே ஈசுவர ஸ்வரூபம். உலகனைத்தும் பரனுக்கே சரீரம், எனும் மறைமுடி வுண்மையே எம்பெருமானார் தரிசனமாய் அவதரித்தது. இவ்வொன்றே உலகு காக்கும் உண்மை. இத்தரிசன உண்மையை நன்கு விளக்கிப் பரவச்செய்வதே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு என்று முற்ற ஓர் கைங்கரியம். "சாரீரகம்" எனும் திருநாமம் இத்தரிசனம் ஒன்றில்தான் இசைந்து நிலை நின்றது. ஸ்ரீ பாஷ்யகாரர் விபூதிகளா யிருத்தலாலேயே ஸ்வதஸ்ஸித்தமான பரஸ்பர மித்ர பாவமும், சேஷபாவமும் விளங்கி நிற்கும் நமக்குள்ளேயே காலகதியால் பிறப்பட்டார் சிலர்களுடைய சொற்களும் நூற்களும் நமது ஸ்வரூபத்தை மறைக்கவும், நாம் ஒருவரை ஒருவர் அணுகாதிருக்கவும், ஊடு சுவர்களாயே போந்தன என்பதை உணர்ந்தார் துயருறாதிருக்க முடியாது. அச்சுவரிடித்து அத்துயர் தீர்ப்பதே எம்பெருமானார்க்கு அன்னார் விபூதிகள் செய்யும் பணி. இப்பணி பூண்டாரையே எம்பெருமானார் ஆட்கொள்வார் என்பது அடியேன் துணிவு. இப்பணி பூண்டார் இப்பத்திராதிபர். பத்திரிகை வாயிலாக வெளியிடக்கூடிய உண்மைகள் சில. உபதேசத்தால் அறியப்பட வேண்டிய ரஹஸ்யங்கள் சில. ஈதே தொல்நெறி. இந்நெறி காத்து உண்மை விளக்குவதே சான்றோர் கடன். உண்மையை உள்ளவாறே உலகு காமுறுமாறு விளக்கவேண்டும். அதுவே அரிய அறம். இக்காலத்திய சிலர் அவ்வறம் துறந்து மனம் போன போக்கெல்லாம் சென்று தாம் வாய்படைத்ததை மட்டிலுமே விளக்கச் சொல்மாரி பொழியுமவையெல்லாம் அபசார கோடியிலேயே அடைக்கப்பட்டு ப்ராமாணிகர்களுக்கு அநாதரணீயங்களாயே ஒழியும். அத்தகைய கோது எள்ளளவும் அணுகாது இப்பத்திராதிபர் தொல்நெறி நின்று அரிய ஆராய்ச்சிகளைச்செய்து ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த உண்மை எம்போலியர்களுக்கும் நன்கு புலப்படுமாறு எளிய நடையில் ரஸம் பெருக எழுதப்பட்டு வருவது சாலவும்போற்றி யுகக்கத்தக்கது. இவ்வாறே மேன்மேலும் ஓங்கி வளர்ந்து எங்கும் நன்கே பரவுமாறு ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் இப்பத்திரிகையைப் பொருளாலும், விஷயத்தாலும், உதவி, ஆதரிக்கும் கடமைப் பாடுடையார்கள் என்பது அடியேன் செய்யும் விண்ணப்பம்.

---

**குறிப்பு :—இச் சஞ்சிகை 284-ம் பக்கம் 9-வது வரியில் பேருபாயமும் என்பதை பேறுமுபாயமும் என்று திருத்திப் படிக்கவும்.**



5

தோழப்பர் குமாரர்களில் 3-வது குமாரரான ஈயான் ராமாநுஜாசார்யர் குமாரர்கள். 1 தேவப்பெருமாள் பிள்ளை 2 திருக்கோபுரத்து நாயனர். இவர்களில், தேவப்பெருமாள் பிள்ளைக்குத் திரு நக்ஷத்திரம் பால்குநஹஸ்தம். இவருக்கு ஆசார்யரும் உபயவேதாந்தமும் ஸாதித்தருளினவரும் திருத்தகப்பனரான ஈயான் தேவப்பெருமாள் பிள்ளை. இவர் தனியன்.

"ராமாநுஜஸ்ய தநயம் கல்யாண குண பூஷணம்
வாதூல குல ஜீவாதும் தேவாதிப குரும் பஜே"

2 திருக்கோபுரத்து நாயனர் திரு நக்ஷத்திரம், கும்பஜ்யேஷ்டை. இவர் செய்தருளின ப்ரபந்தம் யதிராஜ விஜயம், விம்சதி, லக்ஷ்மீஸ்தவம், ஸ்ரீரங்கராஜ விஜயம், சதுஶ்லோகீ. இவர் தனியன்.

"ஸ்ரீமந் லக்ஷ்மண யோகீந்த்ர கருணா பரி ப்ரும்ஹிதம்
ராமாநுஜ குரோஸ் ஸூநும் கோபுரேச குரும் பஜே."

"கோபுரேச குருர் ஜீயாத் வாதூல குலசேகர:
ப்ரபலாயந்தி யந்நாமஸ்மரணாத் ப்ரதிவாதிந:."

"வந்தே கோபுராதீசம் வாதூல குலபூஷணம்
ராமாநுஜார்ய ஸத்புத்ரம் ஜ்ஞாநவைராக்ய ஸம்பதம்."

இவர் காலத்தில் நரஸிம்ஹ ராஜா துரைத்தனம் பஹுநாள் நடக்கையாலே திருவரங்கேசனுடைய ஸ்ரீகார்யத்தை பஹுநாள் குறைவற நடத்தியருளினர்.

6

இவருக்கு குமாரர்கள் மூன்று திருநாமங்கள். 1 பெரியண்ணன் 2 சித்தண்ணன் 3 தெய்வங்கொள் பெருமாள் தோழப்பர். இவர்களில் பெரியண்ணன் (பெரிய வரதாசார்யர்) திரு நக்ஷத்திரம் தையில் ஹஸ்தம். இவருக்கு ஆசார்யரும் உபய வேதாந்தமும் ஸாதித்தருளினவரும் திருக்கோபுரத்து நாயனர். இவர் தனியன்

"ராமாநுஜகுரோ: பௌத்ரம் வாதி ஸிம்ஹ பதாஶ்ரயம்
வந்தே வரதராஜார்யம் வாவதூகம் விபஶ்சிதாம்."

"கோபுரேச குரோஸ்ஸூநும் தத்பாதாம்போருஹாஶ்ரயம்
வாதூலகுல ஜீவாதும் வரதார்ய மஹம்பஜே."

2 சித்தண்ணன் (சின்ன வரதாசாரியர் திரு நக்ஷத்திரம் சித்திரையில் ஹஸ்தம் இவருக்கு ஆசார்யரும் உபய வேதாந்தங்களும் ஸாதித்தருளினவரும் திருத்தகப்பனாரான திருக்கோபுரத்து நாயனார். சித்தண்ணன் தனியன்

"ஸ்ரீ கோபுரேச தநயம் வரதார்யாப்தபோதகம்
வாதூல வரதாசார்யம் வந்தே வேதாந்த தேசிகம்."

இவர் செய்தருளின ப்ரபந்தம் ஸ்ம்ருதி ஸாரம்.

3 தெய்வங்கொள் பெருமாள் தோழப்பர் திரு நக்ஷத்திரம் ஸிம்ஹஶ்ரவணம். இவர் தனியன்

"வந்தே ஸ்ரீ தேவதாதீசம் வாதூலாந்வய சேகரம்
கோபுரேசகுரோ: புத்ரம் வேதாந்தத்வய ஸம்ஹிதம்."

இம் மூவர்களில் சித்தண்ணன் வாதூல தேசிக பத நிர்வாஹகராய் ஸ்ரீ ரங்க ஸ்ரீ கார்யதுரந்தரராய் பஞ்ச திருவடி கேசவ ராஜாவை அநுவர்த்தித்து அழகிய மணவாளப் பெருமாளுக்கு அனைத்தழகுகளையும் கண்டருளப் பண்ணிக்கொண்டிருந்தார்.

7

இவர் குமாரர்கள் மூன்று திருநாமங்கள் 1 நம்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ ரங்கராஜ நாயன் 2 ஆழ்வார் ஸந்நிதியில் கண்ணி நாயன் 3 தேவப்பெருமாள் ஸந்நிதியில் எம்பா. இவர்களில் 1 ஸ்ரீ ரங்கராஜ நாயன் திரு நக்ஷத்திரம் சித்திரையில் சித்திரை. இவர் தனியன்

"வரதார்ய குரோஸ்ஸூநும் வேதாந்தத்வய தேசிகம்
ஸ்ரீ ரங்கார்ய மஹம்வந்தே வாதூல குல பூஷணம்"

இவர் செய்தருளின ப்ரபந்தம் சேகர மீமாம்ஸா டிப்பணி, ஸ்ம்ருதி ரத்நாகரம், ஸதாசார வைபவம். இவர் சிஷ்யர் குமாரர் சிங்கப்பிரான், அப்பங்கார், தொட்டையா சார்யர், திருமலையய்யங்கார் மற்றும் பலர்.

3 தேவப்பெருமாள் ஸந்நிதியில் எம்பா திரு நக்ஷத்திரம் சித்திரையில் திருவாதிரை. இவருக்கு ஆசார்யரும் உபயவேதாந்தமும் ஸாதித்தருளினவரும் திருத் தகப்பனாரான சித்தண்ணர்.

"எம்பா தநியன், வரதாசார்ய தநயம் வாதூல குலபூஷணம்
ராமாநுஜ குரும் வந்தே வேதாந்த த்வய தேசிகம்."

8

இவர் குமாரர்கள் மூன்று திருநாமங்கள்



1 சித்தண்ணன் 2 பெரிய வேடலப்பை 3 வென்றிமாலையிட்ட பெருமாள் நாயனார்

1 சித்தண்ணன் திரு நக்ஷத்திரம் கந்யாமூலம். தனியன்

"ராமாநுஜ குரோஸ்ஸூநும் நிகமாந்தைக பூஷணம்
வரதார்யமஹம் வந்தே வாதூல குலபூஷணம்

2 பெரிய வேடலப்பை திரு நக்ஷத்திரம் வைசாக புநர்பூசம். இவருக்கு ஆசார்யரும் உபய வேதாந்தங்களும் ஸாதித்தருளினவரும் பெரிய தகப்பனாரான ஸ்ரீரங்கராஜ நாயன். பெரிய வேடலப்பை தநியன் "ஸ்ரீரங்கராஜ சரணம்.......கங்கா ப்ரவாஹ......."

9

சித்தண்ணர் குமாரர்கள் மூன்று திரு நாமங்கள் 1 அண்ணா 2 தாசரதி அப்பை தரமைதா எம்பா. இவர்களுடைய திருத்தாயாரும் சித்தண்ணர் தேவிகளுமான ஆச்சி என்பவரிறே; முதலில் பெரிய ஜீயர் என்று வழங்கப்படுகிற மணவாள மாமுநிகள் திருவடிகளிலே ஆஶ்ரயித்தவர். இதன் விவரம் கீழ்வருமாறு கண்டுகொள்க :—

பெரிய ஜீயர் திநம்தோறும் அருணோதயத்திற்கு திருக்காவேரியில் நீராட எழுந்தருள்வர். அக்காலத்தில் அத்யந்தம் ஸத்வ நிஷ்டராய் பெருமாள் ஸந்நிதியிலே அநந்ய ப்ரயோஜநராய் கைங்கர்யம் பண்ணிப் போருகிற திருமஞ்சனம் அப்பா என்றொருவர் கூடவே சென்று ஜீயர் நீராடியருளுகிற துறைக்குக் கீழே இருந்து அந்த ப்ரவாஹ தீர்த்தத்தில் தப்பாமல் நீராடிக்கொண்டு வர, அவருக்கு ஜ்ஞாநோதயமாய் ஜீயர் திருவடிகளிலே நிரவதிகப் ப்ராவண்ய முண்டாய், ஆஶ்ரயித்து க்ருதார்த்தரானார். அப்பாவும் ஜீயர் திருப்பவளத்தாலே ஸகலார்த்தங்களையும் ஶ்ரவித்து நிரவதிக ப்ராவண்ய முடையராய், சாயாவத் பரதந்த்ரராய், ஜீயர் திருவடிகளைப் பிரியாமல் அங்குத்தைக்கு அந்தரங்கராய் எழுந்தருளியிருந்தார். அநந்தரம் ஜீயர் ப்ராத: காலத்திலே நீராட்டத்துக்குப் புறப்பட்டு எழுந்தருளா நிற்கச்செய்தே ஒருநாள் அசிந்திதமாக வர்ஷம் வர, அதற்கு ஒரு வைஷ்ணவர் க்ரஹத்தின் வாசல் திண்ணையை உத்தேசித்து எழுந்தருளா நிற்க, அந்த க்ரஹ அதிபதியான சித்தண்ணர் தேவிகளான ஆச்சி கண்டு அத்யந்தம் ப்ராவண்யத்துடனே புடவைத்தலைப்பாலே திண்ணையைத் துலக்கி "ஸ்வாமி இங்கே எழுந்தருளவேணும்" என்று ஸவிநயத்தோடே

ஸேவித்து நிற்க, ஜீயரும் திருவடி நிலைகளை கீழேவிட்டுத் திண்ணை மேலே ஏறியருள, அந்த அம்மை (ஆச்சி) மழையிலே நனைகிற திருவடி நிலைகளை எழுந்தருளப்பண்ணி தம் ஸிரஸிலே தீர்த்தத்தோடு தரித்துக்கொண்டு பிற்பாடு தலைப்பாலே திருவொற்றுவாடை சாத்தி மீளவும் சிரஸா வஹித்து திருமுன்பே எழுந்தருளப்பண்ணி நிற்க, ஜீயரும் நீயார், பேரேது, இது |யாருடைய திருமாளிகை, என்று கேட்டருள, தேவரீர் திருவடி ஸம்பந்தியாயிருக்கிற திருமஞ்சனம் அப்பாவுடைய பெண், அடியேன் பெயர் ஆச்சி. இது அவருடைய மணவாளப்பிள்ளையாகிற கந்தாடை அய்யங்கார் (சித்தண்ணர்) க்ரஹம் என்று விண்ணப்பம் செய்யக்கேட்டு உகந்தருளி "நம்முடைய அப்பாச்சியார்பெண்ணோ?" என்று அருளிச்செய்து, கடாக்ஷித்துக்கொண்டு, வர்ஷம் நிவர்த்தமான உடனே திருக்காவேரிக் கெழுந்தருளினார். ஆச்சியாரும் ஜீயருடைய திருவடி நிலைகளின் திருமஞ்சனம் தலையிலே ஊறி ஜீயர் கடாக்ஷமும் பெற்ற பெருமைம்யையுடைய வளாகையாலே ஜ்ஞாநோதயமுண்டாய் அப்போதே பெரிய ஜீயர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்க ருசி பிறந்து, அத்தைத் தன் பிதாவுக்கு அறிவிக்க, அவரும் அப்போது ஓர் சிந்தை செய்து, தம்முடைய தௌஹித்ரர்ளும் அறியாமலிருக்க வேணுமென்று அருளிச் செய்து, ஜீயர் திருவடிகளில் ஆஶ்ரயணமான பின்பு, தம்முடைய திருமாளிகையிலேதானே ஓரிடத்திற்கும் புறப்படாமல் சில நாளிருக்கும்படி ஆலோசித்து, அப்பா தம்முடைய குமாரத்தியைக் கூட்டிக்கொண்டு மடத்திலே யெழுந்தருளி ஜீயரை தண்டன் ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பம் செய்ய, ஜீயரும் கந்தாடை அய்யங்கார்கள் ஸம்பந்தத்தைப் பார்க்கவேண்டாவோ? காரியப்படாது, என்று அருளிச் செய்ய, அப்பாவும் தம்முடைய குமாரத்தியாருடைய ஆஸ்திக்யாதரார்த்திகளை விண்ணப்பம் செய்து, விரோதம் ஒன்றும் வாராது, க்ருபை செய்தருளவேணும் என்ன, ஜீயரும் ஆகில் இவளையிட்டு இந்தத் திருவம்சத்துக்கெல்லாம் ஆநுகூல்யமுண்டென்று ஆச்சியாருக்கு ஸமாஶ்ரயணம் ஸாதித்தருளி, ஹிதங்களையும் ஜ்ஞாதவ்யார்த்தங்களையும் உகந்து ப்ரஸாதித் தருளினார். இப்படி ஆச்சியாருக்கு ஸ்ரீபாதுகா தீர்த்தவஹநத்தினாலே வந்த அதிசயத்தை

"ஸ்ரீ பாதுகாம்புஜநிதாத்மவிவேக ரங்க பூநாத தீர்த்த ஜலதாத ஜமாத்ருதேவம்-த்வந் த்வச்சிதம் நிகில தேசிகவந்த்யபாதம் ஸௌம்யோபயந்த்ரு முநிவர்யமஹம் நமாமி"



1 அண்ணா திருநக்ஷத்திரம் ஆவணியில் ஹஸ்தம் இவருடைய ப்ரபாவங்கள் அநேகங்கள் உண்டு. அவைகள் ஸத்ஸம் ப்ரதாய ஸாரத்திலும் தாசரதி வம்சாலங்கார சந்த்ரிகையிலும் விசதமாகக் காணலாம். இவர் செய்தருளின ப்ரபந்தம் பதினெட்டு திருப்பதி மங்களா சாஸநமும், எதிராஜ ஸப்ததிவ்யாக்யானமும். இவர்வான மாமலை ராமாநுஜ ஜீயர் திருவடிகளை ஆஶ்ரயித்தார்.

ஸ்ரீ வாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, 'சேற்றுத்தாமரை செந்நெலூடு மலர் ஸ்ரீவர மங்கல நகர்' என்று ஆழ்வாரால் மங்களாஶாஸநம் செய்யப்பட்ட வானமாமலை என்கிற திவ்யதேஶத்தில் செய்த வேள்வியர் வையத்தேவர் என்றும் தெள்ளியார் திருநான் மறைகள் வல்லார் என்றும் ஆழ்வாரருளிச் செய்தபடி பரம வைதிக குலதிலகரா யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீரங்க ராஜ ஸ்வாமிக்கு திருக்குமாரரா யவதரித்தருளினார்.

திருத்துழாய் முளைக்கும் போதே அதன் பரிமளம் வீசுமாப் போலே இவர் அவதரிக்கும் போதே இவரது ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் வடிவிலே தொடை கொள்ளலாம் படி யிருக்கையாலே இவருக்கு அழகிய வரதன் என்று திருநாமம் சாத்தினார்கள்.

ப்ராஹ்மணவர்ணத்திற்குரிய சௌளோபநயநாதி ஸம்ஸ்காரங்களை அந்த வந்தக்காலங்களிற் செய்யப்பெற்று, வேதவேதாந்தங்களையும் செவ்வனே அத்யயநம் செய்து தமது திருத்தகப்பனாரான ஸ்ரீ ரங்கராஜஸ்வாமியின் நியமனத்தைப் பெற்றுக்கொண்டு, ஆழ்வார் திருநகரியிலெழுந்தருளியிருக்கும் திருவாய் மொழிப்பிள்ளை திருவடிகளை ஆஶ்ரயித்து அடியேனுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களை அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க திருவாய்மொழிப்பிள்ளை அழகிய வரதனைக் கடாக்ஷித்து இவர் தர்ஶநப்ரவர்த்தகராவார் என்று கருதி ஸ்ரீராமாநுஜ அபராவதாரரா யெழுந்தருளியிருக்கும் மணவாளமாமுநிகளின் திருவடிகளில் ஆஶ்ரயிக்கும்படி நியமித்தருளினார். அழகிய வரதனும் அப்படியே திருவாய் மொழிப்பிள்ளையின் நியமனத்தைச் சிரமேற்கொண்டு, திரு நகரிலேயே நாயனார், (மணவாள மாமுநிகள்) தம்முடைய ஆசார்ய நியமநத்தாலே திருவாய்மொழி முதலான திவ்யபரந்தங்களை ஸவ்யாக்யாநமாக காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு எம்பெருமானார் தர்ஶநத்தை வளர்த்துக்கொண்டு போருகிற அந்நல்லடிக் காலத்தில் மணவாளமாமுநிகளின் திருவடிகளை ஆஶ்ரயித்து தாப:

யுண்டாஸ் ததாநாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம:—அமீ பரம ஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ: என்கிறபடி தாபாதி பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று மாமுனிகளின் க்ருபா கடாக்ஷத்தால் ஸகல மந்த்ரார்த்தங்களையும் உபயவேதார்த்தங்களையும் நன்கறியப்பெற்று. ரம்யஜாமாத்ரு முநீஶ்வரஸ்ய ஹ்யாஸாத (ஹ) ஸம்பத் ப்ரதமாஸ்பதாய என்று பெரியோர்களால் போற்றப்படும் பெருமையையுடையராய் தமது பதினெட்டாவது திரு நக்ஷத்திரத்திலேயே ஜ்ஞாந பக்தி வைராக்யங்களின் பரிபாக விஶேஷத்தால் தாராத்மஜாதி ஜநிதம் ஸுகமை ஹிகம் ய: காரா க்ருஹப்ரபவதுக்கஸமம் விசார்ய (பார்யா புத்ராதி ஸபந்தத்தாலுண்டாகும் இஹலோக ஸுகத்தை சிறைச்சாலை நிவாஸத்தாலுண்டாகும் துக்கத்தோடொக்கத் திருவுள்ளம் பற்றி) யதநாதர ஸம்வ்ரீளமந்தராளாஶ்ரமத்வயம் என்கிறபடி ப்ரஹ்மசர்யா ஶ்ரமத்திலிருந்தே (க்ரஹஸ்த வாநப்ரஸ்த ஆஶ்ரமங்களை அநாதரித்து) துர்யாஶ்ரமத்தை அங்கீகரித்தருளி ராமாநுஜ ஜீயர் என்னும் திருநாமத்தை யுடையராய் சக்ரவர்த்தித் திருமகனை பெருமாள் விஷயத்தில் இளையபெருமாளைப்போலேப்ால்யாத் ப்ரப்ருதிஸுஸ்நிக்த: என்கிறபடி நிரதிஶய பக்தி யுக்தராய் அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்கிறபடியே மாமுனிகளின் திருவடிகளில் ஸகலவித கைங்கரியங்களையும்செய்யாநின்றுகொண்டு நசஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ என்கிறபடி மாமுனிகளின் திருவடிகளை க்ஷணகாலமும் விட்டுப் பிரிய க்ஷமரன்றிக்கே நிழலும் அடிதாருமானோம் என்னும்படி ரம்யஜா மாத்ருயோகீந்த்ர பாதரே காமயம் ஸதா என்று மஹாசார்யாலருளிச் செய்யப்பட்டபடியே, மாமுனிகளின் பாதரேகா மயராய் நித்ய ஸேவை பண்ணா நின்று கொண்டெழுந்தருளியிருந்தார்.

அப்பால் மாமுனிகள், அணியரங்கத்தரவணைமேல் பள்ளிகொண்டருளும் நம்பெருமாளை ஸேவிக்கத் திருவுள்ளம்பற்றி பொலிந்துநின்ற பிரானையும் ஆழ்வாரையும் தெண்டன் சமர்ப்பித்து விடைகொண்டு "அடியேன் திருவரங்கம் திருப்பதியில் நம் பெருமாளை ஸேவிக்க விடை கொள்ளுகிறேன்" என்று விண்ணப்பம் செய்ய ஆழ்வாரும் அப்படியே விடைகொடுத்தருளினார்.

அப்போதே மாமுனிகளும் எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்று திருவரங்கத்தைத் தேடி புறப்படாநிற்க, கச்சதா மாதுலகுலம் பரதேந ததா நக:—ஶத்ருக்நோ நித்ய ஶத்ருக்நோ



நீத: ப்ரீதி புரஸ்க்ருத:—மாதுல குலத்தைக் குறித்துச் செல்லாநின்ற பரதாழ்வானை சத்ருக்காழ்வான் ப்ரீதி புரஸ் க்ருதனாய்ச் சென்றாற் போல் திருவரங்கம் திருப்பதியைக் குறித்து எழுந்தருளாநின்ற மாமுநிகளோடு வாநமாமலை ராமாநுஜஜீயரும் ப்ரயாணமாயினார். அவ்வாறு மணவாள மாமுநிகளும், ராமாநுஜ ஜீயர் முதலான முதலிகளோடு எம்பெருமான் திருவரங்கமெங்கே என்று தேடிக்கொண்டு புறப்பட்டு இடையிலே ஆண்டாளையும் அழகரையும் திருவடிதொழுது, நம்பெருமாளை ஸேவிக்க கங்கையில் புனிதமாய் காவிரியில் நீராடியருளி, கேசவாதி த்வாதசநாமங்களையும் சாத்தியருளி அணியரங்கன் திருமுற்றத் தடியார்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுடனே புறப்பட்டருளி தமக்கு ஆசார்யதுல்யரான கோயில் கந்தாடை அண்ணன் திருமாளிகையேற எழுந்தருளி அத்யாதரத்துடனே அண்ணனை ஸேவிக்க, அவரும் உகந்தருளி, இவரை அவதார விஶேஷமென்று அறிந்து ஆதரித்து பெருமாளை ஸேவிக்கப்பண்ணுவதாக திருமாலை தந்த பட்டருடைய திருமாளிகைக் கெழுந்தருளி அவ ரனுமதிகொண்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஸந்நிதியிலே பெருமாளை மங்களாசாஸநம் பண்ணியருளவென்று அருளிச்செய்ய, மாமுநிகளும் வைத்த கண் வாங்காதே சிவந்த திருமுக மண்டலத்தையும், செவ்வரி படர்ந்த திருக்கண்களையும், க்ஸ்தூரி திருமண்காப்பையும், ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளையும் ஸேவித்துக்கொண்டு நிற்க, தீர்த்த ப்ரசாதங்களையும் ஸ்ரீ சடகோபனையும், திருமாலை ப்ரசாதங்களையும் ப்ரஸாதிக்கப் பெற்று, ப்ரீதராய் அண்ணனைப் பார்த்து தேவரீருக்காக நம் பெருமாள் அடியேனை வாழ்வித்தருளினாரென் றருளிச்செய்ய, அண்ணனும் வந்தவரை வாழ்விக்கும் பெருமாளன்றோ? என்றருளிச்செய்ய, மாமுனிகளும் அண்ணன் திருமாளிகையிலே அமுது செய்து எழுந்தருளியிருக்க, அண்ணனும் பிள்ளை லோகாசார்யர் வைபவங்களை யெல்லாம் அருளிச்செய்ய, மாமுனிகளும் கேட்டு மிகவும் உகந்தருளி அண்ணனை ஸேவித்துக் கொண்டு ஆசார்யர்களுக்கு ஆவாஸ பூமியான அரங்கமாநகரிலே நித்யவாஸம் பண்ணிக்கொண் டெழுந்தருளியிருந்தார். அக்காலத்திலே மாமுநிகளுக்கு ஆசௌசம் வர அதைக்கேட்டு பெருமாளுடைய ஸேவைக்கு விருத்தமா யிருக்கிறதென்று ஸங்கல்பித்தருளினார்.

அண்ணனும் மாமுநிகளுக்கு அத்யந்தம் ப்ராணஸஹ்ருத்தாய் எம்பெருமானாருக்கு ஸ்ரீ முதலியாண்டானைப் போலேயும் ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனாருக்கு இளையபெருமாளைப் போலேயும் பிரியாமலிருந்ததனாலே நம்பெருமாள் உகந்து அண்ணனுக்கு "ஜீயரண்ணன் என்று திருநாமம் சாத்தி யருளினார். கந்தாடை அண்ணன் முதலானவர்கள், பெரிய ஜீயரென்று திருநாமமான மாமுநிகளினுடைய திருவடிகளில் ஆஸ்ரயித்த விவரம் :—


கந்தாடை அண்ணன் திருத்தகப்பனார் தேவராஜ தோழப்பருடைய தீர்த்தம்வர அதற்கு சித்தண்ணர் தேவிகளான ஆச்சியாரை தளிகை பண்ண அழைத்துவரவிட அவரும் அப்படியே பாவநத்வ போக்யத்வங்களுடனே தளிகை செய்ய பெருமாள் அமுது செய்து முந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களும் அமுது செய்து இஷ்டபங்க்தியும் அண்ணன் தொடக்கமானவரும் அமுது செய்தருளி வாசல் திண்ணையிலே எழுந்தருளியிருக்க, ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் ஜீயர் மடத்திலிருந்து புறப்பட்டுவர, அவரைக் கண்டு உமக்கு எந்த ஊரென்று கேட்டருள, அவர் வள்ளூர் ராஜேந்த்ரம் என்ன இங்கே வந்த கார்யம் ஏதென்ன, அடியேன் ஜீயர் திருவடிகளிலே ஆஸ்ரயிக்கக் காத்திருக்கிறேன். ப்ராப்தி காலம் வர வேணுமென்ன, இந்த ஸ்தலத்திலே ஆசார்ய புருஷர்கள் நிறைந்திருக்கிறார்களே! மற்றொருவரிடத்தில் ஆஸ்ரயணம் ஆனாலோ வென்ன? இங்கே பகவந்நியமனமாயிருக்கிறதென்ன, அது எப்படி என்ன? அது ரஹஸ்யம் என்ன, உம்முடைய பெயரேதென்ன? சிங்கராயரென்ன, இவர் பகவத் ப்ரஸாத பூதரென்று திருவுள்ளத்திலே எண்ணி இவர் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளேபோய் தீர்த்த ப்ரஸாதங்களையும் ஸாதித்தருளினார். இப்படி ஆதரித்து அவரை அன்று இரவு அந்தத்திருமாளிகையிலேயே சயநிக்க நியமித்து தாமும், திருதம்பியார்களான கந்தாடை அப்பனும், திருக்கோபுரத்து நாயனார் பாட்டரும் எழுந்தருளி யிருக்க, உள்ளே ஆச்சியார் சயநிக்கும்போது, ஜீயர் திருவடிகளே சரணம், பிள்ளை திருவடிகளே சரணம், வாழி உலகாரியன் என்று உச்சரிக்க இந்த சப்தத்தை அண்ணனும் அவர் திருத்தம்பிமார்களும் கேட்டு இதேதென்று திடுக்கிட்டு சிந்தித்திருக்க இவர்களில் பாட்டர் உள்ளேசென்று மதனியாரே என்று கூப்பிட, ஆச்சியாரும் தான் சொன்னது இவர்கள் காதில் விழுந்ததென்று பயப்பட்டு பேசாம


# டி. சி. என்.

## கோல்டன் மெட்டல் ஜ்வெல்லரி மார்ட்



### பல வித வளையல்கள்



அசல் தங்க வளையல்களை விடப் பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

**கறுக்காது. 2 வருஷம் உத்தரவாதம்.**

பெரிய சைஸ் 2 அங்குலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 3-0-0

மத்திய சைஸ் 1¾" முதல் 2"க்குள் ஜதை ரூ. 2-8-0

குழந்தை சைஸ் 1¾"க்கு உட்பட்டது ஜதை ரூ. 2-0-0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணா 6.

*அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இஞ்சியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்.*

2 அணா பெருமானமுள்ளதும் பல அழகிய படங்களுள்ளதுமான எமது காட்லாக் இனாம்.

**டி. சி. நாகலிங்கப்பா அன் கோ,**

**280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன், மதராஸ்.**

Registered No. M. 3401

கட்டடங்களை உறுதியாய்க் கட்டுவதற்கு சிமெண்டே
முக்கிய காரண மாகும்
அதிலும்
எந்த சிமெண்டை உபயோகிப்பது நலமென்றால் ?

சார்மினர்

அல்லது நீலகிரி சிமெண்டே

நல்லதென்று அநுபவமுள்ள இஞ்சினீயர்களால்
கொண்டாடப்பட்டதாகும்,

கிடைக்கு மிடம்:—

சாமி வெங்கடாசலம் செட்டி,
வெள்ளம்பக்ரஹம்,
61, கோவித்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. மதராஸ்.
டெலிபோன் நெ. 2004.

ப்ராணஸுத

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் என் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப் போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏர்ப்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனாம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St. and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St, Madras.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# ஸ்ரீ ராமாநுஜ

# ஸித்தாந்த  வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

ஸம்புடம் 2 | தாது கார்த்திகையிற் கார்த்திகை | சஞ்சிகை 1

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

வருஷச் சந்தா 1-12-0
நவம்பர்]
[தனிப்ரதி விலை 0-3-0

## விஷய ஸூசிகை


விஷயங்கள் — பக்கம்

1. கார்த்திகையிற் கார்த்திகைநாள் .... .... 1
—பத்திராதிபர்.

2. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் .... .... 8
—பத்திராதிபர்.

3. ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் .... .... 12
—காஞ்சி, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்க ராசாரியார்.

4. ஸ்ரீவசந பூஷணத்தில் ஓர் ஸ்ரீ ஸூக்தி ஸ்வாரஸ்யாநுபவம் .... .... . 20
—A. V. கோபாலா சாரியார், பத்திராதிபர், ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணி.

5. கம்பரும் திருமந்திரமும் .... .... 24
—பந்தல்குடி பாரத் வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

6. வைஜயந்தியின் புத்தாண்டு .... .... 26
—பந்தல்குடி பாரத் வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

பரகால யதிவராதிகள் ... ... 27
—திருமலை நல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார், சிரோ ஆழ்வார் திருநகரி.

8. நல்லறிவு ... ... ... 30
—C. P. ராஜ கோபாலா சாரியார், ஆனெரி செக்ரெட்ரி வெங்கடேஶ்வர தேவஸ்தாநம், பம்பாய்.

9. வர்த்தமானங்கள் .... ... ... 32



# C. V. CUNNIAH CHETTY & Co.,

**SILK WOOLLEN AND COTTON PIECE GOODS MERCHANTS.**

**288, ESPLANADE ROW, MADRAS.**

**FOR COTHOOR BRAND SOYA BEANS.**

# L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது




## L. G. பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோதூ & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

# அம்ருதாஞ்சனம்.




ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வியாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

# சலோஞுடவர் பிராண்ட்

## போர்ட்லாண்ட் சிமெண்ட்

### காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட்
ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர் வேலைகளுக்கும் ரயில் வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிருர்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்.

சோல் ஏஜெண்ட்

**M. குப்புசாமி நாயக்கர்**

**83, செம்புதாஸ் தெரு,**

மதருஸ், ஜி. டி.


உயிரெழுத்துக்கள் (அச்செழுத்துக்கள்)

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | ரு | ரூ | லு | ஏ | ஐ | ஓ | ஔ | அம் | அ: |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| అ | ఆ | ఇ | ఈ | ఉ | ఊ | ఋ | ౠ | ఌ | ఏ | ఐ | ఓ | ఔ | అం | అః |
| अ | आ | इ | ई | उ | ऊ | ऋ | ॠ | ऌ | ए | ऐ | ओ | औ | अं | अः |

மெய்யெழுத்துக்கள் (ஹல்லெழுத்துக்கள்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | | | | ங | ச | | | | ஞ | ட | | | | ண | த | | | | ந |
| క | ఖ | గ | ఘ | ఙ | చ | ఛ | జ | ఝ | ఞ | ట | ఠ | డ | ఢ | ణ | త | థ | ద | ధ | న |
| क | ख | ग | घ | ङ | च | छ | ज | झ | ञ | ट | ठ | ड | ढ | ण | त | थ | द | ध | न |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | | | | ம | ய | ர | ல | வ | ஶ | ஷ | ஸ | ஹ |
| ప | ఫ | బ | భ | మ | య | ర | ల | వ | శ | ష | స | హ |
| प | फ | ब | भ | म | य | र | ल | व | श | ष | स | ह |

உயிர் மெய்யெழுத்துக்கள்.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | க்ரு | க்ரூ | க்லு | கே | கை | கோ | கௌ | கம் | க: |
| 𑌕 | 𑌕𑌾 | 𑌕𑌿 | 𑌕𑍀 | 𑌕𑍁 | 𑌕𑍂 | 𑌕𑍃 | 𑌕𑍄 | 𑌕𑌢 | 𑌕𑍇 | 𑌕𑍈 | 𑌕𑍋 | 𑌕𑍌 | 𑌕𑌂 | 𑌕𑌃 |
| క | కా | కి | కీ | కు | కూ | కృ | కౄ | కౢ | కె | కై | కొ | కౌ | కం | కః |
| क | का | कि | की | कु | कू | कृ | कॄ | कॢ | के | कै | को | कौ | कं | कः |

இதேமாதிரி மற்ற மெய்யெழுத்துக்களில் உயிரெழுத்து சேர்ந்து வருவதை உற்று நோக்கிக் கொள்ளவும்.

மேலும் க்ரந்த ஸம்யுக்தாக்ஷரங் (கூட்டெழுத்துக்) களில் மற்ற எழுத்துக்களைப் போல அதிகமான வேறுபாடின்றி, ய. ர. முதலிய சில வெழுத்துக்களுக்கே வேறுபாடு காணப்படுகிறது. அவ்வாறு வேறுபாடுள்ள அக்ஷரங்களில் தற்காலம் அடியேனுடைய புத்திக்கு விஷயமான சில அக்ஷரங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. இதற்கு மேலுள்ள வித்யாஸங்களை யறிஞர்பால் கேட்டறிந்து கொள்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க்ய | க்ர | ர்க | ஞ்ஜ | ந்த | ஶ்வ | த்வ | ஜ்ஞ |
| 𑌕𑍍𑌯 | 𑌕𑍍𑌰 | 𑌰𑍍𑌕 | 𑌞𑍍𑌜 | 𑌨𑍍𑌤 | 𑌶𑍍𑌵 | 𑌤𑍍𑌵 | 𑌜𑍍𑌞 |

ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை

| தொகுதி 2. | பத்ராதிபர் வடகரை. இராமாநுஜாசாரியார் | பகுதி 1. |
|---|---|---|

ஶ்ரீ:
ஶ்ரிய:காந்தாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஶ்ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாங்க ஸம்ப்ரதாயைகவர்த்திநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

## கார்த்திகையிற் கார்த்திகைநாள்

பத்ராதிபர்.

கலயாமி கலித்வம்ஸம் *கவிம் லோக திவாகரம்
யஸ்ய கோபி: ப்ரகாஶாபி: ஆவித்யம் நிஹதம் தம:

நமது வைஜயந்தீ பத்ரிகை சென்ற கார்த்திகையிற் கார்த்திகை நாளில் அவதரிக்க நேர்ந்தது. அக்காலத்தில் அத் திருநன்னாளின் பெருமையைப் பற்றிச் சிறிதும் வரையாமல் கார்த்திகையிற் கார்த்திகை என்ற அவ்வளவே குறிப்பிடப்பட்டது.

உலகத்தில் ஒருவனுக்கு ஒரு புதல்வன் பிறந்தால் அக்காலத்தில் அப்புதல்வன் ஜநித்த காலத்தை மாத்திரம் ஒரு ஓலையில்

---

* கவிலோக திவாகரம் என்று சில மஹாநுபாவர்கள் அருளிச்செய்திருக்கிறார்கள். "தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கிலக்கியம் பரகாலன் பனுவல்கள்" என்பதை நோக்குமிடத்து இப்பாடமே பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது.

குறித்துவைத்து, அக் குழந்தைக்குப் பத்துநாளுங் கடந்து ஸூதக ஆஶௌசாதிகள் நிவ்ருத்தமான பன்னிரண்டாவதுதினத்தில் ஜாதகருமம் முதலானவைகளைச் செய்து, அப்பால் அக்குழந்தையின் ஜாதகத்தைப்பற்றிச் சிறிது வரையுமாப்போலே நமது பத்ரிகை அவதரித்த காலத்தை மாத்திரம் அக்காலத்தில் குறிப்பிட்டு, தற்காலம் வைஜயந்தி பத்ரிகைக்கு அப்த பூர்த்தியாய், 1-வது தொகுதி முடிவுபெற்று, 2-வது தொகுதியின் 1-வது பகுதி அதே கார்த்திகையிற் கார்த்திகைநாளவதரிக்க நேர்ந்த காலத்து, அத்திரு நன்னாளின் பெருமையைப் பற்றிச் சிறிது ஆராயுமிடத்து, நாம் புத்தி பூர்வகமாக ஒரு நல்ல தினம் குறிப்பிட்டால் அந்நாள் அவ்வளவு பொருத்தமுடையதாக நேராது. இவ்வாறிருக்க வைஜயந்தி பத்ரிகைக்கும் கார்த்திகையிற் கார்த்திகைநாளிற்கு முண்டான பொருத்தம், சொல்லிழுக்காடாக நேர்ந்தது, மிகவும் போற்றற்குரியதே.

நமது வைஜயந்தியோ, ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி. அது அவதரித்ததிருநாளோ, வாய்த்தபுகழ் மங்கையர்கோன் மாநிலத்தில் வந்துதித்த கார்த்திகையிற் கார்த்திகைநாள் ஆகும். நம்பிராமாநுச முனிக்குத் திருமங்கையாழ்வாரிடமுள்ள பக்தியின் பெருமையையும் திருமங்கையாழ்வாருக்கு நம்பிராமாநுசமுனியிடமுண்டாயிருக்கும் ப்ரீதியையும், சிறிது ஆராய்ந்துநோக்குவோமேயானால் நமது வைஜயந்தி பத்ரிகைக்கும் இத்திருநாளிற்குமுள்ள ஸம்பந்தம் நன்கு புலப்படாநிற்கும்.

திருமங்கையாழ்வாரிடம் நம்பிராமாநுசமுனிக் குண்டாயிருக்கும் பக்தியையும் நம்பிராமாநுச முனியிடம் திருமங்கையாழ்வாருக்குண்டான ப்ரீதியையும், அடைவே, அமுதனார், குறையல்பிரானடிக்கீழ் விள்ளாதவன் பனி ராமானுசன் என்றும் தண்டமிழ்செய்த நீலன்றனக் குலகிலினியான் எங்களிராமாநுசன் என்றும் அருளிச்செய்தமை நன்கு விளக்கும்.

மேலும், புகழ்மலிந்த பாமன்னு மாறன் அடிபணிந்துய்ந்தவன் பல்கலையோர் தாம் மன்னவந்த விராமாநுஜன் என்றதை ஆராயுமிடத்து ஆழ்வாரை அவயவியாகவும் மற்ற ஆழ்வார்களை ஆழ்வாருக்கு அவயவங்களாகவும் கூறுமிடத்துத் திருமங்கையாழ்வாரை ஆழ்வாருக்குத் திருவடிஸ்தானமாக அபியுக்தர்களருளிச்செய்தபடி பாமன்னுமாறனடி, திருமங்கையாழ்வாராவர்.



அவரைப் பணிந்துய்ந்தவர், பல்கலைகளைப் பயின்றும் தத்வஹித புருஷார்த்தங்களை யறியமாட்டாதே அநர்த்தப்படாநிற்கு மாத்மாக்களை தத்வஹித புருஷார்த்தங்களை நன்கறிந்து உஜ்ஜீவிக்கும்படி பண்ணவவதரித்த விராமாநுஜனே யாவர்.

இன்னமும் ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியே ஆதாரமாகும். இவ்வர்த்தம் பாஷ்யகாரரிதுகொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்கவிடுவர் என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியினாலறியலாகும்.

இன்னமும் திருவாய்மொழியில் எம்பெருமானார்க்குள்ள அபிநிவேசத்தை அமுதனார் உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும் வெறிதரு பூமகழ்நாதனும் மாறன்விளங்கிய சீர், நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந்நீணிலத்தோரறிதர நின்ற விராமாநுசன் என்றருளிச்செய்தார்.

பாஹ்யர்களைப் போலன்றிக்கே வேதங்களை யதிகரித்தும் அதற்கு விபரீதார்த்தங்களைச் செய்து குதர்க்கங்களைப் பண்ணுநிற்கும் குத்ருஷ்டிகளாகிற புலிகள் மலியா நின்ற காலத்து அப்புலிகளை நிரஸிக்கக்கூடிய ஸிம்ஹம் போலவவதரித்த விராமாநுசன், பராங்குசரான நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிக்கு அங்கங்களாகப் பரகாலன் பணித்த திருமொழி முதலான திவ்யப்ரபந்தங்களை தாரகமாகவும் போக்யமாகவும் அநுபவித்து, அத்தாலே திருவுள்ளமுவந்து, அக்குத்ருஷ்டிகளை நிரஸித்தார் என்பது கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப்பெருமான் ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமாநுசன் மறைவாதியராம் புலிமிக்கதென்று இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே, என்ற பாசுரத்தினால் நன்கு விளங்கும். இத்தால் ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு பராங்குசனருளிச் செய்த திருவாய்மொழியும் பரகாலன் பணித்த திருமொழியுமே ஆதாரம் என்பது வெள்ளிடைமலை. இத்தையடியொற்றியே நம்பூர்வாசார்யர்கள் பராங்குச பரகால யதிவராதிகள் என்று ஆழ்வாரையும் திருமங்கை யாழ்வாரையும் எம்பெருமானாரையும் ஒருங்கே சேர்த்தநுஸந்தியாநிற்பர்கள்.

இன்னமும் ஸம்ஸ்க்ருத வேதத்திற்கு ஶிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ்ஸூ, நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று சொல்லப்படுகிற அங்கங்களாறுமின்றி அர்த்தமறிவது அஸாத்யமாகுமாப்போலே

ஆழ்வாரருளிச் செய்த திருவாய்மொழியாகிற த்ரவிட வேதத்திற்கு திருமங்கை யாழ்வாரருளிச் செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்கிற ப்ரபந்தங்களாறுமின்றி அர்த்தமறிவது அஸாத்யமே யாகும்.

இன்னமும் ஆழ்வாரையும் திருமங்கையாழ்வாரையும் நம்மிராமாநுசனையும் அடைவே வகுளபூஷண பாஸ்கரர் என்றும் கவிலோகதிவாகரர் என்றும் ராமாநுஜதிவாகரர் என்றும் நம்பூர்வாசார்யர்கள் நிரூபிக்கையாலே, இம்மூன்று திருநாமங்களுடைய அவதாரத்தாலே அவித்யா ஸம்பந்தத்தாலுண்டான அஜ்ஞானமாகிற அந்தகாரம் நீங்கி, ஸ்வஸ்வரூபாதி அர்த்த பஞ்சகஜ்ஞானமாகிற ப்ரகாசமுலகிலுண்டாயிற்றென்பது, குன்றின் மேலிட்ட விளக்குப்போல அனைவரு மறியக்கூடும். இவ்வளவாக, திருமங்கையாழ்வாரவதரித்த கார்த்திகையிற் கார்த்திகை நாளில் ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ அவதரித்தது மிகவும் போற்றற்குரியதென்பது தெரிவிக்கப்பட்டது.

இனி, இத்திரு நன்னாளிலவதரித்த திருமங்கை யாழ்வாருடைய பெருமையைச் சிறிது வரைந்தநுபவிக்கவேண்டியது, நமது பத்ரிகையின் கடமையாதலால், யதாமதி திருமங்கையாழ்வாரின் வைபவம் இங்கு தெரிவிக்கப்படுகிறது.

ஸர்வேஶ்வரனுடைய ஶார்ங்கமென்கிற வில்லின் அம்சபூதரான இவ்வாழ்வார் சோழநாட்டில் திருவாலியென்னும் திவ்ய தேசத்தினருகே யிராநின்ற திருக்குறையலூரில், கலி 397 சென்ற நள வருஷம் ஶரத்ருது கார்த்திகை மாதம் பௌர்ணிமா திதி கார்த்திகை நக்ஷத்திரம் வியாழக்கிழமையில் சதுர்த்த வர்ணஸ்தரான ஆலிநாடுடையா ரென்கிற வொருதார்மிகருக்குக் குமாரராக அவதரித்தருளினார்.

இவர் தகப்பனார் இவர்க்கு நீல நிறத்தர் என்று திருநாமம் சாத்தினார். இவர் க்ரமமாக வளர்ந்து ப்ராப்த யௌவநராய் மிகவும் பலிஷ்டராயிருக்க, சோழதேசத்தரசனும், இவருடைய ஶௌர்ய வீர்ய பராக்ரமங்களைக் கண்டு மிகவும் சந்தோஷித்து, இவரை ஒரு தேசத்திற்கு அதிபதியாகச் செய்தான். இவரும் நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் முதலான மந்திரிகளோடும் ஆடல்மா என்கிற



குதிரை நம்பிரானையும், அமரில் கடமாகளியானை யென்கிற யானையையும் உடையராய் வாழ்ந்தருளும் காலத்தில், குமுதவல்லி என்கிற பெண்ணை விவாஹம் செய்துகொள்ளக் கருதி அவளபேக்ஷித்தபடியே திருநறையூர் நம்பியிடம் தாபாதி பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று, ஒரு வருஷம்வரையில் தினம் ஒன்றுக்கு 1008 ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநம் செய்து அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தளிகைப்பிரஸாதங்களை ஸ்வீகரிப்பதாக ப்ரதிஜ்ஞை பண்ணி, குமுதவல்லியை விவாஹம் செய்துகொண்டு, ப்ரதிஜ்ஞை செய்தபடியே ததீயாராதநம் நடத்தி வந்தார். ததீயாராதநத்திற்காக, சோழனுக்குக் கட்டவேண்டிய பகுதித்ரவ்யத்தையும் வ்யயம் செய்வதைக் கேட்ட சோழபூபதி, இவரைப் பகுதிப்பணத்தைக் கேட்டு வாங்கி வரும்படி ராஜபடரை அனுப்ப, அவர்கள் இவரிடம் அபஜயப்பட்டு, அந்த விருத்தாந்தத்தை அரசனிடம் வந்தறிவிக்க, அரசனும் குபிதனாய், சதுரங்க பலத்தோடு இவரை வளைய, இவரும் அரசனுடைய ஸமஸ்தமான பலங்களையும் த்வம்ஸம் பண்ண, அதைப்பார்த்தவரசன், இவரை யுத்தத்தில் ஜயிப்பதரிது என்று ஆலோசித்து, கபடமாக இவரை யேமாற்றிக் காவலில் வைத்தான். ஆழ்வாரும், ஆஹாரமின்றி காராக்ருஹத்தில் முசித்துக்கிடக்க, திருநறையூர் நம்பி, நாச்சியாருடனே எழுந்தருளி ப்ரஸாதமும் குழம்புப்பாலும் ப்ரஸாதிக்க, அத்தை யமுதுசெய்து சில நாளிருக்க, ஒரு நாள் பேரருளாளனை ப்ரபத்திபண்ணி மிகவும் ஆர்த்தியுடன் கண் வளர்ந்தருளா நிற்க, அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதரானபேரருளாளனும், இவர் ஸ்வப்நத்திலே எழுந்தருளி, "காஞ்சீபுரத்தேவாரும். உமக்குப்பகுதிப்பணம்தருகிறோம்" என்று அருளிச்செய்ய, அப்படியே ராஜ புருஷர்களை அழைத்துக்கொண்டு காஞ்சீபுரம் சென்று, அங்கு பேரருளாளனால் காட்டப்பட்ட விடத்தில் பணம் கண்டெடுத்து, பகுதிப் பணத்தைக் கொடுத்து, தாந்யம்கொடுப்பதற்கு வேகவதீ நதியின் மணலைக்கூட்டியளந்து கொடுக்க, மணலும் பேரருளாளன் கிருபையினால் ராஜ புருஷர்கள் கண்ணுக்கு திவ்யமான தாந்யமாகத்தோற்ற அவர்களும் அதைப் பெற்றுப் போனார்கள். ஆழ்வார் பகுதிப்பணத்திற்குக் கொடுத்த பணம்போக மீதிப் பணத்தை ததீயாராதநத்திற்கு உபயோகித்துக்கொண்டார். ததீயாராதநத்திற்கு அப்பணமும் போதாமல் வழிபறித்துப் பணம் ஸம்பாதித்து ததீயா

ராதநம் நடத்தி வந்தார். இவ்வாறு வழி பறித்ததும் ததீயாராதநத்திற்காக வாதலால் பெருமாளும் பிராட்டியும் இவரை விசேஷ கடாக்ஷம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, ப்ராஹ்மண வேஷம் பூண்டு, தானும் பத்நியுமாய் அநேக ஆபரணங்களோடே அத்திருமணங் கொல்லை வழியே வர, ஆழ்வார் இவர்களைக் கண்டு களித்து, தன் பரிகரங்களோடு வந்து வளைந்து, தம் கையிலிருக்கும் வாளைக்காட்டி வெருட்டி, அவர்களுடைய ஸகலாபரணங்களையும் கழற்றிக் கடைசியில் காலிலணிந்த கணையாழியைக் கழற்ற முடியாமல் பல்லால் கடித்துக் கழற்றி, எல்லாவற்றையும் சுமையாகக் கட்டி எடுக்கப்புக, அது அசைக்க முடியாமற்போகவே ஆழ்வாரும், அந்த ப்ராஹ்மணனைப் பார்த்து, ஒப்ராஹ்மணா! "நீ ஏதோ மந்திரவாதம் செய்திருக்கிறாய். அதனால் நான் இது எடுக்க முடியவில்லை. அம் மந்த்ரத்தை எனக்குச் சொல்லாவிடில் இந்த வாளுக்கிரையாவாய்." என்று பயமுறுத்த, பெருமாளும் இதோ வாரும். அம்மந்த்ரத்தையுமக்குச் சொல்லுகிறேன் என்று ஆழ்வாரது வலதுசெவியில் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்றுபதமாய் ஸ்வஸ்வரூபாதி அர்த்த பஞ்சக ப்ரகாசகமாய் ஸகல சாஸ்த்ர தாத்பர்யமாய் ஸம்ஸார நிவர்த்தகமாயிருக்கும் பெரிய திருமந்த்ரத்தை யுபதேசிக்க, அத்தாலே ஜ்ஞாநம் பிறந்து, அந்த ஜ்ஞாநத்தாலே கட்கண்ணால் காணவரிதான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களை யடைய ப்ரத்யக்ஷமாகக் கண்டு அநுபவித்து, அவ்வநுபவ ஜநித ப்ரீதி, உள்ளடங்காமல் வாக் ப்ரவாஹரூபமாக, பெரிய திருமொழி முதலான ப்ரபந்தங்களாகத் தலைக்கட்டிற்று. அந்த ப்ரபந்தங்கள் ஆறும், ஆழ்வாரருளிச்செய்த த்ரவிட வேதத்திற்கு அங்கமாய், ஆசு மதுரம் சித்ரம், விஸ்தரம் என்கிற நான்கு விதமான கவிகளாய், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்கிற ஐந்து லக்ஷணங்களோடு கூடியதாய், அவித்யா ஸம்பந்தத் தத்தாலுண்டான அகத்திருளைப் போக்க வல்லவிளக்காய், எவ்வளவேனு மதிசய முடையாராலும் ஸ்வயத்நத்தால் போக்க வரிதான பிறவியாகிய நஞ்சுக்கு நல்லவமுதமாய், ஸமஸ்தசாஸ்த்ரங்களின் ஸாரபூதமாய், குதர்க்க வாதங்களாகிற பஞ்சுக்கு நெருப்புப் பொறியாய் விளங்கின—

பின்பு பெருமாள் நியமநப்படி திவ்ய தேசங்களெல்லாம் எழுந்தருளி மங்களா சாஸநம் பண்ணி, ஆங்காங்கு வாதத்திற்கு



வாராநின்ற புறமதத்தவர்களைப் புறங்காட்டியோடும்படி செய்து விசிஷ்டாத்வைத மதமே வேதாதி சாஸ்த்ரஸம்மதமென்பதை நிலைநாட்டி யருளினார். அப்பால், அழகிய மணவாளனுக்கு அநேக கோபுர, மண்டப, ப்ராகாராதி கைங்கர்யங்களைச் செய்து க்ருதார்த்தராய், பத்ராச்ரமமென்கிற திருக்குறுங்குடியில் நித்யவாஸம்பண்ணக் கருதி, அழகியமணவாளன் அநுமதிகொண்டு, திருக்குறுங்குடிக் கெழுந்தருளி, அங்கே சிறிது காலம் யோகநிஷ்டரா யிருந்து, அந்த யோக மகிமையால் ப்ராக்ருத சரீரத்தை விட்டு அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தை பரிக்ரஹித்து, பகவத் ப்ராப்தியாகிற மோக்ஷத்தை யடைந்தார். அனந்தரம் ஆழ்வாரின் மைத்துனர், அழகிய மணவாளன் நியமநப்படி ஆழ்வாரைக் குமுதவல்லியாருடனே அர்ச்சா விக்ரஹமாக எழுந்தருளப் பண்ணி ஆழ்வாரவதரித்த திவ்ய தேசத்தில் ப்ரதிஷ்டை செய்து, ஆழ்வாருக்கு அனைத்தழகும் கண்டருளப் பண்ணினார். ஆழ்வாரும் அர்ச்சாவிக்ரஹமா யெழுந்தருளியிருந்தாலும், விபவம் போலே அழகிய மணவாளனடியிணையையே தமக்கெல்லாமாகக் கருதி, அகில ஆத்மவர்க்கங்களையும் வாழ்வியாநின்றுகொண்டு, தமது அவதார ஸ்தலமாகிய திருவாலிதிரு நகரியில், உறைகழித்த வாளை யொத்த விழிமடந்தை மாதர்மேல், உருகவைத்த மனமொழித்து உலகளந்தநம்பிமேல், குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்கொல்லை தன்னில் வழிமறித்த குற்றமற்ற செங்கையோன், மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்முனே, மடி யொதுக்கி மனமடக்கி வாய்புதைத்து ஒன்னலார், கறை குளித்தவேலணைத்து நின்றவிந்த நிலைமையென் கண்ணைவிட்டகன்றிடாது கலியனாணையானையெ என்றும், அணைத்தவேலும், தொழுதகையும், அழுந்திய திருநாமமும், ஓமென்றவாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்த முகமும், பரந்தவிழியும், இருண்ட குழலும், சுருண்ட வளையமும், வடித்தகாதும், மலர்ந்த காதுகாப்பும், தாழ்ந்த செவியும், செறிந்த கழுத்தும், அகன்ற மார்பும், திரண்ட தோளும், நெளித்த முதுகும், குவிந்தவிடையும், அல்லிக்கயிறும், அழுந்திய சீராவும், தூக்கிய கருங்கோவையும், தொங்கலும் தனிமாலையும், சாத்திய திருத்தண்டையும், சதிரான வீரக்கழலும், குந்தியிட்ட கணைக்காலும், குளிரவைத்த திருவடிமலரும் மருவலர்தமுடல்துணியவாள்வீசும் பரகாலன் மங்கை மன்னரான

வடிவே என்றும், வேலணைத்த மார்பும் விளங்கு திருவெட்டெழுத்தும், மாலுரைக்கத் தாழ்த்த வலச்செவியும், காலணைத்த தண்டையும் வீரக்கழலும் தார்க்கலியன் வாண்முகமும், கண்டுகளிக்குமென் கண் என்றும், நமது ஆசார்ய சிகாமணிக ளீடுபடும்படி எழுந்தருளியிருக்கும்ஆழ்வாரை தற்காலமுள்ள நாமும் கண்ணாரக்கண்டு ஸேவித்து அநுபவிக்கலாம். இவ் வாழ்வாருக்கு உத்ஸவம் கார்த்திகை மாதம் 4வ உபக்ரமித்து மிகவும் சிறப்பாய் நடந்து இன்று சாத்துமுறையும் நடந்தேறியது.

வாழி பரகாலன் வாழிகலி கன்றி
வாழிகுறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனைவாழ்வலியால்மந்திரங்கொள்மங்கையர்கோன்
தூயோன் சுடர்மானவேல்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

[பத்திராதிபர்]

**(1-வது தொகுதியின் 271-வது பக்கத்தின் தொடர்ச்சி.)**

கீழ், மத்ஸ்யாவதாரத்தைப் பற்றிச் சிறிது தெரிவித்துக் கொண்டேன். இங்கு கூர்மாவதாரத்தைப்பற்றிச் சிறிது எழுதி யநுபவிக்க ப்ராப்தமாகிறது.

சென்ற ஆறுவது சாக்ஷுஷ மந்வந்தரத்தில் வைராஜன் என்கிற ப்ரஜாபதிக்கு ஸம்பூதி யென்கிற பார்யையிடத்தில் பகவான், லோகரக்ஷணார்த்தமாக அஜிதன் என்கிற திருநாமத்தோடு அவதரித்திருந்த காலத்தில் மந்த்ர த்ருமன் அல்லது மநோஜவன் என்று பெயரையுடைய இந்த்ரன் ஆப்யாதி தேவர்களோடு தேவ ராஜ்யத்தை அழகாக ஆண்டுவரும் காலத்தில் ஒருநாள் துர்வாஸ மஹருஷி, பிராட்டியின் ப்ரஸாதத்தால் பெற்றதொரு திவ்யமான புஷ்ப மாலையை எடுத்துக் கொண்டு தேவலோகம் செல்ல அப்போது இந்த்ரன், ஐராவதத்தின் மேலாரோஹணித்து வீதி வலம் வாரா நிற்க, அதைக்கண்டு துர்வாஸ மஹருஷி, பரமஸந்தோஷத்துடன் அந்த மாலையை இந்த்ரனுக்கு அநுக்ரஹித்தார். இந்த்ரன், ஐஶ்வர்யச்செருக்காலே அம்மாலையின் பெருமையையும் மஹருஷியின் மஹிமையையும் பாராதே மாவிட்டியாலே அம்மாலையைவாங்கி ஐராவதத்தின் கழுத்தில்போட்டான். ஐராவதம், மஹருஷி பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அம்மாலையை, துதிக்கையால் பற்றிக் கீழே எறிந்து காலால் மிதித்துத் தொகைத்து விட்டது. அதைப்பார்த்த மஹருஷி, மிகவும் கோபமடைந்து, இவ்வாறு அலட்சியம் செய்வதற்குக் காரணம் உன்னுடைய ஐஶ்வர்யச் செருக்கல்லவா? அதை ஒழித்து விடுகிறேன் என்று சொல்லி, உன்னுடைய ஆளுகைக்குள்பட்ட மூன்று லோகங்களும் ஐஶ்வர்யத்தையிழந்து நீ வருந்தக் கடவாய் என்று ஶபித்து விட்டார்.

உடனே, இந்த்ரன் முதலான தேவர்கள், அஸுரர்களால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டு, ஸமஸ்தமான ஐஶ்வர்யங்களையுமிழந்து, இழந்த ஐஶ்வர்யத்தை யடைவதற்கு யோக்யமான யாகாதி கார்யங்களைச் செய்யவும் அஶக்தர்களாய் மிகவும் பரிதபித்து, அது விஷயமாக, தேவர்களெல்லாரும் கூடி, அனேகவிதமாக ஆலோசித்தாலும் அவர்களால் ஒருவிதமான உபாயமும் நிஶ்சயிக்க முடியவில்லை. அச்சமயத்தில் இந்த்ரன், ஸமஸ்தமான தேவர்களோடும் சத்யலோகம் சென்று, சதுர்முக ப்ரஹ்மாவை அடிபணிந்து, தங்கள் நிலைமையைத் தெரிவித்துக் கொண்டான்.

இந்த்ராதி தேவர்களின் தைந்யமான அந்நிலைமையையும் அஸுரர்களின் அபிவ்ருத்தியையும் அறிந்த பிரமன், என்னையும் உங்களையும் மற்றும் ஸமஸ்தமான சராசரங்களையும் படைத்துக் காத்துக் கெடுக்கும் பரம புருஷனே இப்போது நமக்குச்சரணம். ஆதலால் அவனையே நாம் சரணமாகப் பற்றுவோம் என்று சொல்லி இந்த்ராதி தேவர்களனைவரையுமழைத்துக் கொண்டு பரம காருணிகனான பரமபுருஷன் எழுந்தருளியிருக்கும் ஸ்தானத்தை யடைந்து, கட்கண்ணால் காணவரிதானவவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை நெஞ்சென்னு முட்கண்ணால் த்யானித்து, திவ்யமான வாக்குக்களால் ஸ்தோத்ரம் பண்ணினார்கள்.

கருணையங் கடலான ஸர்வேஶ்வரன் அவர்கள் ஸ்தோத்ரத்திற்கிரங்கி, நீருண்ட காளமேகம் போன்ற திருமேனியில் மின்னற்கொடிபோல் மிளிரா நின்ற பெரிய பிராட்டியாரோடும், கிரீடாதி நூபுராந்தமான திவ்யாபரணங்களோடும், ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களோடும், ஸ்வர்ணமயமான பெரிய திருவடியின்மீது எழுந்

தருளி ஸேவை ஸாதிக்க, ருத்ராதி தேவர்களோடுகூட சதுர்முக ப்ரஹ்மா, பலவாறு துதித்துத் தங்கள் நிலைமையைத் தெரிவித்து, எங்களுக்கு உன்னையல்லது வேறு சரணம் கிடையாது. ஆதலின் எங்களுக்கேற்பட்ட இவ்வாபத்தைப்போக்கி ரக்ஷித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.......அப்போது பகவான் ஒருவனாகவே தேவர்கள் கார்யத்தை நிர்வஹிக்க ஸமர்த்தனாயிருந்தாலும், ஸமுத்ரமதனாதிகளால் விஹரிக்க இச்சையுடையனாய், அஞ்சலிஹஸ்தர்களாய் பரிதாபகரமான நிலைமையிலிருக்கும் ப்ரஹ்மாதிதேவர்களைக்குறித்து, ஓ தேவர்களே! நீங்கள் இப்போது கார்யார்த்தம் அஸுரர்களோடு சமாதானம் செய்துகொண்டு, கார்யம் முடிந்தபின் உங்களின் வைரத்தைக் காட்டவேண்டும். எந்த அம்ருதத்தைச் சாப்பிட்டால் மரணம் சம்பவியாதோ, அந்த அம்ருதத்தைப் பெறுவதற்குப் பாற்கடலைக் கடையவேண்டும். அப்பாற்கடலில் அநேக ஒஷதிகளைப்போட்டு, மந்தர பர்வதத்தை மத்தாகநாட்டி, வாஸுகியைக் கடை கயிறாகச்செய்து, அஸுரர்களும் நீங்களும் ஒன்றாகக்கலந்து கடையவேண்டும். அக்காலத்தில் அஸுரர்கள் சொல்வதை ஆதரவுடன் கேட்டு, அவர்களிஷ்டப்படி நடக்கவேண்டும். இவ்வாறு செய்யும் காலத்தில் உங்களுக்கு நான் ஸஹாயபூதனாய் நின்று, அஸுரர்களை வஞ்சித்து, அம்ருதத்தை உங்களுக்கு அளித்து, அந்தர்த்தாநமாய் விடுவேன். அது பார்த்து மனம் தாளாமல் அஸுரர்கள் உங்களை நலிய ஆரம்பிப்பார்கள். அப்போது அம்ருதபானம் பண்ணிய நீங்கள் பலிஷ்டர்களாய் அஸுரர்களை ஜயித்து மறுபடியும் உங்களுடைய ஐஸ்வர்யத்தைப்பெற்று வாழ்வீர்கள். என்று வரமளித்து அந்தர்த்தாநமாய்விட்டான்.

அப்பால் இந்த்ரன், அஸுர அரசனை அநுவர்த்தித்து, இருகக்ஷியாரும் ஒன்றாகக்கலந்து, பாற்கடலைக் கடைவதற்கு உத்யோகித்தார்கள். உடனே மஹாபலிஷ்டர்களான அஸுரர்களும்தேவர்களும், மந்தரபர்வதத்தை வேரோடு பிடுங்கித் தூக்கிக்கொண்டுவர, நடுவில் தூக்குவதற்கு அசக்தர்களாய்விட, பகவான் கருடனைக் கொண்டு, கொண்டுவரும்படி செய்து சமுத்திரத்திலிட்டு வாஸுகியைக் கயிறாகக்கொண்டு வாஸுகியின் தலையைப்பற்றித் தேவர்கள் இழுக்க ஆரம்பிக்க, அஸுரர்கள், வீரர்களான நாங்கள் வால்ப் பக்கம் பற்றமாட்டோம், முகத்தின் பக்கத்தையேபற்றி யிழுப்



போமென்ன, அவ்வாறே தேவர்கள் வால்ப் பக்கமும், அஸுரர்கள் தலைப்பக்கமுமாகப்பற்றி இழுக்க, அப்போது மந்தரபர்வதம் ஆதாரமில்லாமல் உள்ளே அமிழ்ந்துபோக, அதுகண்டு தேவர்களும் அஸுரர்களும், தாங்கள்செய்த இவ்வளவுகார்யமும் வ்யர்த்தமாய்ப்போனதுபற்றி மிகவும் வருத்தமடைந்து, பகவானைப் பலவாறு ப்ரார்த்தித்தார்கள்.

அக்காலத்தில் ஆஸ்ரித ரக்ஷகனான ஸர்வேஸ்வரன், அப்பர்வதத்தை அநாயாஸமாகத் தாங்குவதற்கு யோக்யமான அதிவிசாலமாய் அத்யத்புதமாயிருப்பதொரு கமடரூபத்தைப் பரிக்ரஹித்து பர்வதத்தை உத்தரித்தான். மேலே கிளம்பிய பர்வதத்தைப் பார்த்துப் பரமானந்த பரிதர்களாய் மறுபடியும் கடைய ஆரம்பித்தார்கள். இவ்வாறு கடையும் காலத்தில் அஸுரர்களையும் தேவதைகளையும் ஆவேசித்து அவர்கள் பலத்தை வ்ருத்திபண்ணியும், பர்வதம் இழுக்கும்காலத்தில் சாய ஆரம்பிக்க அப்போது ஸஹஸ்ரபாஹுவான பகவான், ஒருகையால் பர்வதத்தின் சிகரத்தைப்பற்றிக்கொண்டு நிற்க, தேவர்களும் அஸுரர்களும் கடைய, கடைசியில் ஸர்வாபரண பூஷிதையான பிராட்டியாவிர்ப்பவிக்க, அவளுக்குத் தன் வக்ஷஸ்தலத்தை வாஸஸ்தலமாக்கி அப்பாலுண்டான அம்ருதத்தை அஸுரர்களை வஞ்சித்து தேவர்களுக்குக் கொடுத்து ரக்ஷித்தான். இவ்வாறு ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக ஆமையான பகவானை ஆழ்வார் திருமங்கையாழ்வார்.

சேரு மிதுவாளெயிற்றவர வொன்று சுற்றித் திசை மண்ணும் விண்ணுமுடனே, வெருவரவெள்ளை வெள்ளம்முழுதும் குழம்பவிமையோர்கள் நின்று கடைய, பருவரையொன்று நின்று முதுகில் பரந்து சுழலக் கிடந்து துயிலும், அருவரையன்னதன்மையடலாமையான திருமால் நமக்கோரரணே" என்று அநுபவித்தார்.

ஸ்ரீ கூர்மாய பரப்ரஹ்மணேநம:

ஸ்ரீ:

# ஸ்ரீமத் வேதாந்த தேசிகன்.

(காஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.)

[27-9-36 புரட்டாசித் திருவோணத்தன்று காலை சென்னைத் தொண்டைமண்டல வுயர்தரக் கலாசாலைமண்டபத்தில் நிகழ்த்திய உபந்யாஸத்தின் சுருக்கம்.]

இப்புரட்டாசித் திருவோணம் ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் திருவவதாரத்தினால் புனிதமாயது. இன்று இம்மஹாசார்யனுடைய வைபவத்தைச் சிறிது பேசி நாமும் புனிதராவோம்.

இவ்வாசிரியருடைய எண்ணில் பல்குணங்களில் எந்தத் திருக்குணத்தைப்பற்றிப் பேசலாமென்று ஆராயப்புகுங்கால் ஒவ்வொரு திருக்குணமும் ஸஹஸைஹஸிகயா வந்து தோன்றுதலால் நெஞ்சு தடுமாறுகின்றது. ஞான பக்தி விரக்திகள் என்ற மூன்று குணங்களே ஆசாரியர்கட்கு அணிகலமானவை. அவற்றுள் ஞானம் என்பதைப்பற்றிப் பேசப்புகுந்தால் ஸர்வதந்த்ரஸ்வதந்திரரென்றும் கவிதார்க்கிக கேஸரியென்றும் வேதாந்தாசார்யரென்றும் விருதுகள்பெற்றுள்ள இம்மஹானது ஞானத்தைப்பற்றிப் பேசுதற்கு நாமோ அதிகாரி? "அவரவர் தாந்தாமறிந்தவா றேத்தி" என்ற பொய்கையார் பாசுரத்தின்படி நமது சிற்றறிவிற்கு எட்டியவளவு பேசலாமெனினும், இவ்வாசிரியரது கவித்திறம், சாஸ்த்ர பாண்டித்யம், தமிழ், ப்ராக்ருதம் முதலிய பல பாஷைகளில் அளவுகடந்த வல்லமை, எளியநடையில் ஸ்தோத்திரங்கள் இயற்றும்பெற்றி, கம்பீரநடையில் சாஸ்த்ரீயக்ரந்தங்களருளிச்செய்யு மழகு என்று இங்ஙனே மகுடம்புனைந்து பேசக்கூடிய விஷயங்கள் பல பலவுள்ளதனால் எந்த வகுப்பின்கீழ்ப் பேசப்புகுவதென்கிற சிந்தனையே சிறந்துள்ளது ஆயினும் ஒவ்வொரு வகுப்பிலும் சிறிதுசிறிது பேசி நமதுவாக்கை வீறுபெறுத்திக்கொள்ளலாமென உத்ஸாஹ முயர்கின்றது.

## திருவவதாரம்.

இவ்வாசிரியர் திருவவதரித்தவிடம் "காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கு ஒவ்வா" என்றும் "முத்திதரும் நகரேழில் முக்கியமாங் கச்சி" என்றும் இவர் தம்மாலே புகழப்பட்ட காஞ்சீக்ஷேத்ரத்தில் 'திருத்தண்கா' என வழங்கப்பெறும் விளக்கொளி யெம்பெருமான் ஸந்நிதியின் பரிஸரமாகிய 'தூப்புல்' என்னும் திவ்யஸ்தலம். தூப்புல் என்பது பரிசுத்தமான புல் என்றபடி. தர்ப்பத்தைச் சொன்னவாறு. வைதிகர்கள் தர்ப்பத்தை விச்வாமித்திரமென்று வழங்குவர்களாதலால், விச்வாமித்ர கோத்ரத்தவர்களான மஹநீயர்கள் வாழ்ந்துவந்த இடம்என்பதுபற்றி அத்தலம் தூப்புல் என வழங்கப்பட்டுவந்ததெனப் பெரியோர் பகர்வர்.



இவர்க்குத் திருத்தகப்பனார் அநந்த ஸோமயாஜிகள். திருத்தாயார் தோதாத்ரியம்மை. ஆசிரியர் (மாதுலரான) கிடாம்பி அப்புள்ளார். இராமானுசப்பிள்ளான் என்பவரும் அவரே.

திருவேங்கடமுடையானுடைய திருமணியே இவ்வாசிரியராய்த் தோன்றினதாகப் பல ப்ரமாணங்களினால் விளங்குகின்றது. ஸ்வாமிதாமே ஸங்கல்பஸூர்யோதய நாடகப்ரஸ்தாவனையில் தம்மைப்பற்றி அருளிச்செய்யுமிடத்து "விஹிதவிபுதவீதீ வர்த்தநீநாம் வஹாவஸ்தநவரி வாரவியள வ்யயாதா | உத்ப்ரேக்ஷ்யதே பாயஜநோ வவத்திஷ்ட்ரா வண்டா ஹரேஸ்ஸஜநிஷ்ட யதாத்தநேதி" என்றருளியச்லோகமும், இவரது திருக்குமாரர் பணித்த தேசிகமங்களத்தில் "வெங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோதவா பவேத் | யதீந்த்ராம்சோதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ||" என்றுள்ள ச்லோகமும் முக்கியமாக இங்கு அநுஸந்திக்கவுரியன.

மேற்குறித்த ச்லோகங்களில் "உத்ப்ரேக்ஷ்யதே" என்றும் "விதர்க்யாய" என்றும் இருப்பதினால் வஸ்துஸ்திதியை அறுதியிடுவதற்கு இவை ப்ரமாணமாகுமோ என்று சங்கிக்க வேண்டா. மஹான்களின் வசநவ்யக்தி இங்ஙனேயாயிற்று அமையும்படி. நம்மாழ்வார் எம்பெருமானார் முதலானாரைப்பற்றின ச்லோகங்களிலும் இங்ஙனமே வசநவ்யக்திகளைக் காணாநின்றோம். "உத்ப்ரேக்ஷ்யதே" என்று ஸ்வாமி பணித்த ச்லோகந்தன்னிலேயே "உபவத்தி ஸூரி" என்றுள்ள ஸ்ரீஸூக்தி குறிக்

கொள்ளத்தக்கது. பின்புள்ள மஹான்கள் “[illegible] ||” என்று ஸ்பஷ்டமாகவே அநுஸந்தித்துப் போந்தார்கள்.

இவ்வாசிரியர் திருவேங்கட முடையானுடைய மஹோத்ஸவத்தின் அவப்ருத தினமாகிய புரட்டாசித் திருவோணத்தன்று திருவவதரித்தமைபற்றி ஸ்ரீ வேங்கடநாத ஶர்மா என்று திருநாமம் சாத்தப்பெற்றார், வேதாந்தாசார்யர் என்கிற திருநாமம் பிறகு பட்டப்பெயராகக் கிடைத்ததிவர்க்கு. [கலி [illegible] 4370, ஶாலிவாஹநஶக [illegible] 1191, கி. பி. 1268= விபவஸம்வத்ஸரத்தில் இவரது திருவவதாரமென்று பெரியார் நிரூபிக்கின்றனர்.] நூறு ஸம்வத்ஸரம் இவ்விபூதியில் எழுந்தருளியிருந்து திருநாட்டுக்கெழுந்தருளினராதலால் இற்றைக்கு ஏறக்குறைய 568 ஆண்டுகட்குமுன் இவ்வாசிரியரது ஜீவித காலம் என விளங்கா நின்றது.

## இளமையில் ஒளிவிளக்கம்.

இவ்வாசிரியர் தமது மாதுலராகிய அப்புள்ளாருடைய அதிமாத்ர ப்ரீதிக்குப் பாத்ரபூதரா யிருந்துவந்தார். நடாதூரம்மாள் ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த அவ்வாசிரியர், நாலைந்து பிராயமுள்ள இவ்வாசிரியக் குழந்தையையும் உடனழைத்துக்கொண்டு காலக்ஷேப கோஷ்டிக்குச் செல்ல, அம்மாள் இக்குழந்தையின் தேஜோ விஶேஷத்தையும் [illegible]த்தையும் நோக்கி வியந்து “ ஆம் முதல்வனிவன் ” என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளினார். இவ்விஷயம் இவ்வாசிரியர் தம்மாலேயே அதிகரணஸாராவளியின் தொடக்கத்தில் ‘[illegible]’ என்று பணிக்கப்பட்டது.

## வேத மோதுதல்.

உரிய காலங்களில் [illegible] களும் அடைவே செய்யப்பெற்ற இவர் வேதங்களை ஓதத் தொடங்கினர். வேதமோதின திறமையைப்பற்றிப் பூருவர்கள் கூறியுள்ளவொரு ச்லோகம் மிக அற்புதமானது. அதாவது— “[illegible]



[illegible] ||” என்பதாம். வேதத்தில் வேஷ்டநபதங்கள் என்று பலவுண்டு. [illegible]—என்பவைபோன்ற பதங்கள் வேஷ்டநபதங்களாகும். அவை இரட்டித் திரட்டித்தே ஓதவேண்டியவையாதலால், அத்தகைய வேஷ்டநபதங்களில் மாத்திரம் ஸ்வாமிக்குப் புநருச்சாரணம் ப்ராப்தமாயிற்றே யல்லது மற்றைப்படியுள்ள பதங்களை யெல்லாம் [illegible]லேயே க்ரஹித்தருளினா ரென்று இவருடைய அநிதரஸாதாரணமான க்ரஹணதாரண படுத்வம் கூறியவாறு. இவ்வண்ணமாகவே வேதாங்கமாகவுள்ள ஸகலஶாஸ்த்ரங்களையும் மாதுல ஸகாஶத்திலேயே இருபது திருநக்ஷத்ரத்திற்குள் அதிகரித்து உபயவேதாந்த ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாயங்களையும் சிக்ஷித்து, வைநதேயமந்த்ர உபதேசமும் பெற்று நிகரற்ற நிபுணராக விளங்கிவருகையில், ப்ராப்தகாலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்து ஆஹிதாக்நியாய் ஸ்ரீ காஞ்சியிலேயேஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரப்ரவசநங்கள் செய்தருளா நின்றார்.

## திருவயிந்திரபுரம் சேர்தல்.

இங்ஙனே நிகழ்ந்துவருகையில் ஒருநாள் தென்திசைத் திருப்பதிகளை மங்களாசாஸனஞ் செய்யத் திருவுள்ளங்கொண்டு பேரருளாளனது நியமனம்பெற்றுப் புறப்பட்டெழுந்தருளுகையில், பரமபாவநமான கருடநதியின்கரையில் தெய்வநாயகனுடைய ஸந்நிதாந ஸாரஸ்யத்தையும் ஔஷதாத்ரியின் வாய்ப்பையும் நோக்கி அவ்விடத்திலே சிலகாலம் வஸிக்கத் திருவுள்ளமாய், அத்திருமலையின்கண் வீற்றிருந்து முன்பு [illegible] ஸந்நிதியில் பெற்றிருந்த வைநதேய மந்திரத்தை நியதராய்ஆவ்ருத்திபண்ணிக்கொண்டிருக்க ஒருநாள் ஸுப்ரஸந்நராய் ஸாக்ஷாத்காரம் தந்தருளின பெரிய திருவடி ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தை யுபதேசித்துச் செல்ல, பிறகு ஆங்கு அழகியசிங்கர் திருமுன்பே ஹயக்ரீவ மஹாமந்த்ரத்தை நெடுநாள் ஜபித்துக்கொண் டெழுந்தருளியிருக்க, வெள்ளைப் பரிமுகரும் ஸுப்ரஸந்நராய்க் காட்சிதந்து தம்முடைய [illegible]த்தையூட்டி அநுக்ரஹித்து மறைந்தருள, ஆசிரியர் பரமாநந்த

பாராவாரநிமக்நராய் க்ருதார்த்தராய் எழுந்து ஹயக்ரீவஸ்தோத்ரம், கருடபஞ்சாஶத் என்ற இரண்டு ஸ்தோத்ரங்களை விண்ணப்பஞ்செய்து, தெய்வநாயகனையும் திருவடி தொழுது, தேவநாயக பஞ்சாஶத், அச்யுதஶதகம் (ப்ராக்ருத பாஷாமயஸ்தோத்ரம்) கோபாலவிம்ஶதி, (ரகுவீரகத்யமென வழங்கப்படுகிற) மஹாவீர வைபவம் என்ற ஸ்தோத்ரங்களையும், மும்மணிக்கோவை, நவ ரத்தினமாலை, பந்துப்பா கழற்பா ஊசற்பா ஏசற்பா அம்மானைப்பா என்கிற தமிழ்ப்பிரபந்தங்களையும் பணித்தருளினர்.

### திருக்கோவலூர் எழுந்தருளல்.

பிறகு தெய்வநாயகப் பெருமானிடம் நியமநம் பெற்றுக் கொண்டு, "பாவருந்தமிழால் பேர்பெறு பனுவற்பாவலர் பாதி நாளிரவில், மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்கிறபடியே பொய்கை பூதம் பேயாழ்வார்கள் கூடிக்குலாவி அநுபவித்து மகிழ்ந்த திருப்பதியாகிய திருக்கோவலூரில் ஆயனரைத் திருவடிதொழ விரும்பி அங்கெழுந்தருளிச் சிலகாலம் வாழ்ந்து அப்பெருமான் விஷயமாக "தேஹளீஶஸ்துதி" என்கிற ஸ்தோத்ரமுமருளிச் செய்தார். அதில் 6, 7, ச்லோகங்களில் முதலாழ்வார்கட்கும் எம்பெருமானுக்கும் நேர்ந்த பரிமாற்றம் வெகு அழகாகப் பேசப்பட்டுளது.

"தீபேந கேநசிதஶீதருசா நிஶீதே ஸ்நேஹோபபந்ந
பரிஶுத்தகுணார்பிதேந | [illegible]ாவகாஶநிபிடம்
[illegible] கவீந்த்ரா: ||"
[யோகிகளில் தலைவராகிய முதலாழ்வார்களென்னும் செந்தமிழ்க் கவித் தலைவர்கள் ஒரு நாள் நள்ளிரவில் விலக்ஷணமான வொரு விளக்கேற்றி ஹ்ருதயத்தினுள்ளே ஆயனரைக் கண்டு கொண்டனர் என்பது கருத்து.]

"காஸார பூர்வ கவிமுக்ய விமர்த ஜந்மா பண்ணாத
டேக்ஷு ஸுபகஸ்ய ரஸோ பஹுஸ்தே | த்வத்பாதபத்மமது
நி த்வதநந்யபோக்யே நூநம் ஸமாஶ்ரயதி நூதந ஶர்க்கரா
த்வம் ||" [பெண்ணையாற்றங்கரையில் கரும்புபோல் வளர்ந்திரா நின்ற ஆயனர் பொய்கையாழ்வார் முதலான மூவரோடும் நெருக்குண்டு பிழியப்பட்டதனால் உண்டான ரஸமானது "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்ற சுருதியின்படி அவரது திருவடித் தாமரைகளி லுண்டான தேன் பெருக்கில் சர்க்கரையாகக் கலந்தது போலும் என்றவாறு.] இந்த இரண்டு ச்லோக ரத்நங்களும் பக்தர்களுக்கு விசேஷித்து அநுஸந்தேயங்கள்.



### கச்சிக்கு எழுந்தருளல்.

இங்ஙனம் திருக்கோவலூரில் சிலகாலம் எழுந்தருளியிருந்து அங்குள்ளாருக்கு வேதாந்தக்ரந்த ப்ரவசநமும் செய்தருளி, பிறகு யாத்திரையடைவே ஸ்வாவதாரஸ்தலமான பெருமாள் கோயிலுக்கு மீண்டெழுந்தருளி அங்கு விஶேஷத: க்ரந்த ப்ரவசநம் செய்தருளுங் காலத்தில், பெருந்தேவித் தாயார் விஷயமாக ஸ்ரீஸ்துதியையும், பேரருளாளன் விஷயமாக வரதராஜ பஞ்சாஶத் என்னும் ஸ்தோத்ரத்தையும், அடைக்கலப்பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவதினசரி, பன்னிருநாமம், திருச்சின்னமாலை, ஹஸ்திகிரிமாஹாத்மியம் முதலான தமிழ்ப் பிரபந்தங்களையும், ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் விஷயமான வேகாஸேது ஸ்தோத்ரத்தையும், அட்டபுயகரத்தெம்பெருமான் விஷயமான அஷ்டபுஜாஷ்டகத்தையும், விளக்கொளியெம்பெருமான் விஷயமான ஶரணாகதி தீபிகை யென்கிற தீபப்ரகாஶஸ்தோத்ரத்தையும், வேளுக்கை யெம்பெருமான் விஷயமான காமாஸிகாஷ்டகத்தையும், திருப்புட்குழிப் போரேற்றுப் பெருமாள் விஷயமான பரமார்த்தஸ்துதியையும் அருளிச் செய்தார்.

### கச்சியில் விமதவிஜயம்.

ஸ்வாமி, பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்குங் காலத்தில்பேரருளாளனுக்கு வையங்கண்டவைகாசித்திருநாள் தொடக்கமாயிற்று. நாடோறும் மேற்கே யெழுந்தருளிக் கச்சபேச்வராலய வாசலில் இயல் தொடங்கி ஸேவிப்பது வழக்கமாதலால் அப்படியே தொடக்கமாகுங்காலத்தில் அங்குள்ள சைவர்கள் திரண்டுவந்து "ஆழ்வார்களின் தமிழ்ப் பிரபந்தங்களைப் பெருமாள் திருமுன்பே அநுஸந்திப்பதற்கு சாஸ்த்ரப்ரமாணங்கள் இருக்குமானால் அவற்றை யெடுத்துரைத்தாலல்லது இங்கு இயல் தொடங்கலாகாது" என்று தடைசெய்ய, அப்போது அங்குள்ளாரில் தலைவராயிருந்த தேசிகன், திவ்ய ப்ரபந்தங்களின்பெருமைகளையும், எம்பெருமான் திருமுன்பே இவற்றை ஸேவிக்கவேண்டி

யது மிக அவசியம் என்பதையும் பஹளதரப்ரமாணோபபத்திக ளுடன் எடுத்துரைக்க, சைவர்கள் வாய்மாண்டு மீண்டுபோயினர். [இந்த வரலாறு ஸ்வாமியின் வைபவநூல்களிற் காணப்படவில்லை. சில பெரியார் சொல்லக் கேட்டது. இது கூரத்தாழ்வானுடைய சரிதையிற் சேர்ந்தது என்பாருமுளர். உண்மையை ஸம்பிரதாயம் வல்ல பெரியார்வாய்க் கேட்டுத் தெளிக.]

### வைராக்கிய பஞ்சக மருளிச் செய்தல்.

—*திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தருளின இந்த வேதாந்த தேசிகன் ஸர்வதோமுகமான ஞானம் படைத்தது போலவே விரக்தியையும் லோகவிலக்ஷணமாகப் பெற்றவராதலால் கூரத்தாழ்வானைப் போலவே தாமும் உஞ்சவ்ருத்தி யையே கொண்டு பெருமாள் திருவாராதநத்தைக் குறையற நடத்திக்கொண்டு செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவர்க்கு உபய வேதாந்த க்ரந்தப்ரவசநம் செய்தருளா நின்றுகொண்டு *கார்மேனி யருளாளர் கச்சிப்பதியிலே பேரருளாளனை மங்களாசாஸநஞ் செய்து கொண்டெழுந்தருளி யிருந்தார். இவருக்குப் பரம மித்திரரான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் விஜயநகர மஹாராஜனிடத்தில் மிகுந்த வாழ்வும் பெற்றுப் பலபல வித்வான்களை ஆதரிப்பதற்குரிய ஸௌகர்யங்களையுடையரா யிருந்தபோது இந்த ஸ்ரீதேசிக சிகாமணியை ஸ்மரித்து இவருடைய ஏழைமையைப் போக்கிச் செல்வச் சிறப்பை யுண்டாக்கக் கருதி அந்த விஜய நகராதீச னிடத்திற்கு எழுந்தருளுமாறு ப்ரார்த்தநா பத்ரிகையை அனுப்ப, அதனைக் கடாக்ஷித்தருளின ஸ்வாமி தேசிகன் தம்முடைய நிஷ்டா விசேஷங்களை அந்த வித்யாரண்ய ஸ்வாமி அறிந்துவைத்தும் வீணாக இப்படி ஆஹ்வாநம் பண்ணுகிறாரே! எனத் திருவுள்ளம் நொந்து, அவருடைய பத்திரிகைக்கு உத்தரமாக

𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌨𑍍𑌨 𑌮𑌯𑌾 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑍈𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍈𑌤𑌾𑌮𑌹𑌂 𑌧𑌨𑌮𑍍 ॥

என்கிற ச்லோகத்தை யெழுதியனுப்ப, அவரும் அதைக் கண்டு, ஸ்வாமி தேசிகனிடத்தில் அவர் தாம் வைத்திருந்த விஸ்ரம்பாதிசயத் தினால் எப்படியாவது இவர்க்கு ஐச்வர்ய[illegible]ஸாஹாய்யம் பண்ணி வைக்க வேணுமென்கிற ஆசையினால் மீண்டும் மிக நிர்ப்பந்தித்துப்



பத்ரிகை விடுக்க, அப்போது ஸ்வாமி அநுக்ரஹித்தருளி யனுப்பிய ச்லோக ரத்நங்கள் வைராக்ய பஞ்சகமென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும்.

### க்ஷுத்ரமந்த்ரவாதி நிரஸநம்.

ஒரு மாயாவாதி ஸந்ந்யாஸி கச்சியில் வந்து ஸ்வாமியோடு தர்க்கித்துத் தோல்வி பெற்றதனால் வருந்தி இவர்க்கு ஏதேனும் இன்னல் விளைக்கவேணுமென்றெண்ணித் தனக்குள்ள க்ஷுத்ர மந்த்ரவாத சக்தியினால் ஸ்வாமி திருமாளிகைக்கு அருகிலுள்ளதொரு குளத்தில் தான் தண்ணீரருந்தி அது ஸ்வாமியின் திருவுதரத்திலே புகுந்து மஹோதரமாகும்படி செய்ய, இந்த மாயச் செய்கையை அறிந்த ஸ்வாமி தம் திருமாளிகைவாசல் தூணை நகத்தினால் கீறியருள, அதில் நின்றும் தண்ணீர் பெருக, ஸ்வாமியின் திருவுதரம் பழையபடியாயிற்று. இது கண்ட அந்த மாயாவாதி ஸ்வாமியின் சக்திவிசேஷத்திற்கு மிக வியந்து திருவடியில் தொழுது சென்றான்.

### பிரமசாரிக்குச் செல்வமளித்தல்.

ஒருநாள் ஒரு ப்ரஹ்மசாரி, ஸ்வாமி ஸந்நிதியில் வந்து தெண்டனிட்டு 'அடியேன் மிகவும் அகிஞ்சநன்; விவாஹம் செய்து கொள்ள விருப்பமுடையேன்; ஸ்வாமி த்ரவ்யஸஹாயம் செய்தருளவேணும்' என்று பிரார்த்தித்தான். அது கேட்டு ஸ்வாமி புன்முறுவல்செய்து 'பிள்ளாய்! நானோ உஞ்சவ்ருத்தி பண்ணிப் பெருமாள் திருவாராதனம் நடத்துகிறவன் என்பது உனக்கு நேரில் தெரியும்; இப்படியிருக்க விசேஷதனிகர்களை விட்டு என்னிடம் வந்து பொருள் யாசிப்பதற்குக் காரணமென்ன?' என்று வினவ, ஸ்வாமி திருவுள்ளம் பற்றினால் அலப்யமானதொன்றில்லை யென்றும் வேண்டிய பொருள் கிடைக்கு மென்றும் பல பெரியார் சொல்லக் கேட்டதனாலே ஸ்வாமியை ப்ரார்த்திக்கலானேன் என்று அவன் விடைகூற, ஸ்வாமியும் அதுகேட்டு 'அப்படியா? பாகவதர்கள் அங்ஙனம் அருளிய பக்ஷத்தில் தவறாது பொருள்கிடைத்தே தீரும்; இனி விசாரப்படாதே; ஸ்ரீஸ்துதியை அநுஸந்தாநம் செய்துகொண்டு பெருந்தேவித்தாயாரை ப்ரதக்ஷிணம் செய்துவா; அநுக்ரஹமுண்டாகும்' என்றுகூறி, ஏற்கனவே பெருந்தேவித்தாயார் விஷயமாகத் தாம் அருளிச்செய்திருந்த ஸ்ரீஸ்துதி என்னும் தோத்திரத்

தை அவனுக்குக் கண்டபாடம் செய்வித்தருளினார். அவனும் அற்றைநாள் முழுதும் அந்த ஸ்துதியையே ஆவ்ருத்தி செய்து கொண்டிருந்து பிற்றைநாள் காலை ஸ்வாமி ஆஹ்நிகங்களை முடித்துக்கொண்டு பேரருளாளன் ஸந்நிதிக்கு மங்களாஶாஸநார்த்தமாக எழுந்தருளும்போது அந்த ப்ரஹ்மசாரியும் ஸ்வாமியைப் பின்சென்று ஸ்ரீஸ்துதியைச் செவிக்கினிதாக அநுஸந்தித்துக் கொண்டே பெருந்தேவித்தாயாரை வலம்வர,

“[illegible] ||” என்கிற ச்லோகங்கள் அநுஸந்திக்கப்படுமளவில் தாயார் ஸந்நிதியில் திருமுன்பே ஸ்வர்ண தாரைகளின் வர்ஷம் வாய்த்திட, அனைவரும் அதிஶயித்தனர். பிரமசாரியும் க்ருதார்த்தனாய் விடைபெற்றுச் சென்றனன்.

(தொடரும்.)

---

# ஸ்ரீவசந பூஷணத்தில் ஓர் ஸ்ரீ ஸூக்தி ஸ்வாரஸ்யாநுபவம்

---

[A. V. கோபாலாசாரியார், பத்ராதிபர் ஸ்ரீதேஶிகஸூக்திஸம்ரக்ஷிணீ]

த்விதீய ப்ரகரணம் உபாய வைபவத்தில் 29, 30 வது சூர்ணைகளில் “அர்ஜுநன் நீசர் நடுவேயிறே இவ்வர்த்தம் கேட்டது. ஆகையால் ஶுத்த்யஶுத்திகளிரண்டுந் தேடவேண்டா; இருந்தபடியே அதிகாரியாமித்தனை” என்று அருளியுள்ளது. “அர்ஜுநன் இவ்வர்த்தம் கேட்டது” என்பதற்கு கேவல ஶ்ரவண மாத்ர பரமாகப் பொருள் திருவுள்ளமில்லையென்று தோன்றுகிறது.



“நீசர் நடுவேயிறே இவ்வர்த்தங்கேட்டது.” என்பதற்கு ஸாக்ஷாத் ஶரணாகத்யனுஷ்டான பரமாகவும் பொருள் நிரூபித்தால்தான் ஸ்ரீஸூக்தி மிக்க ஸமஞ்ஜஸமாகும். அஃதுதான் லோகாசார்யர் திருவுள்ளமுமென்று நினைக்கிறோம். ‘பரபத்யுபதேஶம் பண்ணிற்று மிவளுக்காக’ என்று முன் புருஷகாரவைபவப்ரகரணம் முடிந்தது. அதற்கடுத்த 23 வது சூர்ணையோடு உபாயவைபவ ப்ரகரணம் ஆரம்பமாகிறது. ‘ப்ரபத்திக்கு தேஶாதி நியமங்களில்லை. விஷய நியமேயுள்ளது.’ என்கிற ப்ரதிஜ்ஞையோடு உபாய ப்ரகரணாரம்பம். முன் ப்ரகரணத்தின் முடிவான அதற்குமுன் வாக்யத்தில் “ப்ரபத்யுபதேஶம் பண்ணிற்று” என்ற ப்ரபத்யுபதேசபதத்தைக் காண்கிறோம். அதற்கு வேற்றுமையாக அடுத்த வாக்யத்தில் ‘ப்ரபத்திக்கு’ என்று ப்ரயோகித்திருப்பால் இங்கே ப்ரபத்தியின் அநுஷ்டானத்தைப்பற்றி ப்ரதிஜ்ஞை என்று கொள்வது ஸ்வரஸம். ‘உபாயவைபவ ப்ரகரணம்’ என்ற ப்ரகரண நாமதேயமும் உபாயானுஷ்டானத்தைப்பற்றிப் புதுப்ரகரணம் என்று கொள்வதற்கு ஸ்வரஸம். 24-ல் விஷய நியமமேயுள்ளது’ என்றது ப்ரபத்யனுஷ்டானத்திற்குரிய நியமத்தை மட்டும் பற்றியது. 25-ல் இப்ரபத்தி என்னும் ஞானத்திற்கு எதிர்த்தட்டாக கர்மத்தை எடுத்து அதன் அனுஷ்டானத்திற்கு எல்லாவித நியமங்களின் நிர்பந்தமிருப்பதைக் காட்டியருளினார். அங்கும் கர்மானுஷ்டானத்திற்குரிய நியமத்தைப்பற்றிப் பேச்சேயல்லது கர்மோபதேஶ ஶ்ரவணங்களைப்பற்றியல்ல. 26-ல் ஸைஷ தேஶ: கால: என்று திருவடி வாக்யத்தை ப்ரமாணமாக உதாஹரித்து‘ இதுக்கு தேஶ கால நியமமில்லை’ என்ற விடத்தில் ‘இதுக்கு’ என்பது ப்ரபத்யனுஷ்டானத்திற்கேயல்லாது ப்ரபத்திவிஷய ஶ்ரவணத்திற்கல்ல. அப்படியே 27-ல் ப்ரபத்யனுஷ்டாந ரூபமான த்வயமந்த்ரம் ப்ரபத்யநுஷ்டாநத்திற்கு நியமாஹாவே ப்ரமாணமென்று ஸாதிக்கப்பட்டது. அங்கே ப்ரபத்யுபாயத்திற்கு நியமாநபேக்ஷைதான் அநுவர்த்திக்கிறது. 28-ல் ப்ரகார நியதியில்லையென்று ஸாதித்ததும் ப்ரபத்யஷ்டாந விஷயமே. 29-ல் முதலில் த்ரௌபதியின் அநுஷ்டாநத்தை ஸாதித்து அதே வாக்யததில் அர்ஜுநன் நீசர் நடுவே கேட்டது என்பதால், அதையும் அர்ஜுநன் நீசர் நடுவே ப்ரபத்யநுஷ்டாநம் பண்ணினதை ஸாதித்ததாகவே பொருள் கொள்வதற்கு இடமுண்டு. அப்படிக்கொண்டால் ப்ர

கரணமும். முன்பின் உள்ள எல்லா வாக்யங்களும், இதற்கடுத்த வாக்யங்களில் 'ஆகையால்' என்று அர்ஜுநன் செய்த வ்யாபாரத்தையும் சேர்த்து ஹேதுக்களாகக்கூறி நிகமநம் செய்ததும் அழகாக ஒட்டும் 'கேட்டது' என்பதற்கு 'ப்ரார்த்தனை செய்தது' என்று பொருள் கொள்ளலாம். வரங் கேட்பது என்பதுவர ப்ரார்த்தனையைச் சொல்லும். அர்ஜுநன் "ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று "இவ்வர்த்த"மென்னும் கீதோபதேஶத்தை ப்ரபத்த்யநுஷ்டாநம் செய்து ப்ரார்த்தித்தான்; கீதோபதேஶத்திற்காக ஶரணாகதி செய்தான்; "நான் கார்பண்யோ பஹதஸ்வபாவன்" என்று ப்ரபத்த்யங்கமான கார்பண்யம் பூர்ணமாயிருப்பதை ஸ்பஷ்டமாகப் பேசித்தானாக ஸந்தேஹம் தெளிய அஶக்தன் (ஸம்மூடமான சேதஸ்ஸையுடையன்) என்று பேசித் தெளிவுண்டாக்க வேண்டிய கீதோபதேஶத்திற்காகத் தேர்த்தட்டில் பெருமாளை ப்ரபத்திபண்ணி "ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்' என்று ப்ரபந்நஶப்தத்தையே ப்ரயோகித்து தான் ஶரணாகதி ரூபமான ப்ரார்த்தனை செய்வதை ஸ்பஷ்டமாகப் பேசினான், ஸ்ரீ பாஷ்யகாரரும், "ஶரணாகதனை உம்முடைய ஶிஷ்யனை எனக்கு நிஶ்சிதமான ஶ்ரேயோமார்க்கத்தை உபதேஶிக்க வேண்டும் என்று அதிமாத்ரக்ருபணனாய் பகவான் திருவடிகளை உபஸந்நனான்," என்று ஸாதித்தார். "பார்த்தம் ப்ரபந்நமுத்திஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம்" என்று ஸ்ரீ ஆளவந்தாரும் கீதோபதேஶத்திற்காக அர்ஜுநன் ப்ரார்த்தநாரூபமான ப்ரபத்தியை அநுஷ்டித்ததை 'ப்ரபந்நம்' என்று ஸாதித்தார். ஸ்ரீ பாஷ்யகாரரும் தர்மபுபுத்ஸயா (தர்மத்தைத் தெளிய அறியவிருப்பதால்) ஶரணாகதனை பார்த்தனையுத்தேசித்து என்னும் ப்ரபந்நஶப்தத்திற்கு ஶரணாகத்யநுஷ்டானம் பண்ணினவன் என்று பொருள் ஸாதித்தார். பார்த்தன் அநுஷ்டித்தஶரணாகதிப்ரார்த்தனைக்கு ப்ரயோஜநம் கீதோபதேஶம்' அந்த கீதோபதேஶத்தில் ப்ரபத்தி என்னும் அர்த்தமும் சேர்ந்ததே. ஆகையால் அர்ஜுநனுடைய ப்ரார்த்தனைக்கு பலம்: ப்ரபத்த்யுபதேஶமும் விஷயமாகும். ப்ரபத்தியையும் உட்கொண்ட கீதாஶாஸ்த்ரத்தின் உபதேஶம் அர்ஜுநன்



செய்த ஶரணாகதிக்குக்கோரின பலமும். கேட்டது என்பதற்கு ப்ரார்த்தித்தது என்பதும் ஸ்வரஸப் பொருளாகையாலும், அர்ஜுநன் ஶரணாகதியை ஶரணாகத்யநுஷ்டானத்தோடு ப்ரார்த்தித்துக் கேட்டதாலும், இங்கே மூலத்திற்கு அர்ஜுநன் செய்த ப்ரபத்த்யநுஷ்டாநத்தையும், 'கேட்டது' என்பதற்குப் பொருளாகக் கொண்டு ப்ரகரணத்திற்கும், முன்பின் வாக்யங்களுக்கும் கீதை கீதாபாஷ்யம் முதலிய க்ரந்தங்களின்படி அர்ஜுநன் ஶரணாகதி செய்து கேட்டான் என்றிருப்பதற்கு அநுகுணமாகவும் நிர்வஹிக்கலாம் என்று தாஸனுக்குத் தோன்றுகிறது. கேட்டது. என்கிற சப்தம் உபதேஶம் கேட்டது என்பதையும் ஸ்வரஸமாகச் சொல்லக்கூடியதே, இங்கே கேட்டது என்பது ப்ரபத்திரூபமான ப்ரார்த்தநாமதி பண்ணினதையும், ப்ரபத்யுபாய கடிதமான கீதாஶ்ரவணம் பண்ணினதையும், இரண்டையும் பொருள் கொள்ளும்படி உதாரமான ஶப்தவிந்யாஸம் செய்தது ரஸிக்கத்தக்கது. ப்ரபத்த்யநுஷ்டாநம் செய்ததை முக்யமாகவும், ப்ரபத்தி விஷய உபதேஶம் கேட்டதை ப்ராஸங்கிக (அமுக்ய) மாகவும் கொள்ளலாம். 29-வது சூர்ணையில் ப்ரபத்திஶ்ரவணம் பண்ணினதை மட்டும் வ்யாக்யாநத்தில் ஸாதித்துள்ளது, 'ஆகையால், என்கிற அடுத்த சூர்ணையிலுள்ள முதல் பதத்திற்கு அநுஷ்டாந தஶையிலும், ஶ்ரவண தஶையிலும், இவர்களிருவரும் இப்படிச் செய்கையால் என்று ஸாதித்ததை அர்ஜுநன் விஷயத்தில் இரண்டு விஷயமாகவும் த்ரௌபதி விஷயத்தில் அநுஷ்டாநமென்னும் ஒரே விஷயமாகவும் பொருள் கொண்டு அர்ஜுநன் விஷயத்தில் அநுஷ்டாந தஶையை முக்யமாகவும் 2. வதாக ஸாதித்த ஶ்ரவண தஶையை ப்ராஸங்கிகமாகவும் கொண்டு நிர்வஹிக்கலாம்-

அர்ஜுநன் முதலில் ப்ரபத்த்யநுஷ்டாநம் செய்தது கீதோபதேஶத்தால் தன் ஶோக மோஹங்களை நிவர்த்திக்க. நாராயணனும் நரனும் சேர்ந்து க்ருஷ்ணார்ஜுநர்களாக அவதரித்தார்கள். அவர்களுக்குள் குரு ஶிஷ்ய ஸம்வாதமாக கீதை ஏற்படாவிட்டால் நரநாராயணர்கள் அவதரித்ததற்கு ப்ரயோஜனமே இல்லாது போய்விடும், பெருமாள் விநயகாஷ்டையை அவலம்பித்து கீதை என்பது தம்மால் உபதேஶிக்கப்பட்ட ஶாஸ்த்ர

மென்று பேசாமல், "தர்ம்யம் ஸம்வாதமாவயோ:" என்று இருவருடைய ஸம்பாஷணம் என்று பேசினர், ஓர் வித்யோபதேசத்தில் குருசிஷ்யர்களிருவருக்கும் அந்வயமுண்டு. அந்த வித்யையின் திருநாமத்திலும் குரு சிஷ்யர்கள் இருவர் பெயரையும் சேர்ப்பதுண்டு. புத்ரராகிய ப்ருகுவுக்கு வருணர் உபதேசித்தவித்யைக்கு 'பார்கவீ வாருணீ வித்யா' என்று பெயரிடப்பட்டது. அதிலும் சிஷ்யராகிய ப்ருகுவின் திருநாமம் முதலில் வந்தது. அவர் "வருணம் பிதரம் உபஸஸார" என்று தகப்பனாரிடம் வந்து ப்ரஹ்மோபதேசத்தை ப்ரார்த்தித்ததாலே அந்த வித்யை அவதரித்தது. அவருடைய ப்ரச்நங்களும் அவர் வாக்யங்களும் அந்த வித்யையில் கூடவேயுள்ளது. அப்படியே கீதையிலும் அர்ஜுந ப்ரச்நங்களும் அர்ஜுந வாக்யங்களும் சேர்ந்துதான் 700-ச்லோகங்களுள்ள முழு கீதாசாஸ்த்ரம். அர்ஜுநன் சரணாகதிபண்ணி ப்ரபத்யர்த்தமும் அடங்கிய கீதோபதேசத்தை ப்ரார்த்தித்தபடியால் அந்த ப்ரபத்திக்கு பலமாக உலகத்திற்கு கீதை கிடைத்தது. அர்ஜுநன் ப்ரபத்திக்கு கீதைபலமாகப்பர்யவஸித்தது. அவன் சரணனபடியால் நரர்களெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி அவனுடைய ப்ரபத்தி நரலோக க்ஷேமமாய் பலித்தது. 'தேர் நடுவேயிறே இவ்வர்த்தம் கேட்டது,' என்கிற சிறு ஸூத்ரத்தை ப்ரபத்யுபாய வைபவ ப்ரகரண நடுவில் அருளிச்செய்ததனால் இந்த ஸ்வாரஸ்யங்களையெல்லாம் ஸூசிப்பதாகச் சொல்லலாம். இது விஷயத்தில் ரஸிகர்கள் ஹ்ருதயமே ப்ரமாணம்.

---

# கம்பரும் திருமந்திரமும்

(பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி. ரே. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்)

"குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லாம், நிலந்தரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும், வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும், நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" "நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய" என்று தொடங்கிப் பெரியாழ்வார் நன்மை தீமைகளொன்றும் அறியேன் நாரணா!என்னும்"இத்தனை யல்லால், புன்மையால் உன்னைப் புள்ளுவம்பேசிப் புகழ்வானன்று கண்டாய் திருமாலே, உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன் ஓவாதே நமோ நாரணா! என்பன், வன்மையாவது உன்கோயிலில் வாழும். வைட்டணவ னென்னும் வன்மை கண்டாயே" என முடிக்கிறார்.



துணையிலான்றனைத் துணையென வுடையவனை பிரகலாதாழ்வான் தாதையைக் கண்டான். தொழுதான். இரணியன், தொழுத மைந்தனை மார்பிடை அன்பொடு தழுவி, மாடிருத்தி, முழுது நோக்கி, நீ வேதியன் கேட்கவின் முனியப் பழுது சொன்ன சொல் என்ன? அது பகருதி" என்றான்.

பரமபாகவதோத்தமனான பிரகலாதன் "சுருதியாதியிற் றொடங்குறு மெல்லையிற் சொன்ன, ஒருவன் யாவர்க்கு நாயகன் றிருப்பெயருணரக், கருதக் கேட்டிடக் கட்டுரைத் திடர்க்கடல் கடக்க, உரிய மற்றிதினல்ல தொன்றில்லென வுரைத்தான்." மறைத்துக்கூறின மகன் கூற்றைப் பொறுக்காது தந்தை "எவதவ்வுரை? விளம்புதி விளம்புதி" என்றான்.

அறிஞரிற்றூயான் திருமந்திரத்தின் சீர்மையை எடுத்துரைக்கின்றான். கம்பர் பாடல்களை அப்படியே தருகிறோம்.

"காமம் யாவையுந் தருவது மப்பதங்கடந்தாற்
சேம வீடுறச்செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓமவேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாமமன்னது கேணமோ நாராயணாய."

"மண்ணி னின்று மேன் மலரயனுல குற வாழும்
எண்ணில் பூதங்கணிற்பன திரிவன விவற்றின்
உண்ணிறைந்துறை கரணத்தி னூங்குள வுணர்வின்
எண்ணுகின்ற திவ்வெட்டெழுத்தே பிறிதில்லை."

"முக்கட்டேவனு நான் முகத்தொருவனு முதலா
மக்கட்காறு மிம்மந்திர மறந்தவர் மறந்தார்
புக்குக் காட்டுவதரிதிது பொதுவுறக்காண்பார்
ஒக்கநோக்கின ரல்லவரதனிலை யுணரார்."

"தோற்றமென்னு மத் தொல்வினைத் தொடுகடற் சுழிநின்
றேற்று நன்கலனருங் கலன் யாவருக்குமினிய

மாற்றமங்கல் மாதவவேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருடெரிந்த மற்றிதனிலை சிறந்த."

இப்பாக்களின் நுண்ணிய பொருளை அறிஞர் பாற்கேட்டுணர்க.

கம்பர்மதம் வைணவம் என்பது எம்மனோர் துணிபு. இராமாயணத்தில் பிரஹ்லாத சரிதத்தைப் புகுத்திய தொன்றே இதனை வற்புறுத்தும்.

"உயர்ந்த நங்காவல னல்லார்க்குரிமை துறந்துயிராய்
மயர்ந்தமை தீர்ந்து மற்றோர் வழியின்றி யடைக்கலமாய்
பயந்தவந் நாரணன் பாதங்கள் சேர்ந்த பழவடியார்
நயந்த குற்றேவலெல்லா நாடு நன் மனுவோதினமே."

"எட்டு மெட்டு மெட்டுமாய் ஓரேழுமேழு மேழுமாய்
எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற ஆதி தேவனை
எட்டினாய பேதமோடு இறைஞ்சி நின்று, அவன்பெயர்
எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர்வான மாளவே."

---

## வைஜயந்தியின் புத்தாண்டு

(பந்தல்குடி. பாரத்வாஜ மாடபூசி. ரே. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.)

உலகில் உலவிவரும் மதங்களுக்குள்ளே 'எம்பெருமானார் தரிசனம்' என்ற சிறப்புப் பெயருடன் விளங்கி வரும்' ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் பலவகைகளில் பரமானது என்பதைப்பரம ரஸிகர்கள் ஒப்புக்கொள்வர். இத்தகைய பெருமை வாய்ந்த இச்சித்தாந்தம் உலகெங்கணும் பரவ உதவிபுரிவது உத்தமர் கடன். தற்கால விபரீதத்தால் ஸ்ரீ வைஷ்ணவர்களனைவரும் ஏகோபித்து, இம்மதத்தை அனைவரும் அறிந்துய்யவேண்டிய முயற்சிகளைச் செய்யாமல், தம்முள்ளே பல வேறுபாடுகளை யிட்டு வாளா நிற்பது வருந்தத் தக்கதே. இச்சம்பிரதாயத்துக்காகக் கண்ணையும் உயிரையும் விட்டவர் நிற்க, அதன் பெயரைக் கைக்கொண்டொழுகும் இக்காலத்தவரில் பெரும்பான்மையோர் உதாஸீநராக நிற்பது மிகவும் சோகித்தற்குரியது. அவர்களைத் துயிலெழுப்பி



அநுபவரஸத்தில் ஈடு படுத்துபவர் ஸ்ரீ. உப. வே. வடகரை இராமாநுசாசாரியர் என்னலாம். பத்திரிகையின் நாமமும் பத்திராதிபர் திருநாமமும் ஒன்றாயமைந்தது அபேதத்தை விளக்குகிறது. இக்கால பத்திரிகைகள் போலன்றிக்கே ப்ராசீன நெறியில் நின்று பிரசுரிக்கப்பட்டுவரும் இப்பத்திரிகைக்கு முதலாண்டு முடிந்தது கண்டு மிகவும் மகிழ்ச்சி யுறுகிறோம்.

தாதாண்டு கார்த்திகையிற் கார்த்திகை இதன் புத்தாண்டு தினம். இது மேன்மேல் செழித்தோங்குமாறு திருமாமகள் கொழுநன் திருவடி வாழ்த்துவாம்.

அகில ஸ்ரீ வைஷ்ணவர்களும் கைங்கர்ய புத்தியுடன் இவ்வைஜயந்தியை ஆதரிப்பரேல் நாடும் நகரமும் நன்கறிய நாரணன் தன் நாமம் நன்கு நவில ஹேதுவாகும். ஸம்ப்ரதாயமே நம்மைத்தலை காக்கும். ஒழுக்கம் விழுப்பந்தரலால், அஃது உயிரினும் ஓம்பப் படும். சொல்லினும் செய்கையே வலிவுடைத்து. பலர்க்குப் பயன்படாத கேவல வாத விஷயங்களிற்றலை சாய்க்காது அநுபவ ரஸங்களை அள்ளிப்பருக உதவி செய்தால் எப்பத்திரிகையும் நன்கு வளர வழியுண்டு. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு. வைஜயந்தியின் முன்னேற்றத்தை நாடுவோர் யாவராயினும் திருமாலின் கருணைக் கிலக்காகுவர். பல துறையிலும் இப் பத்திரிகையைப் போஷிக்கவேணும் என்பதே சிற்றறிவுடைய அடியேன் விண்ணப்பம். பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

ப. ரே. திருமலை ஐயங்கார்.
2—12—1936.

---

## பராங்குச பரகாலயதிவராதிகள்.

திருமலை நல்லான் T. ராம்கிருஷ்ணய்யங்கார்,
சிரோமணி, ஆழ்வார் திருநகரி.

ஸ்ரீப்ரபந்நர்யார் என்பதுபற்றி வரைந்தோம். இனி ப்ரபந்நர்தமக்கு ப்ரதான பூதர்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

நம் ஆசாரியர் "பராங்குச, பரகால, யதிவராதிகள்" என்று நம்மாழ்வாரையும், திருமங்கை யாழ்வாரையும், உடையவரையும் ப்ரதான புருஷர்களாகப் பரிகணநம் செய்திருக்கிறார்கள். ப்ர

பந்ந குலத்தைப் பெருக்கவைத்த பெரியர் இம்மூவரும். இவர்களது அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கது. இவர்கள் செய்த பெரு நல் உதவிக்குக் கைம்மாறு ஏது? ஒருவரது அருள் ஆயிரம் இன்தமிழ் சொரிவது, மற்றொருவர் அருள்மாரி, மற்றவர் காரேய் கருணையர். இம்மூவரும் ப்ரபந்நகுலக் கடலில் தோன்றிய சூரியர்கள். முதலவர் வகுளபூஷண பாஸ்கரர். நடுச் சொன்னவர் லோகதிவாகரர். பின்னவர் ராமாநுஜ திவாகரர். இத்திவாகரர்களுடைய உதயத்திலே சாதாரணப் பகலவனுக்குப் போகாத அஜ்ஞானமாகிய இருள் போய்ப் புண்ணியமாகிய தாமரை மலர்ந்தது. அஸ்தமிக்கும் சமயமே இவர்களுக்குக் கிடையாது.

(2) கீழ் வ்யாசத்திற் குறிப்பித்தபடி ப்ரபந்நர்களாகிய நமக்கு இம் மூவரைப்போல மணவாள மா முனிகளும் குலகூடஸ்தரர்வர். ஆதி பதத்தால் இவரை நாம் கிரகித்துக்கொள்ள வேண்டும். இவர் தக்க சமயத்தில் நம் சமயத்திற்காற்றிய உதவி மிகப் பெரிது. "தென்மொழி மறை" மணவாளமா முனிகளின் ஸ்ரீஸூக்திகளாலேயே உண்மைப் பொருளைத் தெரிவியா நிற்கின்றது. முப்பத்தாறாயிரப் பெருக்கர் " என்ற பிருதம் இவருக்கு அஸாதாரணமானது. ஸ்ரீ வசநபூஷணம், ஆசார்யஹ்ருதயம் முதலிய நூல்களுக்கு இவர் வியாக்கியாந மில்லாவிட்டால் அவை லோபியின் கையில் அகப்பட்ட பணக்குவியலாக முடிந்திருக்கும். "[illegible]" என்று கூறுகிறபடியே மிகவிரிவோ, சுருக்கமோ யின்றி விசததமமாய் வியாக்கியானம் செய்யும் முறை, நிறை யறிவுடையோரெவராலும் பாராட்டத் தக்கது. முந்திய உபதேச மார்க்கத்தைச் சிந்தை செய்து, பின்னவரும் கற்க, உபதேசமாய்ப் பேசுமிவரது அடக்கமும், ஒழுக்கமும், அருளும் எவரையும் பரவச ராக்கிவிடும். இவருடைய ஞான அநுஷ்டாந பூர்த்தியைக் கண்டு ஸர்வேஶ்வரனே இவருக்குச் சிஷ்யனாகி "ஸ்ரீசைலேச" என்னும் மந்திரத்தை வெளிப்படுத்தினன் எனின் இவர் மகிமை மகிதலத்தில் வேறு எவருக்கு உண்டு?

"[illegible]
[illegible]"



என்று உபாயங்களில் மேலான ஆசாரியாபிமான மென்கிற ஐந்தாவது உபாயத்தை உபதேசிக்கும் இவர், பக்திப்ரபத்திகளுக்கு உபதேசகர்களான தேசிகர்களுக்கு எல்லாம் தலைவர் ஆகிறார். பராங்குசாதிகளைப் போலவே இவரும் ப்ரபந்நர்களுக்காகத் தோன்றிய சூரியனாகச் சொல்லப்பட்டிருக்கிறார்.

"[illegible]"

என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் குலமாகிற தாமரைக்குச் சூரியன் என்று கூறப்பட்டிருப்பதைக் காண்க. மேலும்,

[illegible]
[illegible] ।
[illegible]
ஜயஜய தேவ [illegible] ॥

என்று சூரியனால் போக்கடிக்க முடியாத [illegible] என்று சொல்லப்படுகிற அகவிருளைப் போக்கி, உள் தாமரை மலர்த்தினன் என்று இவரையே சூரிய வ்யாவிருத்தி தோன்றவும் சொல்லி யிருப்பதைக் காண்க.

(3) ஆக நமது ப்ரபந்நகுலத்தில் தோன்றிய பெரியர், நங்கை மைந்தன், மங்கை மன்னன், யதிவரர், வரவர முனி என நால்வர் என்று கூறப்பட்டதாகிறது. முன்பு ஸ்ரீவைஷ்ணவனை இக்ஷ்வாகு வம்சத்தில் ஒரேகாலத்தில் நால்வர் தோன்றி நாடு நகரமும் நலமுறச் செய்தனர். அங்ஙனம் செய்ததும் த்ரேதாயுகத்தில் சக்ரவர்த்தித் திருமகன் "தந்தைசொல்மிக்க மந்திரமில்லை" எனும் தர்மத்தைத் தரைமிசை, தான் அநுஷ்டித்துக் காட்டினான். பரதன் "ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய [illegible]" என்று கூறுகிறபடியே "நான் ராஜ்யத்தை ஆளவோ; ராஜ்யம் என்னை ஆளவோ" என்று பாரதந்திரிய ஸ்வரூபத்தைப் பார்மிசை பரப்பினான். இளைய பெருமாள் "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று ஒழிவில் காலமெல்லாம் அடிமை செய்வதாக சேஷத்வஸ்வரூபத்தைச் செகமெலாம் தெரியும்படி செய்தான். "நித்யஶத்ருக்ந:" என்று ராம ஸௌந்தரியத்தில் ஆழங் கால்படாத சத்துருக்கனும் வான், பாகவத சேஷத்வத்தைப் பாரதநாட்டில் பதிய வைத்தனன். இப்படி ஸாமாந்ய விசேஷ தர்மங்களை அநுஷ்டித்துக் காட்டி,

அதர்மத்தை வாட்டி வெருட்டியதுபோலப் ப்ரபந்நகுலத்திலும் நால்வர் தோன்றி "ஊரும் நாடும் தன்னைப்போல்" என்கிறபடியே ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தை வளர்த்து, பிற சமயங்களைத் தளர்த்தி பல்லாயிரக்கணக்கிலே எல்லாரையும் நல்லாரான ஸ்ரீவைஷ்ணவர்களாக்கி வைத்தார்கள்.

---

## நல்லறிவு.

C. P. ராஜகோபாலாசாரியார் ஆனெரி செக்ரெட்ரி
வெங்கடேஸ்வர தேவஸ்தானம் பம்பாய்.

" அங்குமிங்கு மெங்குநிறை அற்புதனார் பொற்பறிந்து, பங்கயத்துள் வண்டாய்ப் பயன்பெற வா! நல்லறிவே " என்று பெரியார் விளித்ததுபோல, அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்துள் கரு உயிர்த்தநாள்முதலாக் கண்ணன் கழலிணையே காண்பதற்கு கத்திக் குவித்த பல் புத்தகச் சுமையுள் ஆராவமுதாய்ப் பெருகும் தீஞ்சுவைநிறைந்த செஞ்சொற்கள் பொதிந்த கவியமுதம் நுகரும் பெருமைக்கு வண்டினும் மேம்பாடுடைய தொன்றுண்டோ. பூமருவியினிதமர்ந்த பொறியிலார்ந்த சிறுவண்டு தேனுகர்ந்து பெரும் இன்பம், இவ்வையத்துள் பல கலைக்கடலை வாய்மடுத்துத் தெளிவுற்ற ஞானம் செறியப்பெறுவ தொக்கும். இதுபற்றியே, அல்லும்பகலு மகண்டவடிவான எல்லையில் ஞானத்தனைப் புல்லும்படி தனக்கோர் போதனைபெற, "தூவியம் புள்ளுடைத் தெய்வ வண்டு" என்று திருவுள்ளம்பற்றியது வகுளாபரணப் பெருமாள் வாய்மொழிபோலும். தாம் காதலித்த பொருளைப் பெறுவதுவே நல்லறிவின் பயனாகும்.

கார்முகில் வண்ணனைக் கண்களால் காணவும், தலையால் வணங்கவும், பொன்னம்சேர் சேவடிமேல் போதணியப் பெறுவதும், உலகினில் ஆண் என்கிற எண்ணம் ஒழிந்து, முன்செய்த வினையால் நல்லறிவின்பயனைப் பெண்ணாகிப் பெண்ணானும் பெண்மையோம் என்று பேசினலொழிய ஐயமின்றி இத்தன்மை எய்தலாகும்கொல்? உள்ளும் புறமும் ஒருபடித்தாய்நின்று சுகம் கொள்ளுவது கருணை ததும்பிய பெண்ணின் இயற்கையன்றோ. இதுபற்றியே முன்னம்குரவோர்கள், நமதறிவின்பயனை, நாதனின் இன்பமயம் வாய்க்கும்வண்ணம் தம்வசமழிந்து இவ்வேழுலகு



மின்பம் பயக்கும்படி ஞானக்கலைகளெல்லாம் நாவினுள்ளே நின்று மலர்ந்தது யாவரும் அறிந்ததே.

அறிவிற் கிருப்பிடமாகிய மனம் கோல்தேடி யோடும் கொழுந்து போலன்றோ மால் தேடியோடும். இறப்பும் பிறப்பும் பொருந்தாது இவ்வுயிருக் கெவ்வண்ணம் நிகழ்ந்த தென்றாராயப்புகின் மறப்பும் ஞானமுமாய் வளர்ந்தது. தொல்லை மாலைக் கண்ணாரக் கண்டு காதலுற்றார்க்கு மறப்பும் ஞானமும் உணர்வதொன்றுண்டோ! பூவையும் நீலமும் பூக்கின்ற காவிமலரென்று காண்டோறும் மெய்மிகவே பூரிக்கும். இந் நிலையில் பேசும் பேச்சுதான் என்னே! பெரியோர்கள் வாக்கினால் பகர்வதுவே யாம் படைத்த பிறவியின் பயனாகும். அன்னைமுனிவதும் தோழிகள் பரிவும் ஒருபால், தென்றல் தீ வீசுவதும், திங்கள் வெங்கதிர் சீறுவதும், பொங்குமா கடல் புலம்புவதும், அன்றில் அடருவதும் ஒருபால், கண்டார் வணங்கும் அஞ்சனமாமலை போல் தாமரைக்கண்கள் இருந்தவாறும், பெரிதும் நாகரிகர் இளையராய் செவ்வாய் தூமுறுவல் செய்து மாடுவந்து மனம் புகுவது ஒருபால்! ஐம்புலனும் எழிலும் கொண்டு மாலை புகுந்து மலரணை வைகி நீலக்கண்கள் பனிமல்க நெஞ்சு நிறையக் கைகூப்பி பொன்னங் கலைகள் மெலிவெய்த, மனஞ்செய் இன்பம் உள்புக, வஞ்சி மருங்குல் இடை நோவ, நெருங்கி வாய்திறந்து பணித்த மாற்றம் ஒருபால்! ஆடுவதும், பாடுவதும், ஆனந்தமாகத் தேடுவதும், அடியார் செய்கையொழிய மெய் சிலிர்த்து இரு கை கூப்பி விண்மாரி எனவே கண்மாரிபொழிய என் அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பான அறிவினூறு ஆனந்த வெள்ளமே, என்று அழுது தொழுது ஆடிக்காண்பதல்லால் முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் மருந்து முண்டாங்கொலோ? இவ்வரிய பொருளையே.

" வண்டாய்த் துவண்டு மௌன மலரணைமேல்
கொண்டார்க்கோ இன்பம் கொடுப்பது, நின்பெருங்கருணை."

என்று வியப்பதல்லால் எம்போலியரால் பேசும் திறனுமுண்டோ, இன்னை அணையும் இன்பத்துக்கு மேலும் அறிவுமுண்டோ. அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக, என் பரமல்லா இன்னருள் தந்தாய் இதற்கோர் கைமாறு நானொன்றிலேன் என்றே பேசுவதல்லால் பின்னையு முளதோ நல்லறிவு.

# வர்த்தமானங்கள்

## நமது சக்ரவர்த்தி

நமது சக்ரவர்த்தி தாம் காதலித்த பெண்மணியை மணந்து கொள்வதற்கிடையூறாயிருக்கு மிருங்கடல் சூழிவ்வுலகையாளும் ஆதிபத்யத்தை அறவே யொழித்துத் தாம் ஸ்வேச்சையாய் எங்கேயோ சென்று விட்டார் என்பதைக் கேட்டவுடன் அளவிலாத்துயரமடைந்தாலும், அவர் செல்லும்போது, அவரது ஸஹோதரராய் புத்ரஸ்தாநமாய் நற்குணங்களுக்குக் கொள்கலமாயிருக்கும் ஜார்ஜ் என்னும் மஹானை அந்தஸ்தானத்தில் நியமிக்க, அம்மஹாநுபாவரும் அதை யங்கீகரித்து ஏற்றுக்கொண்டார் என்பது தெரிய வந்ததும், அத்துயரம் வானோ மறிகடலோ கானோ ஒருங்கிற்றுக் கண்டிலம். வர்த்தமான நமது ஆறாவது சார்ஜ் சக்ரவர்த்தி, சிறியதைப் பெரியது நலியாதபடி உலகையாண்டு கொண்டு நீடூழி வாழ்ந்திருக்கும்படி எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரியவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

## திருவனந்தபுர ஆலயப்பிரவேசம்

திருவனந்தபுரம் என்கிற மலையாள தேசமானது, வர்ணாஸ்ரம தர்மங்களுக்கு யாதொரு குறைவின்றி, அத்தேசத்திலுள்ள தேவாலயங்களில் நான்கு வர்ணத்திற்குட்பட்டவர்களிலும் துராசாரமான அநுஷ்டானங்களைச் செய்யுமவர்களையும் உள்ளே ப்ரவேசிக்க அநுமதிக்காமல் மிகவும் ஜாகரூகர்களாய்ப் பரிபாலிக்கப்பட்டு வந்தது என்பது உலகமறிந்ததே. இவ்வாறாண்டு வருவதனாலேயே அந்த தேசமானது மற்ற தேசங்களைக் காட்டிலும் வளம்மிக்க பெருஞ்செல்வமுடைத்தாயிருக்கிற தென்கிற வதந்தியுமுண்டு.

அப்பேர்ப்பட்ட தேசத்தைத் தற்காலமாண்டு வரும் மஹாராஜா, நான்கு வர்ணத்திற்குப் புறம்பான ஜாதியாரையும் தேவாலயத்திற்குள் கடவுளைத் திருவடிதொழ, அநுமதி யளித்து விட்டார் என்பதைக் கேட்டு மிகவும் வியப்பை யடைகின்றோம். காலத்தின் கொடுமையால் மகாநுபாவர்களுடைய மனமும் மாறாடிப் போய்விடுமென்று ஒருவாறு சமாதானமடைந்தாலும் உலகெல்லாம் அதை ஆமோதித்து ஆனந்தமடைவாரையும், அதனால் தங்களுக்கேற்பட்ட ஆனந்தத்தைப் பத்திரிகைகளின் வாயிலாய் ப்ரசாரம் செய்து ஆனந்திப்பாரையும், அவ்வாறே ப்ரிட்டிஷ் ராஜ்



யத்திற்குள்பட்ட தேவாலயங்களிலும் செய்ய வேண்டுமென்று மனோரதிப்பாரையும் பார்த்து மனம் வருந்தாநிற்கின்றோம். இவர்களது மனோரதமிவ்வாறிருந்தாலும் அனேகவிதமான மதங்களையும் அந்த அந்த மதங்களுக்கேற்ற அனேக தேவாலயங்களையுமுடைய ஆங்கிலேய ராஜ்யத்தில் ஒரு மதத்தவர்கள் மற்றவர்களுடைய கொள்கையைக் கண்டித்து அசாஸ்த்ரீயமான மார்க்கத்தில் பலாத்காரமாய் அவர்களது பாத்யதையைக் கைப்பற்றும்படி செய்ய, நமது விக்டோரியா மஹாராணியாரின் அபிப்ராயத்தை யடியொற்றித் தற்காலம் ஆண்டுவரும் நமது ஆறாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி, அநுமதி யளிக்கமாட்டார் என்று நம்புகிறோம். தமது ஆளுகைக்குட்பட்ட தேசங்களிலுள்ள தேவாலயங்களில் ஒருவருடைய மனதும் நோகாதபடி **யதாதே தேஷுவாத்தேரந் ததா தத்ரவர்த்தேதா:** என்கிறபடி யதாப்ரகாரம் சாஸ்த்ரீயமாய் அவரவர்களுக் கேற்பட்ட தர்மத்தை யநுஷ்டித்து அகில ஆத்மாக்களும் நற்கதியை யடையும்படி செய்யவேண்டியது **நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:** என்கிறபடி ஸாக்ஷாத் விஷ்ணுவின் அம்சபூதரான அரசர்களது கடமை என்பதைமாத்திரம் இங்கு தெரிவித்து நிற்கின்றோம்.

## காலக்ஷேபங்கள்

சென்னை தங்கசாலைத் தெரு தொண்டமண்டலம் ஹைஸ்கூலில் ப்ரதிதினம் காலையில் ஆண்டாளருளிச் செய்த திருப்பாவையை அனேக விசேஷார்த்தங்களுடன் பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே அண்ணங்கராசாரியார் உபந்யாஸம் செய்து வருகிறார்.

அதேமாதிரியாகவே நாராயணமுதலி தெரு காகுமானி ஸ்ரீமான் ஆதிகேசவுலு செட்டியாரவர்கள் சாரிட்டிக்ருஹத்தில் திருமழிசை ஸ்ரீ. உ. வே. கோ. க. ஸ்ரீநிவாஸாசாரியார் உபந்யஸித்து வருகிறார்.

தங்கசாலைத்தெரு. ஸ்ரீமான் யதீந்த்ர ப்ரவண செட்டியாரவர்கள் சாரிட்டியில் திருநாராயணபுரம் அனந்தாண்பிள்ளை ஸ்ரீ. உ. வே. கோவிந்தப்பங்கார் உபந்யாஸம் நடைபெறுகிறது.

வடகரை ஸ்ரீ. உ. வே. வெங்கடவரதாசாரியார், எழும்பூர் ஜகன்னாத பக்த சபையினாதரவில் ஸாகேத நிலயத்தில் விசேஷார்த்தங்களுடன் உபந்யஸித்து வருகிறார்.


ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. சடகோபாசாரியார், ஆங்காங்கு ஹரிகதா காலக்ஷேபங்களையும் உபந்யாஸங்களையும் ஸம்ப்ரதாய ரீதியான காலக்ஷேபங்களையும் செய்து வருவது மிகவும் போற்றற்குரியது—



# டி. சி. என்.

## கோல்டன் மெட்டல் ஜ்வெல்லரி மார்ட்

# சிந்தடிக் கல் செய்ன்கள்



அசல் தங்க செய்ன்களை
விடப் பிரகாசத்திலும்
நிறத்திலும் குறைந்ததல்ல.
கறுக்காது. 2 வருஷ உத்திரவாதம்.

பலவித கலர் கல்களால் கட்டப்பட்டவை. மிக அழகாயிருக்கும்.

| | ரூ. அ. |
|---|---|
| பெரிய சைஸ் செய்ன் பெண்டண்ட் உள்பட | 9—0 |
| சிறிய சைஸ் செய்ன் பெண்டண்ட் உள்பட | 7—0 |
| பெரிய சைஸ் பெண்டண்ட் இல்லாமல் | 7—0 |
| சிறிய சைஸ் பெண்டண்ட் இல்லாமல் | 5—0 |
| வி. பி. செலவு | 0—6 |

2 அணு பெருமானமுள்ளதும் பல அழகிய படங்களுள்ளதுமான எமது காட்லாக் இனாம்.

**டி. சி. நாகலிங்கப்பா அன் கோ.,**
**280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன், மதராஸ்.**


## நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸாத்விஷயங்களை சிற்றறிவுடைய என் போல்வார்களுக்கும் சிறிது பயன் படுமாறு வித்வான்கள் எழுதி யநுக்ரஹித்தால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. கடிதத்தில் இங்கியால் ஒரே பக்கத்தில் எழுதல் வேண்டும்.
6. கூட்டெழுத்துக்களாகவோ சந்தேகத்திற் கிடமுண்டாகும் படியாகவோ எழுதக் கூடாது.
7. அவ்வாறு எழுதியதாலேற்படும் தவறுகளுக்கு ஒருவிதத்தாலும் பத்திராதிபர் கடமைப்படமாட்டார்.
8. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
9. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
10. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள்.
11. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸுகதுக்கானுபவங்களை யுடையவர்கள் ( Sympathizers ) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவனாகக் கடவேன்.
12. (25) இருபத்தைந்து ரூபாய் கொடுக்குமவர்களை ஜீவியச் சந்தாதாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பணமன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.

### விளம்பரம்

| | | | | |
|---|---|---|---|---|
| முழுப்பக்கம் ஒரு தடவைக்கு | ... | 5 | 0 | 0 |
| அரைப்பக்கம் ” | ... | 3 | 0 | 0 |
| கால்பக்கம் ” | .... | 2 | 0 | 0 |

பத்ராதிபர்.

Registered No. M. 3401

கட்டடங்களை உறுதியாய்க் கட்டுவதற்கு சிமெண்டே
முக்கிய காரண மாகும்
அதிலும்
எந்த சிமெண்டை உபயோகிப்பது நலமென்றால்?

**சார்மினார்**

அல்லது **நீலகிரி சிமெண்டே**

நல்லதென்று அநுபவமுள்ள இஞ்சினீயர்களால்
கொண்டாடப்பட்டதாகும்.

கிடைக்கு மிடம் :—

சாமி வெங்கடாசலம் செட்டி,
ஸௌபாக்ரஹம்,
61, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. மதராஸ்
டெலிபோன் நெ. 2004.

**ப்ராணஸுத**

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் என் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப் போன்ற டானிக் ராஜா "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏற்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனாம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்**
107, பிராட்வே, சென்னை

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

THE REGISTRAR 11 FEB 1937 MADRAS

# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ



ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

| தொகுதி 2 | தாது௵ மார்கழித் திங்கள் | பகுதி 2 |
|---|---|---|

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1936௵ டிசம்பர்௴

வருஷச் சந்தா ரூ. 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

## விஷய ஸூசிகை


| விஷயங்கள் | பக்கம் |
|---|---|
| 1. மார்கழித் திங்கள் .... .... .... —பத்திராதிபர். | 35 |
| 2. ஏகாதசி மஹிமை .... .... .... —V. அநந்தாசாரியார், ஸம்ஸ்க்ருத பண்டிட் பச்சையப்பன் காலேஜ். | 38 |
| 3. திருவத்யயந உத்ஸவம் .... .... .... —பத்திராதிபர். | 42 |
| 4. பக்வந் நாமோச்சாரண ப்ரபாவம் .... .... —திருமழிசை கோயில் கந்தாடை அப்பனய்யன் ராமாநுஜாசாரியர். | 46 |
| 5. ஸ்ரீவசந பூஷண தக்வார்த்தம் .... .... —ஸ்ரீ உ. வே. வடகரை வெங்கட வரதாசாரியர். | 51 |
| 6. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தியின் அபூர்த்தி ... .... .... —ஸ்ரீ உ. வே. வடகரை வெங்கட வரதாசாரியர். | 54 |
| 7. வர்த்தமானங்கள் .... ... ... | 55 |
| 8. முதலியாண்டான் வைபவ ஸங்க்ரஹம் .... —அகரம் கஸ்தூரி கிருஷ்ணமாசாரியர். | |
| 9. ராமாயணச் சலோகார்த்தங்கள் .... .... —திருமலை அநந்தாண் பிள்ளை ஸ்ரீ. உ. வே. கோவிந்தப்பங்கார். | |



ப்ராணஸுத

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் என் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரணைப் போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏர்ப்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை



L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது




மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.

பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோதூ & கம்பெனி,

8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.



அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வர்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வியாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின், நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரும் அறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.




அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

# சலோனுடவர் பிராண்ட்

## போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அநேக ஹார்பர் வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

**மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்**

சோல் ஏஜெண்ட்

**M. குப்புசாமி நாயக்கர்**

**83, செம்புதாஸ் தெரு,**

மதராஸ், ஜி. டி.



ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 2. | பத்ராதிபர்<br>வடகரை. இராமாநுஜாசாரியார் | பகுதி 2. |


ஸ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத்
வேதவேதாந்த வேதாம்ஶ ஸந்த்ராணகரண க்ஷமா
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

## மார்கழித் திங்கள்

பத்திராதிபர்

மாதங்களிற் சிறந்தது மார்கழி மாதமாகும். அதெங்ஙனே யெனில்?

பரம காருணிகனான பரவாஸுதேவன் சேதந ரக்ஷணார்த்தமாகத் தன்னைக் கேஶவாதி பன்னிரண்டு உருவங்களாக வ்யூஹித்துக்கொண்டாற்போல அவனுடைய ஶரீரமான காலமும் பன்னிரண்டு மாதங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மார்கழி மாதம், வ்யூஹத்தில் முதலாவதான கேஶவனுடைய அம்ஶமாகும். ஆதலின் இம்மாதத்தில் கேஶவனைப்பாடித் தொழுமவர்கள், க்லேஶத்தைப் போக்குமவனான கேஶவனுடைய க்ருபைக்குப் பாத்ரர்களாய், தங்கள் வருத்தமும் நீங்கி மகிழ்ந்து இன்புறுவர். இது விஷயம் மஹாபாரதம், ஆஶ்வமேதிக பர்வம் 114-வது அத்யாயத்தில் யுதிஷ்டிரருக்கு க்ருஷ்ணபகவான்

அருளியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது அந்த ஶ்லோகம் வருமாறு காண்க,

அஹோராத்ரேண த்வாதஶ்யாம் மார்கஶீர்ஷேண கேஶவம்
உபோஷ்ய பூஜயேத் யோ மாம் ஸோஶ்வமேதபலம் லபேத்

மேலும் விபவத்திலும் ஆத்யாவதாரமான மத்ஸ்யாவதாரமும் இம்மாதத்திலேயே. இன்னமும் நிநத்திற்கு ஸத்வோத்தரமான ப்ராஹ்மமுஹூர்த்தம்போலே, உத்தராயணம், தக்ஷிணாயநம் என்கிற பகலிரவுகளையுடைய ஸம்வத்ஸரத்தைத் திநமாக வுடைய தேவர்களுக்கு, உத்தராயணமாகிய பகலுக்குப் பூர்வபாவியாய் இரவாகிய தக்ஷிணாயநத்தின் கடைசியா யிருக்கிற இம்மார்கழி மாதம், ஸத்வோத்தரமான ப்ராஹ்மமுஹூர்த்தமாகும். ஆகலால், ப்ரஹ்மருத்ராதி தேவர்களும், தங்களுக்குத் தேவனான நேபா வனைத்தொழும் காலமாகும் இம்மார்கழி மாதம்.

மேலும் உலகிலொருவன் நன்மையடைவது கர்மாநுஷ்டா நத்தாலே. அக் கர்மாநுஷ்டாநமும் ஶரீரதாரணத்தாலே அச் சரீரரக்ஷணம் ஆஹாரத்தாலே. அவ்வாஹாரம் நீரினாலே. அந் நீர் வருஷத்தாலே. இதையடியொற்றியே வள்ளுவரும்.

நீரின்றமையாதுல கெனின்யார் யார்க்கும்
வானின்றமையாதொழுக்கு

எல்லாவற்றாலும் மேம்பாடுடையார் எவர்க்கும், நீரின்றி உலகிய லமையாது. அந்நீரும், மழையின்றியமையாது என்றார். இவ்வாறு தர்மார்த்தகாம மோக்ஷங்களென்கிற சதுர்வித புருஷார்த்தங் களையு மடைவதற்குத் துணைக்காரணமா யிருக்கிற நீரை, மேகம், உலகுக்குப் பன்னிரண்டு மாதங்களிலும் தவறாது வர்ஷிப்பதற்கு வேண்டியவளவு, இம் மார்கழி மாதத்திலேயே க்ரஹித்து, தன் கர்ப்பத்தில் வைத்துக்கொண்டு சஞ்சரிக்கின்றது. அதையே கர்ப்ப ஓட்டம் என்கிறோம். மற்ற மாதங்களுக்கு வேண்டிய நீரை க்ரஹிப்பதற்குக் காரணமாயிருக்கிற இம்மாதம், மாதங்க ளெல்லாவற்றிலும் மாண்புடைத் தென்னத்தட்டுண்டோ?

மேலும் இம்மாதம் மற்ற மாதங்களைப்போல அதிகமான குளிரும் உஷ்ணமும் இல்லாமல் நாதிஶீதா ந கர்மதா என்கிறபடி ஸாதகோத்தரமான காலமாயிருப்பதாலும் சிறப்புடையது.

இன்னமும் மற்ற மாதங்களைக் காட்டிலும் இம்மாதத்திற் கிவ்வளவு பெருமையேற்பட்டதிற்குக் காரணத்தைச் சிறிது



ஆராய்ந்து நோக்குவோமேயானால், ஸர்வலோக ஶரண்யனை ஸர்வேஶ்வரனுடைய தேஜஸ்ஸின் அம்ஶமானதாலேயே, என்பது குன்றின்மேலிட்ட விளக்குப்போல, அனைவருமறியவரும்.

திருப்பாற்கடலை வாஸஸ்தாநமாகவுடைய ஸ்ரீமந்நாராணன் தர்ம ஸம்ரக்ஷணார்த்தம் ஆதிஶேஷனாகிற படுக்கையைவிட்டு மதுராபுரியில் வஸுதேவ புத்ரனாய் வந்தவதரித்து, தன்னைச் சரணமடைந்த த்ரௌபதிக்காக அர்ஜுநனுக்கு, கீதையை உபதேஶிக்குமிடத்து, உலகத்திலுயர்ந்த வஸ்துக்களெல்லாம் என்னுடைய தேஜஸ்ஸின் அம்ஶம் என்று சொல்லிக்கொண்டு வருகிற ப்ரகரணத்தில் மாஸாநாம் மார்கஶீர் ஷோஹம் மாதங்களில் மார்கழிநான் என்று மார்தட்டிச் சொன்னமையே இதற்கு ப்ரபலப்ரமாணமாகும்.

இவ்வளவாக வ்யூஹத்தில் முதலான கேஶவனுடைய அம்ஶமாயிருப்பதாலும், ஆத்யாவதாரமான மத்ஸ்யாவதாரமும் இம் மாதத்திலே யாகையாலும், தேவதைகளுக்கும் ஸத்வோத்தரமான ப்ராஹ்மமுகூர்த்தமா யிருப்பதாலும், மேகம் பன்னிரண்டு மாதங் களுக்கும் வேண்டிய நீரை இம்மாதத்திலேயே க்ரஹித்துக்கொள் வதாலும், இவ்வளவு பெருமை யேற்பட்டதிற்கும் காரணம் ஸ்ரீமந் நாராயணனுடைய அம்ஶமானதாலேயே என்றும் சொல்லி முடிக்கப்பட்டது.

இம் மார்கழி மாதத்தின் பெருமையைப் பற்றி ஸ்காந்தம் இரண்டாவது வைஷ்ணவ கண்டம் மார்க்கஶீர்ஷமாஹாத்ம்யம் 1-வது அத்தியாயத்தில் ப்ரஹ்மா, பகவானை, இம் மார்கழி மாதத் தின் பெருமையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று ப்ரார்த்தித் துக்கேட்க, பகவான் அருளியது வருமாறு.

ஸர்வயஜ்ஞேஷு யத்புண்யம் ஸர்வதீர்த்தேஷு யத்பலம்
தத்பலம் ஸமவாப்நோதி மார்க்கஶீர்ஷேக்ருதே ஸுத
அந்யைர்தர்மாதிபி: க்ருத்வா கோபிதம் மார்க்கஶீர்ஷகம்
மத்ப்ராப்தே: காரணம் மத்வா தேவை: ஸ்வர்க்க நிவாஸிபி:
யே கேசித் புண்யகர்மாண: மமபக்தி பராயணா:
தேஷாமவஶ்யம் கர்த்தவ்யம் மார்க்கஸீர்ஷ: மதாயந:

யஜ்ஞங்களெல்லாவற்றாலும், புண்ய தீர்த்த ஸ்நாநத்தாலும் எந்தப் பலனோ! அந்தப் பலனை, மார்கழி நோன்பு அநுஷ்

டிக்கப் பட்டவளவில் அடைகிறான். ஸ்வர்க்க நிவாஸிகளான தேவர்களாலே, மார்கழி நோன்பு, என்னை யடைவதற்கு ஸாதகமென்கிற புத்தி பண்ணி, ரஹஸ்யமாக மறைக்கப் பட்டது. ஆதலின், யாவர் சிலர் புண்யகர்மாக்களாய், என்னுடைய பக்தியை ப்ராப்யமாக உடையவர்களோ? அவர்களுக்கு என்னை யடைவிக்கிற மார்கழி நோன்பு, அவஸ்யமநுஷ்டிக்கத் தகுந்தது.

இவ்வாறு பகவானைப் பெறுவதற்கின்றியமையாத இம்மாதத்திலேயே, அன்னவயற் புதுவை யாண்டாள், மார்கழி நீராட்டம் என்கிற நோன்பை நோற்றுத் தம்மபீஷ்டத்தைப் பெற்றதும், அப்ரகாரத்தை இக்காலத்திலுள்ள நாமுமநுஸந்தித்துய்யுமாறு திருப்பாவைபாடி யுபகரித்ததும்.

இதனால் இம்மாதம், வைஷ்ணவமான மாதம் என்பதும், ஆகையினாலேயே அனைவற்கு முரித்தானது என்பதும், வெள்ளிடைமலை.

---

# ஏகாதசீ மஹிமை

V. அநந்தாசாரியர், ஸம்ஸ்க்ருத பண்டிட் பச்சையப்பன் காலேஜ்.

ஏகாதசீ என்னும் பதத்திற்கு பதினொன்றாவது நாள் என்று பொருள். கிருஷ்ணபக்ஷம் சுக்லபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷங்களிலும் பதினொன்றாவது நாளுக்கு ஏகாதசீ எனப்பெயர். வடமொழியில் இந்தப்பதத்தை ஸ்த்ரீலிங்கம் என்பர். அதாவது பெண்பால். இதை ஸ்த்ரீலிங்கமாகச் சொல்லுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஏகாதசீ திதி என்று திதிக்கு விசேஷணமாயிருப்பது முதல் காரணம். இரண்டாவது காரணம்; சரித்திர ஆராய்ச்சியில் ஏகாதசீ என்பது ஸ்ரீமந் நாராயணனுடைய திருமேனியிலிருந்து உதித்த பெண்வடிவம் வாய்ந்த ஒரு தேவதையின் பெயர் என்றும், அந்ததேவதை அவதரித்த நாள் ஆகையால் இதற்கு ஏகாதசீ எனப் பெயரிடப்பட்டது என்றும் தெரியவருகிறது. இந்த ஏகாதசீதிநத்தை உபவாஸமிருக்க வேண்டிய திநமாக தர்ம ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த வ்ரதம் சரீராரோக்கியத்திற்கின்றியமையாததென்று வைத்ய ஶாஸ்த்ர நிபுணர்களின் அபிப்ராயம்.



## ஏகாதசியின் அவதாரம்

முன் கிருதயுகத்தில் முரன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் மிகக் கொடியவன். தேவர்களுக்கு மிருத்யு போன்றவன். அவன் இந்திரனையும், மற்றுமுள்ள தேவர்களையும் சண்டையில் ஜயித்து, ஸ்வர்கத்திலிருந்து துரத்திவிட்டான். தேவர்கள் அனைவரும் பரமசிவனிடம் சென்று தங்கள் கஷ்டத்தைப்பற்றி முறையிட்டுக்கொண்டார்கள். அவரும், நீங்கள் அனைவரும், கருடவாஹநனை பகவானிடம் செல்லுங்கள். அவர் உலகனைத்துக்கும் நாதன். சரணாகதர்களை இரக்ஷிப்பதில் விருதம் பூண்டவர். அவர் உங்களுக்கு இரக்ஷையைச் செய்வார் என்றார். அது கேட்டுத்தேவர்களும் திருப்பாற்கடற் சென்று, பள்ளிகொண்டிருந்த பகவானை, கைகூப்பித் துதித்தார்கள். துதித்த பிறகு முரன் என்றவசுரனால் தங்களுக்கு நேர்ந்த விபத்தையும் தெரிவித்தார்கள். அப்போது பகவான், தேவர்களைநோக்கி, அந்த முரன் என்பவன் யார்? எப்படிப்பட்டவன்? அவனுடைய பலம் எப்படிப்பட்டது? அவன் எங்கு வசிப்பவன்? என்று கேட்டார். அதற்கு, தேவேந்திரன் சொன்னதாவது, பகவானே! ஆதிகாலத்தில் பிரும்மதேவனுடைய குலத்தில் தாலஜங்கன் என்ற ஓர் மகாசுரன் பிறந்தான். அவனுடைய மகன் முரன். சந்திரவதீ என்னும் பட்டணத்தில் வசிக்கிறான். தேவர்களுக்கு இயற்கைப்பகைவன். உம்மால் நியமிக்கப்பட்ட எங்களை, சுவர்க்கத்திலிருந்து துரத்திவிட்டு, இந்திரன், சந்திரன், சூர்யன், அக்நி, வாயு, வருணன், முதலான அதிகாரிகளுடைய பதவியில், தன்னைச் சேர்ந்த அசுரர்களையே அமைத்துக்கொண்டான். அவன் இவ்வுலகத்தையே புதியதாக, தானே ஏற்படுத்திக்கொண்டான் என்பது ஸத்யம், என்று. இவ்விதம் தேவேந்திரன் சொன்னதைக்கேட்டு பகவான் மிகவும் கோபம் கொண்டு, 'தேவர்களை பீடிக்கிற அந்த துஷ்டனை நான் அவச்யம் கொன்று விடுகிறேன், என்று சொல்லி, தேவர்கள் அனைவருடன்கூடசந்திரவதீ என்கிற பட்டணத்திற்குச்சென்றார். தேவர்கள் திரண்டு வந்திருப்பதைக்கண்டு, முரன், ஆயுதமெடுத்து அவர்களை அடித்துத் துரத்தினான். தேவர்கள்நாநாதிக்குகளிலும் ஓடிப் பதுங்கிக்கொண்டார்கள். பிறகு சக்கராயுதத்துடன் விஷ்ணு வந்து நிற்பதைக்கண்டு, அசுரன், 'நீயும் ஓடாதே, நில், என்று சொல்லி, அநேக சைன்னியங்களுடன் எதிர்த்துப் போர்செய்ய

யத்தனித்தான். விஷ்ணு ஒருவர், அசுரர் பலர். ஆயினும் விஷ்ணு சக்கிராயுதத்தை ப்ரயோகித்து, அசுரர்களை அடித்துக் கொன்றார். முரன் ஒருவனுகவே நீண்டகாலம் சலியாமல் யுத்தம் செய்து சக்கிராயுதப்ரயோகத்தைச் சகித்துக்கொண்டு சூலாயுதத்தால் விஷ்ணுவை அடித்துக்கீழே வீழ்த்தினான். அசுரனால் தோல்வி பெற்ற விஷ்ணு, பயந்தவர்போல ஓடி பதரிகாச்ரமம் சென்று அங்கு ஸிம்ஹாவதீ என்னும் குகையுள் நுழைந்து படுத்து உறங்கிவிட்டார். அந்தக் குகை பன்னிரண்டு யோஜனை தூரம் நீளமுள்ளது. ஒரே துவாரம் கொண்டது. அநேக வருஷகாலம் அசுரனோடு யுத்தம் செய்து களைத்த விஷ்ணு சுகமாய் நித்திரை செய்து கொண்டிருந்தார். இவ்விதம் பகவான் உறங்கினதை யோகமாயை என்பர். தேவர்களுக்கு அஸ்வப்நா' எனப்பெயர் உண்டு. அதாவது நித்திரையில்லாதவர் என்று அர்த்தம். அப்படியிருந்தும் உறங்கினார் என்று சொன்னதற்குக் கருத்து, ஏதோ காரணத்தைக்கருதி உறங்குவதுபோல் பாவித்தல் ஆகும். அதையே யோகமாயா என்றும் சொல்லுவதுண்டு. முரனும், விஷ்ணுவைத் தேடித்திரிந்து பதரி காச்ரமத்தில் அந்தக்குகையில் படுத்திருப்பதைக் கண்டு களித்து, சூலத்தால் அடித்து அவரைக் கொன்றுவிடுவேன் என்று நினைத்தான். அப்போது திடீர் என்று விஷ்ணுவின் திருமேனியிலிருந்து சிறிய பெண் ஒருத்தி வெளிவந்து தோன்றினாள். அவள் விஷ்ணுவின் அபாரசக்தியின் அம்சத்தால் உதித்தவள். சிறந்த வடிவழகு வாய்ந்தவள். ஆச்சர்யமான அநேக ஆயுதங்களைக் கையில் தரித்தவள். அதிக பலம், பராக்கிரமம், இவைகளுடன் கூடியவள். அவள் ஆயுதங்களைத் தரித்து யுத்தத்திற்கு ஸந்நத்தமாக நிற்பவள்போல், அசுரனுக்கு எதிரில்நின்றாள். அசுரனும் அப்பெண்ணுடன் யுத்தம் செய்ய நினைத்தான். சரீரத்தில் திமிர் கொண்ட வசுரன், 'பெண்ணே, என்னுடன் நீ போர் புரிவாயாக' என்று வேண்டினான். மேகத்தில் நின்றும் உதித்த மின் ஒளிபோல் தன்னுடைய சரீர காந்தியால் அந்தக் குகை முழுவதையும் ப்ரகாசப்படுத்திக்கொண்டு நிற்கிற அக் கன்னிகை, அவனுடன் போர் புரியத் தொடங்கினாள். அவள் அவன்மீது அதிக கோபம் கொண்டு ஒரு ஹுங்காரம் செய்யவே அவளது சரீரத்திலிருந்து புறப்பட்டபயங்கரமான மின்னொளி, அவ்வசுரனை மயக்கிக் கீழே விழச்செய்தது. மூர்ச்சித்துக் கீழே



விழுந்த முரன் சிறிதுநேரத்தில் உயிர்துறந்தான். இவ்விதம் அவ்வசுரனை மாய்த்து, அப்பெண், பகவானுடைய திருமேனியிலேயே மறைந்தாள். பகவானும் கண் விழித்து, முரன் உயிர் துறந்து பிணமாகக் கிடப்பதைக் கண்டார். கண்டு வியந்தார். என்னிடத்தில் மிகக் கருணை காட்டி, உக்ரரூபியான இவ்வசுரனைக் கொன்றது யார்? என்று உரத்த குரலால் பேசினார். அப்போது அப் பெண் அவரது கண்ணுக்குப் புலப்படாமல் ஆகாசவாணியாய் தேவனே! நான் ஏகாதசீ, உம்முடைய அம்சத்தால் உமது திருமேனியிலிருந்து உதித்தவள். நீர் இங்கு படுத்து உறங்குவதையும், தேவர்களை சுவர்க்கலோகத்திலிருந்து ஓட்டின கொடும்பாவியான இவ்வசுரன், உம்மைக் கொல்லுவதற்குத் துரத்திக்கொண்டு வருவதையும் கண்டு, திடீர் என்று ஆவிர்பவித்து அவனைக் கொன்றேன். உம்முடைய மஹிமையாலேயே, லோகோபகாரமான இக்கார்யம் நிறைவேறியது என்று, சொன்னாள். இதைக்கேட்டு பகவான், மிகவும் ப்ரீதியடைந்து, ஏகாதசியை நோக்கி, 'உனக்கு வரங்களைத் தருகிறேன். நீ, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மஹோபகாரம் செய்திருக்கிறாய், தேவர்களுக்குக் கூட அரிதாகிய உயர்ந்த வரங்களைக் கேள். என்றார்.

ஏகாதசீ, பகவானே! எனக்கு ஒரே வரன் வேண்டுவது. நான் கேட்கப்போகும் வரனைத்தருவதாக மூன்று தடவை உறுதிமொழி கூறவேணும் என்றது:

பகவானும், நான் சொன்னது உண்மையே. ஸத்யம், ஸத்யம், ஸத்யம், என்று மூன்று தடவை கூறினார்.

அப்போது ஏகாதசீ அடியிற் கண்டபடி வரனை யாசித்தாள். என்னுடைய தினம் ஹரிதினம் என்ற பெயர்பெற்று மஹாபுண்யமாய் விளங்கவேணும், நான்கு யுகங்களிலும் மூன்று உலகங்களிலும்சிறந்ததொரு புண்யதினமாக அனைவரும் என்னைக்கொண்டாடவேணும். உம்மிடத்தில் மிகவும் பக்திசெய்து, என்னுடைய நாளில் உபவாஸ மிருப்பவர்க்கு மநோபீஷ்டமெல்லாம் கைகூடி வரும்படி நீர் அநுக்ரஹம் செய்யவேணும், என்ன, பகவானும் நீ சொன்னதெல்லாம் உண்மையாகவே நடக்கப்போகிறது. நீ என்னுடைய சக்தியே. உன்னுடைய தினத்தில் உபவாஸ மிருப்பவர்க்கு நான் மோக்ஷம் அளிப்பேன். இகலோகத்திலும் தர்மம்,

அர்த்தம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களையுங் கொடுத்துக்களிக்கச் செய்வேன் என்றார்.

இக்கதை ஸ்ரீபாத்மபுராணத்தில் உத்தரகாண்டத்தில் முப்பத்தாறுவது அத்யாயத்திலும், நாற்பதாவது அத்யாயத்திலும் நாரதருக்கு ருத்ரன் உபதேசித்ததாக கூறப்பட்டிருக்கிறது.

ஏகாதசியைப்பற்றி மற்றொரு ஐதிஹ்யமும் உண்டு. இவ்வுலகில் லக்ஷ்மீதேவியின் அவதார நிமித்தம் தேவர்களும் அசுரர்களும் க்ஷீரஸமுத்ரத்தைக் கடைந்தபோது அனைவரும் ஏகாதசி தினத்தில் ஆகாரம் சாப்பிடாமல் நியமத்துடன் ஸ்ரீ ஸூக்தத்தை ஜபம் செய்துகொண்டு கடைந்தார்கள் என்றும், மறுநாள் துவாதசி தினத்தில் சூர்யோதய காலத்தில் பிராட்டி அவதரித்தாள் என்றும், அன்றையதினம் முதல் இந்தப்பிராட்டியின் அவதார தினத்தை விசேஷ தினமாகக்கொண்டாடவேணும் என்றுபகவானுடைய ஆக்ஞையின் பேரில், பிரம்மா முதலிய தேவர்கள் முதல் தினமாகிய ஏகாதசியில் உபவாஸமிருந்து, துவாதசி தினத்தில் அவதார காலமான சூர்யோதய காலத்தில், பகவானுக்கும் பிராட்டிக்கும் திருவாராதநம் செய்து, பாரணையை நடத்தி வந்தார்கள் என்றும், அதன் மூலமாய் இந்தவிரண்டு தினங்களை நமக்கு விருத தினமாக தர்ம சாஸ்திரங்கள் விதித்தன என்றும் ஸ்ரீபாத்ம புராணத்தில் உத்தர கண்டத்தில் 260-வது அத்யாயத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட் டிருக்கிறது.

நிர்ணயஸிந்து என்னும் தர்ம சாஸ்திர நூலில் இவ்வேகாதசீவ்ரதம் வைஷ்ணவர்களுக்கு மாத்திரம் அநுஷ்டிக்கத் தக்கதே அல்லாமல், சைவர்களுக்கு அவச்யமில்லை என்னும் அபிப்ராயமுள்ள சில ஸ்மிருதி வசனங்களை கூறி, முடிவில், அது தவறு. இந்த வ்ரதம் எல்லா மதக்காரருக்கும் பொதுவானது என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

---

## திருவத்யயந உத்ஸவம்

பத்ராதிபர்

இவ்வுத்ஸவம் எல்லா திவ்ய தேசங்களிலும் தற்காலம் நடைபெற்றாலும் முதல் முதலாக கோயில் என்று கொண்டாடப்படும் ஸ்ரீ ரங்கத்திலேயே அரங்கனாணையின்படி ஆரம்பிக்கப்பட்டது. அதெங்ஙனே எனில்?



பாஞ்சராத்ரத்திற் சொல்லியபடி மார்கழிமாத ஶுக்லபக்ஷ ஏகாதசி தொடங்கி நம்பெருமாள் ஸம்ஸ்க்ருத வேதத்தைத் திருச்செவி சாய்த்துக் கேட்டருளுவது வழக்கம். இவ்வாறு நடந்துவாரா நிற்க, திருமங்கை யாழ்வார் ஒரு திருக்கார்த்திகையன்று திருநெடுந் தாண்டகத்தைத் திருவரங்கன் திருமுன்பே அபிநயத்துடன் தேவகானத்தில் பாட, அரங்கனும், அளவிலா வாநந்தத்தை யடைந்து, ஆழ்வாரை அழைத்து, உமக்குவேண்டுவதை வேண்டிக்கொள்ளுமென்ன, ஆழ்வாரும், புலன் படிந்துண்ணும் போகமே பெருக்கி நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவடியேனை இவ்வாறு கடாக்ஷித்து அநுக்ரஹித்த பிறகு அடியேனுக்கு யாதொரு குறையுமில்லையேயானாலும் அத்யயந உத்ஸவத்தில் வடமொழி வேதத்தைப் போலவே வகுளபூஷணர் வாக்கில் நின்றும் அவதரித்த செவிக்கினிய செஞ்சொல்லான தென்மொழி வேதத்தையும் திருச்செவி சாய்த்துக் கேட்டருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அரங்கனும் மிகமுகந்து அவ்வாறே ஆகட்டுமென்றங்கீகரித்துத் திரு நெடுந்தாண்டகத்தைத் தேவகாநத்தால் பாடிய கலியன் மிடறு மிகவும் நொந்திருக்கும். அந்நோவு தீரும்படி இன்று நாம் சாத்திக்கொண்டு மிகுந்த தைலக்காப்பை கலியன் கண்டத்தில் தடவுங்கோள் ! என்று பரிஜநங்களை நியமிக்க, அவர்களுமப்படியே செயயக் கலியனும் க்ருதார்த்தராய், விடைபெற்றுத் தம் மிருப்பிடம் சென்றார்.

அப்பால் அழகிய மணவாளன், கோயிலினைத்துப் பரிகரங்களையும் அருளப் பாடிட்டு ஆழ்வார் திருநகரிசென்று ஆழ்வாரை அழைத்துக் கொண்டுவரும்படி நியமித்து, திருமுகமும் ஸகல வரிசைகளையு மனுப்பியருளினார் - இவ்வாறு வாராநின்ற அணியரங்கன் திருமுற்றத்தடியார்களழகோலக்கத்தைக்கண்ட ஆழ்வாரும், மதுரகவி ப்ரப்ருதிகளுடனே எதிர்கொண்டுவந்து அரங்கனருளிய ப்ரஸாதங்களையும் திரு முகத்தையும் ஆதரவுடன் ஶிரஸாவஹித்து, அப்போதே மதுரகவி முதலான வனைத்துப் பரிவாரங்களோடும் திருவரங்கம் திருப்பதி சென்று நம்பெருமாளை மங்களா ஶாஸநம் பண்ணிநிற்க, நம்பெருமாளும், ஆழ்வாரைக் குளிரக் கடாக்ஷித்து நம்மாழ்வார் என்று திருநாமம் சாத்தி எல்லாவரிசைகளையும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார். மற்றை நாள் விடியற்காலம் திருவத்யயந உத்ஸவம் ஆரம்பித்துப்

பகலில் ஸம்ஸ்க்ருத வேதம் தொடங்கி நடந்தபின்பு இரவு அழகிய
மணவாளன் திருமண்டபத்திற்கு ஆழ்வார் எழுந்தருள, நம்பெரு
மாள் நம்மாழ்வாரை "அருளப்பாடுதிருவாய் மொழி விண்ணப்பம்
செய்வார் என்று அருளப்பாடிட்டு ஸகல வரிசைகளையும் ப்ரஸா
திக்க, மதுரகவிகள், ஆழ்வாருக்குக் கரணபூதராயிருந்து, திருவாய்
மொழி தொடங்கி தேவகானத்திலே அபிநயத்துடன் திநம் ஒரு
பத்தாகவே ஸேவித்து, பத்தாவது திநத்தில் வேதாதிகள்
சாத்துமுறையானதும் திருவாய் மொழியையும் சாத்தி, ஆழ்
வாரையும், அரங்கன் திருவடி தொழும்படி செய்ய, அரங்கனும்,
ஆழ்வாரை ஒரே ஆஸநத்தில் வைத்து, திருமாலை திருப்பரியட்டம்
முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்து, திருநகரிக்கெழுந் தருளும்
படி விடைகொடுத்தருளினார். இவ்வாறே ப்ரதிஸம்வத்ஸரம்
திருக்கார்த்திகையன்று கோயிலணைத்துப் பரிஜநங்களையும் ஆழ்
வார் திருநகரிக்கனுப்பி, ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணி
கொண்டுவந்து, உத்ஸவம் மிகவும் சிறப்பாக நடந்து வந்தது.
பின்னால் ஆழ்வார் திருநகரியிலிருந்து ஆழ்வாரை எழுந்தருளப்
பண்ணிக்கொண்டு வருவது, அஸாத்யமாய்விடவே, திருமங்கை
மன்னனும், திருவரங்கம் திருப்பதியிலேயே ஆழ்வார் விக்ரஹத்தை
யேறியருளப்பண்ணி ப்ரதிஷ்டை செய்து அவ்வாழ்வாரை முன்
னிட்டே உத்ஸவத்தை நடத்திவந்தார். இவ்வாறு கொற்றவேற்
பரகாலன் கலியன் காலத்தில் மிகவும் சிறப்பாய் நடந்துவந்தது.
திருமங்கை யாழ்வார் திருநாடுசென்ற சிறிது காலத்திற்குப் பிறகு
புறமதத்தவர்களின் கொடுமையால் உத்ஸவமும் நின்று திருவாய்
மொழியே உலகத்திலில்லாதபடி லோபித்துவிட்டது. அப்பால்
நாதமுனிகளவதரித்து திவ்ய தேசயாத்ரை பண்ணிக்கொண்டு
திருக்குடந்தைக் கெழுந்தருள, அங்கு ஆராவமுதன் விஷயமான
பத்துப் பாசுரங்கள் சேவிக்குமதைக்கேட்டு மிகவும் சந்தோஷித்
தக் கடைசியில் குருகூர்ச்சடகோபன் குழலில்மலியச்சொன்ன ஓரா
யிரத்துள் இப்பத்து என்றதைக் கேட்டு மீதிப்பாசுரங்களையும்
அறியவிரும்பி ஆழ்வார் திருநகரிசென்று விசாரிக்க, அங்கும்
அறிவாரொருவரு மில்லாமையால் மிகவும் வருந்தி, மதுர கவிகள்
வம்சஸ்தரான பராங்குச நம்பிகளிடமிருந்து, ஆழ்வார் விஷய
மான கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற ப்ரபந்தத்தைப் பெற்று
அதைப் பன்னீராயிர முரு ஆழ்வார் திருமுன்பே நின்று ஜபிக்க,



ஆழ்வாரும், ப்ரத்யக்ஷமாய் திருவாய்மொழியோடு மற்றுள்ள
வாழ்வார்களருளிச் செய்த திவ்யப்ரபந்தங்களையும், நாதமுனிக
ளுக்கு அநுக்ரஹித்தார். நாதமுனிகளும் நாலாயிரத்தையும் ஆழ்
வார நுக்ரஹத்தாலே யறியப் பெற்று, திருவரங்கம் திருப்பதி
சென்று, ஸ்ரீ கார்யம் நிர்வஹித்துப் போரும் காலத்திலே, திரு
வரங்கன், திருமங்கை மன்னனுக்காகத் திருவாய் மொழிக்கு
வேதஸாம்ய மநுக்ரஹித்திருக்கின்றமையை யறிந்து, வேதத்திற்
குப் போலே திவ்யப்ரபந்தத்திற்கும் திருக்கார்த்திகைமுதல்
மார்கழி மாதத்து சுக்லபக்ஷ ஏகாதசிவரை அநத்யயந காலமென்
றும், ஏகாதசி யன்று அத்யயந உத்ஸவ ஆரம்பகாலத்தில் திரு
வாய்மொழி அத்யயந ஆரம்பகாலமென்றும் ஏற்பாடுசெய்து,
ஏகாதசிக்கு முன் பத்து தினங்களில் முதலாயிரம் திருமொழி
யாகிற இரண்டாயிரத்தையும், ஏகாதசி துடங்கிப் பத்துதிநம்
திருவாய் மொழியையும் தேவகானத்தி லபிநயத்துடன் சேவித்து,
மற்றை நாள் இயற்பாவை இயலாக சேவித்து திருமங்கையாழ்
வார் காலத்தைப் போலே மிகவும் சிறப்பாக உத்ஸவத்தை
நடத்திவந்தார்.

பின்னால் தம்முடைய பாகிநேயர்களான கீழையகத்தாழ்
வான், மேலையகத்தாழ்வான் என்கிற விருவர்க்கும் திவ்யப்ரபந்
தங்களை இசையுடனே கற்பித்து தமக்குப் பின்னால் தம்மைப்
போலே ஸேவிக்கும்படி நியமித்து, தம்முடைய அவதாரஸ்தல
மாகிய மன்னனார் சன்னிதிக் கெழுந்தருளினார். அவ்விருவர்
களும், நாதமுனிகளின் நியமநப்படியே திவ்யப்ரபந்தங்களை அழ
காக அபிநயத்துடன் பாடி, அழகிய மணவாளனை ஆனந்திப்பிக்க,
அழகிய மணவாளனும் மிகவுமுகந்து, அவர்களிலொருவர்க்கு
மதியாத தெய்வங்கள் மனமுறை வாணப் பெருமாள் அரையர்
என்றும், மற்றவருக்கு நாதவிநோத அரையர் என்னும் திருநாமம்
சாதித்து ஆழ்வாருக்கு ஸாதித்த கட்டளையிலே குல்லாயும் தொங்
கல் பரியட்டமான பட்டும், மற்றைத் திருமாலை முதலான ப்ர
ஸாதங்களையும் அநுக்ரஹித்து, ஆழ்வாருக்கு விடைகொடுத்தாப்
போலே அரையர்களுக்கும் விடைகொடுத்து நம்பாடுவானை வீட்
டிலே விட்டு வாருங்கோள் ! என்று பரிஜனங்களை நியமிக்க, அவர்
களும் அப்படியே செய்து வந்தார்கள். அது முதலாகப் பாடுவார்
களிருவர்க்கும் அரையர் என்று திருநாமமாயிற்று.

இவ்வாறு கோயிலில் உத்ஸவம் நடைபெறுவதைக் கண்ணுரக் கண்டு காதாரக்கேட்டு அநுபவிக்கும் பாக்யமில்லாத நம் போல்வார்களுமிழக்காதபடி ஆங்காங்கு திவ்ய தேசங்களிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் சன்னிதியிலும் இவ்வுத்ஸவம் தற்காலம் நடைபெறுகின்றது.

---

# பகவந் நாமோச்சாரண ப்ரபாவம்

(திருமழிசை கோயில் கந்தாடை அப்பன்ய்யன்,
ராமானுஜாசாரியர்)

தாதுஸு வருஷம் வைகாசி விசாகத்தில் வெளிவந்த ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிற பகவந்நாமோச்சாரண ப்ரபாவத்தின் தொடர்ச்சி, இப்பொழுது எழுதப்படுகிறது. அந்த ஸஞ்சிகையில் சேதநர்களுக்கு உத்தாரகம் பகவந்நாமோச்சாரணம் என்பதற்கு சுருதி புராணங்களினின்றும் ப்ரமாணங்கள் எழுதப்பட்டன. இப் பத்திரிகையில் ஆழ்வார்களுடைய ஸ்ரீ ஸூக்திகளிலிருந்து ப்ரமாணங்கள் எழுதப்படுகின்றன.

‘பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்’ என்கிறபடியே, ஆழ்வார்களுக்குள் மங்களாஶாஸநபரராய், அதுபற்றியே பெரியாழ்வார் என்னும் பெயர்பெற்ற பட்டர்பிரான், திருநாமோச்சாரணத்தைப் பற்றிய ஸ்ரீ ஸூக்திகள் பல அருளிச்செய்துள்ளார். திருப்பல்லாண்டில் அண்டக்குலத்துக்கதிபதியாகி இத்யாதி பாசுரத்தில் ‘ஆயிரநாமஞ் சொல்லிப் பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே’ என்றருளிச்செய்திருக்கிறார். இதற்கு பெரிய வாச்சானபிள்ளை அருளிச்செய்துள்ள வ்யாக்யாநமாவது “ஆயிரநாமஞ்சொல்லி, இரண்டு திருநாமத்தையே நிர்ப்பந்திக்க வேண்டுவது, மமேதம் என்றிருக்குமன்றிறே;. தவேதம் என்கிற புத்திபிறந்தால் பகவத்குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களெல்லாம் போக்யமாயிறே இருப்பது;. அவற்றை வாயாரச்சொல்லி, என்று.” (இரண்டு என்றது அண்டாதிபதயே நம: அஸுரராக்ஷஸவேநம: என்னும் இரண்டைக் காட்டுகிறது.) திருநாமோச்சாரணத்தைப்பற்றி, பெரியாழ்வார் ஆண்டாள் மற்றைய ஆழ்வார்கள் இவர்களால் அருளிச்செய்யப்



பட்டுள்ள ஸ்ரீஸூக்திகள் எல்லாவற்றிற்கும், பெரியவாச்சான் பிள்ளைபோல்வார், இவ்வாறே வ்யாக்யானங்கள் அருளிச்செய்திருக்கின்றனர். அவ்வியாக்யானங்கள் யாவையும், இங்கு எழுதினால் விஸ்தாரமாகிவிடுமாகையால், ஸ்ரீஸூக்தி ப்ரமாணங்களை மட்டில் குறுகிய அர்த்தங்களுடன் எழுதுகிறோம்.

பெரியாழ்வார்திருமொழியில் ‘நரகநாசனை நாவிற்கொண்டழையாத மானிடசாதியர் பருகுநீரும் உடுக்கும் கூறையும், பாவஞ்செய்தனதான்கொலோ’ (பூர்வகர்மானுகுணமாக வரும் நரகத்தை நசிப்பிக்குமவனை நாவிலேகொண்டு சொல்லாத மானிடர் குடிக்கும் தண்ணீரும் உடுக்கும் புடைவையும், பாபத்தைச் செய்தனவோ ?) என்றும், ‘பிச்சைபுக்காகிலும் எம்பிரான் திருநாமமே நச்சுமின்’ (பிச்சையெடுத்தாகிலும் தம்தம் புத்திரர்களுக்கு பகவந்நாமங்களையே பெயர்களாக வைத்துஅழையுங்கோள் என்றும், ‘சொல்லலாம்போதே உன் நாமமெல்லாம் சொல்லினேன் என்னைக்குறிக்கொண்டு’ என்றும், ‘அல்லற்படாவண்ணம் காக்க வேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே’ என்றும் (நான் உன் திருநாமங்களைச் சொல்லும் நாட்களில் சொன்னேன். தேவரீர் என்னை ஆபத்துக்காலங்களில் காத்து ரக்ஷிக்கவேணும் என்றும்) ‘நன்மை தீமைகளொன்றுமறியேன் நாரணாவென்னுமித்தனையல்லால்’ என்றும், இவ்வாறு திருநாமஸங்கீர்த்தனத்தினுடைய உச்சாரணவைபவத்தைப் பெரியாழ்வார் அருளிச்செய்தாரிறே !

இவர்திருமகளான ஆண்டாளும், திருப்பாவையில் ‘வாயினால் பாடிமனத்தினால் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவாநின்றனவும் தீயினில் தூசாகும் செப்பு’ (எம்பெருமான் திருநாமங்களை வாயினால் பாடி, அவனை மனத்தினால்த்யானிக்க, பூர்வோத்தர பாபங்கள், நெருப்பிலிட்ட தூசிபோலாகும்) என்றும், ‘கேசவனைப் பாடவும் நீ’ என்றும், நாச்சியார் திருமொழியில், நாமமாயிரமேத்த நின்ற நாராயணா’ வென்றும் அருளிச் செய்தாரிறே!. குலசேகரப்பெருமாளும், பெருமாள் திருமொழியில் ‘அரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி ஆட நாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே’ (பெரியபெருமாளுடைய பெயரைச் சொல்லி யழைப்பதில் சாபலமுடைய அடியார்களின் திருவடித்தூளைப் பெற்றால், கங்கை நீராடுவதில் ஆசை எதற்காக?

இங்கு திருநாமோச்சாரணம் பண்ணுபவருடைய திருவடி ரேணுவின் ச்லாக்யதையைச் சொன்னதால் திருநாமோச்சாரணத்தின் உத்கர்ஷம் ஸித்தமிறே.

திருமழிசைப்பிரான், திருச்சந்தவிருத்தத்தில் 'அவன் பெயரெட்டெழுத்தும் வாரமாக ஓதுவார்கள் வல்லர் வானமாளவே' என்றும், 'வானமாளவல்லையேல் வணங்கிவாழ்த்தென் னெஞ்சமே' என்றும், இந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துப் பரமபதத்தை யடைவதற்கு மாத்திரமன்றிக்கே, பரமபதத்தை யாளுவதற்கும் அவன் திருநாமமாகிய திருவெட்டெழுத்தை யுச்சரிப்பதே வமையும் என்றருளிச் செய்தார்.

தொண்டரடிப் பொடியாழ்வார், திருமாலையில் 'மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ, நின் நாமம் கற்ற ஆவலிப்புடைமை, கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து, நமன்மர் தலைகள் மீதே நாவலிட்டுழிதருகின்றோம்' பிரளயாபத்திலே மூவுலகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்துப் பிறகு புறப்பட விட்ட ஜகத்காரணபூதனே! உன் திருநாமத்தைக் கற்றதாலுண்டான ஐச்வர்யத்தால், பாபராசியை வாஸனையோடே போக்கி, யமன் தலையிலும், அவன் படர்கள் தலைகளிலும், நாவல் கூறிக்கொண்டு ஸஞ்சரியா நின்றோம் கிடாய்! என்றும் 'நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி' என்றும், 'அரங்க மென்றழைப்பாராகில் பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியும்' என்றும் 'அணிதிருவரங்கமென்ன மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே' என்றும் அருளிச் செய்திருக்கிறார்.

திருமங்கையாழ்வார், திருமொழியில் முதல்தசகத்தில் 'நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்' என்று தொடங்கிப் பாட்டுக்தோறும் நாராயண நாமத்தை அருளிச் செய்திருக்கிறார். பின்னும், சில திருமொழிகளில் பகவந்நாமோச்சாரணத்தை அருளிச்செய்து கொண்டு போந்து, முடிவில் பகவத்குண சேஷ்டிதங்களுக்கு வாசகங்களான திருநாமங்களைக்கொண்டு, எம்பெருமான் பெருமையைப் பேசாதவர்கள் பேச்சு சப்தத்திலே சேராது என்னும் அர்த்தத்தை 'மாலை வணங்கி அவன் பெருமை பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே' என்கிற பாசுரத்தால் காட்டியுள்ளார். இவ்வாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில், 'வெஃகாவில் திருமாலைப் பாடக்கே



மடக்கிளியைக் கைக்கூப்பி வணங்கினாளே' என்றருளிச்செய்திருக்கிறார். இதற்குத்தாத்பர்யம், தான் சொல்லுவித்த கிளி, திருவெஃகாவில் ஸ்ரீய:பதியைப் பாடக்கேட்டு, அதைத் தலைமகள் கைகூப்பி வணங்கினாள் என்று. இதனால், பகவந்நாமோச்சாரணம் பண்ணுவது திர்யக் ஜாதியாயிருந்தாலும், அதைத் தொழுவது பகவத்ப்ரவணர்களுக்கு இயற்கையிலே வமையும் என்பது வ்யக்தமாயிற்று.

பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதியில் 'நாவாயிலுண்டே நமோநாரணா வென்று ஓவாதுரைக்கு முரையுண்டே மூவாத மாக்கதிக்கள் செல்லும் வகையுண்டே என்னொருவர் தீக்கதிக்கட் செல்லுந்திறம்' என்கிற பாசுரத்தில், ஒரு சேதநனுக்கு வாயில் நாக்கும், நாராயணா வென்னும் சொல்லுமிருக்க, அச்சேதநன் நற்கதியை யடையாமல் ஏன்? துர்க்கதியை யடைகிறான் என்று ஆச்சர்யப்படுகிறார். பூதத்தாழ்வார் 'செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமாக வையேன்' புண்டரீகாக்ஷனான எம்பெருமானுடைய திருநாமத்தை மறந்திருப்பவரை மனிதர்களாக மதிக்கமாட்டேன் என்றறுதியிட்டார். பேயாழ்வாரும் திருநாமோச்சாரணத்தை 'நாமம் பல சொல்லி நாராயணா வென்று நாமம் கையால் தொழுது நன்னெஞ்சே வா!' என்று வெளியிட்டருளினார்.

ப்ரபந்நஜனகூடஸ்தரான நம்மாழ்வார், திருநாமோச்சாரணத்தைப்பற்றி அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் திருவாய்மொழியில் பலவுள்ளன. 'மாதவனென்றதேகொண்டு என்னை இனி இப்பால் பட்டது யாது அவங்களும் சேர்கொடேன்' என்றும் 'வடதிருவேங்கடத்தெந்தை பேர் பல சொல்லிப்பிதற்றி' என்றும் 'பெருமையும் நாணும் தவிர்ந்து பிதற்றுமின் பேதமை தீர்ந்தே' என்றும் 'கும்பி நரகர்களேத்து வரேலும் அவர் கண்டீர்! எம் தொழுகுலம் தாங்களே' என்றும், 'வள்ளல் மணிவண்ணன் தன்னைக் கவிசொல்ல வம்மினோ' என்றும், 'நம் மாயவன் பேர் சொல்லி வாழ்மினோ' என்றும், 'அரவணையான் திருநாமம் படிமினோ' என்றும் 'ஓராயிரமாய் உலகேழளிக்கும் பேராயிரங் கொண்டதோர் பீடுடையன்' என்றும் 'திருக்கண்ணபுரம் சொல்ல, நாளும் துயர்பாடு சாராவே' என்றும் 'கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன, நாளும் கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்' என்றும் 'பேருமோராயிரத்துள் ஒன்று

நீர் பேசுமினோ’ என்றும், ‘மாய்ந்தறும் வினைகள் தானே மாதவா வென்ன’ என்றும், ‘பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே’ என்றும், ‘மாதவனென்றென்று ஓதவல்லீரேல் தீதொன்று மடையா ஏதம் சாராவே’ என்றும் ‘பேராரோதுவார் ஆரார் அமரரே’ என்றும், பகவந்நாமோச்சாரண ப்ரபாவத்தை அருளிச்செய்து கொண்டு போந்து, முடிவில் ‘அரியை, அயனை, அரனை அலற்றி அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன், (அதாவது ப்ரஹ்மருத்ராந்தர்யாமியான எம்பெருமானை ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே அளவுகடந்து கூப்பிட்டு வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்) என்று பகவந்நாமோச்சாரணத்தால் தாம் பெற்றபலனையும் அருளிச்செய்தாரிறே. ஆக, ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளினின்றும் ப்ரமாணங்கள் காட்டப்பட்டன. மேலும், அஷ்டாதசரஹஸ்யப்ரவர்த்தகரான ஸ்ரீபிள்ளைலோகாசார்யரும் முமுக்ஷுப்படியில் ‘வாச்யப்ரபாவம் போலன்று வாசகப்ரபாவம்; அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டிநின்றுதவும்; த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவைசுரந்தது திருநாமமிறே’ என்று அருளிச்செய்தார். இதற்கு மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யானம் “இதற்கு வாச்யனாயிருந்துள்ள ஈச்வரனுடைய பெருமைபோலன்று தத்வாசகமான இதன் பெருமை. வாச்யனானவன் ஸந்நிஹிதனன்றிக்கே தூரஸ்தனாயிருந்த காலத்திலும் வாசகமான இது ஆஸந்நமாய் நின்று தன்னை வசித்தவர்கள் அபேக்ஷிதங்களை ஸாதித்துக் கொடுக்குமென்கை. ‘சங்கசக்ர கதாபாணே த்வாரகாநிலயாச்யுத|கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் சரணாகதாம்!!’ என்று சரணம் புகுந்த த்ரௌபதிக்கு அவ்வாபத்திலே ‘கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்’ என்கிறபடியே, வாச்யனான க்ருஷ்ணன் தூரஸ்தனாயிருக்கச் செய்தேயும் வஸ்த்ரங்களை வர்த்திப்பித்துக் கொடுத்தது, அவ்வவதாரத்திற்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமிறே! என்கை” என்று.

ஆக, ஆழ்வார்களும் ஆண்டாளும் ஸ்ரீலோகாசார்யரும் கீழ்ச் சொல்லப்பட்டவிதமாக திருநாமோச்சாரண மஹிமையைத் தங்கள் ஸ்ரீஸூக்திகளாலே வெளியிட்டுள்ளார்களிறே. ஸ்ரீபாகவதத்தில், அஜாமிளோபாக்யாநத்தால், ஒருவன் பகவந்நாமோச்சாரணம் பண்ணி ஸத்கதியை யடையக்கூடும் என்பது, வ்யக்தமாகக்



காட்டப்பட்டது. ஆனால், அநந்யசரணனான சேதநன், திருநாமோச்சாரணமாகிற ஸாதநாந்தரத்தில் அந்வயித்தல் ஸ்வரூப விருத்தமன்றோ? என்னில், அன்று. ‘தீயினில் தூசாகும் செப்பு’ என்று ஆண்டாள் அருளிச்செய்தபடியே, ஸ்வயம் போக்யமாகத் திருநாமத்தை உச்சரிக்கவே, நெற்செய்யப் புல்தேயுமாப்போலே, அநிஷ்டநிவர்த்தியும், அதனடியாக இஷ்டப்ராப்தியும் உண்டாகக் கடவதிறே. ஸாதநமாக அநுஷ்டித்தாலன்றோ! ஸ்வரூப ஹாநி வருவது.

ஆக, திருநாமோச்சாரண வைபவத்திற்கு ப்ரமாணங்களும், அநுஷ்டாநமும், அதன் பலமும் காட்டப்பட்டன.

---

# ஸ்ரீவசநபூஷண தத்வார்த்தம்

[ஸ்ரீ. உ. வே. வடகரை வெங்கட வரதாசாரியர்]

லோகாசார்யாய குரவே க்ருஷ்ண பாதஸ்ய ஸூநவே
ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவாதவே நம꞉

கார்த்திகையிற் கார்த்திகை வெளிவந்த வைஜயந்திபத்ரிகையில் A. V. கோபாலாசார்யரநுக்ரஹித்த ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யாநுபவத்தில் அர்ஜுநன், நீசர்நடுவேயிறே யிவ்வர்த்தம் கேட்டது, என்கிற ஸ்ரீ ஸூக்திக்கு, உபதேசம் கேட்டதை மாத்திரம் வ்யாக்யாநத்தில் சொல்லியிருப்பதாகவும், கேட்டது என்பதற்கு ப்ரார்த்தித்ததென்று மர்த்தம் கொள்ளக்கூடுமாகையால் சரணாகதியை யநுஷ்டித்துக் கேட்டான் என்றும் பொருள் கொள்வது, மிக்க ஸமஞ்சஸமாயிருக்குமென்று சொல்லி, அதற்கநுகூலமாக மற்றும் சில ஸ்ரீஸூக்திகளையும் கார்பண்யதோஷோபஹத ஸ்வபாவ꞉ என்கிற கீதாச்லோகத்தையும் எடுத்து உதாஹரித்து மிகவும் விரிவாக எழுதி, இது விஷயத்தில் ரஸிகர்கள் ஹ்ருதயமே ப்ரமாணம் என்று முடித்திருக்கிறார்.

அந்தவ்யாஸம், கேட்டது என்பதற்கு ப்ரார்த்தித்தது என்கிற பொருளுண்டென்று தாமறிந்து கொண்டதைத் தெரிவிக்க எழுதியதாகக் காணப்படுகின்றதே யல்லாமல் ஸ்ரீவசநபூஷணத்தையும் அதன் வ்யாக்யாநத்தையும் சிறிதும் கவனித்து எழுதியதாகக் காணப்படவில்லை. ஆதலின், சிற்றறிவுடையவடியேன் சீர்வ

சந பூஷணத்தின் செம்பொருளை அழகாக அருளிச்செய்யும் பெருமை வாய்ந்த பெரியோர்கள் ஸந்நிதியில் பலதடவை யடி பணிந்து கேட்டுத்தெரிந்து கொண்ட தத்வார்த்தத்தை யிங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீவசநபூஷணமென்கிற ப்ரபந்தமானது, அங்கங்களோடு கூடின த்ராவிடஸம்ஸ்க்ருத ரூபமான வேதங்களெல்லாவற்றினுடைய ஸாரார்த்தத்தை ஸங்க்ரஹமாய், மஹாரஸமாக நம்பூர்வாசார்யர்களருளிச்செய்த ஸ்ரீ ஸூக்தி ரத்ந ஸமூஹங்களை யொருங்கே யமைத்து ஸர்வஜ்ஞரான பிள்ளை லோகாசார்யரால் ஸ்வஸூக்தியாகிய நூல்களில் கோர்க்கப்பட்டதாய், அநுஸந்திப்பார்க்கு ஹ்ருதி(ய)தார்யமான பூஷணமாயிருப்பதால ஸ்ரீவசந பூஷண திவ்யஶாஸ்த்ரம் என்று போற்றப்படுகிறது.

பேரருளாளனே, பிள்ளைலோகாசார்யராக வவதரித்து, இத்தை யருளிச்செய்தானென்றால், இதன் பெருமை, அறிவிற்சிறிய வடியேன்போல்வார்களால் இத்தன்மைத்தென்று எழுதவும் இயலுமோ? இவ்வளவு பெருமை வாய்ந்த வசநபூஷணமும், விஶத வாக்சிகாமணியாகிய மணவாள மாமுனிகளின் வ்யாக்யாநமில்லாவிடில் ஆற்றில்கரைத்த புளிபோல் நிஷ்ப்ரயோஜநமாய்விடுமே.

நாமூலம் லிக்யதே கிம்சித் நாநபேக்ஷிதமுச்யதே என்றபடி மூலத்திலில்லாததை எழுதுவதும், ஆவஶ்யகமில்லாதவைகளை யறிவிப்பதும், நம்போல்வார்களின் புத்தியினால் சிறிதுகொண்டு கூட்டிப் பொருள் கூறும்படி குறுக வரைவது மில்லாமலன்றோ! அவரது ஸ்ரீ ஸூக்திகளமைந்திருப்பது. ஆயிரம் நாவுடைய ஆதிஶேஷனேயன்றோ! அழகிய மணவாளமாமுனிகளாக அவதரித்தார். அநந்த ஶயனனை பேரருளாளன் பணித்த வசநபூஷணத்தினுழ்பொருளை யறுதியிட, ஆயிரம் நாவுடைய அநந்தனலன்றி மற்றொருவரா லியலுமோ?

இத்தன்மைத்தான ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்திக்கு மாமுனிகளின் வ்யாக்யாநத்திலில்லாத பொருளொன்றை யொருவர் கூறுவது, அடியேன்போல்வார்களுக்கு மிகவும் வியப்பையே தருகின்றது.

ஸ்ரீ வசநபூஷணம் நாலுப்ரகரணங்களாக மூலம் அச்சிடப்பட்டிருந்தாலும், ஆறு ப்ரகரணங்களாகவும்



ளாகவும் ஸம்ப்ரதாயார்த்தமறிந்த பெரியோர்கள் அநுஸந்தித்துப் போருவார்கள். அவைகளில் ஆறுப்ரகரணங்களவையென்னில்?

புருஷகாரவைபவம் (1) உபாயகௌரவம் (2) (இத்தை யடைய விரும்பும்) அதிகாரியின் க்ருத்யம் (3) அவ்வதிகாரியின் ஆசார்யாநுவர்த்தனம் (4) இவையத்தனைக்கும்காரணமான, பகவானுடைய க்ருபையின் நிர்ஹேதுகத்வம் (5) (வேதத்தினுட்பொருளாய் சரமபர்வமான) ஆசார்யனுடைய உபாயத்வம். (6) ஆகியவை. இதில் புருஷகார வைபவமென்பது, புருஷகாரபூதையான பிராட்டியின் பெருமை என்று அர்த்தமாகும். சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது என்கிற மூல ஸ்ரீஸூக்தியே இதற்குப் ப்ரமாணம்.

உபாய வைபவமென்பது ஸித்தோபாயமான ஸர்வேஶ்வரனுடைய பெருமை என்று அர்த்தமாகின்றது. தூதுபோனவனேற்றம் சொல்லுகிறது என்கிற ஸ்ரீஸூக்தியே இதற்குப்ரமாணமாகும் இவ்வாறு புருஷகாரபூதையான பிராட்டியின் பெருமையையும், உபாய பூதனான எம்பெருமான் பெருமையையும் பரக்கப்பேசி, உபாயபூதனான க்ருஷ்ணபரமாத்மா, த்ரௌபதிக்காக அர்ஜுநனுக்கு தூத்யஸாரத்யங்கள் பண்ணினதையும், ப்ரபத்யுபதேஶம் பண்ணினதையும் த்ருஷ்டாந்தமாகக் காட்டா நின்றுகொண்டு, இவ்வாறு ப்ரஸங்காத் ப்ரஸ்துதமான ப்ரபத்தியின் ஸ்வரூபத்தைச் சொல்ல உபக்ரமித்து, அதற்குத்தேஶகாலாதிநியமமில்லையென்பதை ஐதிஹ்ய மூலமாகத் தெரிவிக்கப்புக்கு, தேஶகால நியமமில்லை என்பதற்கு ஸஏஷதேஶ: கால: என்கிற திருவடிவாக்யத்தை ப்ரமாணமாகக்கூறி ப்ரகார நியமமில்லை என்பதை விவரிக்குமிடத்து, ப்ரகார நியமமில்லை யென்பதை யெங்கும் காணலாம் என்று சொல்லி இதற்கு அநுஷ்டாநத்திற்கு த்ரௌபதியையும், கேட்டதற்கு அர்ஜுநனையும் த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இதற்கு மாமுனிகளின் வ்யாக்யாநத்தின் சீர்மையை அறிவுடையோர் காண்க.

ப்ரகார நியதி என்று துடங்கி, எங்கும் காணலாம் என்றது இத்தையநுஷ்டிப்பார் ஶ்ரவிப்பார் எல்லார் பக்கலிலும் காணலாமென்றபடி.

இவ்வாறிருக்க, கேட்டதை மாத்திரம் சொல்லியிருப்பதாகக் கொண்டு அநுஷ்டாநத்தையும் சேர்த்துப் பொருள் கூறவேண்டுமென்பதெப்படி.

மேலும் அர்ஜுநன் ப்ரார்த்தனைக்காக, கீதையையும், சரணாகதியையும் உபதேசித்தான் என்பது பிள்ளைலோகாசார்யர் திருவுள்ளமில்லை என்பதை அர்ஜுநனுக்கு தூத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்யுபதேசம் பண்ணிற்று மிவளுக்காக என்ற ஸ்ரீஸூக்தி தெரிவியா நிற்கும். இதனால் அர்ஜுநன் ப்ரார்த்தனைக்காக கீதையருளிச் செய்தானன்று, த்ரௌபதிக்காக வருளிச்செய்தான் என்பது வெள்ளிடைமலை

இன்னமும் இவ்வர்த்தம் கேட்டது என்பதற்கு கீதையைக் கேட்டது என்று சொல்லுவதும் பொருந்தாது. ப்ரபத்தியைப்பற்றிப் பேசுங்கால் இவ்வர்த்தம் கேட்டது என்றால் ப்ரபத்தியைக் கேட்டது என்று அர்த்தம் கொள்ளாமல், கீதையைக் கேட்டது என்று சொல்வதும் பொருத்த முடையதாகக் காணப்படவில்லை. அவன் கேட்டதும், கார்பண்ய தோஷோபஹதஸ்வபாவ: ப்ரச்சாமி த்வாம் தர்ம ஸம்மூடசேதா: யச்ச்ரேயஸ்யாத் நிஶ்சிதம்ப்ரூஹி தந்மே ஶிஷ்யஸ் தேஹம் ஶாதிமாம் த்வாம் ப்ரபந்நம் என்று, தர்மாதர்மங்களறியாமற் கலங்கின வர்ஜுநன் எது எனக்கு ஶ்ரேயஸ்ஸாக ஆகுமோ? அதை, உன்னைச்சரணமடைந்த எனக்குச் சொல்ல வேண்டுமென்று வேண்டிக் கொண்டானே யல்லாமல், ப்ரபத்தியை எனக்குபதேசிக்கவேண்டுமென்று கேட்டதாகக் காணப்படவில்லை. ஆதலால் கேட்டது என்பதற்கு ஶ்ரவணத்தை மாத்திரம் அர்த்தமாகக் கொள்வதே யுக்தமாகக் காணப்படுகின்றதே யல்லாமல், ப்ரார்த்தித்தது என்று அர்த்தம் கொள்வது உசிதமாகக் காணப்படவில்லை என்பதை இங்கு தெரிவித்து நிற்கின்றேன்.

---

## ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தியின் அப்தபூர்த்தி

[ஸ்ரீ. உ. வே. வடகரை வெங்கட வரதாசாரியர்]

வைஜயந்தியென்கிற மாலையானது, ஸர்வேஶ்வரனுடைய வக்ஷஸ்தலத்தில் துளஸீகமலா கௌஸ்துபங்களோடுகூடி ஸர்வேஶ்வரனுடைய ஸர்வேஶ்வரத்வத்தை யனைவருமறியுமாறு எவ்வாறு அறிவிடாநிற்கின்றதோ? அவ்வாறே நமது வைஜயந்தீபத்ரிகையும் அநேகவித்வான்களுடைய வ்யாஸங்களோடுகூடி ஸ்ரீராமாநுஜஸி



த்தாந்தத்தின் பெருமையை இந்நிலவுகில் அனைவருமறியுமாறு ப்ரசாரம் செய்ய அவதரித்திருக்கின்றமையால், இதற்கு ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ என்கிற திருநாமம் அந்வர்த்தமானதே!. இவ்வைஜயந்தீ, சென்ற யுவவருஷம் கார்த்திகையிற் கார்த்திகையிலவதரித்துத் தவழ்ந்து தளர் நடையிட்டு நாடெங்கும் நடமாடவாரம்பித்தது. அதன் அப்தபூர்த்திதினத்தில் வைஜயந்தீ-இந்நிலவுலகில் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தை ப்ரசாரம்செய்துகொண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்கிறபடி அநேகமாயிர வருஷங்கள் வர்த்ததாமபிவர்த்ததாம் என்கிறபடி மேன்மேலும் வ்ருத்தியடையும்படி தங்களாலியன்ற பொருளை அநேகமஹாநுபாவர்கள் ஆசீர்வாதரூபமாக வநுக்ரஹித்தார்கள். மற்றும் ராமாநுஜஸித்தாந்தத்திலபிநிவேஶமுடைய ஆரியர்களனைவரும் யதோசிதம் பொருளுதவிசெய்து வைஜயந்தியை வ்ருத்தியாகும்படி செய்யவேண்டுமென்று அடியேன் அடிபணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

---

## வர்த்தமானங்கள்

பத்திராதிபர்

### ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார் ஸந்நிதி ஜீர்ணோத்தாரணகைங்கர்யம்

திருநக்ஷத்திரங்களா(வயதா)லும், ஆயிரக்கணக்கான பாசுரங்களை யருளிச் செய்ததாலும் பெருமையுடைய ஆழ்வார்களிருக்க, இவ்வாழ்வார் பெரியாழ்வார் என்று பெயர்பெற்றது, ஸர்வேஶ்வரனுடைய ஸௌந்தர்யத்திலாழங்காற் பட்டு, அதற்கு என்னதீங்கு வருமோ! என்றஞ்சிப் பல்லாண்டுபாடியதாலென்பதை அடியேன் அறிவிக்கவும்வேண்டுமோ? பகவானுக்கு ரக்ஷையாகப்பாடிய இப்பல்லாண்டு மற்ற ஆழ்வார்களருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களுக்கு, முதலிலும் கடையிலும் ரக்ஷையாய் ஓதப்பட்டு வருவதும் ஜகத்ப்ரஸித்தமே! இவ்வளவு பெருமைவாய்ந்த பல்லாண்டு பாடப்பெறாத திவ்யதேஶம் கிடையாதென்பதும் அனைவருமறிந்ததே. இவ்வாறு பகவானையும், திவ்யப்ரபந்தங்களையும், இப் பல்லாண்டைச் சூழ்ந்திருந்து அநுஸந்திப்பார்களையும், பல்லாண்டு பல்லாண்டாக விருக்கும்படி பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்

ஸந்நிதியைப் பல்லாண்டு பல்லாண்டாக விருக்கும்படி செய்யக் கருதிய ஆலினிலையானை வடபெருங்கோயிலுடையான், அக் கைங்கர்யத்தைப் பரிவுடன் பாங்காகச் செய்து தலைக்கட்டுவதற் குப் பாங்கான கடாம்பி திரு. வேங்கடமய்யங்கார், கடாம்பி ஸ்ரீ திருமலை அய்யங்கார் என்கிற இவ்விருவர்களின் திருவுள்ளத்தில் அந்தர்யாமியாய் நின்று ப்ரேரேபித்தான். அவ்வாறே அவ்விரு ஸ்வாமிகளும், அக்கைங்கர்யத்தைச் செய்ய உபக்ரமித்து மிகவும் த்வரிதமாகவே கல்வேலைகளை நடத்திவருகிறார்கள். இக்கைங் கர்யத்திற்கு ஏறக்குறைய இருபதினாயிரம் ரூபாய்கள் வேண்டு மென்று மதிப்பிடப்படுகிறது. இக்கைங்கர்யத்தை அவ்விருஸ்வாமி களும் தங்கள் வாக்குச் செல்லும் ப்ரபுக்களைக்கொண்டே நடத்திக் கொள்ளும் வல்லமை வாய்ந்திருக்கச் செய்தேயும், நம்போல்வார் களின் பாக்யவிசேஷத்தால் நம்போல்வார்களுடைய ஸஹாயத் தையும் கருதுகிறார்கள். ஸம்பந்தாத் ஸ்வாத்ம லாப: என்கிற படியே இக் கைங்கர்யத்தில் எல்லோரும் யதோசிதம் அந்வயித்து க்ருதார்த்தர்களாக வேண்டுமென்பதே அடியேன் வேண்டிக் கொள்வது.

**வேதாந்த தீபிகை** :—இப் பத்திரிகை 25 வருஷகாலமாக ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் அச்சிடப்பட்டு வருகிறது. தற்காலமிதற்குப் பத்ராதிபர் ஸி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங் கார். இது ஸ்ரீ வைஷ்ணவ உலகுக்கின்றியமையாதது.

**ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ** :—இப்பத்திரிகையை திருச்சி அட்வகேட் வ. ஸி. கோபாலாசாரியார் பத்ராதிபரா யிருந்து நடத்திவருகிறார்.

**செந்தமிழ்** :—இப்பத்திரிகை மதுரைத்தமிழ்ச் சங்கத்தினரால் 34 வருஷகாலமாய் நடந்து வருகிறது. இதற்கு ஆசிரியர் திரு நாராயண அய்யங்கார். உதவிப் பத்ராதிபர் டி. கெ. இராமாநுச அய்யங்கார். இது தமிழுலகுக்குப் பரமோபகாரமா யிருக்குமென் பதிலையமில்லை.

**ஆரியதர்மம்** :—இது ஓர் ஸநாதந தர்ம ப்ரசாரபத்ரிகை. தற் கால மேற்பட்டிருக்கும் விபரீத உணர்ச்சிகளை மாற்றி உண்மையை உலகுக்கு அறிவிக்க, இப்பேர்ப்பட்ட பத்ரிகை அத்யாவஶ்யக மானது. ஆதலின் அவரவர்களும் விஷயத்தாலும் வித்தத்தாலும் ஆந்தனையு மிப்பத்ரிகையை ஆதரிப்பது சாலவும் நன்று.



**ஆர்யமத ஸம்வர்த்தநீ** :—இப்பத்ரிகை கடலங்குடி பண்டித நடேச ஶாஸ்த்ரிகளால் ப்ரசுரிக்கப்பட்டு வருகிறது. பாகவத ஶ்லோகங்கள் நாக ரலிபியிலும்; ஸ்ரீதரீயவ்யாக்யாநத்தைத் தமி ழில் மொழி பெயர்த்தும் அச்சிடப்படுகிறது.

**திவ்யார்த்த தீபிகை** :—அனேக வருஷங்களாக திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையென்று நடந்துவந்த பத்ரிகையே தற்காலம் திவ்யார்த்த தீபிகையென்று பெயரிடப்பட்டதாகத் தெரியவரு கிறது. இதற்குப் பத்ராதிபதியர் பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர். இவரது பெருமை யறியாதார் ஸ்ரீவைஷ்ண வுலகிலொருவரு மிருக்கமாட்டாரென்பது அடியேன் நினைவு. ஆகலின் அவர் பெருமையைப்பற்றிச் சிற்றறிவுடைய வடி யேன் என் புகழ்கின்றது. இவரது வ்யாக்யாநஶைலியை உற்று நோக்கினால் ஸூக்திரத்நாகராமணியாகிய மணவாளமாமுநிகளின் வ்யாக்யாநஶைலியை ஒத்திருக்கின்றதென்றே சொல்லலாம். நமது ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தவை ஜயந்தியும் இவரைப் பத்ராதி பராகக்கொண்டே வெளிவரத் தொடங்கிற்று. அப்பால் ஏதோ சிறிது காரணத்தையிட்டு அடியேன் பத்ராதிபராக விருக்கும்படி நேரிட்டாலும் அநேகமாக இவருடைய அபிப்ராயத்தை யடி யொற்றியே நடைபெறுகிற தென்பதை வைஜயந்தீக்ராஹகர்கள் மாத்திரமேயன்றி ஸ்ரீவைஷ்ணவர்களனைவருமறிவார்கள்.

இவ்வாறிருக்க இவரது வ்யாஸம் இந்த மாதத்தில் வராததை பற்றிச் சிலருக்கு வருத்தமுண்டாகக்கூடும். இனி மாதந்தோறும் தவறாது இவரது வ்யாஸமொன்றை நமது வைஜயந்தி வாவேற்று வாசகர்களின் மனதைக் களிக்கச்செய்யும். மேலும் இவராலநுக் ரஹிக்கப்பட்ட அழகிய மணவாளப் பெருமாள் நயினாரருளிச் செய்த ஆழ்வார் விஷயமான நக்ஷத்திரமாலிகை வ்யாக்யாநமும், ஸ்ரீ விஷ்ணுசித்த குலநந்தந கல்பவல்லியான ஆண்டாள் விஷய மாக, திருமலைமால் திருமணியாய்ச்சிறக்கவந்த நமது நிகமாந்த மஹாதேஶிகனருளிச்செய்த கோதாஸ்துதிவ்யாக்யாநமும் கூடிய சீக்கிரம் வைஜயந்தியின் வாயிலாக வெளிவரும்.

C. V. CUNNIAH CHETTY & CO.

SILK WOOLLEN AND COTTON PIECE GOODS MERCHANTS,

288, ESPLANADE ROW, MADRAS.

FOR COTHOOR BRAND SOYA BEANS.

## நிபந்தனைகள்

1. ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை சிற்றறிவுடைய என் போல்வார்களுக்கும் சிறிது பயன் படுமாறு வித்வான்கள் எழுதி யநுக்ரஹித்தால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. கடிதத்தில் இங்கியால் ஒரே பக்கத்தில் எழுதல் வேண்டும்.
6. கூட்டெழுத்துக்களாகவோ சந்தேகத்திற் கிடமுண்டாகும்படியாகவோ எழுதக் கூடாது.
7. அவ்வாறு எழுதியதாலேற்படும் தவறுகளுக்கு ஒருவிதத்தாலும் பத்திராதிபர் கடமைப்படமாட்டார்.
8. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
9. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
10. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள்.
11. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸஹகாரிகளை யுடையவர்கள் ( Sympathizers ) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவனாகக் கடவேன்.
12. (25) இருபத்தைந்து ரூபாய் கொடுக்குமவர்களை ஜீவியச் சந்தாதாரராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பணமன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.

### விளம்பரம்

| | | | | |
|---|---|---|---|---|
| முழுப்பக்கம் ஒரு தடவைக்கு | | ... | 5 | 0 0 |
| அரைப்பக்கம் | ,, | ... | 3 | 0 0 |
| கால்பக்கம் | ,, | .... | 2 | 0 0 |



லிருக்க, அண்ணன், இப்போது ஆச்சியாரை எழுப்பவேண்டாம் பொழுது விடிந்து எழுந்திருந்தவுடன் விசாரித்து விஷயம் தெரிந்துகொள்ளலாம் என்று பாட்டரை யழைத்துக்கொண்டு மூவரும் ஶயநக்ருஹம் சென்று ஶயநிக்க, அண்ணன், படுக்கையிற் பொருந்தாமல் எழுந்திருந்து சிங்கரைய்யர் ஶயநித்துக் கொண்டிருக்குமிடம் வந்து அவரை யெழுப்பிச் சிறிது காலம் ஸத்விஷயங்களை யருளிச்செய்து அவரை யுகப்பித்துக் கடைசியாக மாமுநிகளின் திருவடிகளைப் யாஶ்ரயிக்கும்படி யுமக்கு அரங்கனணையிட்ட விருத்தாந்தத்தை யறிய ஆவலுடையவனா யிருக்கிறேன்'' என்று தெரிவிக்க, சிங்கரைய்யரும், எங்களூரில் எனது நிலத்திலுண்டாகும் கறியமுதுகளை யதாசக்தி க்ருஹித்துக் கொண்டு வந்து அரங்கனடியார்கள் திருமாளிகையில் ஸமர்ப்பித்துப் போருவதுண்டு. ஒருநாள் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர், இன்று மாமுநிகளின் மடத்திலே ஸமர்ப்பியும் என்று நியமிக்க, அதுகேட்டு அடியேன், அளவிலாவாநந்த மடைந்து, அவ்வாறே ஜீயர் ஸந்நிதியில் ஸமர்ப்பித்து தண்டன் சமர்ப்பித்து நிற்க, ஜீயர், அடியேனைக் கடாக்ஷித்து இவை யாருடைய பூமியில் உண்டாயின? இவைகளுக்குத் தண்ணீரிறைத்துப் பாச்சினவர் யார்? என்று வினவியருள, அடியேன், தாஸபூதனான வடியேன் பூமியிலுண்டாயினவே. தாஸவர்க்கங்கள் நீர் பரிமாற விளைந்தவைகளே. இவைகளை யங்கீகரித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, ஜீயரும், உகப்புடனே அவைகளை யங்கீகரித்து, அடியேனை நம்பெருமாளைத் திருவடி தொழுது செல்! என்று நியமித்து விடை கொடுத்தருளினார். அவ்வாறே அடியேன், அரங்கனடியிணையைத் தொழுது நிற்க, அர்ச்சகர், அடியேனுக்குத் தீர்த்தம் ஶடகோபன் முதலான ஸமஸ்த வரிசைகளையும் ப்ரஸாதித்தருளி, உமக்கு விலக்ஷண ஸம்பந்த முண்டாகப் போகிறது. நீர் பரம பாக்யஶாலி என்று போரக்கொண்டாடி, விடை கொடுத்தருளினார். அடியேன், சீல மில்லாச் சிறியனான வடியேனை யிவ்வாறு பெருமாள் கடாக்ஷித்ததிற்குக் காரணம், ஜீயரின் அநுக்ரஹத்திற்குப் பாத்ரமானமையே, என்றறுதியிட்டுப் பின்னையும் ஜீயர் ஸன்னிதிசென்று தண்டன் சமர்ப்பித்து, இன்று தேவரீர் கடாக்ஷத்திற்கு பாத்ரமானதாலடியேனை, நம்பெருமாள் விசேஷமாகக் கடாக்ஷித்தருளினார் என்று நடந்த விருத்தாந்தத்தை விண்ணப்பித்து ஊருக்கு விடைகொள்ள, அங்கிருந்தார்

அடியேனுக்கு ப்ரஸாதங்கள் ப்ரஸாதிக்க, பெற்று, ஊருக்குச்செல்லும் மார்க்கத்திலேயே அந்த ப்ரஸாதத்தை ஸ்வீகரித்து க்ருதார்த்தனாய், ஊர்சென்று அன்றிரவு ஶயநித்துக்கொண்டேன். ஸ்வப்நத்தில் பெரிய பெருமாள், தமது திருக்கையை உயரவெடுத்துத் திருவநந்தாழ்வானைச் சுட்டிக்காட்டி இவர்கண்டாய்! அழகியமணவாள ஜீயர்'' இவர் திருவடிகளை யாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கக் கடவாய் என்று நியமித்தருளினார். உடனே, அடியேன் கண்விழித்து, விடியற்கால அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு, ஜீயர் திருவடிகளையே தஞ்சமாகக்கருதி அவர்திருவடிகளை யாஶ்ரயிக்க இங்கு வந்து காத்துக் கொண்டிருக்கிறேன் என்று, நடந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். அதுகேட்டு அண்ணனும் ஆஶ்சர்யப்பட்டு ஜீயர் விஷயத்தில் அதிகமான பயபக்திகளுடன் திருமாளிகையுள்ளே சென்று, படுக்கையில் ஶயநித்துக்கண் வளர்ந்தருளா நிற்க, ஸ்வப்நத்தில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் வந்து அண்ணனைக் கசையாலடித்துக் கையைப்பற்றி யிழுத்துக்கொண்டு மெத்தை மேற்சென்று, அங்கு த்ரிதண்டத்தைத் தோளின்மேல் சாத்தி கையில் கசையைக் கொண்டு அதிகோபத்துடன் எழுந்தருளி யிருக்கும் ஒரு ஜீயர் முன்னே நிறுத்த, ஜீயரும், அதிகுபிதராய் கசைதுண்டு துண்டாகப் போகும்படி யடித்துக் கடைசியில் உபதண்டத்தைக் கொண்டடிக்க, உத்யோகிக்க அருகு நின்ற ஸ்ரீ வைஷ்ணவர் 'போதும் போதும் இவன் சிறியன்' இனி புத்தியுண்டாய்விடும், கடாக்ஷித்தருள வேண்டுமென்று கைகூப்பி வேண்டிக்கொள்ள, ஜீயருமிரங்கி யருளி, அண்ணனை மடிமேல்வைத்து உச்சி மோந்து அடித்ததாலுண்டான நோவு தீரும்படி உடம்பெலாம் தடவிக் கொடுத்துக் குளிரக் கடாக்ஷித்து, நீயும் உத்தம நம்பியும் ஜீயர் திருவடிகளில் அபசாரப்பட்டீர்கள். அதனாலேயே உன்னை இவ்வாறு ஶிக்ஷித்தேன். "நாம் ஸ்ரீ பாஷ்யகாரர். இந்த ஸ்ரீவைஷ்ணவர் முதலியாண்டான். திருவநந்தாழ்வானும் மணவாள மாமுனிகளும் நாமே. நீயும் உன்னுடைய ஸம்பந்தமுடையார்களும் மாமுநிகளின் திருவடிகளை யாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள்'' என்று நியமித்து எழுந்தருளினார். அண்ணனும் கண் விழித்து ஸ்வப்ந விருத்தாந்தத்தைத் தமது தம்பிமார்களுக்கறிவித்து, அவர்களையு மழைத்துக்கொண்டு ஆச்சியாரருகேசென்று தெண்டன் சமர்ப்பித்து ஸ்வப்ந விருத்தாந்தத்தை யருளிச்செய்ய,



ஆச்சியாரும், தமக்கும், தம்முடைய தகப்பனாரான அப்பாவுக்கும், ஜீயருடைய ஸ்ரீ பாததீர்த்தத்தாலும், நீராடி யருளிய தீர்த்தத்தாலும், ஜீயர் விஷயத்தில் பக்தியுண்டாய் ஆஶ்ரயித்த ப்ரகாரத்தைச் சொல்லக்கேட்டு மிகவுமுகப்புடன் சிங்கரைய்யரிடம் ஸ்வப்ந விருத்தாந்த மெல்லாவற்றையு மருளிச்செய்து திருக்காவேரிக் கெழுந்தருளி நீராடி, நித்ய கர்மாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு திருமாளிகைசென்று ஆச்சியாரைத் தெண்டன் சமர்ப்பித்து, உமது திருக்கையால் ப்ரஸாத ஸ்வீகாரம்செய்து கொண்டதாலன்றோ! இப்பேறு சித்தித்தது என்று ஆச்சியாரைக் கொண்டாடி, உத்தம நம்பியை வரவழைத்து, அவருடனே தமது ஜ்ஞாதிகளான கந்தாடை அய்யங்கார்கள் திருமாளிகைகள் சென்று, அவர்களுக்கு இந்த விருத்தாந்தத்தைத்தெரிவித்து எல்லோரையு மழைத்துக் கொண்டு பெருந்திரளாக, மாமுநிகளின்மடத்திற்கெழுந்தருளி, அண்ணன், வானமாமலை ராமாநுஜ ஜீயரைப் புருஷகாரமாகக் கொண்டு, அதிவிநயராய் "அடியோங்கள் ஜீயர் திருவடிகளே ப்ராப்ய ப்ராபகமாக வந்தடைந்தோம் தேவரீர் அடியோங்களை அங்கீகரிப்பித்தருள வேணும்'' என்று ப்ரார்த்திக்க, வானமாமலை ராமாநுஜ ஜீயர், அதுகேட்டுப் பரம சந்தோஷத்துடன் ஜீயர் ஸந்நிதியிலே சென்று இந்த விருத்தாந்தத்தை விண்ணப்பிக்க, அப்படியே ஆச்சியாரும் வந்தறிவிக்க, ஜீயரும் மிகவுமுகந்து இவற்றுக்கெல்லாம் மூலபூதை ஆச்சியா ரன்றோ! என்றருளிச்செய்து, மடத்து வாசலிலேயெழுந்தருள, அண்ணன் முதலான கந்தாடை அய்யங்காரகளெல்லாரும் ஜீயரைத் தெண்டன் சமர்ப்பித்துத் தாங்கள் கொண்டு வந்த உபஹாரங்களை, வேதாஹ மேதம் என்கிற பஞ்சாதியைச் சொல்லி ஸமர்ப்பிக்க, அவைகளை யங்கீகரித்தருளி, உள்ளே திருமலை ஆழ்வார்சென்று திருவோலக்கமாய் எழுந்தருளி யிருந்து, போலிக போலிக என்கிற திருவாய் மொழியையும் திருப்பல்லாண்டையும் சுருக்கமாக வுபந்யஸித்தருளக்கேட்டு, அண்ணன், வானமாமலை ஜீயரை முன்னிட்டு ஸமாஶ்ரயணத்திற்கு த்வரிக்க, ஜீயரும் அண்ணனைத் தனியாக அழைத்து மஹா குலப்ரஸூதராய், எல்லோருக்கு மாசார்யரா யெழுந்தருளி யிருக்கும் தேவரீர் இவ்வாறு செய்யலாகுமோ? என்ன, அண்ணனும், அப்படிக்கொன்று மருளிச்செய்ய வேண்டாம். இவ்வளவு காலம் அடியேன் தேவரீர் பெருமை யறியாமலிருந்ததை க்ஷமித்தருள வேண்டுமென்று

வேண்டிக் கொண்டு, ஸ்வப்ந விருத்தாந்தத்தை விண்ணப்பித்து, மிகவும் தனது ஆர்த்திதோன்ற ப்ரார்த்திக்க, ஜீயரும், அப்படியே ஆகிறது என்று அங்கீகரித்து, அனைவர்க்கும் அடைக்காய் முதலானது விநியோகமானபின் அன்று எல்லோரும் தங்கள் தங்கள் மாளிகை சென்றார்கள்.

மற்றை நாள், அன்று வாராமலிருந்த சில கந்தாடை அய்யங்கார்கள் ஸ்வப்நத்திலும், பெருமாள், மாமுனிகளின் பெருமையை அறிவிக்க, அவர்களும், அண்ணன் முதலான ஸமஸ்தமான கந்தாடை அய்யங்கார்களும் அபிஜந வித்யா வ்ருத்தங்களாலுண்டான தங்கள் பெருமையைப் பாராமல், ஜீயர் திருவடிகளின் ஸம்பந்தமே தங்களுக்கெல்லா வதிஶயங்களாகக்கருதி, ஜீயர் திருவடிகளை ஆஶ்ரயிக்க மடத்திற்கெழுந்தருளி, ஜீயரைத்தெண்டன் சமர்ப்பித்து க்ருபை பண்ணியருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஜீயரும், வானமலை ஜீயரை யழைத்து, அதற்கு வேண்டியவைகளை ஸந்நத்தமாக்கும்படி நியமித்துத் தாமும், திருவாராதநம் செய்து பெருமாளுக்குப் பழம் முதலானவைகளைக் கண்டருளப்பண்ணி ஸந்நிதி முன்பாக வெழுந்தருளி ஸமாஶ்ரயணமாக வேண்டியவர்களெல்லோரையு மழைத்து அண்டையிலே வைத்துக்கொண்டு, செய்யவேண்டும் கிரியைகளை யெல்லாம்செய்து தாப: புண்ட்ரஸ்ததாநாம என்கிறபடி பஞ்ச ஸம்ஸ்காரங்களை அநுக்ரஹித்து முதலில் அண்ணனைக் கடாக்ஷித்து வானமாமலை ராமாநுஜ ஜீயரைக் காட்டி "இவர் நமக்குப்ராண ஸுஹ்ருத்" நமக்குண்டான வதிஶயமெல்லாம் இவர்க்குண்டாக வேணுமென்றருளிச்செய்து முதலியாண்டான் திருவம்ஶத்தில் நமக்கு ஸம்பந்த முண்டானாற் போல இவர்க்கு முண்டாக வேண்டுமென்றருளிச் செய்ய, அண்ணன், மாமுனிகளின் திருவுள்ளக் கருத்தறிந்து இவ்வாறு திருவுள்ளமானால் அடியேனை அங்கே யாஶ்ரயிப்பித்தருளா தொழிந்ததே என்று விண்ணப்பம்செய்ய, நமக்கு ப்ராப்தமானத்தை விடப்போமோ? என்ன, அண்ணன் தன்னுடைய அநுபந்திகளை ஸாபிப்ராயமாகக் கடாக்ஷித்தருள, பாவஜ்ஞரான ஆச்சியாருடைய குமாரராயிருக்கிற அண்ணா எழுந்திருந்து "அடியேனை எங்களாண்டவன் வானமாமலைராமாநுஜஜீயர் திருவடிகளில் ஆஶ்ரயிப்பிக்க வேண்டும்" என்ன ஜீயர் மிகவு முகந்தருளி "நம்மப்பாச்சியாரண்ணாவன்றோ? என்றருளிச்செய்து அவர் கையைப் பிடித்துத்



தம்மண்டையிலே வைத்துக்கொண்டு, தாமெழுந்தருளியிருந்த ஆஸநத்திலே வானமாமலை ஜீயரையிருத்தி, தம்முடைய திருக்கைகளிலிருந்த ஆழ்வார்களை (திருவாழி திருச்சங்குகளை) அவர் கைகளில் ஸாதித்தருளி" இவர்க்கு ஸாதியும் என்று நியமிக்க, வானமாமலை ராமாநுஜ ஜீயர் சற்றுஇறாய்க்க, அப்படிச்செய்யவேண்டாம், நமக்கு ப்ரியமான காரியத்தைச் செய்யவேண்டுமென்று அருளிச்செய்து, அண்ணாவை ப்ரீத்யதிஶயத்தாலே தழுவிக்கொண்டிருந்து வானமாமலை ராமாநுஜ ஜீயர் திருவடிகளில் ஆஶ்ரயிப்பித்தருளினார். அப்போதே, அண்ணாவின் திருத்தம்பியாரான தாஸரதியப்பையும், தரமைதா எம்பாவும் வானமாமலை ஜீயர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தார்கள். ஆகையாலேயிறே! இவர் விஷயமாக இரண்டு தனியன்களையும் பெரியோர்கள் அநுஸந்தித்துப் போருவர்கள். பெரிய ஜீயர் உகந்து இவருக்குச் சாற்றின திருநாமம் அப்பாச்சியாரண்ணா.

வானமாமலை ராமாநுஜஜீயர் தனியன்

ரம்ய ஜாமாத்ருயோகீந்த்ர பாதரேகாமயம் ஸதா
ததாயத்தாத்மஸத்தாதிம் ராமாநுஜமுநிம் பஜே

அப்பாச்சியாரண்ணா தனியன்

ஸ்ரீமத்வாநமஹாஶைல ராமாநுஜமுநி ப்ரியம்
வாதூல வரதாசார்யம் வந்தே வாத்ஸல்ய ஸாகரம்

அப்பால் பெரிய ஜீயர், மீளவும் திருமலைமுதலான திவ்ய தேஶங்களை மங்களாஶாஸநம் செய்யத் திருவுள்ளம் பற்றித் தம்முடைய ஶிஷ்யப்ரஶிஷ்யர்களுடனும் மற்றுமுள்ள அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுடனும் புறப்பட்டருளி, முதலில் பெருமாள் கோவிலிலே பெரருளாளனைத் திருவடி தொழுவதாக எழுந்தருள, அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் எதிர்கொண்டு சேவிக்க, அவர்களை க்ருபை பண்ணி அவர்களுடனே எழுந்தருளி, வையமாளிகையிலே பேரருளாளனைத் திருவடி தொழுது, தீர்த்த ப்ரசாதங்களும் சடகோபனும் ஸாதிக்க ஸ்வீகரித்து, தமக்கென்று விடுத்த மடத்திலே எழுந்தருளி இருந்தார்.

இப்படியே நாலாறு நாட்கள் எழுந்தருளி இருக்க, திருவைகாசத் திருநாள் தொடங்கி மூன்றாம் திருநாள் பேரருளாளன்

பெரிய திருவடிமேல் திரு வீதியிலே புறப்பட்டருள, ஜீயரும் பெரிய திருவடி யோட்டைச் சேர்த்தியைச் சேவித்து, மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்த மாமுகில் போன்றவடிவை அநுபவித்து அவ்வநுபவத்திற்கு

"தரளமுத்து மணி தவள நற்பவள மருண ரத்ந வகை சாத்தியே
சங்கு சக்கரமுமங் கையிற்றிகழ மங்கை பாகனரனேத்தவே
நரரு மொத்தமரர் திரளுமேத்தும் நர வாஹநன் வருண னிந்திரன்
நடுவு நான்மறை கொள் முனிவர் வானவர் குழுலமிட்டு நடமாடவே
வரைகளிற் பெரிய வடகிரிக்கு மிசை மரதகக்குவடுபோலவே
வரதர் கச்சி நகர் வருதனித் தெருவில் வடகலைக் கழகு பொழியவே
அரவுதித்தமணி மகுடமுற்றவொரு வணிபிணக்குடன் மிழற்றவே
கநக மொத்ததொரு வடிவ மொத்துவரு கருடனிற் பவனிவருவரே."

என்று பாசுர மிட்டருளிச் செய்து ஹ்ருஷ்டராய் மற்றைத் திருநாட்களையும் ஸேவித்தருளி எழுந்தருளியிருக்க, அத்திருப்பதியிலுள்ள பெரியோர்களெல்லாரும் ஜீயர்மடத்திற் கெழுந்தருளி "ஜீயர், மங்களாஶாஸநம் செய்தருளுகையாலே இந்த வருஷ வைசாக மஹோத்ஸவம் அதிவிலக்ஷணமாக நடைபெற்றது" என்று போரக் கொண்டாட ஜீயரும், அவர்களை ஆதரித்தருளி, கர்த்தவ்ய ஆசார பாகங்களையும், பரஸ்பர ஶேஷத்வ ஸௌஹார்த்த ஆவஶ்யகத்தையும், திவ்ய ப்ரபந்த படநாத்யாவஶ்யகத்தையும் அருளிச் செய்து, இவைகள் வர்த்ததாம் அபிவர்த்ததாம் என்கிறபடி மேன்மேலும் வ்ருத்தியடைய வேண்டுமென்று அருளிச் செய்ய, அவர்களும் அவ்வாறே நடத்தும்படி அடியோங்களைத் திருத்திப்பணிகொள்ள, வல்லாரொருவரை இத்திருப்பதியில் நித்யவாசமாக நியமித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, ஜீயரும் போரவுமுகந்து. வாநமாமலை ராமாநுஜ ஜீயரை யழைத்து நம் அப்பாச்சியா ரண்ணவை யழைத்துவாருமென்று நியமிக்க, அவருமப்படியே யழைத்துவர, அப்போது அப்பாச்சியா ரண்ணவை அங்குள்ள அனைவர்க்கும் காட்டி யருளி, இவரை நம்மைப்போலே கௌரவித்து வாருங்கோள்! என்று நியமித்தருளி, அப்பாச்சியா ரண்ணவைக் கடாக்ஷித்து, நீர் முதலியாண்டான் திருவம்ஶத்திலவதீர்ணராகையால், ஆண்டான் தோழப்பர் முதலானார்க்குகப்பாக நம்முடையவார்த்தையையு மநுசரித்து,இவர்களுக்கெல்லாம் ஹிதப்ரவர்த்தகராய் பேரருளாளனை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு இங்கேயே நித்யவாஸமாக எழுந்தருளி யிருக்கவேண்டுமென்று நியமித்தருளினார்.



அப்பால் ஜீயரும், திருமலை முதலான திவ்ய தேஶங்களை மங்களாஶாஸநம் செய்து கோயிலுக் கெழுந்தருளி மடத்திலே எழுந்தருளியிருக்கும் அப்பிள்ளை திருவாழி யாழ்வார்பிள்ளை தொடக்கமான பெரியோர்களுக்கு திருமலை முதலான திவ்ய தேஶங்களிலிருந்து கொண்டுவந்த ப்ரஸாதங்களை விநியோகம் செய்தருளி, கோயிலில் எழுந்தருளி யிருந்தார்.

அப்பாச்சியா ரண்ணா, தமக்கு ஆசார்யரான வானமாமலை ராமநுஜ ஜீயரை (ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந் தொழிந்தாய் உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன் எனதாவியுமுனதே என்றநுஸந்தித்து) நசஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ- முஹூர்த்தமபி மஜீவாவ: என்கிறபடி ஒரு முஹூர்த்தகாலமும் பிரியாதே நிழல்போலே தொடர்ந்து கோயிலுக்குச் சென்று உபயவேதாந்தார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையுங் கேட்டுக்கொண்டு கோயிலிலே எழுந்தருளி யிருந்தார்.

பெரிய ஜீயர், அப்பாச்சியா ரண்ணவை யழைத்தருளி, முன் நியமித்தபடியே பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளும்படி நியமித்தருள, அண்ணவும், இந்த ஸேவையையும் கோஷ்டியையும் விட்டு, விடை கொள்ளவல்லேனோ! என்று வ்யாகுலப்பட,ஜீயரும், அவர் கையைப் பிடித்துக்கொண்டு ஸந்நிதிக் கெழுந்தருளி, தாம் இராமாநுச னென்று திருநாமம் சாத்தி, பஹுநாளாண்டு வந்து ஜீர்ணமானதாய், ஸ்வாமியின் ப்ரஸாதம் என்று வானமாமலை ஜீயர் திருமண் கூடையிலே வைத்து, ஸேவித்துக்கொண்டிருக்கிற தீர்த்த பாத்ரத்தைக்கொண்டு வரும்படி நியமித்து, அதை வாங்கி இதில் ராமாநுஜன் என்கிற விலாஸமும் திருமண் ஸ்ரீ சூர்ணம் முதலானதுகளும் ஜீர்ணமாயிருப்பதால் இத்தைக்கொண்டு நம்மைப்போ லிரண்டு விக்ரஹங்களை யுண்டுபண்ணி, உம்முடைய ஆசார்யருக்கொரு விக்ரஹமும், உமக்கொரு விக்ரஹமாகக் கொள்ளுமென்று நியமித்து, கோயிலாழ்வாரிலே எழுந்தருளி யிருந்த தீமனம் கெடுத்தார், ஆட்கொண்ட வில்லிஜீயர் திருவாராதநப் பெருமாளை யெழுந்தருளி யிருந்தவராகையால், அவர் திருவடிகளுக்கந்தரங்கராய், கந்தாடை யாண்டான் திருவம்ஶத்திலவதரி

த்தவராய், அவருடைய கைங்கர்யம்போலே நீரும் கைங்கர்யம் பண்ணத்தக்கவராகையாலே உமக்கு இவர் திருவாராதநப் பெருமாளாகக்கொள்ளும் என்று, உகந்து ஸாதித்தருளி, கோஷ்டியிலே எழுந்தருளி, ஸ்ரீ தீர்த்ததேவராஜார்ய தநயாம்வேதி விஶ்ருதா-தஸ்யாஸ்தநூஜோ வரத: காஞ்சீ நகர பூஷண: என்று பேரருளாளனே ஆச்சியாருக்குக் குமாரராக அவதரித்தளிருனார் என்றுப்ரீத்யதிஶயத்தாலே அருளிச் செய்து பெருமாள் கோயிலில் பேரருளாளனை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு ஸுகமாகவிரும் என்று விடை ஸாதித்தருளினார்.

அண்ணாவும், பெரியஜீயர் நியமநத்தை ஶிரஸாவஹித்துப் பெருமாள் கோவிலுக்கெழுந்தருளி, முன்பு தோழப்பரெழுந்தருளியிருந்த திருமாளிகையைத் தமக்கு வாஸஸ்தாநமாகப்பெற்று முன் பெரிய ஜீயர் தமக்குத் திருவாராதநமாக அநுக்ரஹித்த தீமநம்கெடுத்தாருடன், பேரருளாளன்ஷட்பேரத்தில் ஒருவரான அழைத்து வாழ்வித்தாரையும் தமக்குத் திருவாராதநமாகப் பெற்று, பேரருளாளனுக்குத் திருமேனி, திருப்பவள கைங்கர்யங்களையு முகப்பாகச் செய்துகொண்டு, சூடிக்கொடுத்த நாச்சியார் ஸந்நிதியையும், பேரருளாளன் கோயில் ப்ராகாரத்திலே கட்டி வைத்தார்.

பெரிய ஜீயர், மறுபடியும் சில நாட்களுக்குப்பின், கந்தாடையண்ணன் முதலான ஆசார்ய புருஷர்களோடு திருமலை யாத்ரையெழுந்தருளித் திரும்பி வரும்போது, பெருமாள் கோயிலுக்கெழுந்தருள, அங்குள்ள ஆசார்ய புருஷர்களும் கோயிலணைத்துக்கொத்தும் எதிர்கொண்டெழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு போய், பேரருளாளன் பெருந்தேவித் தாயார் முதலானவர்களை ஸேவாக்ரமமாக மங்களாஶாஸநம் பண்ணுவித்து, மடத்திலே எழுந்தருளப்பண்ணி நிரவதிகமாகச் சிறப்பும் நடத்தி உபசரித்தருளினார்கள்.

அப்பாச்சியாரண்ணாவும், முதலியாண்டான் முதலான தம்முடைய பெரியோர்களையெல்லாம் ஸேவித்தாற் போலிருக்கிறதென்று மிகவு முகந்தருளி ப்ரீதியுடனே ஸ்வாமி யண்ணனையும் கூட எழுந்தருளின ஸ்வாமிகளையும், தம்முடைய திருமாளிகைக்கெழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டுவந்து மிகவும் உபசரித்து,



தே த்ரய: என்றதால் கங்கையாற்றைக் கடந்தபிறகு குஹப்பெருமாள் திரும்பிவிட்டார் என்பது தெரியவருகிறது. தே த்ரய: அந்த மூன்று திருநாமங்களும், வநேந வநம் கத்வா ஐந்தாம் வேற்றுமையில் மூன்றும் வேற்றுமை வந்ததாகக் கொண்டு ஒரு வநத்தில் நின்றும் மற்றொரு வநத்தை அடைந்து என்றபடி. அன்றிக்கே அவநேந வநம் கத்வா அந்யோந்யரக்ஷணத்தாலே காட்டை யடைந்து என்னவுமாம்.

இவ்வர்த்தம் அக்ரதோ கச்ச ஸௌமித்ரே ஸீதா த்வாமநுகச்சது — ப்ருஷ்டதோஹம் கமிஷ்யாமி த்வாம் ச ஸீதாம் ச பாலயந் | அந்யோந்யஸ்யேஹ நோ ரக்ஷா கர்தவ்யா புருஷர்ஷப — புருஷர்களில் ஶ்ரேஷ்டனான லக்ஷ்மணா! நீ முன்னே செல், ஸீதை உன்னை அநுஸரித்துச் செல்லட்டும். நான் உன்னையும் ஸீதையையும் பரிபாலித்துக் கொண்டு பின்னே செல்வேன். இக்காட்டில் நமக்குள் ஒருவர்க்கொருவர் ரக்ஷணம் பண்ணிக்கொள்ளவேண்டும்) என்று பின்னால் பெருமாள் சொல்வதைக் குறிப்பிடாநிற்கும். அவநேந வநம் கத்வா—ராவணாதிதுஷ்டநிக்ரஹ பூர்வகம் லோகரக்ஷணம் பண்ணவேண்டுமென்கிற காரணத்தால் காட்டை யடைந்து என்றும், பித்ருவசநபரிபாலநம் என்னும் காரணத்தால் காட்டை யடைந்து என்றும் சொல்லக்கூடும். அன்றிக்கே தேவநேந என்று பதமாய் தேவ்ரு தேவநே என்கிற தாதுவினால் தேவநம் என்று லீலையாய், அநாயாஸமாகக் காட்டையடைந்து என்றும் சொல்லலாம். இந்தவ்யுத்பத்தியைக் கொண்டே ஸுமந்த்ரரை யனுப்பிய பிறகு பாதஸஞ்சாரத்தாற் சென்றமை தெரியவருகிறது. அன்றியும், ஸவநேந வநம் நடுவில் ஸ்தலப்ரதேஶத்தோடு கூடிய வநத்தை, வநேந ஸஹிதம் வநம் ஶக்வா என்று வநஶப்தத்திற்கு ஜலம் என்று அர்த்தமாய் ஜலத்தோடு கூடிய காட்டையடைந்து என்றும் அர்த்தம் ஆகலாம். இவ்வர்த்தத்தால் அக்காடு நிர்ஜலப்ரதேஶமன்றென்பது விளங்குகின்றது.

வஹூதகா: அகன்றும் ஆழமாயுமிருக்கும் ஜலங்களையுடைய, இதனால் ஓடத்தால் தாண்டக்கூடிய தென்பது தெரியவருகிறது. நதீ: கங்காநதியை. நதிகளுக்குள் ஒப்பற்று ஶ்ரேஷ்டமாயிருக்கின்றமைபற்றி உபபதமன்றிக்கே நதீ: என்கிறார்.

பஹுவசநப்ரயோகம் பண்ணியது கௌரவத்தால். இதனால் கங்காநதியைத்தாண்டிக் காட்டையடைந்து என்று அர்த்தமாகிறது. அன்றிக்கே பூர்வார்த்தத்தாலே அந்த ராமன் இளையபெருமாளோடும் பிராட்டியோடும் கூட ஸ்ரீ குஹப்பெருமாளால் கங்காநதியைத்தாண்டுவிக்கப்பட்டான் என்பதால், கங்காதரணம் ஸித்தமானபடியால், இவ்விடத்தில் நதீ: என்றது யமுநா, மந்தாகிநீ முதலான சித்திரகூட பர்வத ஸமீபத்திலிரா நின்ற நதிகளைத்தாண்டி என்றும் அர்த்தமாகும். ப்ரஜா வை வாஜ: என்று ப்ரஜைகளைச் சொல்லி அவைகளை பரிக்கிறவன் பரத்வாஜர் என்றும், அன்றிக்கே வாஜம் என்பதற்கு ரேதஸ் என்று அர்த்தமாய் அதை பரிக்கிறவன் பரத்வாஜர் என்றும் அர்த்தம் ஆகும். இதனால் (ப்ரஜைகளைப் பரிக்கும் ஸ்வபாவத்தை யுடையவரும் நித்திய ப்ரஹ்மசாரியாயு மிருக்கிற) பரத்வாஜருடைய, ஶாஸநாத்— ஆஜ்ஞையாலே [illegible]—ராஜ குமாரர்களான தங்களுக்கு அநுகூலமான, விசித்ரகூடம்—(ஆஶ்சர்யாவஹங்களான சிகரங்களையுடைய) சித்ரகூட பர்வதத்தை அநுப்ராப்ய—அடைந்து, ரம்யம்—(ஜலஸௌகர்யத்தாலும் ஸ்தல ஸௌகர்யத்தாலும்) மநோஹரமான, ஆவஸதம்— பர்ணஶாலையை. இதனால் அநுபதினாயிரமாண்டு மலடு நின்று அரும் பெரும் கார்யங்கள் செய்து அருமையாய்ப் பெற்ற பிள்ளைக்குத் தன்னுதரவிற்குத் தக்கபடி சமைத்த மாளிகையைக் காட்டிலும் இளைய பெருமாள் அன்புடன் சமைத்த ஆஶ்ரமம், பெருமாளுக்குப் போக்ய மாயிருந்தபடி. க்ருத்வா சமைத்து. இவ்விடத்தில் அவர்கள் மூன்று திருநாமங்களும் பர்ணஶாலையைச் சமைத்து என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருந்தாலும், பர்ணசாலா நிர்மாணத்தில் இளைய பெருமாளுக்கே முக்யமான கர்த்ருத்வம். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் உசிதமான விடங்களில் உசிதமான ஸந்நிவேஶங்களை அமைக்கும்படி நியமித்தல் முதலானவைகளால் ப்ரயோஜக கர்த்ருத்வம் என்பது குறிக்கொள்ளத் தகுந்தது. வநே (சித்திரகூட ஸமீபத்திலிரா நின்ற) வநப்ரதேஶத்தில். ரமமாணா:— லீலாரஸ மநுபவியா நின்றவர்களாய்க் கொண்டு ரமமாணா: என்று ஆனந்தாநுபவத்தைப் பொதுவாகச் சொல்லியிருந்தாலும் ஆனந்தத்திற்கு காரணத்தில் வித்யாஸமுண்டு. பிராட்டிக்கும் பெருமாளுக்கும் பூக்கொய்தல் ஜலக்ரீடை பண்ணுதல் முதலான லீலைகளால் ஆனந்தம், இளைய பெரு



மாளுக்கு இருவருமான சேர்த்தியில் அடிமை செய்வதாலுண்டான வானந்தம். இவ்வர்த்தம் பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே—அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே | என்ற இளைய பெருமாள் உக்தியால் ஊஹிக்கக்கூடும். இவ்விடத்தில் [illegible], போகமாத்ர ஸாம்யலிங்காச்ச என்கிற ஸூத்ரார்த்தம் குறிக் கொள்ளத் தகுந்தது (இவ்வாறு ஆனந்த மநுபவியா நின்றார்களாதலால்) தேவகந்தர்வஸங்காஶா:— தேவகந்தர்வர்களோடொத்தவர்களாய். தேவத்வமாவது ஆனந்த மேதுரத்வம். கந்தர்வத்வமாவது, காநம் யாதி இதி கந்தர்வ:— என்று காயகத்வம். ஆக ஆனந்தமேதுரத்வம் காயகத்வமாகிய குணங்களை யுடைத்தாயிருக்கையால் மநுஷ்ய கந்தர்வர்களைக் காட்டிலும் அதிகமான ஆனந்தத்தையுடைய தேவகந்தர்வஸங்காஶா:— என்றார் அன்றிக்கே, ஆகாஶஸ்பர்ஶியான சித்ரகூட பர்வதத்தில் வாஸம் செய்கையால் ஸ்வர்க்கவாஸிகளான தேவகந்தர்வர்களோடொத்தார்கள் என்றும் உதப்ரேக்ஷிக்க கூடும். தேவீ ச தேவஶ்ச தேவௌ என்று லக்ஷ்மீ நாராயணர்களைச் சொல்லி, காநம் என்று ஸாமகாநமாய், அத்தையுடையவர்கள் கந்தர்வர்களாய், அவர்கள் ஏதத்ஸாம காயந்நாஸ்தே என்கிறபடி எப்போதும் ஸாமகாநபரர்களான நித்ய முக்தர்கள் என்றாய், ஆக தேவகந்தர்வா: என்று லக்ஷ்மீநாராயண நித்ய முக்தர்களைச் சொல்லி, ஸங்காஶா: என்று அவர்களோடொத்தார்கள் என்றும் அர்த்தமாகலாம். தத்ர—அந்த சித்ரகூட பர்வதத்தில், தே—த ஏவ ஸந்த: அவர்களாய்க் கொண்டு, அயோத்யா புரவாஸிகளாகவே, ஸுகம்-ஸுகமாக ந்யவஸந்-வஸித்தார்கள். அன்றிக்கே, நகரவாஸிகளான அவர்கள் பஹுகாலம் வநத்திலே வஸித்தவர்கள் போலானார்கள். இதனால் வநவாஸத்தாலுண்டான வருத்தம் சிறிது மவர்களிடம் கிடையாதென்பது விளங்கா நிற்கின்றது.

இவ்விடத்தில் தேவகந்தர்வஸங்காஶா: என்ற உபமாலங்காரத்தால் ஒரு பொருள் தோன்றா நிற்கின்றது. அதாவது,

யாவனொருவன், ஆசார்ய அநுக்ரஹத்தால் ஸ்வரூப ஜ்ஞாநபூர்வகம் பகவானிடத்தில் பக்தியைப்பண்ணுகிறானோ? அவன் விஷயத்தில் பகவான். பரம ப்ரீதியையுடையனாய் அவனுடைய ஶரீர

வியோக காலத்தில் பெரிய பிராட்டியாரோடு கூட எழுந்தருளி அவனை விமானத்தி லேற்றிக்கொண்டு ஆதிவாஹிகாதிகளால் ஸத்கரிக்கச் செய்து விரஜா நதியைக் கடத்தி அங்கமானவனால் ஸத்கரிப்பித்து ஆனந்தமயமான மாமணிமண்டபத்தையடைவித்து திவ்யஸிம்ஹாஸநத்தில் தான் வீற்றிருந்து, பெரிய பிராட்டியாரோடு ரமியா நின்றவனாய், அவனால் செய்யப்பட்ட ஸர்வதேச ஸர்வகால ஸர்வவித கைங்கர்யங்களையும் அங்கீகரியா நின்று கொண்டு, தன்னோடொத்த வானந்தத்தை யவனுக்கும் கொடுத்து, யாவத்கால மிருக்கு மிருப்பு

22 [illegible]
[illegible]

சித்ரகூடம் கதே ராமே புத்ரசோகாதுரஸ் ததா
ராஜா தசரத: ஸ்வர்கம் ஜகாம விலபந் ஸுதம்,

ராமே-ராமன், சித்ரகூடம்-சித்ரகூட பர்வதத்தை,—(முன் சொக்லப்பட்டபடியே) கதே (ஸதி)—அடைந்தவளவில், தசரதோ ராஜா-தசரதசக்ரவர்த்தி புத்ரசோகாதுர:-புத்ர சோகத்தால் பீடிக்கப்பட்டவனாய்க்கொண்டு ஸுதம் (உத்திச்ய) விலபந்-புத்ரனைக் குறித்து ஹாஸுத என்று ப்ரலபியா நின்று கொண்டு, ஸ்வர்க்கம் ஜகாம-ஸ்வர்க்கத்தை அடைந்தான்.

23 [illegible]
[illegible]

ம்ருதே து தஸ்மிந்பரதோ வஸிஷ்ட ப்ரமுகைர்த்விஜை
நியுஜ்யமாநோ ராஜ்யாய நைச்சத் ராஜ்யம் மஹாபல:

தஸ்மிந் ம்ருதே (ஸதி)—அந்த தசரதன் இறந்த (வளவில்) ஸ்வர்க்கப்ராப்தியும் நச்வரமாகையால் முமுக்ஷுக்களுக்கு அநுபாதேயமென்று கருதி ம்ருதே என்கிறார் ருஷி. மஹாபல:-ராஜ்யத்தை பரிக்கக்கூடிய சக்தியையுடைய பரத:—(பாவஜ்ஞான வஸிஷ்ட மஹருஷியினால் பரதன் என்று இடப்பட்ட பெயரையுடைய) பரதன். வஸிஷ்ட ப்ரமுகை: த்விஜை:—வஸிஷ்டர் முதலான ப்ராஹ்மணர்களாலே, ராஜ்யாய—அரசர்கள் செய்யும் கார்யத்தைச்செய்கைக்கு (உலகை ஆள்வதற்கு) நியுஜ்யமாந:—நியமிக்கப்பட்டவனா யிருந்தாலும். ராஜ்யம்—அரசனாயிருக்கும்



தன்மையை, நைச்சத்—ஆசைப்படவில்லை. இத்தால் உலகத்தை ஆளக்கூடிய சக்தியையுடையவனாயிருந்தும் பரதாழ்வான் பாரதந்த்ரியத்தை ஸ்வரூபமாகவுடைய தனக்கு ராஜ்யம் ஸ்வரூபவிருத்தமாகையால் அத்தை அங்கீகரிக்கவில்லை என்பது தோற்றுநிற்கின்றது. இவ்வர்த்தம் ராஜ்யம் சாஹம்ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹார்ஹஸி ராஜ்யமும் நானும் ராமனுக்கு சேஷம். இவ்வாறு சேஷமாயுள்ள வஸ்துக்களிரண்டிலொன்று மற்றொன்றை ஆளுவது உசிதமோ? இவ்விஷயத்தில் எது தர்மமோ? அத்தைச் சொல்லக்கடவீர்! "என்று வஸிஷ்டரைக் குறித்துப் பரதன் சொன்ன வார்த்தையாலறியலாகும்.

24 [illegible]

ஸ ஜகாம வநம் வீர: ராமபாத ப்ரஸாதக:

வீர:-வீர்யத்தோடுகூடின, ஸ:-அந்தபரதன். இவ்விடத்தில் வீர்யமாவது சத்ருவாகாநின்ற காமம் முதலான குணங்களை ஜயித்தல். இதனால் காமாதி குணங்களுக்கு வசப்படாத சித்தத்தையுடையவன் என்பது அர்த்தமாகும். அன்றிக்கே, சதுரங்கபலத்தோடேகூடின பரதன் என்றும் சொல்லக்கூடும், ராமபாதப்ரஸாதக:-பாதசப்தமானது பூஜ்யார்த்தத்தைச் சொல்லக்கடவதாய் பூஜ்யனான ராமனை அருள்புரியச்செய்கைக்கு என்று அர்த்தமாகும். அன்றிக்கே, பாதசப்தம் திருவடிகளைச் சொல்லுகிறதாய் அநுக்ரஹிக்க வேண்டியவன் ராமனாயிருந்தாலும், அவனுடைய திருவடிகளைச் சொல்லுதல் சேஷத்வ ஸ்வரூபத்திற்கு பொருத்தமுடையதாகும். வநம் ஜகாம—வநத்தையடைந்தான். இவ்விடத்தில் ராமனுக்கு யாதொரு கோப மில்லாமலிருந்தாலும், ராஜ்யம் தன்னுடையதன்றென்பதை யனைவருமறியுமாறு செய்யவேண்டுமென்பதே பரதனுடைய அபிப்ராயம். அதற்காகவே சித்ர கூடம் சென்றான் என்பது, பூஜிதாமாமிகா மாதா தத்தம் ராஜ்யமிதம்மம-தத்ததாமி புநஸ்துப்யம் யதாத்வம் அததா மம, என்னுடைய தாயார் பூஜிக்கப்பட்டாள். தேவரீர் சித்ரகூடபர்வதத்தில் இந்தராஜ்யத்தை எனக்கு எவ்வாறு அருளிற்றோ? அவ்வாறே அந்தராஜ்யத்தை மறுபடியும் தேவரீருக்கு ஸமர்ப்பிக்கிறேன் என்று பரதன் சொன்னதிலிருந்து அறியலாகும்.

[illegible]
25 [illegible]

கத்வாது ஸுமஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்
அயாசத் ப்ராதரம் ராமம் ஆர்யபாவ புரஸ்க்ருத:

(அந்த பரதன்) ஆர்யபாவ புரஸ்க்ருத :—முன்னிடப்பட்ட விநயத்தையுடையனாய், அன்றிக்கே தன்னுடைய பெருந்தன்மையால் கௌரவிக்கப்பட்டவனாய்க்கொண்டு, ஸுமஹாத்மாநம்(ஆத்மா 'என்று அந்தஃகரணமாய்) ஸ்வபாவமாக ப்ரஸந்நமான வந்தஃகரணத்தையுடையவனாயும், ஸத்ய பராக்ரமம்-சத்தியத்திலே நழுவாதவனாயுமிருக்கிற, ராமம்-ராமனை,கத்வாது-சென்று.து என்றபதம் ராமனுடைய எதிரில் சென்றதே போதும். அதற்குமேல் யாசித்தல் அதிகமென்பதைக் குறிப்பிடாநிற்கும். ப்ராதரம்ராமம்-தமயனான ராமனை. அயாசத் (தன்னுடைய அபீஷ்டத்தை) ப்ரார்த்தித்தான். கத்வா அயாசத் என்ற இரண்டு க்ரியைக்கும் ராமம் என்று இரண்டுதரம் வந்தமை காண்க.

[illegible]
த்வமேவ ராஜா தர்மஜ்ஞ இதி ராமம் வசோப்ரவீத்

தன்னிஷ்டத்தைச் சொல்லுகிறான். த்வமேவ என்று. தர்மஜ்ஞ: த்வம் ஏவ ராஜா - (மூத்தவனிருக்க இளையவன் அரசாளுகை அநுசிதம் என்கிற) தர்மத்தை யறிந்த நீயே அரசன், மற்றவன் அரசன் அன்று. இதி-என்று, ராமம் வச: அப்ரவீத்-ராமனைக்குறித்து வார்த்தையைச் சொன்னான்.

26 [illegible]
[illegible]
ராமோபி பரமோதார: ஸுமுகஸ் ஸுமஹாயஶா:
நசைச்சத் பிதுராதேஶாத் ராஜ்யம் ராமோ மஹாபல:

இவ்விடத்தில் பரதனால் பண்ணப்பட்ட ப்ரபத்தி பலிக்காமற்போனது, சரணாகதனான பரதனுடைய தோஷத்தாலேயா? அல்லது ஶரண்யனான ஸ்ரீராமனுடைய தோஷத்தாலேயா? என்று ஶங்கித்து பரதன் உத்தமாதிகாரியானதால் பரதனுடைய தோஷமென்று சொல்வதற்கில்லை. ராமன், ஸமஸ்தகல்யாணகுண பரிபூர்ணனாகையால் ராமனுடைய தோஷமுமன்று. பின்னை? பிதாவினுடைய ஆஜ்ஞையாகிற ப்ரபல ப்ரதிபந்தகமே காரணம் என்கிறார். ராமோபி என்று, அபிஶப்தத்தை



சேர்த்துக்கொள்க. ராமோபி - (ரமயதி இதி வ்யுத்பத்தியினால் ஸ்வரூப ரூபகுணங்களால் ஆஶ்ரிதர்களின் ஹ்ருதயத்தை) ஆனந்திப்பிக்கும் ஸ்வபாவத்தையுடையவனா யிருந்தாலும், பரமோதாரோபி-ய ஆத்மதா பலதா என்கிறபடி தன்னையும் கொடுத்துதவும் பரமோதாரனாயிருந்தாலும், ஸுமுகோபி—அர்த்திகள் அர்த்தித்த பொருளைக்கொடுத்துவக்கும்வனாயிருந்தாலும்,ஸுமஹாயஶா அபி (எனக்கு இதுவேண்டுமென்று இரப்பவன் சொல்வதற்குமுன்னே அவன் வேண்டுவதைக் குறிப்பாலறிந்தும், அவன் மற்றும் சிலரிடம் போய் அவ்வுரையைச் சொல்லாமலும், சிறிதுகாலம் சென்று இப்போது நான் பொருளுடையனல்லேன் என்று சொல்லாமலும், உதவும் பெருமையையுடைய குலத்திற்பிறந்த) கீர்த்தியையுடையவனா யிருந்தாலும், மஹா பலோபி - (ஆஶ்ரிதர்களபீஷ்டத்தை நிறைவேற்றும் திறமையுடையவனாய் இருந்தாலும், ராம:-இராமன். பிது:-பிதாவினுடைய, ஆதேஶாத் -ஆஜ்ஞையால், ராஜ்யம் - ராஜ்யத்தை, ந ஐச்சத்-இச்சிக்கவில்லை. சகாரத்தால் பித்ருவசந பரிபாலநாநந்தரம், இச்சித்தான் என்பது அர்த்தமாகும்.

27 [illegible]
[illegible]
பாதுகேசாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வா புந: புந:
நிவர்த்தயாமாஸ ததோ பரதம் பரதாக்ரஜ:

எவ்விதத்திலும் ப்ரபத்தி விபலமாவது உசிதமன்றாதலின் பித்ருவசன பரிபாலனத்திற் கிடையூறின்றி எவ்வளவு செய்யக் கூடுமோ? அவ்வளவு செய்தான் என்கிறார் பாதுகே என்று. ச காரத்திற்கு து அர்த்தமாய் கிம் து, பரதாக்ரஜ: பரதனுக்கு முன் தோன்றிய (கேட்டதைக் கொடுத்தல்லது நிற்கவொண்ணாத ஸம்பந்தத்தையுடைய) ராமன்.

ராஜ்யாய-அரசாள்வதற்கு, அஸ்ய-இந்த பரதனுக்கு, பாதுகே-திருவடி நிலைகளை. ந்யாஸம் (தனக்கு) ப்ரதிநிதியாக, தத்வா-(ராம பாதுகைகள் அரசாள்கின்றன. அடியேன் அவைகளுக்குப் பரிசாரகன் என்று பாவித்துக்கொண்டு அரசாள்வாயாக என்று) கொடுத்து, புந: புந:-அடிக்கடி ப்ரதம்-பரதனை நிவர்த்தயாமாஸ-அயோத்திக்குத் திரும்பிப்போகும்படி செய்தான். புந: புந: என்றதால், பரதன், ராமனைவிட்டுப் பிரிய மிகவும் வருந்தினான் என்பது தோற்று நிற்கின்றது.

28 𑌸 𑌕𑌾𑌮𑌮𑌨𑌵𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌰𑌾𑌮𑌪𑌾𑌦𑌾𑌵𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍
𑌨𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌽𑌕𑌰𑍋𑌤𑍍 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌰𑌾𑌮𑌾𑌗𑌮𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌯𑌾

ஸகாம மநவாப்யைவ ராமபாதா வுபஸ்ப்ருஶந்
நந்திக்ராமே஽கரோத் ராஜ்யம் ராமாகமந காங்க்ஷயா

ஸ: - அந்த பரதன், காமம் - (ராமகைங்கர்யமாகிய) இஷ்டத்தை, அநவாப்ய ஏவ-அடையாமலே, ராமபாதள-ராமனுடைய பாதுகைகளை, உபஸ்ப்ருஶந்-(ப்ரதிதிநம்) ஸேவியாநின்றுகொண்டு, ராமாகமநகாங்க்ஷயா-ராமன் எழுந்தருளும் காலத்தை எதிர்பாரா நின்று கொண்டு, ராமனில்லாத அயோத்தியில் வஸிப்பது மான துக்கத்தை யுண்டுபண்ணுவதால் அயோத்தியைவிட்டு அதன் ஸமீபத்திலுள்ள, நந்திக்ராமே-நந்திக்ராமம் என்கிற க்ராமத்தில், ராஜ்யம்-(ராமனுடைய ஆஜ்ஞாரூப கைங்கர்யமாகிற) அரசாளுகையை, அகரோத்-செய்தான். அகரோத் என்கிற பரஸ்மைபதப்ரயோகத்தால் அதனுடைய பலத்தில் பரதனுக்கு அந்வயமில்லை என்பது அர்த்தமாகிறது.

இந்த ஶ்லோகத்தால் ப்ரபந்நன் ப்ராரப்தாவஸாநத்தளவும் அவனுடைய ஆஜ்ஞாரூபமான கைங்கர்யத்தைச் செய்யாநின்று கொண்டு, கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ? என்று அக்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது உற்றுணரத்தகும்.

29 𑌗𑌤𑍇 𑌤𑍁 𑌭𑌰𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑍋 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃
𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁 𑌪𑍁𑌨𑌰𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚
𑌤𑌤𑍍𑌰𑌾𑌗𑌮𑌨𑌮𑍇𑌕𑌾𑌗𑍍𑌰𑍋 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌹 ।

கதேது பரதே ஸ்ரீமான் ஸத்யஸந்தோ ஜிதேந்த்ரிய:
ராமஸ்து புநராலக்ஷ்ய நாகரஸ்ய ஜநஸ்யச
தத்ராகமநமேகாக்ரோ தண்டகாந் ப்ரவிவேஶ ஹ

பரதே கதேது-பரதன் (அயோத்தியைக் குறித்துச்) சென்றவளவில், ஸ்ரீமான்-(பித்ருவச நபரிபாலநரூப ப்ரதிஜ்ஞைக்கு பங்கம் பிறக்குமோ? என்கிற பயத்தினாலுண்டான ஆக்ருதியானவுடன், ஶரீரத்திலுண்டான) காந்தியை யுடையவனும், ஸத்யஸந்த:-பரதன் முதலானவர்களுடைய நிர்ப்பந்தத்தாலும்) சலிக்க வொண்ணாத ப்ரதிஜ்ஞையை யுடையவனும், ஜிதேந்த்ரிய:

218932
சென்னை-600 00



# டி. சி. என்.

## கோல்டன் மெட்டல்
## ஜ்வெல்லரி மார்ட்


---

# சிந்தடிக் கல்
# செய்ன்கள்

அசல் தங்க செய்ன்களை
விடப் பிரகாசத்திலும்
நிறத்திலும் குறைந்ததல்ல.
சுறுக்காரு. 2 வருஷ உத்திரவாதம்.

பலவித கலர் கல்களால் கட்டப்
பட்டவை. மிக அழகாயிருக்கும்.

| | ரூ. அ |
|---|---|
| பெரிய சைஸ் செய்ன் பெண்டண்ட் உள்பட | 9—0 |
| சிறிய சைஸ் செய்ன் பெண்டண்ட் உள்பட | 7—0 |
| பெரிய சைஸ் பெண்டண்ட் இல்லாமல் | 7—0 |
| சிறிய சைஸ் பெண்டண்ட் இல்லாமல் | 5—0 |
| வி. பி. செலவு | 0—6 |




2 அணா பெருமானமுள்ளதும் பல அழகிய படங்க
ளுள்ளதுமான எமது காட்லாக் இனாம்.

**டி. சி. நாகலிங்கப்பா அன் கோ.,**

**280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன், மதராஸ்.**

Registered No. M. 3401

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு
ஔஷத ரத்னங்கள்

# ஜீவாம்ருதம்




(தேகாரோக்யத்திற்கும்
பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரக்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்யம் முதலியவற்றை மென்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ 3-4-0
சிறியது 1-12-0

# பாலபாஸ்கர

(குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி
வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதி யடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்திலுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0




விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— ஆயுர்வேதாஸ்ரமம்
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.